என்றும் உங்களுடன்

மங்கையர் மலர்

கஸ்ட் 2010 MANGAYAR MALAR 256 பக்கங்கள் ரூ.20/-



ண்டிகை
பெஷல்-1

இணைப்பு
வளம் தரும் வாஸ்து 64!

10,000
ரிசுக் கதை!

ப்போதும்
ற்சாகமாயிருக்க டிப்ஸ்!

ாராயணனுக்கு நாட்டியாஞ்சலி!

இருக்கன்குடி மாரியம்மன்!



Rani Seethai Hall, Parallel to Gemini Flyover, 603, Anna Salai, 1st Floor, Chennai - 6. Ph: 2829 1573

www.vummidi.com www.vummidisilverware.com


ஈஸ்டர்ன்
இது
பேசும்
சாம்பார்!
Eastern
Madras Sambar
Powder
ஈஸ்டர்ன் மெட்ராஸ் சாம்பார்.
உங்கள் சமையல் திறனைப் பற்றி கோடிப் பேரை பேசவைக்கும்.
ஈஸ்டர்ன் மெட்ராஸ் சாம்பார் பொடி இருந்தால்போதும் உங்களுக்கு எல்லாரிடமிருந்தும் பாராட்டுக்கள் குவியப்போவது நிச்சயம்தான். ஏனென்றால் ஈஸ்டர்ன் மெட்ராஸ் சாம்பார் பொடியிருந்தால் நீங்கள் வைக்கும் சாம்பாருக்கு ஈடு இணை ஏது? புதுமை மாறாத, தூய்மையான பொருட்கள் சேர்க்கப்பட்ட, நாவில் நீர் ஊற வைக்கும் அக்க அசல் மெட்ராஸ் சாம்பார் அல்லவா அது? இன்றே வீட்டிற்கு ஈஸ்டர்ன் மெட்ராஸ் சாம்பார் பொடியை வாங்கி வாருங்கள். அப்புறமென்ன, ஊரெங்கும் உங்களைப் பற்றிய பேச்சுத்தான்.
ஸ்டர்ன்
அடுத்த தலைமுறைக்கான அருமையான வாசம்.
y product from Eastern An ISO 22000 HACCP Certified Company | Email: mktg@eastern.in | Ph: 044 - 22252939
TeamOne





70

ரோஜா மலரே, ராஜகுமாரி!



132

குக்கரி க்வீன்!




102

ஆரத்தி தட்டு... அசத்தல் லாபம்!



அட்டையில்
சரண்யா சம்பத்
வண்ணப் படம்: **ஸ்ரீஹரி**







ரிர் மாத இதழ்!
என்றும் உங்களுடன்
மங்கையர் மலர்
மலர் : 30 இதழ் : 7 ஆகஸ்ட் 2010

என்றும் உங்களுடன்

மங்கையர் மலர்

அடுத்த இதழ்



நவராத்திரிச் சிறப்பிதழ்!

* துர்கா லக்ஷ்மி சரஸ்வதி!

முப்பெருந்தேவியர் மகிமை!

* பாயச அகராதி...

* கொலுவில் ஒரு உடையாத பொம்மை! சிறப்புச் சிறுகதை

உங்கள் அபிமான குட்டி புக்கில்...

நவராத்திரி இதழுக்கு
கொலு டிப்ஸ் 64!
கடைசித் தேதி : 10.8.2010

தீபாவளிச் சிறப்பிதழுக்கு
நறுக் மொறுக் காரம் 64!
கடைசித் தேதி : 30.8.2010

எல்லாமே உங்க கை வண்ணம் தான்! எழுதிக் குவியுங்க! கமான் க்விக்!



ஒரு வார்த்தை!

எப்போதும் ஒரு கதை இடம் பெறுவது வழக்கம். இந்தமுறை இரண்டு கதைகள்...

ஐந்தே வயதாகும் ரேகா, தன்னுடைய பாட்டியின் கிராமத்து வீட்டுக்குப் போயிருந்தாள். இரவு நேரத்தில் அவள் பாட்டி கதை சொல்லிக் கொண்டிருந்த போது, திடீரென பலத்த காற்று வீசியது. இடி முழக்கத்துடன் மின்னல் வெட்டியது. பெரும் மழை பிடித்துக் கொண்ட சற்று நேரத்தில் மின்தடை ஏற்பட்டு, எங்கும் இருள் கவ்வியது.

''பாட்டி, ரொம்ப இருட்டா இருக்கு. எனக்கு பயமா இருக்கு!'' என்றாள் ரேகா.

பாட்டி உடனே ஜன்னல் கதவுகளைத் திறந்து விட்டு, ஆகாயத்தில் ஒளிர்ந்த நிலவைக் காட்டினார்.

''இதோ... என்றுமே அணையாத இறைவனின் விளக்கு! இந்த நிலா இருக்கும்போது, யாரும் எதற்காகவும் பயப்படத் தேவையில்லை!'' என்றார் பாட்டி.

''சந்திரன், கடவுளின் சொந்த விளக்கா?''

''ஆமாண்டா செல்லம்! கடவுளுடையதுதான்!''

''அவர் இதை அணைச்சுட்டுத் தூங்கப் போயிட்டாருன்னா?''

''இல்லடா குட்டி! கடவுள் ஒரு போதும் தூங்க மாட்டார்!''

''அப்பாடா! சாமி விழிச்சுக்கிட்டிருக்கும்வரை, எனக்கு பயமில்லை. குட்நைட் பாட்டி!'' என்றபடி, படுக்கையில் சாய்ந்து

என்றும் உங்களுடன்
மங்கையர் மலர்

பரதன் பப்ளிகேஷன்ஸ்
பிரைவேட் லிமிடெட்டிற்காக
பரதன் அச்சகத்தில்
ஆசிரியர் பொறுப்பேற்று
அச்சிட்டு வெளியிடுபவர்:
லக்ஷ்மி நடராஜன்

பொறுப்பாசிரியர் : அனுராதா சேகர்

வடிவமைப்பு :
எஸ்.ஸ்டீஃபன், எம்.மோகன்,
பா.கோபால்

தொலைபேசி : 044 - 4343 8888
தொலைநகல் : 044 - 4343 8899

ஆசிரியர் குழு :
044 - 4343 8877
mangayarmalar@kalkiweekly.com

விளம்பரப் பிரிவு :
044 - 4343 8811
marketing@kalkiweekly.com

சந்தா பிரிவு :
044 - 4343 8833
subscription@kalkiweekly.com

விற்பனை பிரிவு :
044 - 4343 8844
sales@kalkiweekly.com

இன்டர்நெட் முகவரி :
www.mangayarmalaronline.com

இணையதளத்தில்...
வாங்கி, வாசித்து, மகிழ...!
www.sangapalagai.com

சந்தா விவரம் (ஒரு வருடம்) :
உள்நாடு : ரூ.250/-
வெளிநாடு : ரூ.2,200/-

கல்கி பில்டிங்க்ஸ்,
47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காட்டுதாங்கல், சென்னை - 32

இதழில் வெளியாகும் விளம்பரங்களின்
உண்மைத் தன்மைக்கு
கல்கி நிர்வாகம் பொறுப்பல்ல.

தூங்கிவிட்டாள் ரேகா.

• • •

ஹிட்லரின் கடுங்கோபத்துக்கு ஆளான பத்திரிகையாளர் ஒருவர், இருட்டுப்பொந்தில் அடைக்கப்பட்டார். பல நாட்கள் தனிமையிலும், விரக்தியிலும் வாடினார். அவரைப் பார்க்க அவரது குடும்பத்தினரோ, நண்பர்களோ யாரும் வரவேயில்லை. மனம் நொந்து போயிருந்த அவர், ஒரு கரித்துண்டை எடுத்து ''யாரும் கவனிப்பதில்லை!'' என்று சுவரில் எழுதினார்.

அந்த மண் சுவரின் வெடிப்பின் வழியே, மெல்லிய வெளிச்சம் வந்தது. மறுநாள் சாமான வேர் ஒன்று மெள்ள தலை நீட்டியது. இரண்டொரு நாளில் சிறிதாக இலைகள் முளைத்தன. தனக்குத் தரப்பட்ட குவளை நீரின், கொஞ்சத்தை அதன் மீது ஊற்றியதில், ஒரு கொடி படர்ந்தது. அடுத்த வாரம், வெள்ளை நிற சிறு பூ ஒன்று அழகாய் மலர்ந்து மணம் வீசியபோது, அந்தக் கைதி, முன்பு தான் எழுதிய வார்த்தைகளை அழித்துவிட்டு, ''கடவுள் கவனிக்கிறார்!'' என்று எழுதினார்.

• • •

''கடவுள் இருக்கிறார்... கடவுள் கவனிக்கிறார்... அதனால் நல்லவர்களுக்கு பயமில்லை. நல்லதையே நினைப்பவருக்குத் துயரமில்லை. நல்லவற்றையே நாடும் யாரும் மனம் தளர வேண்டாம்'' என்று சொல்லிச் சொல்லி குழந்தைகளை வளருங்கள்.

அமைதி, ஆற்றல், மகிழ்ச்சி ஆகியவை நம் அனைவருக்குள்ளேயே இருக்கின்றன. நாம் விரும்பினால் பயற்சியின் மூலம் இந்த எல்லைக்குள் நுழைந்து இறைவனுடன் தொடர்பு கொள்ள முடியும். அதற்கு பண்டிகைகள், விழாக் காலங்கள், தெய்வ வழிபாடுகள் எல்லாம் பெரிதும் உதவுகின்றன.

'நாம் இறைவனின் மடியில் இருக்கிறோம், மிகவும் பாதுகாப்பாக' என்ற நம்பிக்கை உணர்வு நமக்கு இருக்கும்வரை, பயமில்லை... ஜெயம் மட்டுமே!

அனுராதா சேகர்



தீராத ARTHRITIS வலியிலிருந்து விடுதலை
அறுவை இல்லா நவீன சிகிச்சை
PEMF treatment
works to stop the pain ..
* வலி இல்லை
* அறுவை சிகிச்சை இல்லை
* நீண்ட நாட்கள் மருந்து இல்லை
* குறைந்த கால சிகிச்சை
* பக்கவிளைவுகள் இல்லை
* மருத்துவமனையில் தங்கி சிகிச்சை பெற வேண்டிய அவசியம் இல்லை.
NEOMED HOSPITAL
SPECIALITY & RESEARCH CENTER
Chennai : 2181, L-Block, 12th Main Road, Anna Nagar, Ph : 044-2620 1147 / 2620 0882. Fax : 2620 0631
Madurai : 11, Lakeview Road, Opp. Sundaram Theatre, K.K. Nagar, Ph : 0452-2581414, 2581515.
Salem : 127 / 1, Varalakshmi Towers/ Gandhi Road, Ph : 0427-2311818, 2311819.
Trichy : No. 52, Central Bazaar Street, Tennur, Trichy. Ph : 0431-2791051, 2791052.
www.neomedhospitals.com

எந்த டிசைன்

அன்புமிக்க கலாரசிகக் கண்மணிகளுக்கு...

வணக்கம்... மங்கையர் மலர் ஜூன் இதழில் 'டிசைன் புதுசு... புடைவை பரிசு' என்ற தலைப்பில் புடைவை டிசைன் போட்டி ஒன்றை அறிவித்திருந்தோம், இல்லையா? அடேங்கப்பா! மலை போல் வந்து குவிந்த டிசைன்களிலிருந்து பத்து டிசைன்களை தேர்வு செய்வதற்குள் திகைத்துவிட்டோம்.



டிசைன்களைத் தேர்வு செய்ததில் அதிக பங்கு நெசவாளர்களையே சாரும். டிசைன்கள் அத்தனையும் அழகாக இருந்தாலும், அவற்றை தறியில் நெய்ய முடியுமா, புடைவையோடு பொருந்தி அழகாக இருக்குமா, என்றெல்லாம் பரிசீலித்த பிறகே அவை தேர்வு செய்யப்பட்டன.

நெசவுக் கலைஞர்களின் உதவியுடன், சிறந்த பத்து டிசைன்களைத் தேர்வு செய்து அந்த டிசைனுக்கான பிரத்யேக 'கோட்' நம்பரும் கொடுத்திருக்கிறோம். அவற்றிலிருந்து உங்களுக்குப் பிடித்த டிசைனைத் தேர்வு செய்து அந்த 'கோட்' நம்பருடன் எஸ்.எம்.எஸ் மூலமாகவோ, கடிதம் மூலமாகவோ வாக்களிக்கவும். மிக அதிக வாக்குகளைப் பெறும் டிசைன் 'பாலம் சில்க்ஸ்', நெசவாளர் கூடத்தில் உருவாக்கப்பட்டு, வரைந்து அனுப்பிய வாசகிக்கே பரிசாகத் தரப்படும்.

ஸ்டார்ட் வோட்டிங்!

அன்புச் சகோதரி ஜெயஸ்ரீ ரவி

ஆர்வத்துடன் கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றி!



001 ஆர்.சி. இந்துமதி, பெங்களுரு


ஆர்.ராமலக்ஷ்மி, தென்காசி 002



நப்பர்?

வோட்டுப் போடுங்க!

003 விஜயலக்ஷ்மி, எர்ணாகுளம்





அமுதவல்லி, தஞ்சாவூர்-1 004

005 பிரபா சுப்ராமன், புதுடெல்லி-91





லக்ஷ்மி ராஜாராம், பெங்களூர் 006

007 எஸ். சரஸ்வதி, சென்னை-14



உங்
வோட்டுகளை
MMPLM (Spac
பிரத்யேக கோட் நம்
(Space) உங்க
பெயர்......முகவரி
இவற்றை டைப் செய்
562632 என்ற எண்ணுக்
SMS அனுப்புங்க. கூ
மூலமாகவும் மங்கைய
மலருக்கு அனுப்பலா
கடைசித் தே
18.8.201

009 நித்யா, சென்னை-41



008 சாந்தி, திருச்சி-21





010 உதயவாணி, சென்னை-78



KCR
அரைச்ச மாவையே அரைக்காதீங்க. புதுசா ட்ரை பண்ணுங்க.
Anantha
GRIND FORCE
இதுதான் லேட்டஸ்ட்!
இந்தியாவில் முதல் முறையாக ஓவர்லோட் பாதுகாப்புடன்
சிட்ரஸ் ஜூஸர் இலவசம்!
Warranty 2 years – grinder 5 years – motor
www.anantha.info



எங்க ஊர் செய்தி!

உங்க ஊர் செய்திகளை, பிரச்னைகளை, சிறப்புகளை ஹைலைட் செய்யுங்க... புகைப்படத்துடன் அனுப்பினால் சுவை கூடும்!



மாம்பழ பார்ட்டி!

பெங்களூரில் இருக்கும் மாம்பழப் பிரியர்களுக்கு ஜூன் 15 கொண்டாட்ட நாளாக அமைந்தது. மாம்பழ பார்ட்டி ஏற்பாடு செய்திருந்தவர்கள் 'ரங்க சங்கரா' என்ற கலைவளர் அமைப்பு. 'தளதள' என்று அடுக்கப்பட்டிருந்த பல வகையான நேர்த்தியான மாம்பழ வகைகளிடையே குழந்தைகளுக்கான 'மாம்பழக் கதைகள்', மாம்பழ உணவு ஸ்டால்கள், மாம்பழ மகிமை சொல்லும் பொம்மலாட்டம், மாம்பழ க்விஸ் என அசத்தலாக இருந்தது. பார்ட்டிக்கு வந்திருந்த மங்கையரெல்லாம் மாம்பழ நிறத்தில் மஞ்சள், ஆரஞ்சு பச்சை நிற உடைகளை அணிந்து வந்திருந்தது இந்த பார்ட்டியின் ஸ்பெஷல்!

- சாரதா நாகராஜ்,
பெங்களூரு

கிரிவல அவலம்!

எங்கள் ஊரான திருவண்ணாமலையில் கிரிவலம் ரொம்பப் பிரபலம். இங்கு லட்சக்கணக்கான பக்தர்கள் வருகின்றனர். அதில் நானும் ஒருத்தி. கிரிவலம் முடித்து, பக்தர்கள் பேருந்து நிலையம் செல்ல ஆட்டோவுக்கு சென்றால், ஆட்டோ ஓட்டுநர்கள் நிறைய கட்டணம் கேட்கின்றனர். எங்கள் ஊர் மாவட்ட ஆட்சித் தலைவர், ஆட்டோவுக்கு இவ்வளவுதான் குறைந்தபட்சம் பணம் வாங்க வேண்டும் என சட்டம் போட்டும் அவர்கள் மதிப்பதில்லை. அதுபோல தண்ணீர் பாக்கெட்டைக்கூட இரண்டு ரூபாய்வரை விற்கின்றனர். பின்பு காவலர்கள், ஐம்பது காசு தண்ணீர் பாக்கெட்டுகளை விற்றனர். இப்போது அந்தக் கடையும் இல்லை. கிரிவல பக்தர்களுக்கான அடிப்படை வசதிகளை உள்ளூர் நிர்வாகம் செய்து தருமா?



- டி. சசிகலா தனசேகரன்,
திருவண்ணாமலை



5வது ஆண்டில் சொக்குதே மனம்!

ஜெயா டி.வியில், ரியம் என்டர்டெய்னர்ஸின் சொந்தத் தயாரிப்பில் வெளி ாகும் சூப்பர் ஹிட் இசை கழ்ச்சி 'சொக்குதே மனம்.' இரவு 9.30) ஞாயிற்றுக்கிழமை ளை மேலும் ரசனைக்குரிய லாக்ஸ் தினமாக மாற்றும் இந்த நிகழ்ச்சி வற்றிகரமான ஐந்தாவது ஆண்டில் காலடி டுத்து வைத்துள்ளது.

அதையொட்டி மகா மெகா ஷோ ஒன்று, ரும் ஆகஸ்ட் 21ம் தேதி சனிக்கிழமையன்று சன்னை, ராஜா அண்ணாமலை மன்றத்தில் டக்கவிருக்கிறது.

கன்னத்தில் குழி விழ, சிரித்த முகத் தாடு, ஜில்லென்ற குரலில் பாடும் ப்ரியா ்ரமணியத்தின் இசை மழையில் மனம் சாக்காதவர்களே இருக்க முடியாது. அந்தக் லத்துத் தேன் போன்ற பாடல்களை, வசி மாய்ப் பாடி நம்மை கறுப்பு - வெள்ளை சினிமா காலத்துக்கே அழைத்துச் செல்லும் ப்ரியாவுக்கு, இந்தியா மட்டுமல்லாது வெளிநாடுகளிலும் ரசிகர்கள் எக்கச்சக்கம்!

''ப்ரியம் என்டர்டெய்னர்ஸ் சார்பில் நடைபெறும் பிரம்மாண்டமான இசைக் கலை விழாவான 'சொக்குதே மனம்,' நிகழ்ச்சியின் ஐந்தாவது ஆண்டு ஆரம்ப விழா ரசிகர்களுக்கு மாபெரும் இசை விருந்தாக அமையும்.

இசை ஆர்வம் உள்ளவர்களுக்கு 'வித்வான் ஸ்கூல் ஆஃப் மியூஸிக்' என்ற இசை வகுப்புகளை ஆரம்பித்திருக்கிறோம். இசை மாமேதை, தவில் சக்கரவர்த்தி, ஹரித்துவார் மங்கலம் ஏ.கே.பழனிவேலின் பெரும் பங்கு இதில் இருக்கும்.

இசை தவிர, நிதி சம்பந்தப்பட்ட சேவைகளையும் எங்களுடைய தலைமை நிறுவனமான 'எஸ்.எச்.எஸ் அட்வைஸரி க்ரூப்' செய்து வருகிறது. கடன், முதலீடு, பங்குச் சந்தை, பொருள் சந்தை, காப்பீட்டுத் திட்டங்கள் போன்ற அனைத்து விஷயங்களுக்கும் சிறந்த ஆலோசனை தரப்படும்'' என்கிறார் ப்ரியா சுப்ரமணியம்.

இசை பட வாழ்க!

- வாணிஸ்ரீ

SOKKUDHE MANAM MEGA LIVE SHOW

இந்த கூப்பனை கொண்டு வருபவர்களுக்கு 30% DISCOUNT

Tickets Availabal At :

w no.138, 1st Floor, Postal Colony 3rd Street, West Mambalam , Chennai 33. Mb : 92832 07414

.373, 1st Main Road, Natesan Nagar, Virugambakkam, Chennai - 600 092. Mb : 90030 77456.

இவை எல்லாமே ஆஹா 50 தான்

சுடிதார் போடுபவர்கள், நாடா கோத்துக் கட்டுவதற்கு பதிலாக எலாஸ்டிக் வைத்து தைத்துக்கொண்டால் அவசரத்துக்குப் போடும்போது மிகவும் சுலபமாக இருக்கும். நாடா முடிச்சு இறுகி, அவ்வப்போது நம்மை டென்ஷன் படுத்துவதையும் தவிர்க்கலாம்.

- ஸ்ரீ, நங்கநல்லூர்

சமையல் செய்யும்போது சில நேரம் கைகளில் சுட்டுக் கொள்வோம். உப்புத் தூள் கொஞ்சம் எடுத்து, நீரில் சேர்த்து, சுட்ட பகுதியில் தடவி விடுங்கள். எரிச்சல் தணிந்து விடும்.

- என். ஜரினா பானு, திருப்பட்டினம்





செவ்விளநீர் சாப்பிடுவதால் கிட்னியில் உருவாகின்ற கல் கரையும். காலையில் வெறும் வயிற்றில் பருகுவது நல்லது.

- நாகலட்சுமி, சென்னை

திருமணம், சமூகச் சடங்குகளில் பந்தி பரிமாறும்போது முதியோர் படும் அவஸ்தை சகிக்க முடியாது. அவர்களுக்காகவே ஒரு வரிசையை ஒதுக்கி ஒழுங்கு படுத்தலாம். இதைப் பார்க்கும் சிறியவர்களுக்கும் பெரியவர்களை மதிக்கும் பண்பு உண்டாகும்.

- உமா மோகன்தாஸ், திண்டுக்கல்

ஒரு டீஸ்பூன் கடலை மாவுடன் சிறிது பால், தயிர், பன்னீர் சேர்த்து நன்றாகக் குழைத்து முகத்தில் பூசவும். நாளடைவில் கரும்புள்ளி மறைந்து பளிச்சென மின்னும். முகப்பரு போயே போச்சு!

- பிரபா, சென்னை

சிலர் தூக்கமின்மை வியாதியால் கஷ்டப்படுபவர்கள். நல்ல சூரிய ஒளி மேலே படும்படி (தினம் 30 நிமிடம்) இருந்தால் நல்ல பலன் கிடைக்கும். தூக்கத்தைக் கட்டுப்படுத்தும் மெலடோனின் ஹார்மோன் சுரக்க இது உதவும்.

- எம்.எஸ். மணி, பெங்களூரு

வாழை இலையை சுருட்டி செங்குத்தாக நிமிர்த்தி வைத்தால் நான்கு நாட்கள் ஆனாலும் இலை பழுக்காது.

- ஆர். பிரகாசம், நல்லாலய

சாதாரண நாளில் சமுத்திர ஸ்நானம் செய்தால் புண்ணியம். அதிலும் ஆடி அமாவாசையன்று செய்தால் பல மடங்கு புண்ணியம். ராமேஸ்வரம், பூம்புகார் சமுத்திர ஸ்நானம் செய்தால் படு விசேஷமானது.

- ஆர். ரங்கநாயகி, கொல்கத்தா

பிளாஸ்டிக் சாமான்களில் விரிசல் அல்லது ஓட்டை விழுந்துவிட்டால் எம்.சீல் வைத்து ஒட்ட முடியாது. ஆனால் உப்புத்தாள் (எமரி பேப்பர்) கொண்டு அந்த இடத்தை நன்றாகத் தேய்த்து சொரசொரப்பாக்கி விட்டு, அதன்மேல் எம்.சீல் பிசைந்து ஒட்டினால் நன்றாகப் பிடித்துக் கொள்ளும்.

- எஸ்.பட்டம்மா, திருச்சி


ஏஞ்சல்ஸ்®
(Since 1991)
ஹேர், ஸ்கின் & பாடி கேர்
Angels®
(Since 1991)
HAIR, SKIN & BODY CARE
COSMETIC CLINIC
GOOD BYE ! TO BALD HEAD WITHIN 1 HOUR THRU SILICON SYSTEM®
NO MORE WORRY OF UNWANTED HAIR
(Ex. UpperLip, Chin, Cheeks, Abdomen, Chest, Ears)
WEIGHT REDUCTION TREATMENT AT ANGELS
HAIR FALL CONTROL & REGROWTH IS POSSIBLE FOR LADIES THRU' PHOTO LASER THERAPY
MADURAI: Veeyar Nilayam, No.171, KK Nagar, Opp. A.R. Hospital. Ph: 0452-4395859, 2583738.
TRICHY: Neptune Towers, No.B-11/1, Thillai Nagar. Ph: 0431-4311569, 2765859
CHENNAI: AA1, 1st Cross St., 3rd Main Road, RVR Towers, 2nd Floor, Annanagar.
Ph: 044-26212547 / 26213468, 42176679. Cell: 98400 46599.
COIMBATORE: RR Complex, R.S.Puram. Ph: 0422 - 6547577, 2547889. Cell: 92444 15899
● Hyderabad - (040)23222111, 66368999 ● Bangalore - (080)41153995, 41153996, 09845566799
VIJAY TV 10.30 11.00
www.angelsgroup.co.in
Under Doctor's Supervision
Conditions Apply

புராணம்

திரௌபதியும் திருவடியும்!

இறைவனது திருவடியைப் பற்றுவதைப் போல வேறு இன்பம் இவ்வுலகில் இல்லை. நம்முடைய துன்பத்துக்கு இறைவனது திருவடியை சரணாகதி அடைந்தால், நமது துன்பமெல்லாம் தூசு போல் பறந்துவிடும்.

திருநாவுக்கரசரை சுண்ணாம்புக் காளவாயிலில் போட்டப் பொழுது, 'மாசில் வீணையும்...' எனப் பாடியவர் அந்நிலையிலும் 'ஈசன் எந்தன் இணையடி நிழலே' என சரணாகதி அடைகிறார்.

திரௌபதி, அவையில் துகிலுரியப்பட்டபோது, அவளும் முதலிலேயே இறைவனான கிருஷ்ணனது திருவடியை சரணாகதி அடையாது, அவளின் இழிநிலைக்கு அவளே காரணமானாள்.

முதலில் துச்சாதனன் அவளிடம் வந்தபோது சட்டம் பேசினாள்; நீதியுரைத்தாள். பின்னர் காந்தாரியிடம் சொல்லியழுதாளேயன்றி இறைவனின் திருவடியைச் சரணடையவில்லை. பின்னரும் அரசவையில் தர்மம் உரைத்தாள், நீதி கேட்டாள்.



'அடி உதவுவதுபோல அண்ணன் தம்பி உதவ மாட்டார்கள்' இந்தப் பழமொழிக்கு என்ன அர்த்தம்? ஒவ்வொருவரும் ஒவ்வொரு அர்த்தம் கூறுவர். 'அடி' என்றால் உதை இல்லை. 'அடி' என்பதற்கு 'திருவடி' என்று பொருள்.

துரியோதனன், அவளது மேலாடையைக் களையக் கட்டளையிட்டான். அப்பொழுதும் பாஞ்சாலி இறைவன் திருவடியைப் பற்றி சரணாகதி அடைந்தாளில்லை. துச்சாதனன், அவளது மேலாடையைப் பற்றி இழுக்க அவளும் தன் கைகளையே நம்பினாள் அன்றி 'திருவடி'யைப் பற்றி நினைக்கவில்லை.

முடிவில் வேறு வழியின்றி இறைவனது நாமம் உரைத்தே 'திருவடி'யைப் பற்றிச் சரணாகதி அடைய சேலை நீண்டு மானங்காக்கப்பட்டாள்.

- கல்யாணி பாய், திருநெல்வேலி



ஆடி சிறப்பு சலுகை 01.08.10 முதல் 30.08.10
1.50 ct வைர நெக்லஸ்
18.00 gm தங்கத்தின் எடை
விலை ரூ. 1,08,000
சலுகை விலை
ரூ. 92,000
ஏழு கல்
வைரத்தோடு
ஜிமிக்கியுடன் சேர்த்து
1.00cts
தங்கத்தின் எடை 9 கிராம்
ரூ. 69,000
தள்ளுபடி விலை
ரூ. 58,000
வைர நகைகளுக்கு Perct 4000 தள்ளுபடி
7 கல் வைரத்தோடு - 25000 முதல்
வைர மூக்குத்தி 1700 முதல்
பேன்சி வைரமோதிரம் 4500 முதல்
பேன்சி வைரதோடு 4500 முதல்
பேன்சி டாலர் கம்மலுடன் சேர்த்து 6500 முதல்
அனைத்து வைரங்களும் V V S E F கலர்
திருப்பி தரும்பொழுது வைரத்திற்கு மட்டும் 100% அன்றைய மார்கெட் விலை
500 முதல் 5000 வரை மாத சீட்டு + இரட்டிப்பு போனஸ்
25000 மேல் வாங்கும் அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் நகை பெட்டி வழங்கப்படும்.
ஒரு ஜோடி
வைர வளையல்
0.95 ct
தங்கத்தின் எடை
26.00 gm
விலை
ரூ. 99,000
சலுகை விலை
ரூ. 89,000
*ஆடி சிறப்புச் சலுகை நீங்கள் வாங்கும் அனைத்து வைர நகைகளுக்கு 1% Discount Voucher வழங்கப்படும்
Sri Palsani Jewels
110, Dr. Radha Krishnan Road, (Near Sri Krishna Sweets) Chennai - 4
Phone: 2811 1737, 2811 7036 | www.sripalsanijewels.net
Sunday Holiday
*conditions Apply

சொல்ல விரும்புகிறோம்

எனக்கு நினைவு தெரிந்த நாள் முதலாய் மங்கையர்மலரை என் அக்காக்கள் படிப்பார்கள். அவர்கள் திருமணமாகி சென்றபின், இப்போது 3 மாதங்களாகப் படிக்கின்றேன். அனைத்துப் பகுதியும் அருமை. வாழ்த்துக்கள். 'ஒரு வார்த்தை' மீண்டும் மீண்டும் படிக்கத் தூண்டியது. இதுவே எனது முதல் கடிதம்.

- பெ. சுலோசனா தெய்வேந்திரன், நெய்வேலி

அன்பு அனுஷா, உன் பதில்கள் 'அன்பு வட்டம்' பகுதியில் நடுநிலையுடன் வெளி வருவது குறித்து மகிழ்ச்சி. குறிப்பாக ஜூலை 2010 இதழில் மைலாப்பூர் சீனுப்ரியாவின் கேள்வியான 'கற்கண்டாய் மனைவி சமைத்தாலும்...' என்ற கேள்விக்கு உன் பதில் நெத்தியடி மட்டுமல்ல; நடுநிலைமை வகித்த பதில். உன் பணி தொடர வாழ்த்துக்கள். மற்ற பதில்களும் மிகவும் அருமையாகவும், ருசிகரமாகவும் இருந்தன.

- பிரேமா சேதுநாராயணன், சென்னை



பதினைந்து ஆண்டுகளுக்கு முன், எனக்கு ஆந்திராவில் அரசுப் பள்ளியில் ஆசிரியை வேலை கிடைத்தது. குழந்தையைக் கவனித்துக் கொள்ள வேண்டி வேலையைத் தவிர்த்தேன். பின்னர், என் கணவருக்கு மாற்றல் ஆகும் ஊர்களில் தனியார் பள்ளிகளில் வேலை செய்தேன். தற்போது என் மகன் மேல் படிப்புக்காக வெளிநாடு சென்றுள்ளான். சமீபகாலமாக போரடிக்கும்போதெல்லாம், நான் அரசாங்க வேலையை உதறியது தவறோ என்ற எண்ணம் இருந்தது. லக்ஷ்மிமோகன் எழுதிய 'இடைவேளை' என்ற சிறுகதையைப் படித்தஉடன் நான் செய்தது சரிதான் என்று நிம்மதி பிறந்தது. நன்றி, மங்கையர் மலர்!

- ஆர்.உமா, குஜராத்

'ஆஹா 50-ல் என் டிப்ஸ் வந்த செய்தியை என் உறவினர்களுக்கும், தோழிகளுக்கும் ஃபோன் மூலம் தெரிவித்தேன். மங்கையர் மலர் வாங்கிப் படித்து விட்டு அவர்கள் தெரிவித்த பாராட்டுகளும், வாழ்த்துகளும் மறக்கவே முடியாத தினமாக மாற்றிவிட்டது.

- விமலா பத்மநாபன், சென்னை

'தலை வாழை சமையல்' பகுதியில் நீங்கள் வெளியிட்டுள்ள பச்சை நிற தலை வாழை இலையின் படமும், உணவு வகைகளும், பெண் அமர்ந்து உண்ணும் அழகையும் பார்க்கும்போதே சமைத்து ருசித்திடத் தோன்றுகிறது. இந்த வாரம் எங்கள் வீட்டில் தலை வாழை சமையல்தான்; வாருங்களேன் உணவருந்த!

- பி. லலிதா, கோயமுத்தூர்

நமது ஆசிரியர் 'வாசகர் சந்திப்பு'க்காக சிதம்பரம்

சுகந்தம்

நகரத்துக்கு வந்தபோது, எங்கள் வீட்டு விஷேசம் போல் உணர்ந்தேன். நிகழ்ச்சியை குத்து விளக்கு ஏற்றி ஆரம்பிக்க, ஆசிரியர் ஆண்மகனான என்னையும் அழைத்தார். என் வாழ்க்கையில் முதன் முறையாக ஒரு நிகழ்ச்சியை விளக்கேற்றித் தொடங்கியது மங்கையர் மலர் நிகழ்ச்சியைத்தான்.

- பி. பாலாஜிகணேஷ்,
சிதம்பரம்



பூஞ்சாரல்' பக்கங்களில் வீசிய பூந்தென்றலில், எங்கள் மனம் சுகந்தமாய் மலர்ந்தது!

- தவமணி பெரியசாமி,
தேனூர்



'**கோ**யில் சிறப்பு - 64' குட்டிபுக்கின் ஒவ்வொரு பக்கத்திலும் தெய்விகத்தை உணர முடிந்தது. மங்கையர் மலர் என்றால் ஏதோ பெண்கள் இதழ் என்று இனி யாரும் நினைக்க முடியாது. அது ஆல்ரவுண்டர் ஆகி ரொம்ப வருஷம் ஆச்சுங்கோ!

- பி. பரத்,
சிதம்பரம்

'**தூ**ரிகை ட்யூஷன்' பகுதியில் துளசி கண்ணன் வழங்கியிருந்த குறைந்த செலவில் 'வால் பெயின்டிங்' செய்யும் முறை மூளைக்கு வேலையளித்ததோடு, வருமானத்துக்கும் வழிகாட்டியிருந்தது.

- இரா.வளையாபதி,
தோட்டக்குறிச்சி

மாமியார் ஆகிய நான் மனதுக்குள் குமைந்து கொண்டிருந்த ஆதங்கத்தை 'ஒருவார்த்தை' மூலம் தெரிவித்ததற்கு உங்கள் கைகளுக்கு ஆயிரம் பென் (பொன்).

- பாலா திரிபுரா,
திருச்சி

விமலா ரங்கநாதனின் கேள்விக்கான அனுஷாவின் பதில் குபீர் சிரிப்பை வரவழைத்து விட்டது.

- ஸ்ரீமதி ராஜி
குருசாமி, சென்னை

எனக்குப் பல வருடங்களாகக் கழுத்து எலும்பு தேய்மானம், இடுப்பு வலி, இரண்டு கால்களிலும் மூட்டு வலி என வலிகளுக்கும் எனக்கும் அன்பு அதிகம். என்னை விட்டு விலக இயலாத பிரியம். புரியும்படியான வியாதிக்கே இப்படி என்றால், விநோத வியாதியின் அவஸ்தைகளை அந்தச் சிறுபெண் தாங்கிக் கொள்கிறாளே. சாரதா, யு ஆர் கிரேட்!

- தேவி,
கோவை

வீசிய பூஞ்சாரல்!



உன்னதமான சூழலில்
உவகையான வாழ்க்கை உங்களுக்காக...

சௌந்தர்யம் @ இடிகரை

கோவையில் மூத்தகுடிமக்களுக்கு சேவை செய்வதில் பலவருடம் அனுபவம் கொண்ட எங்கள் நிறுவ தற்பொழுது அவர்களது பராமரிப்பையும் சேவையையும் மேன்மைபடுத்தியுள்ளது

▸▸▸ திட்டத்தின் சிறப்பு அம்சங்கள் ▸▸▸

- கோயம்புத்தூர் மேட்டுப்பாளையம் சாலையில் துடியலூரில் இருந்து 3 கிலோ மீட்டரில் ஐந்து ஏக்கரில் பர விரிந்து இருக்கிறது இடிகரையில் உள்ள சௌந்தர்யம்.
- மலைகளால் சூழப்பட்டு, பச்சைப் பசேலென்ற சுற்றுப்புறச்சூழலில் அமைந்துள்ளது.
- ஸ்டுடியோ அப்பார்ட்மெண்ட் (583 சதுர அடி) 2 பெட்ரூம் வீடு (890 லிருந்து 1000 சதுர அடிகளில்) 3 பெட் (1429 சதுர அடிகள்) மற்றும் வில்லாஸ் (1612/1676 சதுர அடிகளில்).
- தார் சாலைகள், நடைபாதைகள், புல்வெளிகள், மழைநீர் வடிகால்கள், தெருவிளக்குகள், சுத்திகரிக்கப்ப தண்ணீர், கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம், சோலார் வாட்டர் ஹீட்டர், மரங்கள் நடப்பட்ட தெருக்கள், கண் தோட்டங்கள் போன்றவை.

▸▸▸ வசதிகள் ▸▸▸

- நவீன க்ளப் ஹவுஸ், டைனிங் ரூம், ரீடிங் ரூம், கார்டு மற்றும் டிவி ரூம்
- ஆம்புலன்சுடன் கூடிய மருத்துவ மையம்
- செயல்திறன் மையம்
- ஊழியர்கள் தங்குமிடம்
- விருந்தினர் இல்லம்
- ரெசிடன்ட் மேனேஜர்
- ரெசிடன்ட் மருத்துவர்
- 7 X 24 செக்யூரிட்டி
- திறந்தவெளி திரையரங்கம்
- அல்சீமர் நோயாளிகளுக்கான பராமரிப்பு மையம்
- பொது இடங்கள் மற்றும் வீடுகளுக்கு ஜெனரேட்டர் வசதி
- வீடுகளுக்கு UPS வசதி





சேவைகள்

இருப்பிடத்திற்கே உணவு வழங்கும் சேவை

வீட்டுப்பராமரிப்பு, தோட்டக்காரர்கள், மின்பணியாளர்கள், கார்பெண்டர், பிளம்பர்களின் பராமரிப்பு சேவைகள்

போக்குவரத்து சேவைகள்

பொழுதுபோக்கு அம்சங்கள்

மாலை நேர சமூக நிகழ்ச்சிகள் மற்றும் அருளுரைகள்

பக்தியாத்திரைகள்

சுற்றுலா ஏற்பாடுகள்

உடல் ஆரோக்கியம் பேணும் சேவைகள்

அவசரகால மருத்துவ சேவை

பொது இடங்கள் மற்றும் திரைப்படங்களுக்கு செல்வதற்கான ஏற்பாடுகள்



வசிப்பிடத்திற்கான கட்டணம்

நியாயமான, ஏற்றுக்கொள்ளத்தக்க விலையில் ரூ.17.75 லட்சம், ரூ.26.75 லட்சம், ரூ.42.00. லட்சம் மற்றும் ரூ.56.00 லட்சம் முறையே ஸ்டுடியோ, 2 பெட்ரூம் 3 பெட்ரூம் அப்பார்ட்மெண்டுகள் மற்றும் 3 பெட்ரூம் வில்லாக்களுக்கு

பதிவுகட்டணம் மற்றும் சேவை வரியைத்தவிர அனைத்தும் உள்ளடங்கியது

மறைமுக கட்டணம் கிடையாது

*Conditions apply

விவரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்: www.covaiprop.com

An ISO 9001 : 2008 certified Company

Member-CPDA

COVAI ®
PROPERTY CENTRE
(INDIA) PRIVATE LIMITED

An Ex- Serviceman's Enterprise

727, Damu Nagar, Puliakulam Main Road, Coimbatore - 641 045.
Ph : 91-422-2312367, +91-422 6572625,
Mob: 9894317841. Fax: +91-422-2312367.
E-mail: covaiprop@vsnl.net (or) covaiprop@airtelmail.in

BOOKINGS OPEN



ஜெயஸ்ரீ ராஜ் நினைவுச் சிறுகதைப் போட்டி–2010 முடிவுகள்!

முதல் பரிசு
ரூ.10,000
உதய கன்னி!
-ஒய்.சுகந்தி,
விழுப்புரம்

இரண்டாம் பரிசு
ரூ.7,500/-
காடும் மலையும் எங்கள் கூட்டம்
-பத்மா, பெங்களூரு

மூன்றாம் பரிசு
ரூ.5,000/-
விதை ஒன்று போட்டால்...
-டாக்டர்
லலிதா விஸ்வநாதன்,
சென்னை - 20


மங்கையர் மலரில் இச்சிறுகதைப் போட்டி, ஐந்தாவது ஆண்டாக நடைபெறுகிறது. இந்த வருடம் கதைகளின் எண்ணிக்கை அதிகரித்திருந்தன என்பதோடு, இன்னொரு விஷயமும் எங்களை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தியது. நிறைய புது எழுத்தாளர்கள், குறிப்பாக கல்லூரி மாணவிகள் கலந்து கொண்டிருந்தனர். 'பூஞ்சாரல்' விழாக்களின் நல்லதொரு பயனாகவே இந்த புது மலர்ச்சி விளைந்ததாக நம்புகிறோம். முதல் பரிசுக் கதையை எழுதியவர், திருப்பத்தூர் தூய இருதயக் கல்லூரியின் இயற்பியல் மாணவி, சுகந்தி. வருக... இளைய தலைமுறையே!

எழுத்தாளர் **வே.எழிலரசு**, கவிஞர் **ச.விஜயலட்சுமி** ஆகியோர் நடுவர்களாக இருந்தனர். இவர்களுடன் மங்கையர் மலர் பொறுப்பாசிரியர் **அனுராதா சேகரும்** பரிசீலித்ததில் மேற்கண்ட சிறுகதைகள் பரிசுக்குரியவையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டன.

முதல் பரிசுப் பெற்ற கதை இந்த இதழில்... பிரசுரத்துக்குத் தேர்வான மற்ற கதைகளின் விவரம் அடுத்த இதழில்...

பரிசு பெற்றவர்களுக்கு வாழ்த்து... ஆர்வமுடன் கலந்து கொண்டவர்களுக்கு நன்றி.

(ஆர்)



■ படம்: யோகா



ஸ்ரீ அன்னையின் புனித உடை தரிசனம்

புதுவை ஸ்ரீ அரவிந்தர் ஆசிரம விளையாட்டு மைதான தியானக் கூடலின் போது (29.2.1956) ஸ்ரீ அன்னை மீது சத்திய ஜீவிய ஒளி இறங்கியது.

அன்றைய தினம் ஸ்ரீ அன்னை அணிந்திருந்தப் புனித உடை, அசோக் நகர் ஸ்ரீ அரவிந்தர் அன்னை தியான மையத்திற்கு வந்துள்ளது . சத்திய ஜீவிய ஒளி நிறைந்துள்ள ஸ்ரீ அன்னையின் புனித உடையை தரிசனம் செய்தவர்களுக்கு அற்புதங்கள் அன்றாடம் நடந்து கொண்டிருக்கிறது.

" நொடியில் பலிக்கும் பிரார்த்தனை முறைகள்" புத்தகம் கிடைக்கும்.

பகவான் ஸ்ரீ அரவிந்தர் பூரண யோகம் மேற்கொள்ள புதுவைக்கு வந்து 100 ஆண்டுகள் ஆகிறது.

இதை முன்னிட்டு பகவான் ஸ்ரீ அரவிந்தர் அன்னையின் அனைத்து புகைப்படங்கள் (செய்திகளுடன்) கொண்ட அருள் தரிசன ரதம் சென்னை முழுவதும் 100 பொது இடங்களுக்கு வருகிறது.

அருள் ரதம் (9.12.2010) புதுவை ஆசிரமத்தில் நிறைவடைகிறது.

உங்கள் பகுதிக்கு ஸ்ரீ அன்னையின் அருள் ரதம் வரும் திருநாளை அறிந்து கொள்ளுங்கள்.

நேரடி ஆலோசனைக்கு
ஸ்ரீ அன்னை அடிகளை சந்திக்கலாம்.

Cell : 98414 25456
Ph : 2474 6000

சென்னையில் ஸ்ரீ அரவிந்தர் அன்னையின் புனித சமாதி அன்னை அன்பர்களால் நிறுவப்படுகிறது.

நீங்களும் இயன்ற காணிக்கையை அளித்துப் பேரருளைப் பெறலாம்.

ஸ்ரீ அரவிந்தர் அன்னை தியான மையம்

(சத்திய ஜீவியம் டிரஸ்ட்)
புதிய எண்: 10, (பழைய எண்: 27),
45வது தெரு, 9வது அவென்யூ,
அசோக் நகர், சென்னை - 83.
(நவசக்தி விநாயகர் கோவில் / K.V.R. பேக்கரி அருகில்)


sriannaiadigal@gmail.com
www.mothergrace.org

மயிலாப்பூர் • நங்கநல்லூர் • அம்பத்தூர்

முழங்கால் மூட்டுவலிக்கு லேட்டஸ்ட் சிகிச்சை

பொதுவாக 60 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு வரக் கூடிய மூட்டுத் தேய்மானம் சமீப காலமாக 40 வயதுடையவர்களுக்கு வரத் தொடங்கி விட்டது. மூட்டுத் தேய்மானத்திற்கு 3 காரணங்கள்: 1. சரிவிகித உணவு சாப்பிடாதது, 2. உடல்பருமன் & பல நாட்கள் ஃபிரிஜ்ஜில் வைத்து மீண்டும் சாப்பிடுவது, 3. உடற்பயிற்சியின்மை.

15 வடங்களுக்கு முன்பு தேய்ந்த முழங்கால் மூட்டை அறுவை சிகிச்சை செய்தாலும், மாடிப்படிகளில் ஏறி, இறங்குவது கஷ்டமாகத்தான் இருந்தது. நவீன மருத்துவ வளர்ச்சியால் புதிய சிகிச்சை முறை ஒன்று வந்துள்ளது. இதற்கு **ஆக்ஸினியம் / சேராமிக் கோட்டட்** என்ற நவீன முறை செயற்கை மூட்டு மாற்று அறுவை சிகிச்சை என்று பெயர். இளம் வயதிலேயே மூட்டு வலியால் பாதிக்கப் படுபவர்களுக்கு ஒரு பெரிய வரப்பிரசாதமாக இந்த முறை உள்ளது என்கிறார் சென்னை நந்தனம் அப்போலோ சிறப்பு மருத்துவமனை டாக்டர். விஜய் சி. போஸ். இந்த அறுவை சிகிச்சையில் மெட்டல் அலாய் உடையாத தன்மையும், செராமிக் கோட் கரண்டலற்ற மற்றும் நீண்ட காலம் உழைக்கும் தன்மையும் கொண்டது. இந்த சிகிச்சை எடுத்துக் கொள்வதன் மூலம் தரையில் அமர்வது, மாடிப்படி ஏறுவது போன்ற அனைத்து வேலைகளையும் சுலபமாக செய்யலாம்.



மேலும் விவரங்களுக்கு மூட நீக்கியல் நிபுணர் டாக்டர். விஜய சி. போசை எளிதில் தொடர்பு கொள்ளலாம்

Cell : 98400 32251, 98405 23436
Phone No : 044 - 4229 1274
bose5vijay@hotmail.com
www.hipkneeshoulderindia.com

திருமணமானதிலிருந்து மாமியார் எடுத்து வைத்த ஸ்ரீ வரலக்ஷ்மி விரதத்தைச் சிரத்தையுடன் வருடா வருடம் செய்து வருகிறோம். காலையில் ராகு காலம் தொடங்குவதற்கு முன் பூஜை ஆரம்பமாகி விடும். ஆனால் பல வருடங்களுக்கு முன்...



பூஜைக்கு அலங்காரம் செய்த வரலக்ஷ்மி அம்மன் ரெடி. பூஜைக்குத் தேவையான பொருள்கள், பிரசாதங்கள் எல்லாம் ரெடி.ஆனால், வருடம் தவறாமல் ராகு காலத்துக்கு முன்பாகவே ஆஜராகிவிடும் எங்கள் வீட்டு வாத்யாரைத்தான் காணவில்லை. ''வந்தாச்சா! வந்தாச்சா!'' என்று குறுக்கும் நெடுக்குமாய் நடந்ததுதான் மிச்சம். செல்ஃபோன் வராத காலம். கூப்பிட்ட அக்கம்பக்கத்து வீட்டுக்காரர்கள் வந்துவிட்டு பிறகு வருவதாக கூறிப் போயாகிவிட்டது. என்ன செய்ய?

அம்மன் காத்து இருப்பது குறித்து மனதுக்குள் கவலை இருந்தாலும், ஸ்லோகங்களைப் படித்தவாறு உட்கார்ந்திருந்தேன்.

வாத்தியார் வந்து பழகிவிட்டதால், செய்யும் முறை பற்றிய புத்தகமோ, கேஸட்டோ இல்லை.நேரம் ஆக ஆக கவலை அதிகரித்தது. 'வரலட்சுமித் தாயே! என்ன சோதனை. நல்லபடியாக நடத்திக் கொடு' என்று மனது வேண்டிய சமயம். மாலை மணி ஐந்து. அப்போது வாத்தியாரின் உதவியாளர் அவசர அவசரமாக வந்து, ஏதோ சமாதானம் கூறி பூஜையை ஆரம்பித்தார்.

தீபாரதனை காட்டுகையில் மணி ஆறைத் தாண்டிவிட்டது. அந்தச் சமயத்தில் பெரிய வாத்தியார் மெள்ள வந்து,

மறக்க முடியாத ஸ்ரீவரலக்ஷ்மி நோன்பு!



''எல்லோரும் அவரவர் சௌகரியப்படி ஸ்ரீ வரலக்ஷ்மி நோன்பு பூஜையைச் செய்கிறார்கள். உண்மையாகவே, இந்தப் பூஜையை மந்தையிலிருந்து ஆடு, மாடுகள் வீடு நோக்கி மாலையில் திரும்பும் சமயத்தில் செய்வது தான் நல்லது. அதுவே அம்மனுக்கு பிடித்த நேரம்'' என்றார்.

அம்மனின் விருப்பப்படிதான் அன்று மாலையில் பூஜை நடந்தேதோ என்று மனதினுள் நினைத்து சந்தோஷப்பட்டேன்.

- ஆர். மீனலதா, மும்பை

கோதானம் செய்வது ஓராயிரம் அஸ்வமேத யாகம் செய்த பலனை கொடுக்கும்

முன்னோர்கள் நினைவாக மஹாளய அமாவாசை அன்று (7-10-2010) ஸ்வாமி கண்ணன் பட்டாச்சார்யா தலைமையில் கோதானம் செய்து பித்ருக்களின் ஆசிர்வாதத்தை பெற்று அனைத்து தோஷங்களில் இருந்தும் நிவர்த்தி பெற அன்புடன் அழைக்கிறோம்

முன்னோர்கள் நினைவாக மஹாளய அமாவாசை அன்று அனைத்து தோஷங்களில் இருந்தும் விடுபடவும், முன்னோர்களின் ஆசி வேண்டியும் கோதானம், மகிஷ (எருமை) தானம், காறாம் பசு தானம், பசுமடத்தில் நடைபெறுகிறது. யாகங்கள் செய்து, யோகங்கள் சேர்ப்பதில் வல்லவரும் ஹோமங்கள் செய்து க்ஷேமங்கள் குவிப்பதில் வல்லவரும், பித்ரு தோஷ நிவர்த்திக்கு விருட்ச பரிகாரம் சொல்பவருமான ஜோதிட சிம்மம் ஸ்ரீயோக ஆஞ்சநேய சக்தி பீடாதிபதி விருட்ச சாஸ்திர வித்வான் பூஜ்ய ஸ்ரீ ஸ்வாமி கண்ணன் பட்டாச்சார்யா தமது வேத வித்வான்களின் குழுவுடன் கோதான பூஜை, கோபூஜை செய்ய உள்ளார். இதில் அனைவரும் கலந்து கொண்டு கோதானம் செய்து பித்ருக்களின் ஆசியை பெற்று தோஷ நிவர்த்தி பெற அன்புடன் அழைக்கிறோம்.

கோதானத்திற்கு மிஞ்சி ஒரு புண்ணியமும் இல்லை. பரிகாரத்துக்கு அதுவே பெரிய மருந்து

கோதானம் (பசுவும் கன்றும்) செய்தால் ஜாதக ரீதியான தோஷம், பித்ரு தோஷம், திருஷ்டி தோஷம் விலகி, புத்ர பாக்கியம், தடைபட்ட திருமணம் கைகூடும். குடும்பத்தில் மங்கல நிகழ்ச்சிகள் நடைபெறும். கோதானம் செய்ய ரூ.9,000/-

காறாம் பசு (பசுவும் கன்றும்) தானம் செய்தால் 7 1/2 ஆண்டு, அஷ்டமச் சனி விலகும். நவக்கிரஹ தோஷம், நாக தோஷம், ஆபிசார தோஷம், வாஸ்து தோஷம், எதிரிகள் தொல்லை விலகி, சந்தான அபிவிருத்தி உண்டாகும். காறாம் பசு தானம் செய்ய ரூ.10,000/-

மகிஷ தானம் (எருமையும் கன்றும்) செய்தால் நோய் பாதிப்பால் பயம், வாகன விபத்து, தீய சக்தியால் ஏற்படும் பயம், வியாபாரம். உத்யோகத் தடை நீங்கும். பாப தோஷம் விலகி ஆயுள் விருத்தி, மனச்சாந்தி உண்டாகும். மகிஷ தானம் செய்ய ரூ.11,000/-

மேற்கண்ட தானம் செய்ய (Cheque/DD/MO மூலமாக) **Sri Ghosala Seva Trust, Chennai** என்ற பெயரில் கீழ்கண்ட முகவரிக்கு அனுப்பி மஹாளயபக்ஷ அமாவாசை அன்று நடைபெறும் கோதானத்தில் கலந்து கொண்டு நடமாடும் தெய்வமாகிய கோமாதாவின் பேரருளை பெற அன்புடன் அழைக்கிறோம்.

மேற்கண்ட தானம் செய்பவர்களுக்கு பித்தளையிலான பெரிய கோமாதா விக்ரஹமும் வெள்ளியிலான ஐஸ்வர்ய பெருமாள் விளக்கும் அனுப்பி வைக்கப்படும்



நன்கொடைகளுக்கு 80G பிரிவின் படி வரி விலக்கு உண்டு

பசு மடம்

(Recognised by Animal Welfare Board of India)

வயதான பசுக்களை பராமரிக்கும் இல்லம்
ஆதரவற்ற பசுக்களை பாதுகாக்கும் இல்லம்
ஊனமுற்ற, நோயுற்ற பசுக்களை பேணும் இல்லம்

பெருமாளகரம், திருவேற்காடு (P.O), சென்னை-77 போன்: 044 -3299 9888



சிறுகதை



ஓய். சுகந்தி

ஜெயஸ்ரீ ராஜ் நினைவுச் சிறுகதைப் போட்டி ரூ.10,000 முதல் பரிசுக் கதை

ஜூலை 6

ஹாய் மானஸா,

வெகுநாட்களாகிவிட்டன, உன்னிடம் பேசி. கல்லூரியின் முதல் வாரம் முடிந்துவிட்டது. போஸ்ட் கிராஜுவேஷன் படிப்பு, மீண்டும் புத்தகங்கள், குவாண்டம் மெக்கானிக்ஸ், நியூக்ளியர் ஃபிஸிக்ஸ், சாலிட் ஸ்டேட், எக்ஸெட்ரா... எக்ஸெட்ரா... இன்க்ரெடிபில் ஃபிஸிக்ஸ். நான்தான் ரொம்பப் பாவம். உடன் மாணவிகளில் நிஷா கொஞ்சம் ஸ்நேகமாகத் தெரிகிறாள். சின்ன ஆப்பிள் போல இருக்கிறாள். ப்ரீத்தி, கேத்ரின், சௌம்யா எல்லோருடனும் சீக்கிரம் பழகிட வேண்டும். ஆண் மாணவர்களில் யாருடனும் இன்னும் பழகவில்லை. லைப்ரரி போனேன். நிறைய தடிதடியான புத்தகங்கள். பிங்க் நிற சல்வார் எடுத்தேன். ஓ.கே. இனிய இரவு!

ஆகஸ்ட் 6

மானு டியர்,

நிஷா எனது நெருங்கிய தோழியாகிவிட்டாள். கேத்ரின், சௌமி, ப்ரீத்தி, ஹேவ் ஆல் பிகம் மை ஃப்ரெண்ட்ஸ். இன்று நிஷா, வினுவை அறிமுகப்படுத்தினாள். நைஸ் கை. அவளது ஸ்கூல் மேட்டாம். இன்று ஜே.கே. சார் கிளாஸ் போரடித்தது! நிஷாவுடன் ஐஸ்லேண்ட் போய் கஸாட்டா சாப்பிட்டேன். இரவுகளில் மழை பெய்வது மனதுக்கு சுகமாக இருக்கிறது. கல்லூரி கேம்பஸுக்குள் நிறைய்ய பூ மரங்கள். ரம்மியமான புல்வெளிகள். நெருப்பு மாதிரி ஒரு பூ பார்த்தேன், 'செபாஸ்டினா' என்று பெயர்ப்பலகை செருகிய மரத்தில். ஸோ க்யூட். ஐபாடில் ''நின்னை சரணடைந்தேன்' டவுன்லோட் செய்தேன். வரவர கர்நாடிக் ம்யூஸிக் ரசிகையாகிக்கொண்டு வருகிறேன். அப்புறம் ஒரு பவர் பாய்ண்ட் தயார்த்தேன். அடுத்த வார செமினாருக்காக. கலர்ஃபுல்லாக வந்திருக்கிறது. தலைப்பு என்ன தெரியுமா? 'ஃபைபர் ஆப்டிக்ஸ்'. எனக்கு பிடித்த ஃபீல்டு.

ஆகஸ்ட் 28

ப்ரிய மானஸா,

கேத்ரின் பற்றி சொன்னேனில்லையா?

ஒரு விஷயம் சொன்னாள், தலை கவிழ்ந்துகொண்டு. ஹரியும் அவளும் காதலிக்கிறார்களாம். இவ்வளவு தைரியமாக காதலில் குதித்து விட்டாளே என்று ஆச்சர்யம். அதைவிட அதிர்ச்சி ப்ரீத்தி-சாய் காதல். ஒரே சமூக மறுமலர்ச்சி காதல்கள்தான். பேரன்ட்ஸ் கதி என்ன? இது சுயநலமில்லையா? நன்றி கெட்ட தனமில்லையா?

அக்டோபர் 3

ஹலோ மானு,

எனக்கு நிஷா மீது கோபம் கோபமாய் வருகிறது. அந்த ராஸ்கல் வஸந்துடன் ஸ்கைப்பில் காதல் பேசிக் கொண்டிருந்தாள். வஸந்த்,



சரியான பொறுக்கி என்று கல்லூரி வாசலில் செருப்பு தைப்பவரைக் கேட்டால்கூடச் சொல்வார். இவளுக்கு ஏன் புத்தி இப்படிப் போகிறது? கோபமாகவே சொல்லிப் பார்த்தேன். அவன் உத்தமப் புத்திரனாம். எனக்கு அவள் மீது பொறாமையாம். ஹௌ இடியாட்டிக்! பேசாமல் ஆன்ட்டியிடம் சொல்லி விடலாமா? நிஷா, அவனை நம்பாதே. உன் வாழ்க்கையே பாழாகிவிடும். ஐ'ம் ஸோ அப்ஸெட். பேட் நைட் மானு!

அக்டோபர் 21

அன்புள்ள மானஸா,

இன்றுதான் அவனை முதல்முறை பார்த்தேன், காலேஜ் பஸ்ஸில் வரும் போது. பேருந்து நிறுத்தத்துக்கு அருகில், நண்பர்கள் இருவருடன் வந்து கொண்டிருந்தான், அவன் வண்டியில். கையில் ஒரு நாய்க்குட்டி. அதற்கு அடி பட்டிருந்தது. அவன் கண்களில் அப்படியொரு பாவம். ரொம்ப ஸென்ஸிடிவ் போல. இன்று மாலைக்குள் ஒரு பத்து தடவை அவன் கண்களுக்குள் வந்து சென்றான். நிஷா என்னுடன் பேசுவதில்லை. அந்த வேதனைகூட மறந்து விட்டது. க்வாண்டம் கிளாஸில் ராகவன் சாரின் கேள்விக்கு, எனது பதில் 'திரு திரு'. 'புரோக்கன் விங்ஸ்' படித்தேன். கலீல் ஜிப்ரானின் வார்த்தைகளில் அதித கவிதை இருக்கிறது. அது அந்த 'அவனை' நினைவூட்டுகிறது. நாளைக்கும் வருகிறானா, பார்க்க வேண்டும். ஓ.கே. ஃபீல் ஸ்லீப்பி. ஸ்வீட் நைட் மானு.

அக்டோபர் 26

டியர் மானு,

அவன் பெயர் சுரேந்திரனாம். 'சுரேன்' என்று அழகாக அழைக்கலாம். அப்படித்தான் அவன் நண்பர்கள் அழைத்தார்கள். இன்று நான் பார்ப்பதை அவனும் பார்த்துவிட்டான். அழகாகப் புன்னகைத்தான். ஐ'ம் ஸோ ஹேப்பி! என் செமினார் 'ப்ரிட்டி குட்' என்று புகழப்பட்டது. வெகு நாட்களாகத் தேடிக் கொண்டிருந்த ஜோனத்தான் லிவிங்ஸ்டன் 'சீ கல்' புத்தகம் கிடைத்தது. ஆனந்தமான நாள். 'அவன்' காரணமா? மந்திரப் புன்னகையோ?



மைதா மாவை ஒரு மெல்லிய துணியில் சிறு மூட்டையாகக் கட்டி, ஆவியில் வேக வைக்கவும். மாவு வெந்ததும் உதிர்த்து உப்பு, சீரகம் சேர்த்துப் பிசைந்து சீடை செய்தால், வாயில் போட்டதும் கரையும்.

- வே.சித்ரா வேடியப்பன், திருவண்ணாமலை

அக்டோபர் 29

மானு, இரண்டு நாட்களாக சுரேனைப் பார்க்க முடியவில்லை. உடம்பு சரியில்லையோ?


அக்டோபர் 31

வேர் த ஹெல் ஆர் யூ பாய்? இந்தப் பையன் எங்குதான் போய்விட்டான்?

நவம்பர் 1

ப்ரியமான மானஸா

சுரேன் வந்துவிட்டான். அதே புன்னகையுடன். அவனிடம் சென்று பேசினேன். ரொம்ப நாள் பழகியவன் போல எவ்வளவு இயல்பாகப் பேசுகிறான் ஃபர்ஸ்ட் அவர் கட். பரவாயில்லை இன்றுதான் கவனித்தேன். அவனுக்கு சிரித்தால் கன்னத்தில் குழி விழுகிறது பளீரென்று விழிகள். எந்நேரமும்



புன்னகை பொங்கும் இதழ்கள். வெரி க்யூட்.

சௌமி, கேத்ரினிடம் 'கரேன்' பற்றி சொன்னேன். நமுட்டுச் சிரிப்பு சிரித்தார்கள், 'யாரது?' என்று கேட்டுவிட்டு. 'ஃப்ரெண்ட்' என்றேன். எனக்கு சிரிப்பு தான் வந்தது. ஒருநாள் அவனை அறிமுகப் படுத்துவதாகச் சொன்னேன்.

நவம்பர் 26

அன்பு மானஸா,

இப்போதெல்லாம் நான் நிறைய சிந்திக்கிறேன். திட்டமிடுகிறேன். என் செலவுகளை நெறிப்படுத்துகிறேன். இனி கசாட்டா கட். மாதம் ஒரு ஸல்வார் கட். இன்னும் அநாவசிய செலவுகள் கட். இன்று நிஷாவையும், வஸந்தையும் ஐஸ்லேண்ட் அருகே பார்த்தேன். நிஷா, நீ அழிந்து போகிறாய்! நாளை மூன்று காரியங்கள் செய்ய திட்டமிட்டிருக்கிறேன்.

1. தாகூரின் கீதாஞ்சலியை லைப்ரரியில் திருப்பித் தர வேண்டும்.

2.வஸந்தைப் பற்றி, கல்லூரிப் பெட்டியில் ஒரு புகார் கடிதம் எழுதிப் போட வேண்டும்.

3. ஆன்ட்டியிடம் நிஷா பற்றி பேச வேண்டும். (ஸாரி, நிஷா, வேறு வழி தெரியவில்லை.)கரேன், நெக்ஸ்ட் வீக், என் ஃப்ரெண்ட்ஸ் வரப் போகிறார்கள். உன்னைப் பார்க்க...

டிசம்பர் 5

டியர் மானு,

நிஷா கல்லூரிக்கு வரவில்லை. என்ன ஆச்சு? அவள் வீட்டுக்குப் போனேன். என்னைப் பார்த்ததும் ஓடி வந்து கட்டிக் கொண்டாள். அழுதாள். ஆறுதல் சொன்னேன். வஸந்த் பற்றிய உண்மைகள் தெரிந்து விட்டதாம். வைஸ்பிரின்ஸிபல் கூப்பிட்டு எச்சரித்தாராம். புகார் பெட்டிக்கு நன்றி. அவன் படிப்புதான் கெடும். புத்தி வரட்டும். ஆன்ட்டி, என் கைகளைப் பிடித்துக் கொண்டார்கள், கண் கலங்க. தேங்க்யூ க்ரைஸ்ட். மை நிஷா ஈஸ் பேக்!

டிசம்பர் 7

மானு டியர்,

இன்று நான் எல்லோரையும் கரேனிடம் அழைத்துச் சென்றேன். ப்ரீத்தி, கேட்டி, சௌமி, நிஷா, சாய், வினு, ஹரி... ஹைவோல்ட் எலக்ட்ரிக் ஷாக்டு ஆல், என் பாய் ஃப்ரெண்டைப் பார்த்தவுடன்.

அவனது சக்கர நாற்காலியில் அமர்ந்திருந்தான், அதே முறுவலுடன், என் பத்து வயது பாய்ஃப்ரெண்ட். எல்லாருக்கும் பவர் கட் பண்ணிவிட்டு என் பிளானை விவரிக்கலானேன். ''ஃப்ரெண்ட்ஸ் இவனை அடுத்த வருஷம் நல்ல ஸ்கூல்ல சேர்க்கணும். ஃபீஸிலிருந்து... யூனிபார்ம், புக்ஸ் வரைக்குமான ஸ்பான்ஸர் நம் அனைவரின் பாக்கெட்ஸ்தான். ஐ மீன் பாக்கெட் மணி. அதற்கு முன் அவன் அம்மாவைச் சந்திக்க வேண்டும். இவனுக்கு அப்பா இல்லை. கரேனுடைய செயற்கைக் கால் ஆபரேஷனுக்கு முயற்சி செய்யணும். இன்னும் நம்மால் என்னவெல்லாம் செய்ய முடியும்னு 'மொட்டை மாடி கான்ஃபரன்ஸ்' போட்டு ஆலோசிக்கணும். எனக்கு





முந்திரி குலாப்ஜாமூன்!

தேவையான பொருள்கள்:

முந்திரி - 20, பால்- 1 கப், கோவா - ½ கப், மைதா - ½ கப், சர்க்கரை - 1½ கப், ஏலப்பொடி - 1 டீஸ்பூன், கேசரிப்பொடி - 1 சிட்டிகை, பச்சைக் கற்பூரம் - சிறு துளி, எண்ணெய் - பொரிக்க தேவையான அளவு

செய்முறை: முந்திரியைப் பாலில் ஊற விட்டு அரைத்து, மைதா, கோவா சேர்த்து நன்றாகக் கலக்கவும். இவற்றை சிறு உருண்டைகளாக உருட்டவும்.

சர்க்கரையைப் பாகு செய்து, ஏலப்பொடி, கேசரிப் பொடி, பச்சைக் கற்பூரம் சேர்க்கவும். வாணலியில் எண்ணெய் விட்டு மிதமானத் தீயில் உருண்டைகளைப் போட்டு பொன்னிறமாக குலாப் ஜாமுனைப் பொரித்தெடுக்கவும். அவற்றை சர்க்கரைப் பாகில் போட்டு ஊற வைக்கவும்.

இது ஒரு ஸ்பெஷல் ஸ்வீட். பண்டிகை காலங்களில் செய்து விருந்தினரை அசத்துவோம்.

- ஜெயலக்ஷ்மி, புதுதில்லி

ஃப்ரெண்ட்லாகி தொலைந்தநால் இதையெல்லாம் செய்தே ஆக வேண்டியது உங்கள் தலைவிதி'' - சிரித்தேன். சௌமியும், கேட்டியும் என்னைக் கட்டிக்கொண்டார்கள். அவர்கள் வேறு விதமாக நினைத்திருந்தார்களாம். 'தெரியும்' என்று மிடுக்காக மொழிந்தேன்.

ஜனவரி 1, 2010
இனிய புத்தாண்டு


ஹாய் நியூ மானு,

பச்சையும் மஞ்சளும் கலந்த நிறத்தில், புதிய உன்னை அம்மா பரிசளித்தார்கள். நீ அழகாக இருக்கிறாய்! உன்னைவிட, உன் அட்டை மேல் இருக்கும் 'வைப் ரன்ட்' என்ற வார்த்தை அழகு. நாங்களும் ரொம்ப வைப்ரான்ட்டாகி விட்டோம். இப்போதெல்லாம் அடிக்கடி மீட்டிங்தான், சுரேன் பற்றி பேச... எதிர்காலத்தில் இந்த நெட்வொர்க்கை விசாலப்படுத்த.

நிஷாதான் சற்று வாடியிருந்தாள். அவளிடம் பேசினேன். 'வஸந்த் போன்ற நாய்களிடம் ஏமாறுவதைவிட நமக்கு நிறைய வேலையிருக்கிறது. நமக்காக நிறைய சுரேன்கள் காத்திருக்கிறார்கள். அழகாய் மலரத் துடிக்கும் ஓர் எதிர் காலமும்தான்.'' நிஷா சிரித்தாள். இனி அழ மாட்டேன் என்று ப்ராமிஸ் செய்தாள். தட்ஸ் மை கேர்ள்!

இன்று படித்த வரிகள், ஃப்ரம் மை ஃபேவரிட் பாரதி.

பூமியினும்பொறை மிக்குடை யாள்
பெரும்
புண்ணிய நெஞ்சினாள் தாய் -
எனில்
தோமிழைப் பார்முன் நின்றிடுங்
காற்கொடுந்
துர்க்கை யனையவள் தாய்.



மஹா லக்ஷ்மியே போற்றி!

செல்வத்துக்கு அதிதேவியான மகா லக்ஷ்மியை ஸ்தோத்திரங்கள் பாடிப் போற்றியவர்கள்:-





- ஆதிசங்கரர், ஒரு நெல்லிக் கனியைப் பிக்ஷையாக இட்ட ஏழைக்காக 'கனக தாரா ஸ்தோத்திரம்', இயற்றி மகாலக்ஷ்மியைத் துதித்தார். அந்த இடத்தில் ஏழை வீட்டில் பொன் மழை பொழிந்தது.
- ஸ்ரீ நிகமாந்த தேசிகர், ஓர் ஏழை பிரம்மச் சாரியின் உபநயனத்துக்காக 'ஸ்ரீ ஸ்துதி' பாடினார். பொன் மழை பொழிந்தது.
- ஸ்ரீ பராசர பட்டர் 'குணரத்ன கோசம்' என்ற துதியைப் பாடினார். இது 61 ஸ்லோகங்களைக் கொண்டது.
- 'நமஸ்தேஸ்து மகமாயே' என்று ஆரம்பிக்கும் 'மகாலக்ஷ்மி அஷ்டோத்ரம்' இந்திரனால் பாடப்பட்டதென்று கூறப்படுகிறது.

- ஆர். ராஜலட்சுமி, ஹைப்ளி



குக்கரி க்வீன்!

குக்கரி தர்பாரில் கலந்துக் கொள்ள சமையல் ராணிகளை அழைக்கிறோம். ஒரிஜினல் சமையல் குறிப்புகளைத் தெளிவாக எழுதி, கீழே உள்ள கூப்பனையும் நிரப்பி அனுப்புங்க. தேர்ந்தெடுக்கப்படும் ஐந்து ரெஸிபிகளுக்கு தீபாவளிக்கான ஸ்பெஷல் பரிசு காத்திருக்கிறது!

குக்கரி க்வீன் சமையல் போட்டி (ஆகஸ்ட்)

சுகர் ஃப்ரீ ஸ்வீட்

பெயர்:..

முகவரி:..


....

....

கடைசித் தேதி: 25.08.2010

இந்த இதழில் 'ஆஹா 50!' என்ற தலைப்பில் இடம் பெற்றுள்ள டிப்ஸ்களைப் படியுங்கள். மிகச் சிறந்த ஒரே ஒரு குறிப்பைத் தேர்ந்தெடுத்து எழுதி அனுப்புங்கள். உங்கள் தேர்வும், ஆசிரியர் குழுவின் தேர்வும் பொருந்தினால் குலுக்கல் முறையில் ரூ.150/- பரிசு! தேர்ந்தெடுப்பவருக்கு மட்டுமல்ல, அந்தக் குறிப்பை எழுதியவருக்கும் ரூ.150/- பரிசு! 'ஆகஸ்ட் ஆஹா பரிசு' என்று மறக்காமல் குறிப்பிட்டு பக்க எண், வாசகி பெயருடன் அஞ்சல் அட்டையில் மட்டுமே எழுதி அனுப்புங்கள்.

கடைசித் தேதி: 15.08.2010



அடிச்சாங்க பரிசு!

ஜூலை *(2010)* ஆஹா பரிசு போட்டியில் ''தெரு விளக்குகள் அனைத்தும் சூரிய சக்தியினால் எரியக்கூடிய சோலார் விளக்குகளாக இருந்தால் மின்சாரத்தை மிச்சப்படுத்தலாம். வீடுகளுக்கும் இதனைப் பயன்படுத்தலாம். அரசு கவனிக்குமா?'' என்ற குறிப்பை எழுதி ரூ.*150/-* பரிசு பெறுகிறார் **வி.பிரேமா, மயிலாடுதுறை**

அதே டிப்ஸைத் தேர்வு செய்த பல வாசகியரில் குலுக்கல் முறையில் ரூ.*150/-* பரிசு பெறுகிறார் **எம். பாரதி முருகநாதன், நாமக்கல்**


உங்கள் தோற்றத்தை
அழகாக திரும்பப் பெறுங்கள்!



நான் லவண தைலத்தினை நான்கு மாதங்கள் உபயோகித்தேன். சில காலமாகவே லவண தைலத்தினைப் பற்றி நான் அறிவேன். இருந்தாலும் ஆரம்பத்தில் அதனால் ஏதாவது பக்கவிளைவுகள் வருமா என்று யோசித்தேன். உடனடியாக லவண தைலத்தின் அலுவலகத்தை தொடர்புகொண்டு விசாரித்தேன். அவர்கள் எனக்கு மிகத் தெளிவாக பதில் அளித்தார்கள். பக்கவிளைவுகள் எதுவும் ஏற்படாது என்றும் மிகச்சிறப்பான பலன் தரும் என்றும் சொன்னார்கள். மூன்று மாதங்கள் பயன்படுத்திய பின் அழகான தோற்றம் கிடைத்தது. ஒல்லியான அழகான இடையும் கிடைத்துவிட்டது. எனது கணவரும் என்னை பாராட்டத் தொடங்கிவிட்டார். என் அனுபவத்தை உங்களோடு பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். இதனால் நீங்களும் பயன் பெறுங்கள். லவண தைலத்தினை நீங்கள் பயன்படுத்துங்கள் இது என் உத்தரவாதம். பிறகு என்னிடம் உங்கள அனுபவத்தை பகிர்ந்து கொள்ளுங்கள் லவண தைலம் மிகப் பெரிய வெற்றியடைய விரும்புகிறேன்.

உங்கள் உண்மையுள்ள

லீலா சாமியப்பன்
ஸ்ரீராகம், நெ. 57, செம்பாக்கம்
சேலையூர் (P.O), சென்னை-73





ஆண்கள் மற்றும் பெண்கள் இருவருக்குமே
மிகச் சிறந்த பலனைத் தரும்

அனைத்து மெடிக்கல் ஷாப் / ஆயுர்வேத மருந்தகம்
சூப்பர் மார்கெட் பெண்களுக்கான ஷாப்களிலும் கிடைக்கும்

இன்ஸ்டிடியூட் ஆஃப் இந்தியன் தெரபிஸ் வழங்கும்

ஆயு: கேர்

லவண தைலம்

ஆயுர்வேதிக் ஃபிகர் கேர்

அதிகப்படியான உடல் எடை மற்றும் தொப்பையை
குறைக்க அதி நவீன ஆயுர்வேத சிகிச்சை

Available in all Khadi Crafts centers of
Coimbatore, Erode, Tirupur & Salem

Helpline: TN.9940020167, 08144769264, 09841651822, 09962207856, 044 42810111. Madurai,Dindigal, Rameswaram, Sivagangai, Virudhanagar: 8148523095, Coimbathore,Erode,Selam, Hosur:9600513753 Tirunelvely & Nagarkovil: 09698181528 Kumbakonam & Tanjore: 09489957729

Manufactured by: **INSTITUTE OF INDIAN THERAPIES**, Annamanada P. O. Thrissur-680 741. Kerala, India. email: ayucarecochin @gmail.com, cim@asianetindia.com, www.ayucaregroup.com Super Stockist: Chennai: Sun Enterprises 9283299999 Mumbai: Prakash Agencies: 022 23446533, 23429138, 9322762518 Karnataka: Rakesh Enterprises 080 23579251. Andra Pradesh: Vijayalakshmi Agencies Ph.040 66464454.
Business & Export Enquiries: 0484 2351077, 0487 3211227, 2387553 Fax: 0487 2387558 For Trade Enquiries: 08144769264

Chennai: 42053807, 25352799, 26350447, 22416695, 42696556, 28414245, 25365281, 23772965, 9150071400, 9283241374, 24401415, 26680675, 24950287, 24612459, 42147242, 9380097566, 25382123, 28289017, 22392809, 22591841, 9840456658, 30513555, 42940801, 9789984555, 9840339239, 9444153465 **Villupuram:** 224335, 9944354632. **Tiruvannamalai:** 9894232918, 254930. **Chidambaram** 9360378117 **Pondichery:** 2330154, 2220759, 2220385. **Virudhachalam:** 232115. **Chengalpattu:** 9360636642. **Kanchipuram:** 9500300703. **Hosur:** 9715399777, 9940861324. **Kaveripattinam:** 253369. **Tirupathur:** 229545. **Bodi:**9943765092 **Krishnagiri:** 231211. **Arcot:** 237851. **Vellore:** 2234782, 2225618.**salem:** 2336365, 2332775, 9443615923. **Erode:** 9944444155, 9443357425. **Udumalapet:** 9486840065. **Attur:** 9750566999. **Madurai:** 2624010, 9790645922, 9042412821, 9952870319 **Sivakasi** 9443961490 **Thenkasi:**9443621684 **Coimbatore:** 9843182222, 9994377522, 9843358773, 2242225, 2491554, 9443756778, 9943602166, 9944455270 **Nagercoil:** 277264, 238018, 235437. **Tirunelveli:** 2337483, 2331583, 9364139686. **Trichy:** 2765158, 2706651, 2700824. **Dindugul:** 2433914. **Colachel:** 9788290005. **Marthandam:** 273239. **Tuckley:** 9443824889. **Cumbam:** 9360090991. **Pollachi:** 9047169006. **Tanjore:** 9843051294, 231474. **Thiruvarur:** 9894965225. **Rajapalayam:** 9842143494. **Kumbakonam:** 6499498, 2423269 **Karur:** 9842451210. **Cudalore:** 9677744959. **Tirupur:** 9600961007, **Namakkal:** 9443356266, **Puthukottai:** 224332, **Karaikudi:** 9442473792 **Neyveli:**9443538672. **Ramanadapuram:** 9003606069

AYU: CARE

மயக்கும் மசாலாப் பொடி!



சமைக்க... சுவைக்க

எங்கள் அலுவலகத்தில் பணிபுரியும் தோழியின் பிரியாணி, புலாவ் மற்றும் நார்த் இண்டியன் உணவு வகைகளின் சுவை, அருமையாக இருக்கும். துருவி, துருவிக் கேட்டதில் கிடைத்த ரகசிய ரெஸிபி இது. (அம்மா... பெருமூச்சு). இந்தப் பொடியை சமைக்கும் உணவின் அளவுக்கேற்ப, வடிவேலு ஊத்தாப்பம் ஆர்டர் பண்ணும்போது சொல்வது போல (சினிமாவின் பேர் என்ன?) அப்படியே மேலாக பூ மாதிரி தூவி, ஒரு கிளறு கிளறி விட்டுப் பரிமாறினால், சப்பு கொட்டிக்கொண்டு சாப்பிடுவர். எல்லாரிடமும் ஷொட்டும் வாங்கலாம்!

கம கம நார்த் இண்டியன் மசாலாப் பொடி

லவங்கம் - 3, மிளகு - 6, பட்டை - 3 துண்டு., ஏலக்காய் - 3, பெரிய ஏலக்காய் (மசாலா ஏலக்காய்) - 1 (விதைகளை மட்டும் சேர்க்க வேண்டும்.), பிரிஞ்சி இலை - 3, பெரும் சீரகம் - ½ டீஸ்பூன் கொத்தமல்லி - ½ கப், வற்றல் மிளகாய் - 2, கசகசா- 1 டீஸ்பூன், சோம்பு- 2 டீஸ்பூன்

செய்முறை:

தனியா, சீரகம், பெரும் சீரகத்தை வாணலியில் எண்ணெய் விடாமல் சூடு செய்து பொன்னிறமாக வறுக்கவும். மற்ற பொருள்களை சிறிது எண்ணெய் விட்டு வறுத்துக் கொள்ளவும். பின் இவற்றை எல்லாம் நன்றாகப் பொடி செய்து, சிறிது உப்பு மற்றும் சாட் மசாலா சேர்த்து, காற்று புகா பாட்டிலில் போட்டு ஃப்ரிஜ்ஜில் வைத்துக் கொள்ளவும். தேவையானபோது உபயோகப்படுத்தி கொள்ளலாம்.

- மித்ரா முரளிதரன், நவி மும்பை



காஸ்மெட்டிக் சர்ஜரி

K M C H

கே.எம்.சி.எச். அறிமுகப்படுத்தும்
ஒபாஜி - யு. எஸ். ஏ முறையில்
க்ரீம், சீரம் மற்றும் ப்ளூ பீல்





முகத்திலுள்ள தோலின் நிறத்தை
பொலிவு பெறச்செய்தல்
முகத்திலுள்ள சுருக்கம்,
கரும்புள்ளிகள் மற்றும்
முகப்பருவினாலான
தழும்புகள் நீக்க சிகிச்சை

ஆண்கள் மற்றும் பெண்கள்
முகம், உடல் அழகிய
வடிவமைப்பு பெற

முடி மாற்று அறுவை சிகிச்சை
முகப்பருவினால் தழும்புகள்
காஸ்மெட்டிக் சர்ஜரி முறையில்
சரும சிகிச்சை
கூந்தல் மற்றும் மேனி அழகு மிளிர

முகப்பருவினால் தழும்புகள்
மைக்ரோஏர் - டெர்மாப்ரேஷன்
சிகிச்சை முறை

கே.எம்.சி.எச். அறிமுகப்படுத்தும்
தென்னிந்தியாவில் முதன் முறையாக
அமெரிக்காவின்
மைக்ரோ ஏர் - டெர்மாப்ரேஷன்
முறை
முகத்திலுள்ள சுருக்கம், கரும்புள்ளிகள்
மற்றும் முகப்பருவினாலான
தழும்புகள் நீக்க சிகிச்சை

தழும்பில்லாத
மார்பக அறுவை சிகிச்சை
பெண்கள்
மார்பக அளவை பெரிதுபடுத்துதல்
மார்பக அளவை குறைத்தல்
ஆண்கள்
மார்பக அளவை குறைத்தல்

காஸ்மெட்டிக் சர்ஜரியினால்
பிரசவத்திற்கு முந்தைய
தோற்றம்
அழகிய கட்டுடல் வடிவமைப்பு
மார்பகங்கள் சீரமைப்பு
அதிக கொழுப்பு,
வயிற்றுசுருக்கம் நீக்குதல்
பிறப்புறுப்பை சரி செய்தல்

விபரங்களுக்கு அணுகவும்

டாக்டர் அர்த்தநாரி. குமார் பிரசாத் M.S., M.Ch., (பிளாஸ்டிக் சர்ஜரி)
கன்சல்டன்ட் காஸ்மெட்டிக் சர்ஜன்

K M C H

கோவை மெடிக்கல் சென்டர் & ஹாஸ்பிடல்

அவிநாசி ரோடு, கோயமுத்தூர்-641 014. போன் : 0422-4323175
மொபைல் : 95009 62564 ஈமெயில் : drkmkp2004@hotmail.com

எச்சரிக்கை



பல்பு உடைஞ்சு போச்சுன்னா...

சாதாரண பல்புகளைவிட, சி.எஃப்.எல் பல்புகள் குறைந்த மின்சாரத்தை எடுத்துக் கொண்டு நிறைவான வெளிச்சத்தைத் தருவது உண்மைதான். அதனால் கரெண்ட் பில் கணிசமாகக் குறைவதும் உண்மைதான். அதனால்தான் கேரளாவில் வீட்டுக்கு இரண்டு சி.எஃப்.எல் பல்புகளை இலவசமாகத் தருகிறார்கள்.

ஆனால்... அதே சி.எஃப்.எல். பல்புகள் கைத்தவறி விழுந்து உடைந்துவிட்டால், உடனே அந்த இடத்தை விட்டு வெளியேறி விட வேண்டும் என்று பிரிட்டிஷ் சுகாதாரத்துறை எச்சரித்துள்ளது. ஏனென்றால் இந்த பல்புகளுக்குள் உள்ள மெர்குரி திரவம், ஆர்சனிக், துத்தநாகத்தைவிட அதிக விஷத்தன்மையுள்ளது. இந்த விஷத்தை நுகர்ந்தாலோ அல்லது சருமத்தில் பட்டாலோ, மைக்ரேன் தலைவலி, மூளை பாதிப்பு, உடல் அசைவுகள் பாதிக்கப்பட்டு நிலை தடுமாறுதல் போன்றவை ஏற்படுமாம். அலர்ஜி பிரச்னை உள்ளவர்களுக்கு சரும பாதிப்புகளும் ஏற்படுமாம்.

சி.எஃப்.எல் பல்புகள் உடைந்துவிட்டால் என்ன செய்ய வேண்டும்?

- உடனே அந்த அறையிலிருந்து வெளியேறி விட வேண்டும். அந்த நெடி மூக்கில் ஏறக்கூடாது. பதினைந்து நிமிடங்கள் ஆனபின் அப்புறப்படுத்தலாம். நொறுங்கிக் கிடக்கும் கண்ணாடித் துகள்கள் காலில் படாமல் பார்த்துக் கொள்ளவும்.
- வேக்வம் க்ளீனரால் சுத்தப்படுத்தக் கூடாது. வேக்வம் க்ளீனரால் இந்தத் திரவம் உறிஞ்சப்பட்டால், அது உள்ளே ஒட்டிக்கொள்ளும். அதைத் திரும்ப உபயோகிக்கும்போது மெர்குரித் துகள்கள் மற்ற அறைகளுக்கும் பரவி, மிக மோசமான உடல் உபாதைகளை ஏற்படுத்தும்.
- கைகளில் ரப்பர் கிளவுஸ் போட்டுக் கொண்டு சாதாரண துடைப்பத்தால் சுத்தப்படுத்தலாம்.
- உடைந்தத் தூள்கள் மற்றும் திரவத்தை ஒரு பிளாஸ்டிக் பையில் சேகரித்து, 'சீல்' செய்யவும். சாதாரண குப்பைத் தொட்டியில் போடாமல் கார்ப்பரேஷன் 'ரீசைக்ளிங் பின்'னில் கொண்டு சேர்த்தால், அவர்கள் பாதுகாப்பாக அப்புறப் படுத்திவிடுவார்கள்.

நன்றி: இணையதளம்

- ஷியாமளா சுவாமிநாதன்
திருவனந்தபுரம்


vanessa
வழங்கும்
அப்பீல்
V-Star
anessa
r style for women
Panty and Camisole
V-Star Creations Pvt. Ltd., Mettupalayam Road, Sai Baba Mission Post, Coimbatore - 641 043
Visit us at:www.vstarcreations.in E-mail:reception@vstarcreations.in.
AVAILABLE AT ALL LEADING SHOWROOMS IN TAMIL NADU, KARNATAKA, ANDRAPRADESH, GOA, KERALA, I.N.C.S. KOCHI &
For dealership enquiries:

நெட்வொர்க் மார்க்கெட்டிங்கில் வெற்றி பெற சில உத்திகள்!

நெட்வொர்க் மார்க்கெட்டிங் துறையில் வெற்றி பெற்ற பலரும் பின்பற்றுகிற ஒரு தாரக மந்திரம் என்ன தெரியுமா?

Target the Maximum, To get the Minimum

அதாவது நீங்கள் புதிதாக ஐந்து வாடிக்கையாளர்களை உருவாக்க வேண்டுமானால், குறைந்தபட்சம் நூறு பேரையாவது தொடர்பு கொண்டு உங்கள் பொருள்களைச் சந்தைப் படுத்த வேண்டும். மற்ற எல்லாத் தொழில்களையும்விட, நெட்வொர்க் மார்க்கெட்டிங் துறையில் வெற்றிக்கான வாய்ப்பு விகிதம் மிகவும் குறைவே. ஆனால், உங்களது வாடிக்கையாளர்கள் உங்களிடம் பொருள்களை மட்டும் வாங்காது, அவர்களும் பொருள்களை விற்கத் தொடங்குவர் என்பதால், உங்களுக்குக் கிடைக்கும் இலாபம் மிக அதிகம்.





வாடிக்கையாளர்களை எப்படிக் கண்டறிவது? சரி... 100 பேர், 200 பேர் என பெரிய கூட்டத்துக்கு எங்கே செல் வது?

★ அக்கா, தங்கை, அண்ணன், தம்பி, உற்றார்-உறவினர் என உங்களைச் சுற்றியுள்ள முதல் வட்டத்தில் இருப்பவர்களை நீங்கள் தொடர்பு கொள்ளலாம்.

★ நண்பர்கள், உடன் பணியாற்வோர், உறவினரது நண்பர்கள் என உகளது இரண்டாவது வட்டத்தில் இருட்வர்கள் அடுத்த இலக்கு.

★ அன்றாடம் நீங்கள் சந்திக்கக்கூடி புதிய மனிதர்கள், உங்களுக்கு முக தெரிந்தும் இதுவரை பழக்கம் இல்லை

தொழிலதிபர் ஆகலாம்!

இராம்குமார் சிங்காரம்



சுற்றுப்புற வீட்டுக்காரர்கள் போன்றவர்கள் மூன்றாவது வட்டத்தில் இருப்பவர்கள்.

இப்படியாக உங்களது வட்டங்களை விரிவாக்கிக் கொண்டே சென்றால், உங்களால் நிறைய நண்பர்களை இனம் காண முடியும்.

ஆனால், நாம் முந்தைய இதழில் சொன்னது போலவே, இவர்களையெல்லாம் தொழிலுக்கு அழைத்து வரக்கூடிய பேச்சுத் திறன் உங்களிடம் இருக்க வேண்டும். பேச்சுதான் இந்தத் தொழிலின் முதல் மூலதனம்.

எப்படித் தொடங்குவது?

இப்படி இனம் கண்டோரை, முதலில் தனித்தனியாகச் சந்தித்து பொருள்களின் நன்மைகளை விளக்கி விட்டு, அவர்களை அறிமுகக் கூட்டத்திற்கு அழைக்க வேண்டும். அதிலேயே பாதிப்பேர் கழன்று விடுவார்கள். கூட்டத்திற்கு வருவோரிடம், வெற்றியாளர்கள் சிலரை அறிமுகப்படுத்தி நேரில் பேச வைக்க வேண்டும். கூட்டம் முடிந்த பிறகு தொலைபேசியில் அவர்களோடு உரையாடி அவர்களது ஆர்வத்தைத் தெரிந்து கொள்ளுங்கள்.

பெரும்பாலானோர் முடிவெடுக்க முடியாத குழப்ப நிலையிலேயே இருப்பர். திரும்பவும் அவர்களை வெற்றியாளர்கள் கூட்டத்திற்கு அழைத்துச் செல்ல வேண்டும். பல சாதனையாளர்களைச் சந்திக்கின்ற போது நம்மாலும் முடியும் என்கிற நம்பிக்கை அவர்களுக்கு எழும். அவர்களுக்காக உடன் சென்று, அவர்களுடைய முதல் மற்றும் இரண்டாவது வட்டங்களில் உள்ள சிலரிடம் பேசி ஆர்வத்தை உண்டாக்க முயலுங்கள். பிறகு பொருள்களை வாங்கி அவர்களைப் பயன்படுத்த வையுங்கள்.

இப்படி ஒவ்வொரு நிலையாகக் கடந்து வந்தால் கடைசியில் ஐந்து



பேராவது உங்களோடு கைகோத்து வருவர். அதுவே உங்களது முயற்சிக்குக் கிடைத்த மிகப் பெரிய வெற்றி.

இந்தத் தொழிலின் மிகப் பெரிய தேவை எது?

விடாமுயற்சிதான். பெரும்பாலானோர் இந்த நிலைகளைக் கடக்க முடியாமல் முதல் வட்டத்

லாபம் தரும் பேப்பர் கப் தொழில்!

பேப்பர் கப் செய்யும் தொழிலை வீட்டிலிருந்தபடியே செய்ய வேண்டும் என்பது எனது நீண்ட நாள் ஆசை. இதற்கு எங்கு சென்று பயிற்சி எடுக்க வேண்டும்? முதலீடு செய்ய எவ்வளவு பணம் தேவை? மார்க்கெட்டிங் செய்வது எப்படி?

- ஆர். சாந்தி, கொரட்டூர், சென்னை - 76.

இந்தக் கேள்விக்கு நாம் நேரடியாக பதில் சொல்வது பொருத்தமல்ல. காரணம், ஏதேனும் ஒரு பேப்பர் கப் எந்திர விற்பனையாளரை நாம் பரிந்துரைக்கப் போய் அவர் சரியாகச் செயல்படவில்லை என்றால் அது உங்களுக்கும் சிரமத்தை ஏற்படுத்தும்; பத்திரிகையின் மீதும் நீங்கள் கோபப்படுவீர்கள்.

மாறாக, பேப்பர் கப் என்றில்லாமல் எந்தத் தொழில் தொடங்க விரும்புவோரும் அவர்களுக்கான தொழில் நுட்பத்தைப் பெறு வது எப்படி, மூலதனம் எவ்வளவு தேவைப்படும், பொருள்களை சந்தைப்படுத்துவது எப்படி, என்பது பற்றி சுருக்கமாகப் பார்ப்போம்

தொழில்நுட்பம்: எந்தத் தொழில் சார்ந்த தகவல்கள் வேண்டுமானாலும் நீங்கள் இணையதளத்தில் கூகுல், யாஹூ போன்ற தேடுபொறிகள் மூலம் தகவல்களை சில விநாடிகளிலேயே பெற்றுவிடலாம். தகவல் திரட்டுவது என்பது முன்புபோல் சிரமமான காரியம் அல்ல. ஒருவேளை இணையத் தகவல் உங்களுக்கு திருப்தி தரவில்லையென்றால், தொலைபேசி டைரக்டரிகள், மத்திய அரசினுடைய குறு-சிறு மற்றும் நடுத்தரத் தொழில்கள் மையம், மாநில அரசினுடைய மாவட்டத் தொழில் மையங்கள், டிட்கோ, சிட்கோ, இட்காட் போன்ற பல அமைப்புகளை தேடிச் சென்று நீங்கள் தொழில் நுட்பங்களைப் பெறலாம்.

முதலீடு: ஆரம்பத்தில் குறைவான முதலீட்டில் பேப்பர் கப் தொழிலில் ஈடுபடுவது எப்படி என்று யோசியுங்கள். அதாவது, சந்தையில் கிடைக்கும் தரமான பேப்பர் கப்களை அளவு வாரியாக வாங்கி வைத்துக் கொண்டு அவற்றுக்கு ஆர்டர் எடுக்க முயலுங்கள். உற்பத்தியாளரோடு பேசி உங்களுக்கான இலாப விகிதத்தை நிர்ணயித்துக் கொண்டு உங்களது பிராண்ட் பெயரிலேயே உற்பத்தி செய்து தர ஒப்பந்தம் போடுங்கள். பிறகு மார்க் கெட்டிங்கில் இறங்கி ஆர்டர் எடுங்கள். இதற்கு அவ்வளவாக முதலீடு தேவைப் படாது. சந்தையின் நாடியையும் நீங்கள் எளிதில் அறிந்து கொள்ளலாம். இதில் கிடைக்கிற இலாபத்தைக் கொண்டு சிறிது சிறிதாக தொழிலை விரிவுபடுத்துங்கள்.



தினரைச் சந்திக்கின்றபோதே தன் முனைப்பை இழந்து தோல்வியைத் தழுவி விடுகிறார்கள். முதல் ஐந்து பேர் எதிர்மறையாகப் பேசினால், உடனே 'இந்தத் தொழில் நமக்கு சரி பட்டு வராது' என்று நினைத்து பலர் வீட்டோடு முடங்கி விடுகிறார்கள். தோண்டத் தோண்டதான் தங்கம் கிடைக்கும் என்பது அவர்களுக்குத் தெரிவதில்லை.

இந்த நூறு பேரில் மற்றொரு ஐந்து பேர் முடிவெடுக்க முடியாமல் இருதலைக் கொள்ளி எறும்பாக தவித்துக் கொண்டேயிருப்பர். இவர்களோடு நீங்கள் திரும்பத் திரும்பப் பேசி வெளியிடங்களுக்கு அழைத்துச் சென்று, வெற்றிகரமாக மார்க்கெட்டிங் செய்யும் விதத்தைக் காண்பித்தால் ஓரளவு நம்பிக்கை பெறுவர். இவர்கள் முதல் வருமானத்தைச் சம்பாதிக்கிற

சிறு தொழில்களுக்கு வங்கிக் கடன், அரசு மானியம் என பல வாய்ப்புகள் இருக்கின்றன. ஆனாலும் வங்கிக் கடன்களுக்கு பிணையம் அவசியம் தேவை என்பதை நினைவில் கொள்ளுங்கள். விற்பனை உத்திரவாதம் இருந்தால் நீங்கள் தாராளமாக வெளியில் கடன் வாங்கி தொழில் புரியலாம்.



சந்தைப்படுத்துதல்: பேப்பர் கப், கவர், மெழுகுவர்த்தி போன்ற தொழில்களில் போட்டிகள் ஏராளம் என்பதால் இவற்றில் கிடைக்கும் இலாபமும் நாளுக்கு நாள் குறைந்து கொண்டே வருகிறது. ஆனால், எந்த ஒரு பொருளையும் கண்கவர் வண்ணத்தில் பல புதுமைகளைப் புகுத்தி தயாரிப்பதன் மூலம் விரைவில் சந்தைப் படுத்தி விட முடியும். அதனால், பேப்பர் கப் பயன்படும் இடங்கள், பயன்படுத்தும் அளவு போன்றவற்றை அறிந்து குறிப்பிட்ட நேரத்தில் அவர்களுக்கு டெலிவரி செய்யுங்கள்.

அவ்வப்போது உங்களது பொருள்களை சற்று மாற்றி, மக்களின் தேவைக்கேற்ப உருவாக்கித் தரலாம். ஏனெனில் உங்கள் பொருளை சந்தையில் விற்க முயல்வதை விட, பிறர் கேட்கும் வகையில் வாடிக்கையாளரின் தேவைக்கு ஏற்ப அந்தப் பொருள்களை தயாரித்து, விற்பனை செய்வதுதான் புத்திசாலித்தனம்.

வரை நீங்கள் உடனிருந்து ஊக்கப்படுத்திக் கொண்டே இருந்தால் நிச்சயம் இவர்களால் வெற்றி பெற முடியும்.

தொடர்ந்து உங்கள் சாதனைகளைப் பட்டியலிடுங்கள்

இந்தத் துறையில் ஈடுபடுவோர் அடிக்கடி சுற்றுப்புறத்தில் உள்ளவர்களது எதிர்மறையான போக்கால் நம்பிக்கை இழந்து விடுவர். எனவே உங்களுக்குக் கீழ் விநியோகஸ்தர்களாகப் பணியாற்றுவோரை வாரத்தில் ஒரு முறையாவது அவர்களை உற்சாகப் படுத்துவதற்கான கூட்டங்களை நடத்த வேண்டும். அக்கூட்டத்தில் நீங்கள் அடைந்த வெற்றிகள், உங்களுக்கு மேலே இருப்போர் புரிந்த சாதனைகள், நிறுவனப் பொருள்களின் வித்தியாசமான பயன்பாடு போன்றவற்றை பற்றி பேச வேண்டும். சில இலக்குகளைக் கொடுத்து பரிசுகளை அளிக்க வேண்டும். தொடர்ந்து இது போன்று நடத்தப்படும் உற்சாகக் கூட்டங்களே, உங்களது நெட்வொர்க்கை தக்க வைக்க உதவும்.

எரிபொருள் ஊற்ற ஊற்றதான் வாகனம் ஓடும் என்பது போல, நம்பிக்கை கொடுக்கக் கொடுக்கத்தான் நெட்வொர்க் வர்த்தகமும் வளரும்.

(தொடரும்...)

நாற்பது வயதில் கல்லூரி மாணவியாக உற்சாகமாக வலம் வருகிறார் விமலா. தனது எம்.எட் படிப்பை திருச்செங்கோடு விவேகானந்தா கல்வி நிறுவனங்களில் படித்துக் கொண்டிருக்கும் இவர் 'இமயம்' சுய உதவிக் குழுவின் தலைவி!

'இமயம்

சாதனைப் பெண்





''**தி**ருச்செங்கோடு வட்டத்தில் கொக்கராயன் பேட்டை என்ற சின்னஞ்சிறு கிராமத்தில்தான் பிறந்தேன். என்னோட பிறந்தவங்க நாலு பேர். என் அப்பா, படிப்பின் மீது எனக்கிருந்த ஆர்வத்தைப் பார்த்து, என்னை ஒரு நல்லாசிரியை ஆக்கணும்னு முயற்சி செய்தார்.

''முதன்முதலா என் குக்கிராமத்துப் பள்ளியில் எட்டாம் வகுப்பு டேலன்ட் எக்ஸாமில் நான் முதல் மாணவியா வந்தேன். மேல் நிலைப் பள்ளிக் கல்வியின் இறுதி ஆண்டில், டைபாய்டு காய்ச்சல் வந்து பள்ளிக்கே செல்ல முடியாத சூழ்நிலை. என் அப்பா தந்த ஊக்கத்தில் கடுமையா படித்து 64% சதவீத மார்க்குகள் எடுத்தேன். அப்போது பேருந்து வசதி அதிகம் இல்லை. நடந்தும், ஓடியும், கிடைக்கிற பேருந்தைப் பிடித்தும் ஈரோடு வெள்ளாளர் கல்லூரியில் பி.காம் முடித்தேன்.

''**எ**னக்கு பெற்றோர் மாதிரியே நல்ல கணவரும் கிடைத்தார். அவர் இராணுவ வீரராகப் பணியாற்றுவது எனக்கு மிகவும் பெருமை. வட இந்தியாவில் கொஞ்ச நாள் இருந்தோம். அங்கிருந்தப் போது கைவினைப் பொருள்கள், வீட்டு அலங்காரப் பொருள்கள் எல்லாம் செய்யக் கற்றுக் கொண்டேன். பிறகு இரண்டு குழந்தைகளோடு எங்கள் கிராமத்துக்கே திரும்பினோம்.

''எங்க ஊரில் பீடி சுற்றும் தொழில்தான் பிரதானம். குடும்பச் சூழ்நிலை காரணமா, பள்ளிப் படிப்பை இடையிலேயே நிறுத்திக்கொள்ளும் மாணவிகளின் எண்ணிக்கை எங்கக் கிராமத்தில் அதிகமா இருக்கும். அவங்க பள்ளிக்குச் சென்ற நேரம் போக மீதி நேரங்களில், இலவசமாப் படிப்பு சொல்லிச்

கொடுத்து, அவங்களை 10ம் வகுப்பு, 12ம் வகுப்பு தேர்வு எழுத வைத்தேன்.

''பெண்கள் ஏதாவது சுய தொழில் செய்து சம்பாதிக்க வேண்டும். தங்கள் குழந்தைகளை நல்ல முறையில் வளர்க்க வேண்டும் என்ற நோக்கத்துடன் 'இமயம்' மகளிர் சுய உதவிக் குழுவை ஆரம்பித்தேன். மண்புழு உரம் தயாரிக்கும் பயிற்சியைக் கற்றுக் கொண்டு, அதை மற்ற பெண்களுக்கும் கற்றுக் கொடுத்தேன். வங்கிக்கடன் பெற்று மண் புழு உரம், வீட்டு அலங்காரப் பொருள்கள், கைவினைப் பொருள்கள் போன்றவற்றை எங்கள் குழுவில் விற்பனை செய்தோம். கடனை நல்ல முறையில் திரும்பச் செலுத்தியதற்காக, நாமக்கல் மாவட்டத்தின் 'சிறந்த



சங்க ஊக்குநர்' விருது எனக்கு கிடைத்தது.

''நாங்கள் தயாரித்த, பொருள்களைச் சந்தைப் படுத்துதல், கண்காட்சிகளில் கடைகள் வைத்தல், ஆர்டர்கள் பெற்று, பொருள்களைச் செய்து தருதல் என்று ஓயாது உழைத்ததில், எங்களுக்கு கணிசமான வருமானம் கிடைத்தது. படிப்பறிவே இல்லாத எங்கள் குழுப் பெண்கள், உலக நடப்புகளைப் புரிந்து கொள்ளவும், வங்கிக் கணக்கைப் பராமரிக்கவும், பட்ஜெட் போடவும் பழக்கினேன். அகில இந்திய வானொலி, பத்திரிகைகள், வங்கிகள் எங்களைப் பாராட்டி அதிக உத்வேகத்தைக் கொடுத்தது. இப்போது எனது குடும்பச் செலவுக்குப் போக, மிச்சமான பணத்தை ஏழை மாணவிகளின் படிப்புக்கும் உதவ முடிகிறது.



''ஆனால் எனது ஒரே லட்சியம் பி.எச்.டி வரை படித்து, மேல்நிலைப் பள்ளி ஆசிரியையாகப் பணி புரிந்து, ஏழை மாணவிகளுக்கு நல்ல கல்வியைக் கொடுத்து, அவர்களை உயர்த்த வேண்டும் என்பதுதான். ''என்னுடைய ஆதங்கத்தைப் புரிந்துகொண்ட என் கணவர், என் தாய், என் குழந்தைகள் என்னை மறுபடியும் படிக்கும்படி ஊக்குவித்தார்கள். முப்பத்தெட்டு வயதில், கூச்சத்துடன், இருபது வயதுப் பெண்களுடன் பி.எட் படிக்க கல்லூரிக்குள் நுழைந்தேன். என் இன்னொரு தாயாக சகலகலா வல்லியான முதல்வர் டாக்டர் மௌலா தேவி எனக்குத் தந்த உற்சாகமும், எனது கல்லூரித் தந்தை டாக்டர் கருணாநிதி அவர்களும் ஊக்குவிக்க இன்று எம்.எட் படித்துக் கொண்டிருக்கிறேன். கூடிய விரைவில் முனைவர் பட்டமும் வாங்குவேன்,'' என்கிறார் விமலா ராஜரத்தினம் நம்பிக்கை தொனிக்க.

சந்திப்பு, பேட்டி:
ஆர்.பாலா

இதயம் தொட்ட கதை

அம்மாவுக்கு ஒரு ரோஜா!

ஓர் இளைஞன், வேலை நிமித்தமாக வெளியூரில் இருக்கிறான். வார இறுதியில் தன் தாயைப் பார்க்க சொந்த ஊருக்குச் செல்வான். அந்த வாரம், அவன் நண்பர்கள், ஊர் சுற்ற அழைத்ததால், தன் தாய்க்கு ஒரு பூங்கொத்தை வாங்கி அனுப்பி, தான் வராத செய்தியையும் சேர்த்து அனுப்ப முடிவு செய்தான். எனவே ஒரு பொக்கே கடைக்குச் சென்று பூங்கொத்தை வாங்கினான். கடையின் வாசலில் ஒரு சிறுமி அமர்ந்து அழுது கொண்டிருந்தாள். இந்த இளைஞன், சிறுமியிடம், ''ஏன் அழறே?'' என்று கேட்டான்.

''என் அம்மாவுக்கு ஒரு ரோஜாப்பூ வாங்க வந்தேன். என்னிடம் மூன்று ரூபாய்தான் இருக்குது. கடைக்காரர் ஐந்து ரூபாய்க்குத்தான் ரோஜாப்பூனு சொல்லிட்டாருண்ணா'' என்று விசும்பினாள்.

''சரி, வா! நான் வாங்கித் தரேன்'' என்று அந்த இளைஞன், ஒரு அழகான சிவப்பு ரோஜாவை வாங்கிக் கொடுத்தான். பூவை வாங்கியவுடன் அந்தச் சிறுமியின் முகத்தில் அப்படியொரு மலர்ச்சி.

இளைஞனுக்கும் மிக்க மகிழ்ச்சி. ''வாம்மா! போற வழியில் உன்னைக் காரில் இறக்கி விடறேன்!''

''ரொம்ப தேங்க்ஸ் அண்ணா'' என்று காரில் அமர்ந்தாள் சிறுமி. கார் சிறிது தூரம் சென்றவுடன், ''அண்ணா, காரை நிறுத்துங்க!'' என்றபடி இறங்கினாள். அங்கே வீடுகளே இல்லை. ஆர்வம் மேலிட இளைஞனும் சிறுமியின் பின்னால் சென்றான். கொஞ்ச தூரம் சென்றதும் ஒரு சுடுகாடு வந்தது. அதற்குள் நுழைந்த சிறுமி, ஒரு கல்லறையின் முன்னால் போய், அந்த ரோஜாப்பூவை வைத்துக் கண் மூடிப் ப்ரார்த்தித்தாள்.



திகைத்துப் போனான் இளைஞன். உடனே தன் நண்பர்களுக்கு ஃபோன் செய்து, தான் ஊருக்குப் போவதாய்ச் சொல்லிவிட்டு பூங்கொத்தோடு தன் தாயைப் பார்க்கக் கிளம்பினான்.

- ஆர். அம்பிகா, மதுரை

அழகிய மெலிந்த தோற்றம்
இப்போது உங்கள் வசம்



ரிஷிதா ஸ்லிம் அண்ட் கேர்

RESULTS GUARANTEED

ரிஷிதா ஸ்லிம் அண்ட் கேரில் கிடைத்த சில இனிய அனுபவங்கள்...

எனது பெயர் வித்யா. வயது 26. சில நாட்களுக்கு முன் 90 கிலோ எடையுடன் இருந்தேன். மாடர்ன் உடைகளை அணிவதற்கும், பொது நிகழ்ச்சிகளில் பங்கு கொள்வதற்கும் தயங்கி,தன்னம்பிக்கை இழந்து,மனச் சோர்வுடன் வீட்டினுள்ளேயே அடைந்து கிடந்தேன்.கசந்து போன வாழ்க்கையில் வசந்தமாக வந்தது ரிஷிதா ஸ்லிம் அண்ட் கேர்.. விளம்பரத்தைப் பார்த்து தொடர்பு கொண்டேன்..ஆச்சரியம்.. ஆனால் உண்மை.. முதல் அமர்விலேயே எனது இடுப்பளவில் ஒரு இன்ச் குறைந்தது..16 அமர்வுகளில் 26 கிலோ எடை குறைந்து இப்போது தன்னம்பிக்கையுடன் இருக்கிறேன். ரிஷிதா ஸ்லிம் அண்ட் கேரின் இனிமையான உபசரிப்பும் உண்மையான அக்கறையும் என்னை மெய் மறக்கச் செய்தன... தேங்க்ஸ் ரிஷிதா...

கோவையை சேர்ந்த எனது பெயர் நிர்மலா... வயது 45.. 91 கிலோ எடையினால் மூட்டு வலி, மூச்சு வாங்குதல், இரத்த அழுத்தம் போன்ற நோய்கள் ஏற்பட்டு, மனச் சோர்வுடன் இருந்தேன்... பல வழிகளில் முயற்சி செய்தும் பலன் இல்லை. அதிர்ஷ்டவசமாக ரிஷிதா ஸ்லிம் அண்ட கேரைப் பற்றி கேள்விப்பட்டு அங்கு சிகிச்சையில் சேர்ந்தேன்... இன்ப அதிர்ச்சியாக சில அமர்வுகளிலேயே 25 கிலோ எடை குறைந்தேன். ஃபேஸ் லிஃப்டிங் எனப்படும் முக சிகிச்சையும் செய்து கொண்டு பொலிவான முக அழகைப் பெற்றேன்... தேங்ஸ் டு ரிஷிதா...

நீங்களும் உங்கள் வருங்காலத்தை இங்கே வடிவமைக்கலாம்

ரிஷிதா ஸ்லிம் அண்ட் கேர்

ONLY FOR LADIES

ஆலோசனை இலவசம் - இன்றே அழையுங்கள்

ஃபேஸ் லிஃப்டிங் சிறப்பு சிகிச்சை - முகம் மற்றும் தாடையின் கீழுள்ள தளர்ந்த சருமத்தை இறுக்கமாக்கி, சுருக்கங்களை நீக்கி முகத்திற்கு இளமை பொலிவு கொடுக்கும் சிகிச்சை

மருந்துகள் இல்லை♦பக்க விளைவுகள் இல்லை♦தொப்பை குறைப்பு♦தொடை மற்றும் கைகள் குறைப்பு♦குறிப்பிட்ட உடல் பகுதிகள் குறைப்பு♦இறக்குமதி செய்யப்பட்ட கருவிகள் மூலம் டேப்பிங் டோனிங்♦கண்களின் கீழுள்ள கருவளையம் போக்குதல்♦மண் சிகிச்சை♦கவுன்சலிங்

Rishithaa Slim & Caare

HENNAI : 14/56, ID, 1st floor, Hill crest apartments, Venkatanarayana road, T.Nagar, Chennai - 17. ıone : (044)24332838, 9444413224	COIMBATORE : #32/1, Bharathi Park, 2nd Cross Street, Saibaba Colony, Coimbatore. Phone : 0422-2452114, 9884903059

நோய் வாய்ப் படுவதும், அதற்கு சிகிச்சை எடுத்துக் கொள்வதும் இயல்பான விஷயங்கள்தான். ஆனால் ஒரு குறிப்பிட்ட நோயினால் பாதிக்கப்பட்டவர்கள், ஓர் அமைப்பை உருவாக்கி, அந்த நோய் தொடர்பான விழிப்புணர்வை உண்டாக்கப் பாடுபடுவதும், அந்த நோயினால் அவதிப்படும் ஏழைகளுக்கு நிதியுதவி செய்வதும் நிச்சயம் புதுசுதான். அதிலும் சில பெண்களே அதில் முன்னணி வகிப்பது பாராட்டுக்குரியது!

''முதலில் சிறுநீரக நோய்களுக்காக தரமான சிகிச்சை தரும் மருத்துவமனை ஒன்றை ஆரம்பிக்கலாம் என்றுதான் நினைத்தோம். ஆனால் அதற்கு லட்சக்கணக்கில் பணம் தேவை என்பதால், சிறுநீரக நோய்கள் தடுப்பு மற்றும் விழிப்புணர்வு என்ற பெரிய சேவையைத் தீவிரமாகச் செய்து வருகிறோம்'' என்கிறார் லலிதா ரவிச்சந்திரன்.

''உப்பு, சர்க்கரை இரண்டையும் மிக விரும்பிச் சாப்பிடுவது இளைஞர்கள்தான் என்பதால், எங்கள் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை பள்ளி, கல்லூரிகளில்தான் மிக அதிகமாக நடத்துகிறோம். சென்னை, பாண்டிச்சேரி, திருச்சி போன்ற நகரங்களில் பல கல்லூரி மாணவர்கள், ஆயிரக்கணக்கில் திரண்டு வர 'வாக்கத்தான்' மேற்கொண்டிருக்கின்றனர். www.sugarbp.org என்ற இணையதளத்தில் உப்புக்கு எதிராக தீவிரப் போராட்டத்தை நடத்திக் கொண்டிருப்பது இந்த இளைய தலைமுறைதான்!'' என்கிறார் லலிதா ரவிச்சந்திரன்.

''எங்கள் கல்லூரியில் இந்த அமைப்பினர் பிரசாரம் செய்தபோது, நான் 'என்னதான் சொல்

வெளிச்சம்





● கிரேஸி மோகன் தலைமையில்...

நாங்கன்னு பார்ப்போமே?' என்று கலந்து கொண்டேன். ஆனால், அல்புமின் டெஸ்ட் செய்து பார்த்தபோது, எனக்கு சிறுநீரக நோய் இருப்பது தெரிந்து அதிர்ச்சியடைந்தேன். முதலில் நான் பார்த்த

திரன், கல்லூரி மாணவி ஸ்ரீவித்யா போன்ற பலரும் இணைந்து டாக்டர் ராஜன் ரவிச்சந்திரன் உதவியுடன் ஆரம்பித்ததுதான் 'பாலாஜி மெடிக்கல் அண்ட் எஜுகேஷனல் ட்ரஸ்ட்' என்ற சேவை அமைப்பு!

ரும் விண்மீன்கள்!

டாக்டர், ''நீ படிப்பைத் தொடர முடியாது'' என்றார். ஆனால், நான் தொடர்ந்து படித்தேன். இன்றைக்கு வேலைக்கும் போகிறேன். என் மருந்துச்செலவை நானே சமாளிக்கிறேன். சிறுநீரகப் பிரச்னை உள்ளவர்களுக்கு நிறைய செலவாகும் என்பதால் தங்கள் காலிலே நிற்க படிப்பும் வேலையும் நிச்சயம் தேவை!'' என்கிறார் கல்லூரி மாணவி ஸ்ரீவித்யா.

இருபது வருடமாக டயாலிஸிஸ் செய்து கொண்டு உயிர் வாழும் குமுதினி, மாற்றுச் சிறுநீரகம் பொருத்தப்பட்ட சரஸ்வதி, மாணவப் பருவத்தில் சிறுநீரகங்கள் பழுதடைந்து அவஸ்தைப் பட்ட கண்ணன், ராமச்சந்

''எங்கள் அமைப்பில் நூற்றுக்கணக்கான உறுப்பினர்கள் இருக்கிறார்கள். நன்கொடை பெற்று, அதை சிறுநீரக இழப்பு நோயாளிகளுக்கு உதவும் வகையில் மருத்துவ உதவி செய்து வருகிறோம். அளிக்கப்படும் நன்கொடைகளுக்கு 80ஜி பிரிவின் படி வருமானவரி விலக்கும் உண்டு. நாங்கள் ஒரு குழுவாகச் சென்றுதான் நன்கொடை திரட்ட வேண்டியிருக்கிறது. தனி நபராகச் சென்றால், ஏதாவது மோசடி வேலையோ என்று சந்தேகப்படுகின்றனர். அதனால் டாக்டரின் ஆலோசனைப்படி இயங்குகிறோம்'' என்கிறார் ஜெயா.

''எங்களுக்கு சில சலுகைகளைத் தர வேண்டும் என்று

"வாழ்க்கை முறையையே புரட்டிப் போடுகிற சிறுநீரகச் செயலிழப்பைத் தவிர்க்க முடியுமா?"

சென்னை, மியாட் மருத்துவமனை சிறுநீரக இயல் சிகிச்சை நிபுணர் டாக்டர் ராஜன்ரவிச்சந்திரனிடம் கேட்டோம்.

சமீபத்தில் பி பாஸிடிவ் ரத்த வகையைச் சார்ந்த சிறுநீரகத்தை, ஓ பாஸிடிவ் வகை நோயாளிக்குத் திறம்படப் பொருத்தி, சாதனை புரிந்தவர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது.



''உப்பு என்பது ரொம்ப தப்பு என்பதை வீட்டிலிருக்கும் அனைவருக்கும் புரிய வையுங்க. ஊறுகாய், கருவாடு, அப்பளம், சிப்ஸ் போன்றவற்றை, கிட்டேயே சேர்க்காதீங்க. அதைச் சாப்பிட்டேதான் ஆகணும் என்றால் அந்த அளவுக்கு உப்பு நமது உடலிலிருந்து வெளியேறும்வரை, வியர்த்து விறுவிறுக்க வேலையோ, விளையாட்டோ மேற்கொள்ளணும்.

* அதிக நீர் குடிச்சா, உடல் இளைக்கும்; சருமம் மினுமினுக்கும் என்று ஒரு சிலர் நிறைய நீர் அருந்துகின்றனர். அதுவும் சரியில்லைதான்! ஒருவரின் உடல் கூற்றுக்கும், தாகத்துக்கும் ஏற்ப நீர் அருந்தினால் போதுமானது!

* சிறுநீரகப் பிரச்னைகளுக்கு நீரிழிவு, அதிக ரத்த அழுத்தம் இரண்டும் முன்னணிக் காரணங்கள் என்பதால், இவை வராமல் பார்த்துக் கொள்ள வேண்டும். வந்துவிட்டால், வருடத்துக்கு ஒரு முறையாவது சிறுநீரில் ஆல்புமின் இருக்கிறதா என்று பரிசோதித்துக் கொள்ள வேண்டும்.

* 'சி.கே.டி' எனப்படும் க்ரானிக் கிட்னி டிஸீஸ் ஆரம்ப நிலையிலேயே கண்டுபிடிக்கப்பட்டால், அதைத் தடுத்து நிறுத்தவோ, சீர் செய்யவோ முடியும். பதற்றமற்ற வாழ்க்கை முறை, சமச்சீரான சத்துணவு, இருவித மருந்துத் தொகுப்புகள் மூலம் சிறுநீரில் புரோட்டீன் இழப்பைத் தடுத்து, சி.கே.டி மேலும் பரவாமல் தடுக்கலாம். இருப்பினும், வருமுன் காப்பதே நல்லது!''

அரசாங்கத்திடம் மன்றாடிக் கொண்டிருக்கிறோம். சிறுநீரக தானத்தில் உள்ள வியாபாரக் கண்ணோட்டத்தால் மிகவும் பாதிக்கப்பட்டவர்கள் நோயாளிகளே. சில விதிமுறைகளைத் தளர்த்துவது, சிகிச்சைக் கருவிகளின் சுங்க வரியை நீக்குவது, ரயிலில் முதல் வகுப்பில் செல்ல ஊனமுற்றோருக்கு வழங்கப்படும் அதே சலுகையை எங்களுக்கு அளிப்பது என போராடி வருகிறோம்.

''நாங்கள் ஏசி வகுப்பில் செல்வது ஆடம்பரத்துக்காக அல்ல. நோய் தொற்று ஏற்படக்கூடாது என்பதற்காக மருத்துவர்கள் கூறும் கட்டாய நிபந்தனை இது. எனவே அரசு கருணை காட்ட வேண்டும்!'' என்கிறார் சரஸ்வதி.

- மங்களேஸ்வரி

படம்: ஸ்ரீஹரி

25 YEARS

UPTO 75%
MERIT SCHOLARSHIP

CSC is the Pioneer Institute in IT Training for the past 25 years

மதிப்பெண் பட்டியலுடன் வாருங்கள்! 75% வரை ஸ்காலர்ஷிப்பை பெற்றுச் செல்லுங்கள்!!

இது வளர்ச்சி பாதைக்கு திரும்பியது

ஒரு நிறுவனத்தில் 10000 ம் பேருக்கு
ஒரே நேரத்தில் பணியில் அமர்த்த கூடிய தகுதி
இத் துறைக்கு மட்டும் தான் உண்டு



MERIT

CSC

Merit Scholarship Table

Your Marks SSLC / +2	Your Scholarship on total fees
Above 75%	75%
60% - 74%	60%
50% - 59%	50%
Below 50%	40%

Instalment Scheme also available

COMMUNICATIVE BUSINESS ENGLISH

FREE Collect Free Spoken English Kit*

Part - I Grammar
Part - II Conversation
Part - III Day-Today Routines with Audio CD

முதலில் பயிற்சியில் சேரும் 50 நபர்களுக்கு மட்டும்

For more information : sms <csc> to 9094966410

பொதுவாக சில இந்து சாஸ்திரங்கள் நம்மிடையே உள்ளன. அவற்றுக்கு சில விலக்குகளும் உள்ளன. இதோ சில:



வழிபாடு


விசேஷமான விதிவிலக்கு!

விதிமுறைகள்	விலக்குகள்
பொதுவாக, நீர் நிலைகளில் இரவில் நீராடக்கூடாது.	உப்பிலியப்பன் கோயில் புஷ்கரணியில் (அகோராத்ர குளம்) பகல் - இரவு எந் நேரமும் நீராடலாம்.
புண்ணியத் தீர்த்தங்களில் நீராட கிழமை, திதி, நட்சத் திரம் பார்ப்பார்கள்.	இராமேஸ்வரத்தில் மட்டும் எந்த நாளும் எந்த நேரமும் கடலில் நீராடலாம்.
விரத நாட்களிலும் துக்க முழுக்கானாலும் குளிர்ந்த நீரில்தான் குளிக்க வேண் டும்.	தீபாவளியன்று மட்டும் எண் ணெய் தேய்த்து வெந்நீரில் குளிக்க வேண்டும்.
காலை சூரிய உதயத்துக்கு முன் எண்ணெய்க் குளியல் பண்ணக் கூடாது.	தீபாவளியன்று மட்டும் சூரிய உதயத்துக்கு முன் எண் ணெய்க் குளியல் பண்ண வேண்டும்.
ஆகம முறைப்படி சூர்யோ தயம் ஆனபின்தான் நாள் ஆரம்பம் ஆவதால் அப் போதுதான் திருக்கோயில் நடை திறக்க வேண்டும்.	மார்கழியில் மட்டும் விடியற் காலை 4.30 மணிக்கு நடை திறக்க வேண்டும்.
சூர்யோதயம் ஆனபின் நடை திறந்து உச்சிக்கால பூஜை முடிந்து, 12 மணிக்கு சாத்தி, மாலை 4 மணிக்கு திறந்து இரவு 10.30 மணிக்கு சாத்த வேண்டும்.	மஹா சிவராத்திரியன்று மட் டும் இரவு முழுவதும் திறந்து வைத்து பூஜைகள் செய்ய வேண்டும்.
எல்லா சிவாலயங்களிலும் கார்த்திகை மாதத்தில் திருக்கார்த்திகை தீபவிழா பரணி கிருத்திகை நாளில் சொக்கப்பனை விழாவாகக் கொண்டாடப்படும்.	கடலூர் மாவட்டம், திருமாணிக் குழி அருள்மிகு வாமன புரீஸ்வரர் கோயிலில் மட்டும் ரோகிணி நாளில் தீப தரிசன விழா கொண்டாடப்படுகிறது.
எல்லா பெருமாள் கோயில் களிலும் புரட்டாசி சனிக் கிழமை விசேஷ நாள்.	பாண்டிய நாட்டு திருக்குறுங் குடி திருத்தலத்தில் மட்டும் ஆவணி சனிக்கிழமை விசேஷ நாள்.

- பி. பிரேமா பாலசுந்தரம், சென்னை

மங்கையர் மலர் ஆகஸ்ட் 2010

ஆன்மீக உலகில் ஓர் அற்புதம்!



ஆன்ம சக்தியை அழித்து, அறிவின் திறனை குறைத்து, மனவலிமையை தகர்த்து, நிம்மதியைக் குலைத்து, வலிவை பாழாக்கி, ஆரோக்யத்தைக் குறைத்து, குடும்பத்தில் குழப்பம், தொழிலில் நஷ்டம், உத்தியோகத்தில் பிரச்சனை, கல்வியில் தோல்வி, காதலில் வீழ்ச்சி போன்ற காரியங்களை பில்லி, சூன்யம், ஏவல் இவற்றால் தீமை உண்டாகின்றன.

விண் மட்டும் விஞ்ஞானம் வளர்ந்த போதும், இவைகளுக்குத் தீர்வு அருள் மறையில் மாத்திர முண்டு. இந்தக் குறைகளை நீக்கி எல்லாத் துறையிலும் வெற்றி பெறச் செய்கிறார் மாபெரும் தவச்சீலர் **மறையகம் பாபா.** உடனே அணுகவேண்டிய முகவரி:

அருள்


மறையகம்

1 B, மகாலட்சுமி அப்பார்ட்மெண்ட், நெ.3, அப்துல் ரசாக் தெரு, நூர்ஜஹான் தியேட்டர் எதிரில் (தற்போது ராஜ் தியேட்டர் என்று மாற்றப்பட்டுள்ளது), சைதாப்பேட்டை, சென்னை - 600 015.

☎ : 2435 1190, 2433 2047. செல்போன் : 98404 11551

குறிப்பு : வெளியூர், வெளிநாடுகளில் வசிப்பவர்கள் தங்கள் பிரச்சனை தீர்க்க தங்கள் பெயர், தங்கள் தாயார் பெயருடன் தங்கள் பிரச்சனைகளை எழுதி, ரூ. 10 (அ) அதற்கான அஞ்சல் தலையுடன் அனுப்பி வைத்து ஆலோசனை பெறவும்.

Beauty Lies in Curves and not in Lines





Breast UPLIFTMENT

UPLIFT IS A 100% HERBAL PRODUCT WHICH DOES NOT CONTAIN ANY CHEMICALS OR STEROIDS AND DOES NOT HAVE ANY KIND OF SIDE EFFECTS. IT IS USEFUL FOR BREAST UPLIFT, BREAST ENLARGEMENT, SAGGY BREAST, BREAST SIZE INCREASE AND BREAST FIRMNESS.

GMP

Sriram Herbals

A Div. of Sams Sales Corporation, Health care division

an ISO 9001 : 2000 Company

31/1 Seethiramapalaya, Mahadevpura, Bangalore-560048.

Tel:080 41157746. Fax: 080 41157784.

http://www.sriramherbals.com, http://www.sriramherbals.in

DEALERSHIP ENQUIRIES SOLICITED

"IT IS TAKEN AS A COURSE FOR 3 MONTHS TO GET THE MAXIMUM DESIRED RESULTS"

TAMILNADU: 8015348114, 8015431235 HYDERABAD: 900532211, BANGALORE: 080 41157746, NEWDELHI & NCR: 9313388870, MUMBAI: 9987896010, THANE: 9769485979, RAJASTHAN: 9269247540, ASSAM: 9954212470/9864095730, UTTARPRADESH: 9044841168, CHATTISGARH: 9425213653, PUNJAB & HARYANA: 9872014999

பெண் நலம்

சுறுசுறுப்பில்லாமல் இருக்கிறதா? 'தூக்கமில்லை சரியாக, அதுதான்...' என்று காரணம் சொல்கிறீர்களா? இருக்கலாம். ஆனால், வேறு சில காரணங்களாலும் அயர்ச்சி ஏற்படலாம். உடல் சோர்வாக உணரலாம். அவை இதோ...



நாள் முழுவதும் சுறுசுறுப்பாக இருக்க...

காலை உணவு



ப்ரேக் ஃபாஸ்டைத் தியாகம் செய்யவே கூடாது. உடம்பில் தேவையான எரிபொருள் இல்லாமல் போய்விடும். காலை உணவிலுள்ள கார்போஹைட்ரேட்ஸ் மூளையைத் தூண்டி ஸெரடோனின் சுரக்க வழி வகுக்கும்.

எனவே காலை உணவில் மாவுச் சத்து இருக்க வேண்டும். கூடவே ஐந்து கிராம் புரோட்டினும் இருப்பது அவசியம். இதயத்தை அலெர்ட்டாக வைக்கும் நியூரோ கெமிகல்கள் அப்போது தான் கிடைக்கும்.

அணிமணிகள்

குதி உயர்ந்த காலணிகள், பென்ஸில் ஹீல்ஸ், இறுக்கமான உடை இவற்றுடன் வேகமாக வேலை செய்ய முடியாது. சக்தியைக் குறைவாகச் செலவழித்தால் நம் உடலில் சக்தியும் குறைவாகவே இருக்கும். மேலும் நாற்காலியிலே உட்கார்ந்து கொண்டே இருந்தால் செல்களுக்கு ஆக்ஸிஜன் குறைவாகத்தான் கிடைக்கும்.



எனவே தளர்வான உடை, இதமான காலணிகள் அணிவது நல்லது. 'ஹை ஹீல்ஸ் தான் தேவை' என்று பிடிவாதமாக இருந்தால், அதைப் போட்டுக் கொள்ளுங்கள்.

மதிய இடைவேளையில் ஹைஹீல்ஸ் செருப்புகளை அவிழ்த்து வைத்துவிட்டு சாதாரணச் செருப்புகளை அணிந்து நடக்கலாம்.

காஃபி பழக்கம்



மூன்று மணி வாக்கில் ஒரு காஃபி குடித்தால்... அடடா... மிச்ச நாள் ரொம்பவே சுறுசுறு... ஆனால் எட்டு மணி நேரம் வரை 'காஃபின்' உடலில் இருக்கும். எனவே ஒரே ஒரு மடக்கு காஃபியுடன் நிறுத்திக் கொள்ளுங்கள். தூங்குவதற்கு எட்டு மணி நேரம் முன்பு காஃபியை நிறுத்தி விட வேண்டும்.

கவலைப்படுதல்



கடுகடுக்கும் பாஸ், துரத்தும் கடன்கள், வீட்டுத் தொல்லை, வேலைக்காரி, உடல் நிலை, குழந்தைகள் ஊட்டி இவை 'ஸ்ட்ரெஸ்' எனும் மன அழுத்தத்தைத் தரும். ப்ளட் பிரஷர் எகிறும். உடல் ஓவர் டைம் செய்யும். தசைகள் முறுக்கேறும். அயர்ச்சி தொடரும். ஆக்ஸிஜன் இல்லாமல் போய் கார்பன்-டை-ஆக்ஸைடு உடலில் தங்கும்.

எனவே, மன இறுக்கம் ஏற்படும்போது மூன்று முறை ஆழ்ந்த மூச்சு விடுங்கள். சந்தோஷமான விஷயங்களில் மனத்தைச் செலுத்துங்கள். சிநேகிதியுடன் பேசுங்கள். டி.வியில் காமெடி காட்சிகள் பாருங்கள். (அழுகை சீரியல் வேண்டாம்!)

களேபரமான வீடு



வீட்டைக் கசமுசாவென்று வைத்திருக்கிறீர்களா? உங்களது அலுவலக மேஜையையும் தான்... எது வேண்டுமென்றாலும் குப்பைக்குள் தேட வேண்டுமா? எதையும் ஒழுங்குமுறையாக வைக்கவில்லை என்றால் உங்களது வேலை செய்யும் திறமை குறைந்துவிடும் என்பதை நினைவில் வையுங்கள்.

கொஞ்சம் இப்படி, அப்படி இருந்தால் ஓ.கே... ஆனால் முக்கியமான பொருள்களை பத்திரப்படுத்துங்கள். நாளின் முடிவில் டெஸ்க்கை அழகாக அடுக்குங்கள் அல்லது ஃபைல் பண்ணுங்கள். வீட்டிலும் பொருள்களை அதனதன் இடத்தில் சிரமத்தைப் பார்க்காமல் அவ்வப்போது வைத்து விடுங்கள்.

வார இறுதி ஓய்வு நேரம்

வெள்ளி மாலை 'அப்பாடா' என்று மூச்சு விடுகிறீர்களா? இரவு வெகுநேரம் கண் விழித்து 'வீக் எண்ட்'டை



கொண்டாடுகிறீர்களா? சனி, ஞாயிறுகளில் லேட்டாக எழுந்து கொள்கிறீர்களா? நம் உடலில் Circadian Rhythm எனப்படும் 24 மணி நேர கடிகாரம் உள்ளது. லீவு நாளில் லேட்டாக விழித்திருந்து மறுநாள் தாமதமாக எழுவது திங்கட்கிழமையன்று சுறுசுறுப்பாக இருக்க உதவாது.

கொஞ்சம் லேட்டாக முன்னே பின்னே முதல்நாள் தூங்கினாலும் மறுநாள் காலை ஒருமணி நேரத்துக்கு மேல் எக்ஸ்ட்ரா தூக்கம் வேண்டாம். எழுந்திருக்கும்போது சுறுசுறுப்பாக இல்லாமல் தூக்கக் கலக்கமாக இருந்தால் படுக்கையறையின் திரைகளை நன்கு விலக்கி 'பளிச்' என்று சூரிய ஒளி பரவுமாறு வையுங்கள்.

வைட்டமின் 'சி' பற்றாக்குறை



சுமார் முப்பது சதவிகிதம் பெண்களுக்கு வைட்டமின் சி குறைவாக இருப்பதாக ஆராய்ச்சி சொல்கிறது. கார்னிடைன் (Carni-tine) எனும் மாலிக்யூல்கள், கொழுப்புகளைக் கரைத்து சக்தியாகச் செலவிட நம் உடலுக்கு உதவுவது இந்த வைட்டமின் 'சி'தான். அது இல்லாதபோது கார்போஹைடிரேட்டுகள், புரோட்டீன்களை எல்லாம் எரித்து உடலுக்கு எரி பொருளை அளிக்கும்போது லாக்டிக் ஆஸிட் எனும் கழிவுப் பொருள் உற்பத்தியாகி, உடல் தசைகளைக் களைப்படைய வைக்கிறது.

தினசரி நம் உடலுக்கு 75 மி.கி அளவு வைட்டமின் சி தேவை. அதனால் பழங்களைத் தாராளமாக உணவில் சேர்த்துக் கொள்வது மிக அவசியம்.

செக்கு மாட்டு ரொடீன்



வாழ்க்கையில் அன்றாடம் சிறு சிறு மாறுதல்கள் தேவை. வேலைகளில் கொஞ்சமாவது 'சாலஞ்ஜ்' இருக்க வேண்டும். இல்லாவிடில் 'ஆட்டோ பைலட்'டில் போட்ட மாதிரி ஆகிவிடும்.

உங்கள் மேலதிகாரியிடம் சொல்லி, வேலையில் சிறு மாற்றம் செய்து கொள்ளுங்கள். அடுத்த டிபார்ட்மெண்டில் ஃப்ரெண்ட் பிடித்து மதிய உணவு நேரத்தை மகிழ்ச்சிகரமாக்குங்கள். தினம் டிரெயினில் போனால் ஒருநாள் பஸ்ஸில் போங்களேன். வீட்டு வேலைகளிலும் இது போலவே சில மாற்றங்களைக் கொண்டு வாருங்கள்.

மாதவிடாய் நாட்கள்



ஹெவி பீரியட் நாட்கள் உடலில் இரும்புச்சத்தைக் குறைவாக்கி விடலாம். அதனால் சிவப்பணுக்கள் இரத்தத்தில் குறைவாகி, ஆக்ஸிஜனை செல்களுக்கு எடுத்துச் செல்வது குறையும்.

எனவே, நல்ல தூக்கம் இருந்தாலும், டயர்டாக உணர்ந்தால் மருத்துவரைப் பார்க்கவும். அவர் இரும்புச் சத்துள்ள மாத்திரைகளைப் பரிந்துரைப்பார். உணவிலும், கீரை, பீன்ஸ் முதலியவற்றை அதிகம் சேர்த்து கொள்ளவும்.

அயர்ச்சி, சோர்வு, சுறுசுறுப்பின்மை எனும் அறிகுறிகளை அலட்சியப் படுத்தாமல் அதற்குரிய காரணத்தைக் கண்டறிந்து செயல்பட்டால் உடல் நலனைப் பாதுகாக்கலாம்.

-முத்துலக்ஷ்மி சங்கரன், சென்னை



சாய்சரண் முதியோர் இல்லம்

ஒருவரது வாழ்நாளின் முதுமை கட்டத்தில் அவர்கட்கு தேவைப்படும் ஆதரவும், இன்முகமும், பாசமும் கொண்ட பணிவிடையை செய்யும் வகையில் உண்டாக்கப்பட்டது "சாய் சரண் டிரஸ்ட்" அத்தகைய பெரியோர்களை கவனித்துக்கொள்ள. உங்கள் ஆதரவை வரவேற்பதன் மூலம் இந்த அமைப்பின் சீரிய செயல்பாட்டை மேன்மையடையச் செய்ய விழைகிறோம். இல்லத்திற்கு தேவையான பொருட்கள், நன்கொடைகளை "SAICHARAN TRUST" க்கு அனுப்பி வைக்கவும்.

சுபயாத்ரா



ஷிர்டி சாயிபாபா தரிசனம்

ஷிரிடி - சனி சிங்கனாப்பூர் மஹாகணபதி (4 நாட்கள்)

(ரயில் - பஸ் - தங்கும் வசதி)

18-8-10 | 1-9-10 | 8-9-10 | 15-9-10 | 29-9-10 | 6-10-10

ரூ.2800/-

ஷிரிடி பாபா தரிசனம்
ஒரே நாளில்
(விமானம் மூலம்)

ஷிரிடி உங்கள் தேதியில்
(4 நாட்கள்)
(3 நபர்) ரூ.10,500/-
ரயில், கார், தங்கும் வசதி

விவரங்களுக்கு : 43, தெற்கு மாட வீதி (சித்திரகுளம் எதிரில்), மயிலாப்பூர், சென்னை-4
போன் : 24950218, 24952319 e-mail : shubhyatra.m@gmail.com

ஆல்ஃபா மைண்ட் பவர்

ஆழ்மனதின் சக்தி!

ALPHA MIND POWER™

"Unwind Your Mind & Empower Yourself"

மனோ சக்தி நிபுணர் **டாக்டர் விஜயலக்ஷ்மி பந்தையன்**

அளிக்கும் ஒரு நாள் இந்தியாவின் பழம்பெரும் சித்தர்களின் சக்தியுடன் கூடிய ஒரு நாள் ஆல்ஃபா தியானப் பயிற்சி



- மன அழுத்தம் குறைக்க
- பண வரவை அதிகரிக்க
- உறவுகளை சீர்படுத்த
- குடும்பத்தில் அன்பு நிலவச் செய்ய
- நோய் தீர்க்க, நிம்மதியாகத் தூங்க
- பரீட்சையில் அதிக மார்க் வாங்க
- மகிழ்ச்சியுடன், நம்பிக்கையுடன், வெற்றியுடன் வாழ

தபால் மூலம் கற்கலாம்
ஆல்ஃபா மைண்ட் பவர்
ஆடியோ சிடி
மற்றும் பயிற்சிப்
புத்தகம் ஆங்கிலம்
மற்றும் தமிழில் தபால்
மூலம் பெறலாம்.

ஒரு நாள் பயிற்சி மட்டுமே!

ஆல்ஃபா தியான அனுபவம் இதோ ஒரு கடிதம்

நான் வங்கியில் கேஷியராக பணி புரிந்தபொழுது தவறுதலாக ஒருவருக்கு அதிகமான தொகையை கொடுத்து விட்டேன். இதனால் கணக்கு முடிக்கும் பொழுது பிரச்சனையாகிவிட்டது. இந்த பிரச்சனைக்கு தீர்வுகாண மேலதிகாரியிடம் ஒரு நாள் அவகாசம் பெற்றேன். ஆல்ஃபா தியானத்தின் மூலம் பணம் அதிகமாக பெற்றவரின் ஆழ்மனதுடன் பேசி வந்தேன். அவரே அதை திருப்பித் தருவதுபோல் தொடர்ந்து காட்சியாக பார்த்து வந்தேன். என்ன வியப்பு... மறுநாள் அவரே வந்து அந்தப் பணத்தை திரும்ப தந்து என்னுடைய பிரச்னையை தீர்த்து வைத்தார். ஆல்ஃபாவிற்கு நன்றி! குருஜீக்கு நன்றி!

- திருமதி ராதிகா, சென்னை

அடுத்து வரும் பயிற்சி வகுப்புகள்

வேலூர்	-	08.08.10
சென்னை	-	15.08.10
டில்லி	-	05.09.10

ஆல்ஃபா ஆப்பிளைக, 3வது தளம், 50, 51 ஆற்காடு ரோடு, சாலிகிராமம், சென்னை - 600 093. இந்தியா ஃபோன்:+91-44-23760007, மொபைல் : 98416 96664 / 98414 02000 / 98412 72146

பத்மா



அமெரிக்கா

"கல்யாணத்தில் யாரைத் திருப்தி செய்வீங்களோ தெரியாது. என் அமெரிக்கா அத்தையின் மனம் கோணாதபடி நடந்து கொள்ளுங்கள். முப்பத்தைந்து வருடங்களாக அமெரிக்காவில் வசிக்கிறார். எண்பது வயதிலும் ஐம்பது மாதிரித் தோற்றம் அவருக்கு. நம் பத்ததியை நெல்லு மூக்கு அளவுகூட விட்டுக் கொடுக்க மாட்டார். சரிகைக் கரை போட்ட பட்டுப் புடைவை மடிசாரில், வைரத்தோடு, பேசரி சகிதம் அசல் வசதியான மைலாப்பூர் மாமியாக வளைய வருவார். வெரி வெரி ஸ்ட்ரிக்ட் லேடி.

''கல்யாண விஷயத்தில் இன்னும் அதிகம். வாசல் கோலத்திலிருந்து வாத்தியார் சொல்லும் மந்திரம் வரை எந்தச் சின்னத் தப்பையும் அவர் ஒப்புக் கொள்ள மாட்டார். குறையிருந்தால் அதே இடத்தில் 'பட் பட்' என்று பட்டாசாக வெடித்துச் சீறுவார்.'' சம்பந்தி நயமாகவும் அதே சமயத்தில் கண்டிப்பாகவும் சொல்லிவிட்டு நகர்ந்தார்.

அத்தை!

முன் பின் பாத்திராத அந்த அத்தையை இராமாயண மந்தரையிலிருந்து சின்னத்திரை சீரியல் வில்லிகள்வரை அவரவர் கற்பனைக்கேற்ப நாங்கள் உருவகம் செய்துகொண்டு 'சமாளிப்பு' என்ற ப்ராஜெக்டை எல்லோருமாகக் கூடி நடத்தினோம். எத்தனைவிதமாக குற்றக் கண்டுபிடிப்புகள் வரலாம். அவற்றை எப்படிச் சமாளிக்கலாம் என்பதற்கான பெரிய ஒத்திகையே நடத்தினோம்.

சம்பந்தியின் அத்தை, பெரும் பணக்காரி. வாரிசு இல்லாதவர். சம்பந்தியை வளர்த்து ஆளாக்கி இந்த உயரத்திற்குக் கொண்டு வந்தவர் என்பதால் நாங்களும் மிகவும் எச்சரிக்கையாக, எல்லா ஏற்பாட்டையும் சம்பந்தி மூலம் அத்தையிடமிருந்து 'ப்ரொசீட் ஆர்டர்' வந்த பிறகுதான் தொடங்கினோம்.

''பட்சணத் தயாரிப்புக்கு எங்கள் வாடிக்கை மாமியை ஏற்பாடு செய்யலாமா? மிக அருமையாகச் செய்வார்'' என்றேன்.

''வேண்டாம். முறுக்கு வகையறா அமெரிக்கா வரை போக வேண்டும். அத்தை நம் பாரம்பரியத்தைப் பறை சாற்ற அங்கு ஒரு ஷோவே ஏற்பாடு செய்யப் போகிறார். அதனால் கண்ணைப் பறிக்கும் நிறத்தில், பல்லில் படுமுன்பே கரையும்படி இருக்க வேண்டும்'' என்று சம்பந்தி, அத்தையின் அபிப்பிராயத்தை பாஸ்செய்ய, பட்சணத் தயாரிப்பில் தலை சிறந்த ஒரு நிறுவனத்திடம், ஒன்றுக்கு மூன்று பங்கு செலவில் பொறுப்பை ஒப்படைத்தோம். அத்தைக்குத் தனியாக ஒரு செட் பக்கா பேக்கிங்குடன் தயாரானது.

சகல வசதிகளுடன் பெரிய ஏ.சி.ரூம், அத்தையின் தேவைகளைப் பூர்த்தி செய்ய இரண்டு உதவியாளர்களை ஏற்பாடு செய்தோம். ஏர்போர்ட்டில் பூரண கும்ப மரியாதை ஒன்றைத் தவிர்த்து, சிவப்பு ரத்தினக் கம்பள மரியாதையோடு சம்பந்திகளுடன் வந்திறங்கிய அத்தையை அழைத்து வந்தோம். சம்பந்தியின் வர்ணனைக்கு ஒருபடி மேலேயே கன கம்பீரமாக இருந்தார். ஒரு ஃப்ரண்ட்லி ஸ்மைல் கூட இல்லாத மண்டைக்கனம் பிடித்தவர் என்ற தகுதியையும் அவரது பயோடேட்டாவில் சேர்த்தேன்.

வாசல் கோலத்திலிருந்து வாத்தியார் சொல்லும் மந்திரம் வரை எந்தச் சின்னத் தப்பையும் அவர் ஒப்புக் கொள்ள மாட்டார். குறையிருந்தால் அதே இடத்தில் 'பட் பட்' என்று பட்டாசாக வெடித்துச் சீறுவார்.

மாப்பிள்ளை அழைப்பு முடிந்து காலையில் முகூர்த்தமும் நல்லபடியாக நடந்தது. அத்தையிடமிருந்து பெரிய மூச்சுகூட இல்லை. சம்பந்தியும் சேர்ந்து மௌனம் சாதித்தார். எனக்குக் குழப்பம் தான் மிஞ்சியது.

''உன்னிப்பாக அப்சர்வ் செய்பவர்கள் எப்போதும் வாயைத் திறக்க மாட்டார்கள். கடைசியில் சேர்த்து வைத்து சுனாமியாகச் சீறுவார்கள்'' என்று சைக்காலஜி படித்த என் மருமான், பெரிய கண்டுபிடிப்பாகச் சொல்லி என்னை மேலும் குழப்பினான்.

ஏகப்பட்ட தட

புடலாக வழியனுப்பு மரியாதை நடத்தி விட்டு, சம்பந்திகள் ஏர்போர்ட்டுக்குக் கிளம்பும்முன்பு என்னைக் கட்டுப்படுத்த முடியாமல் அத்தையிடம், ''மேம், கல்யாண ஏற்பாடுகள் எல்லாம் உங்களுக்குத் திருப்தி தானே?'' என்றேன். அப்போதும் வாயைத் திறக்காமல் தலையை மட்டும் 'திருப்தி' என்ற பாவனையில் ஆட்டினார். எனக்கு அப்போது என் சம்பந்தியின் மீது கோபம் கோபமாக வந்தது. சந்தர்ப்பம் சரியாகக் கிடைக்கவே அவரைப் பிடித்துக் கொண்டேன்.

''என்ன சம்பந்தி, அத்தை எத்தனை பெருந்தன்மையான மனுஷி. வந்ததிலிருந்து வாயைத் திறக்கவேயில்லை. அவரைப் பற்றி நீங்கள் ஏதேதோ சொன்னதில் ரொம்பவே பயந்தேன். தப்பா வேறே எடை போட்டுட்டேன். ஏன் இப்படிச் செஞ்சீங்க?'' என்றபோது, ''எனக்கும் உங்களிடம் தனியாகப் பேச இப்போதுதான் நேரம் கிடைத்தது. கல்யாணத்துக்குக் கிளம்புவதற்கு முதல் நாள், ஏதோ ஷாப்பிங்கிற்காக போன அத்தை, கல் தடுக்கி விழுந்ததில் உள் உதடு கிழிந்து போனதால் தையல் போடும்படி ஆகிவிட்டதாம். ஸ்ட்ரெயின் பண்ணிக்கக் கூடாதென்று டாக்டர் கண்டிப்பாகச் சொல்லிவிட்டாராம். அதுதான் அத்தையின் மௌனத்துக்குக் காரணம்.

''உங்க பெண்ணின் கல்யாணம் அத்தை அட்டென்ட் செய்யும் நூறாவது கல்யாணம். சற்று கூடுதலாகவே அதிகாரம் பண்ணி, கலாட்டா பண்ணி சதத்தை வெற்றிகரமாக முடிக்க பிளான் பண்ணியிருந்தார். அதனால்தான் உங்களுக்கு முன்னெச்சரிக்கை விடுத்தேன். கலாட்டா ஆசாமியே தவிர சுபாவத்தில் ரொம்ப நல்லவர். பாவம், ப்ளான் ஃப்ளூ சாகிவிட்டது. நீங்களும் பிழைச்சீங்க. அத்தை, தான் வருகை புரியும் நூறாவது கல்யாணத்தில், மணப்பெண் யாராக இருந்தாலும் லட்ச ரூபாய் கிஃப்ட் கொடுப்பதாக ஃபோன் பண்ணியிருந்தார். உங்கப் பெண்ணுக்கு அந்த அதிர்ஷ்டப் பரிசு கிடைத்திருக்கிறது. செக், கிஃப்ட் கவரில் இருக்கும்'' என்றார்.

அத்தையின் மௌனம் புரிந்ததும் எனக்கு நிஜமாகவே வருத்தம். கூடவே விபத்து நிகழாமல் இருந்திருந்தால் அத்தையும் காரசாரமாக கமெண்ட் அடித்து, தன் செஞ்சுரியை வெற்றிகரமாக முடித்திருப்பாரே, என் சமாளிப்பு ஏற்பாடுகளுக்கும் ஏதாவது பலன் இருந்திருக்குமே என்ற ஆதங்கமும் முளைத்தது!



தேங்காய்ச் சட்னி அதிகமாகிவிட்டால் சிறிது புளித்த மோர், மஞ்சள் தூள் சேர்த்து கொதிக்க வைத்து, பொரித்த அப்பளங்களை உடைத்துப் போடுங்கள். சூடான சுவையான மோர்க்குழம்பு உடனடி கிடைக்கும். கூடவே கடுகு, மிளகாய் வற்றல், கறிவேப்பிலையைத் தாளித்துக் கொட்டி, இரண்டு டீஸ்பூன் தேங்காய் எண்ணெய் சேர்த்தால் மோர்க்குழம்பு கமகமக்கும்.

– டி. உமா மகேஸ்வரி, திருவெண்காடு



திருமணம் மற்றும் சுபகாரியங்களுக்கு புதுமையானது



SAS *leaf*

Paper Banana Leaf

பேப்பர் வாழை இலை



HYGIENIC & ECO FRIENDLY

ISO 9001:2000 Regn No.4172

PATENT No: 198079

Highly Suitable for Packing & Serving Food

Marketing By :

M/s.S.A.SAFIULLAH& CO., P.B.NO..14 PUDUKKOTTAI-622003.

Ph:04322-260603 Mobile: 9442583383 EMail-

Manufacturer: S.A.S & COMPANY, PUDUKKOTTAI.

Visit us:www.saspaperleaf.com

உடல் எடை குறைக்க இயற்கை மருத்துவம்

உடல் எடை குறைக்க : அதிகபட்சமாக வீட்டில் இருந்தால் 28 நாட்களில் 17 கிலோ வரை / இங்கு தங்கினால் 8 - நாட்களில் 15 கிலோ வரை குறைந்துள்ளது. அப்போது அல்சர், கேஸ்ட்ரபுள், பிரசர், முழங்கால் வலி, தலைவலி, pcod, டென்ஷன் போன்ற மற்ற தொந்தரவுகளும் பாதுகாப்பாக பெருமளவு குணமாகின்றன.

பலருக்கு ஒரே வாரத்தில் எடை குறைவது நன்கு தெரியும். இரண்டாம் மாதத்திலிருந்து மேலும் மேலும் எடை குறைவதோடு உடல் அளவும் வேகமாக குறைந்து உடல் நன்கு இறுகும். பலமும் அழகும் அதிகரிக்கும்.

உடலிலுள்ள கொழுப்பு, ஊளைச் சதை போன்றவை நீங்குவதால் கருத்தரிக்கும் வாய்ப்பும் மிகவும் பிரகாசமடையும். உடலின் இயற்கையான இயக்கத்தின் மூலம் அழுக்குகள், துர்நீர் வெளியேற்றப்படுவதால் எவ்வித பின்/பக்க விளைவுகள் ஏற்படுவதில்லை. ஒரு மாத மருந்து ரூ.1100/- முதல் ஐந்து விலைகளில் கிடைக்கும். போனில் விவரம் கேட்டு, முகவரி தெரிவித்து, வி.பி.பி. மூலமாகவும், நேரிலும் மருந்துகளைப் பெறலாம்.

சுகர்: உடல்நிலையைப் பொறுத்து மூலிகை மருந்து/எளிய உணவுமுறையில் நிறையப் பேருக்கு ஒரு மாதத்திற்குள் நார்மலாகி பூரண ஆரோக்கியத்தைத் திரும்பப் பெறும் வாய்ப்புள்ளது.

எமது மூலிகை மருத்துவத்தில் எந்த தொந்தரவுக்காக சிகிச்சை பெற்றாலும் மொத்த உடல் ஆரோக்கியமே மேம்படும். சிறுநீரக்கல், காமாலை, நிற்காத மாதவிடாய், முகப்பருக்கள் குணமாகி பசி தூக்கம் ஒழுங்காகும். இரத்தம் சுத்தமாகும். நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கும். மேலும் தலைவலி, உடல் வலிகள், வயிற்றுக் கோளாறுகள் குழந்தையின்மை உட்பட, உணவு சாப்பிட்டு நடமாடும் நிலையில் உள்ளவர்களின் எல்லா நோய்களுக்கும். இயற்கை மருத்துவர். M. முத்துக்குமார் B.Sc. DNYS இயற்கை மருத்துவ இல்லம் (பதிவு), ஸ்ரீ குருகுலம் பள்ளி எதிரில், மூலவாய்க்கால், கரட்டடிபாளையம் (Po), கோபிசெட்டிபாளையம் - 638 453, ஈரோடு (Dt.) போன்: (04285) 240650 செல்: 93602 09393, e-mail: natureclinic@gmail.com

நமது இயற்கை வைத்திய சாலையைப் பற்றிய திருபரின் நேர்காணல் மற்றும் முழுவிபரமான கருத்துரையை கடந்த ஜனவரி2010 மங்கையர் மலரில் பக்கம் 114-ஐ பார்த்து தெளிவாக அறியலாம்.

மந்திர ஜபங்களில் தண்ணீரைப்

பிரபஞ்ச சக்தி


நம் வீட்டில் பெரியவர்கள் எப்பொழுதும் வைதிகக் காரியங்கள் செய்யும் பொழுது செப்புப் பாத்திரத்தில் தண்ணீரை நிரப்பி மந்திரங்களை ஓதுவார்கள். இந்தக் காரியங்கள் முடிந்த பிறகு அந்தத் தண்ணீரை அருந்தச் சொல்லி எல்லோருக்கும் உத்திரிணியில் கொடுப்பார்கள். அதற்கு பெரியோர்கள் கொடுக்கும் விளக்கம் ''அது உடலுக்கு ரொம்பவும் நல்லது'' என்பது. அது எந்த அளவுக்கு உண்மை யானது என்பதை ஜப்பானிய குருமார் ஒருவர் நிரூபித்துள்ளார்.



✱ காட்டுக்கூச்சலில்...



✱ தரமான சங்கீதத்தில்...



✱ கடுமையான வார்த்தையில்

நீரின் மீது வார்த்தைகளின் ஆளுமை: -

வார்த்தைகளினால் தண்ணீர் பாதிக்கப்படுகிறதா? ஆம், என்கிறார் ஜப்பானிய விஞ்ஞானி டாக்டர் இமோடா. அதற்கு நிரூபணமும் அளித்திருக்கிறார். தண்ணீர்த் துளிகளை பலவிதமான வார்த்தைகள், சங்கீதம், சுற்றுப்புற சூழ்நிலைக்கு வெளிபடுத்தி, மூன்று மணி நேரம் உறைய வைத்தார். பிறகு மைக்ரோஸ்கோப்பில் ஆராய்ச்சி செய்து ஃபோட்டோ எடுத்தார். அதன் முடிவுகள் வெவ்வேறு வடிவங்களில் இருந்தன.



தண்ணீர்த் துளிகளை முதல்தரமான சங்கீதம், ஒரு குறிப்பிட்ட நாட்டுக்குரிய கிராமிய நடனங்களுக்கு உட்படுத்தி னார். ரொம்பவும் அருமையான படம் கிடைத்தது.

டாக்டர் இமோடோ, ஒரு பேப்பரில் "You make me sick, I will kill you" என்ற வார்த்தைகளை எழுதி பாத்திரத்

தில் ஒட்டி தண்ணீர்த் துளிகளை உறைய வைத்து மைக்ரோஸ்கோப்பில் ஆராய்ச்சி செய்தார். படம் ரொம்பவும் பயங்கரமாக இருந்தது.

'லவ்' என்ற வார்த்தையை எழுதி, தண்ணீர் உள்ள பாத்திரத்தில் ஒட்டி வைத்து, அதையும் ஆராய்ச்சி செய்தார். வித்தியாசம் அவரை ரொம்பவும் விழிப் படையச் செய்தது.



புனித ஊர்து நீரில்...



அசுத்த நீரில்...




அன்பு வார்த்தையில்...

அசுத்த நீர் படம் மிகவும் மோசமாக இருந்தது. அதே நேரத்தில் பிரான்ஸ் நாட்டிலிருந்து தருவிக்கப்பட்ட புனித ஊர்து நீரை வழக்கம்போல ஆராய்ச்சி செய்தார். அந்தப் படம் மிகவும் பூரணமாகவும், அழகாகவும் இருந்தது.

நம்முடைய உடலில் 72% தண்ணீர் உள்ளது. அப்படியானால், நாம் உபயோகிக்கும் வார்த்தைகள், எந்த அளவுக்கு நம் உடல்நிலையைப் பாதிக்கும் என்று சிந்தித்து பாருங்கள். அதேசமயத்தில் 'நான் ஒரு தண்டம்', 'எனக்கு எதுவுமே சரியாக நடக்காது', 'என்னால் முடியாது!' முதலிய வார்த்தைகள் நம்முடைய உடலைப் பலவீனப்படுத்தும். அதேசமயத்தில் 'நான் அற்புதமானவள்... நல்ல அதிர்ஷ்டசாலி... நான் குழந்தையின் கடவுள்' என்று சொன்னால், நம்முடைய உடல்நிலையில் நல்ல முன்னேற்றங்கள் காண முடியும்.

டாக்டர் இமோடோ சிறுவனாக இருக்கும்போது, அவருடைய தாயார், சாப்பிடுவதற்கு முன்பு பிரார்த்தனை செய்ய வேண்டும் என்று சொல்லிக் கொடுத்தார். அது ஒரு நல்ல காரியம் மட்டும் அல்ல; சாப்பிடுவதற்கு முன்பு பிரார்த்தனை செய்தால் மனம் அமைதி அடைந்து நல்ல ஜீரண சக்தி ஏற்படும் என்பாராம். அவர் ''பி பிளெஸ்ஸட்!'' என தண்ணீருக்கும், உணவுக்கும்



டாக்டர் இமோடோ

பயன்படுத்துவது ஏன்?

சொல்வாராம்.

'எல்லோரும் உண்மையான நல்ல வார்த்தைகளை சொன்னால், உங்களுடைய கனவுகள் பலிக்கும்' என்கிறார் டாக்டர் இமோடோ.

மந்திரங்கள் குறிப்பாக எதை உணர்த்துகின்றன?

இந்தப் பிரபஞ்சம் என்பது சக்தி வாய்ந்த வஸ்து/பொருள் மூலமாக இயங்குகிறது. இயற்கையின் ஒழுங்கும், கட்டுப்பாடும், அறிமுகமானால் சக்தியானது தொடர்ந்து வெளிவந்து கொண்டு இருக்கும். உதாரணமாக சாதாரண இரும்புத் துண்டில், மின் அணுக்கள் கட்டுப்பாடு இல்லாமல், நகர்ந்து கொண்டு இருக்கும். அதையே, காந்தமாக்கினால் காந்தத்திற்குரிய சக்தியைக் கொடுக்கும். மின் அணுக்கள் சீரான பாதையில் நகர்ந்துகொண்டிருக்கும்.

இந்தக் காரணத்தினால்தான் பள்ளிக் கூடங்களில், வகுப்புகள் ஆரம்பிக்கும் முன்பு, பிரார்த்தனை (கடவுள் வாழ்த்து) செய்வார்கள். அப்பொழுதுதான் மூளையில் உள்ள மின்னணுக்கள் சீரான பாதையில் செல்லும். மாணவர்கள், பாடங்களைப் புரிந்து கொண்டு, நன்றாகப் படித்து முன்னேறுவார்கள். இதுதான் பிரார்த்தனையின் மகிமை!


மந்திரங்கள் ஓதும்பொழுது, பிரபஞ்சத்தில் உள்ள, சீர் பெற அமைந்த கதிர்கள், இயற்கையான இணைப் பைப் பெற்று, தண்ணீரில் சக்தியைப் பரப்புகின்றன. அந்தச் சக்தி வாய்ந்த தண்ணீரை நாம் சிரசில் தெளித்துக் கொள்கிறோம். அதை உட்கொள்கிறோம். அந்தத் தண்ணீர், நம் உயிரணுக்களிலும், பிரபஞ்சம் சம்பந்தமான கதிர்களிலும், ஓர் எதிரொலியை உண்டாக்குகிறது. ஆக்கல், நிலை நிறுத்தல், அழித்தல் எல்லாவற்றுக்கும் மூல காரண மாக விளங்குகிறது. மந்திரங்கள், நம் புத்தியை / மூளையை சாந்தமாகவும், அமைதியாகவும், வைக்கிறது.

மந்திரங்கள் ஒலியால் உண்டாகின்ற அதிர்வு அலைகளுக்கு, தீய சக்திகளை விரட்டும் சக்தி இருக்கின்றது.

எனவே மந்திரங்களைச் சமஸ்கிருதத்தில்தான் சொல்ல வேண்டும். பிரார்த்தனைகளை எந்த மொழியில் வேண்டுமானாலும் சொல்லலாம். சொல்பவர்களின் சௌகரியத்தையும் நம்பிக்கையையும் பொருத்தது.

நன்றி: இணையதளம்
தொகுப்பு: பாரத், சென்னை

ஷீரடி சாயிநாதனின் ஸ்துதியும் பிரார்த்தனையும்...



ஷீரடி வாஸனே சாயிநாதா
தீன தயாளனே சாயிநாதா
ஆஸ்ரித வத்ஸல்யனே சாயிநாதா
ஆபத்பாந்தவனே சாயிநாதா
அநாத ரக்ஷகனே சாயிநாதா
தீனஜன பந்துவே சாயிநாதா
பிரேம ஸ்வரூபனே சாயிநாதா
பக்த ஜனப் பிரியனே சாயிநாதா
சாந்தி ஸ்வரூபனே சாயிநாதா
ஜோதி ஸ்வரூபனே சாயிநாதா
ஞானஸ்வரூப்னே சாயிநாதா
கலியுக வரதனே ஸ்ரீ சாயிநாதா!

- ஏ. இராஜேஸ்வரி நாராயணன், மும்பை



சிறுநீர் கசிவா ?

அடி இறக்கமா ?

இலவச தொலைபேசி ஆலோசனை : 0422 2323456

GAURI - UROGYNECOLOGIST

பெண்களுக்கு ஏற்படும் சிறுநீர் கசிவு, அடிஇறக்கம் பிரச்சனைகளுக்கு தீர்வு!

இருமினாலோ, தும்மினாலோ சிறுநீர் கசிகிறதா ?

"சிலிங் சிகிச்சை"

அமெரிக்கா/இங்கிலாந்தில் பயிற்சி பெற்ற மருத்துவர்கள்! சிறந்த மருத்துவ முறைகள்!

GAURI UROLOGY

(Chennai only)

ஆண்களுக்கு ஏற்படும் பிராஸ்டேட் பிரச்சனைகள்

சிறுநீர்ப்பை, சிறுநீரகத்தில் ஏற்படும் கற்கள்

ஆவசரமாக அடக்கமுடியாமல் சிறுநீர் கழிக்கும் பிரச்சனைகள்

புற்றுநோய்

GAURI
THE CONTINENCE CENTER

www.urogynecology.in

GAURI

Chennai
No1. Crescent Park St
T.Nagar
Chennai -17
Ph:044-24341055
044-24322591

Coimbatore
Bala Medical Center
Ramanathapuram
Coimbatore - 45
Ph:0422-2323456
0422-2323333

Bangalore
(விரைவில்)
Motherhood
Hospital
IndraNagar

தெரிந்து கொள்வோம்!



★ இந்திய பெரு நகரங்களால் தினமும் இருநூறு முதல் இருநூற்றைம்பது டன்கள் வரை ப்ளாஸ்டிக் கழிவுகள் உண்டாக்கப்படுகின்றன. இதில் ஐம்பது சதவிகிதம் ப்ளாஸ்டிக் பைகள் என்றால் அது நான்கு கிலோமீட்டர் பரப்பளவை தினமும் அடைத்துக் கொள்கிறது.

★ நாம் சாதாரணமாக ப்ளாஸ்டிக் பைகளை இருபது நிமிடங்கள் மட்டுமே உபயோகித்தாலும் அது மக்குவதற்கு சில நூறு ஆண்டுகள் ஆகின்றன.

★ கடலில் மிதக்கும் குப்பைகளில் தொண்ணூறு சதவிகிதம் ப்ளாஸ்டிக் கழிவுகள்தான்.

★ தற்போது நாம் பயன்படுத்தும் ப்ளாஸ்டிக்குகளில் வெறும் ஏழு சதவிகிதம் மட்டுமே ரீ-சைக்கிள் செய்யப்படுகிறது.

மட்கும் காலம்

ப்ளாஸ்டிக் பைகள் 100 - 1000 வருடங்கள், பையோ டி கிரேடபிள் ப்ளாஸ்டிக் பைகள் 60 - 180 நாட்கள், வாழைப்பழ தோல் 2 - 10 நாட்கள், கிழிந்த துணிகள் - 1 - 5 மாதங்கள்,, காகிதம் 2-5 மாதங்கள், கயிறு 3 - 14 மாதங்கள், ஆரஞ்சு தோல் 6 மாதங்கள், கம்பளி சாக்ஸ் 1- 5 வருடங்கள், டெட்ரா பேக்குகள் 5 வருடங்கள், தோல் ஷூக்கள் 25 - 40 வருடங்கள், நைலான் துணிகள் 30 -40 வருடங்கள், டின் கேன்கள் 50 -100 வருடங்கள், அலுமினியம் கேன்கள் 80 - 1000 வருடங்கள், ப்ளாஸ்டிக் வளையங்கள் 450 வருடங்கள், டயபர்ஸ் மற்றும் நாப்கின்கள் 500 -800 வருடங்கள், ப்ளாஸ்டிக் பாட்டில் அழியவே அழியாது.



பயோ டி கிரேடபிள் டெக்னாலஜி என்ற முறையின் மூலம் ப்ளாஸ்டிக்கிலிருந்து கார்பன் - டை- ஆக்ஸைடு மற்றும் இதரக் கழிவுகள் நீக்கப்பட்டு அழியும் மற்றும் மட்கும் தன்மையுள்ள பொருட்களால் உருவாக்கப்படுகிறது.

தூய மற்றும் மாசு இல்லா சுற்றுச்சூழல் அனைவரின் உரிமை. பயோ-டி கிரேடபிள் ப்ளாஸ்டிக்கைப் பயன்படுத்துங்கள்! அது உங்களிடமிருந்தே ஆரம்பமாகட்டும்!

- காயத்ரி பாலாஜி, சென்னை

கீழ்க் கண்ட பொருள்கள் மட்டுமே ஐம்பது சதவிகிதம் மேலாக மாநகராட்சி குப்பைத் தொட்டியில் ப்ளாஸ்டிக் கழிவுகளாக நம்மால் சேர்க்கப்படுகின்றன.

- கேரி பேக்
- காய்கறி பைகள்
- மளிகைப் பொருட்கள் பிரித்த பைகள்
- பேக்கிங் மற்றும் ரோல்கள்
- வீட்டுக் குப்பை பைகள்
- வணிகக் குப்பை பைகள்
- தொழிற்சாலைக் கழிவுகள்
- மருத்துவமனைக் கழிவுகள்



பயமுறுத்தும் ப்ளாஸ்டிக்!

நகைகளில் நேற்றும்... இன்றும்...
நாளையுமான பல்சானி...!
ஒருமுறை வாருங்கள்....
புதுமையாக திரும்புங்கள்!


ஆடி
சிறப்புச்
சலுகை
01.08.10
முதல்
30.08.10

1 கிராம் செயின்
2 வாங்குபவர்களுக்கு
½ கிராம் செயின்
இலவசம்!









சிறப்புச் சலுகைகள்:

உங்கள் நகைகளுக்கு 100% உத்திரவாதம் உண்டு.
ரூ. 100 முதல் ரூ. 1000 வரை மாத சீட்டு உண்டு.
ரூ. 500 முதல் ரூ. 1000 வரை வாங்குபவர்களுக்கு ஒரு ஜோடி American Diamond கம்மல் இலவசம்
ரூ. 1,500/- முதல் ரூ. 2,500/- வரை வாங்குபவர்களுக்கு 5 Pair கம்மல் இலவசம்
ரூ. 2,500/-க்கு மேல் வாங்குபவர்களுக்கு ஒரு American Diamond Necklace set இலவசம்
ரூ. 5000/-க்கு மேல் வாங்குபவர்களுக்கு ஒரு American Diamond Necklace set இலவசம் கூடுதலாக 7% விலை குறைப்பு.

1 gm மற்றும் American Diamond
நகை வாங்குபவர்களுக்கு மட்டும்

Sri Palsani Jewels
110, Dr. Radha Krishnan Road
(Near Sri Krishna Sweets) Chennai - 4
Phone: 2811 1737, 2811 7036

www.sripalsanijewels.net

ரவா லட்டு செய்யும்போது, சர்க்கரை கலவைக்கு, கால் பங்கு பால் பவுடர் சேர்த்துக்கொண்டால், லட்டு சுவையாக இருக்கும்.

- வி. ரமாதேவி, வடிவீஸ்வரம்

தினமும் இரவில் தூங்கப்போகும் முன், கல் உப்பு கலந்த வெந்நீரில், பாதங்களை மூழ்க வைத்தால், நரம்புகள் வலுவடையும்.

- எச்.எஸ். லக்ஷ்மி, கொல்லம்

வீட்டில் சமையலுக்குப் பயன்படுத்திய எண்ணெயை மீண்டும் பயன்படுத்தும்போது 'டாக்சிக்' என்னும் விஷத்தன்மை கொண்டதாக அது மாறிவிட வாய்ப்புண்டு. சில ஃபாஸ்ட் ஃபுட் கடையில் அதே எண்ணெயைத்தான் பலமுறை பயன்படுத்துகின்றனர்.

- லட்சுமி சிவம், சென்னை

ஸ்டெபிலைசர் மேல் வைத்தால், நீண்ட நேரம் 'மொர மொர'ப்பாகவே இருக்கும்.

- இந்திரா சந்திரன், திருச்சி

தொப்பையைக் குறைக்க விரும்புகிறவர்கள், உணவு முடிந்ததும் ஐஸ் வாட்டர் குடிக்கக் கூடாது. அது கொழுப்பை உறையச் செய்து விடும். ஒரு தம்ளர் வெந்நீர் குடித்தால் அது, கொழுப்பை உடலில் தங்க விடாமல் கரைத்துவிடும்.

- வி. மணி, இராசிபுரம்

அன்றாடத் தேவையான காய்கறி, பழங்கள், உப்பு போன்ற பொருள்களை வீட்டுக்கே வந்து விற்கும் சிறு வியாபாரிகளிடம் வாங்கி, அவர்களுக்கு உதவலாம்.

- சரஸ்வதி, செகந்திராபாத்



ரிப்பன் பக்கோடாவை எண்ணெயில் பிழிந்து, இலேசாக வெந்ததும் கரண்டியால் பிரித்துவிட்டால் ஒரே சீராகப் பொரியும். நாடாக்களும் நல்ல நீட்ட வடிவத்தில் இருப்பதுடன் எண்ணெய் அதிகம் இழுக்காது.

- உஷா நாராயணன், குரோம்பேட்டை

இவை எல்லாமே ஆஹா 50 தான்!

கிளிசரின், சர்க்கரை இரண்டையும் சேர்த்து உள்ளங்கையில் தடவி வந்தால், காய்ப்பு ஏற்படாமல் தடுப்பதோடு, உள்ளங்கை மிருதுவாகவும் இருக்கும்.

- ஆர். பிரகாசம், கோவிலூர்

பிஸ்கெட் பாக்கெட்டை ஃப்ரிஜ்

நாம் காலையில் வாக்கிங் செல்லும் போது, மௌனமாக பகவான் நாமத்தை ஜபித்துக்கொண்டே நடந்தால், வேறு சிந்தனை வராது. நடக்கும் சிரமமே தெரியாது. மனதுக்கும் புத்துணர்ச்சி கிடைக்கும்.

- ராதா விஸ்வநாதன், ஜாம்ஷெட்பூர்

உங்களுக்காக...



சம்பாவின்

புதிய வரவுகள்

'கிராண்ட் லுக்'
ஜரிகை வேலைப்பாடுடன்.
வண்ணமயமான
புடவைகளின் ஆலயம்
சம்பா!

திருமணம் போன்ற எல்லா
சுபகாரியங்களுக்கும்
நாள் முழுவதும் சம்பாவின்
பட்டோ என்று எல்லோருக்கும்
வியக்கும் காட்டன்
புடவைகளை அணிந்து
கொண்டாடுங்கள்

★ Price range
Rs. 600 upwards for
sarees & Salwar sets

Simple & Ethnic
ராசிபுரம் புடவைகள்
காலேஜ் மங்கையருக்கேற்ப
பிரிண்டட் சுடிதார் செட்
மற்றும் புடவைகள்

கோடை காலத்திற்கேற்ப
கோட்டா புடவைகள்

Timings : 11 a.m to 1 p.m. and 3 p.m. to 8 p.m | Sunday Holiday | Visa, Master & BOB Cards Accepted

5, 3rd Street, Abiramapuram, Chennai - 600 018. Tel : 2499 6907

மிகக்குறைந்த சலுகைக் கட்டணத்தில் அனைத்து வசதிகளுடன் விமான சுற்றுலாக்கள்

(மிகக்குறைந்த இடங்களே உள்ளன)

காசி-கயா

(சென்னை - வாரணாசி- சென்னை
விமானப் பயணத்துடன்)
பயணத்தொகை ரூ. 18,000/-
(4 நாட்கள்) புறப்படும் தேதிகள் :
19.8.2010, 04.09.2010, 18.9.2010

பஞ்சதுவாரகை யாத்திரை

சென்னை-அகமதாபாத்-
சென்னை விமானப் பயணத்துடன்
(பயணத்தொகை ரூ. 14,500/- இரயில் மூலம் ரூ.8,500 மட்டுமே)
புறப்படும் தேதிகள்:
18.8.2010, 14.9.2010, 20.10.2010

முக்திநாத் யாத்திரை

விமானம் மூலம் ரூ 14,000/-
+ விமான டிக்கெட் (5 நாட்கள்)
ரயில் மூலம் ரூ 14,000/-
+ ரயில் டிக்கெட் (11 நாட்கள்)
புறப்படும் தேதிகள்
29.8.2010, 21.9.2010, 24.9.2010

அலகாபாத் - சித்ரகூடம்-
நைம்சரண்யா - அயோத்யா - போக்ரா
முக்திநாத் - காத்மாண்டு - காசி
ரூ. 19,500/- + ரயில் டிக்கெட்
புறப்படும் தேதிகள்:
26.8.2010, 17.9.2010, 21.10.2010
நாட்கள்: 15 நாட்கள்

வடஇந்திய திவ்ய தேசங்கள்

மதுரா-கோகுலம்-ஜோசிமத்-
தேவப்ரயாக்-நைம்சரண்யா-
அயோத்யா-போக்ரா-முக்திநாத்-காசி
பயணத்தொகை: ரூ. 23,000/-
20 நாட்கள்
புறப்படும் தேதிகள்: 11.09.2010

திருக்கைலாய யாத்திரை

பயண தேதி
15.08.10
கட்டணம்
ரூ.68,000
20 நாட்கள்
யாத்திரை

ஸ்ரீ டிராவல்ஸ்
194/A, அண்ணாசாலை, ஆயிரம் விளக்கு, சென்னை-6.
போன்: 044-65345081 / 082 & 2851 6799
Email : sritrave@gmail.com
Website : www.sreetravels.net

ஒரு பக்கக் கதை



"உனக்கு எப்பம்மா ரெஸ்ட்?"

வெயிலில் களைத்து வந்த மகள் உமாவை உட்காரச் சொல்லி, குளிர்ந்த நீர் தந்தாள் பிரேமா.

"நிதினுக்கு இன்னிக்கு முதல் நாள் ஸ்கூல் என்பதால் லீவு போட்டேம்மா. அழாமல் க்ளாஸுக்குப் போயிட்டான். பன்னிரண்டு மணிக்குப் போய் பிக்-அப் பண்ணிக்கிட்டு வீட்டுக்குப் போகணும். அதற்குள் உன்னையும் அப்பாவையும் பார்த்துட்டுப் போகலாமேன்னு வந்தேன்" சொல்லிக்கொண்டே சமையலறைக்குள் நுழைந்தாள் உமா.

"ஒரு வாய் சாப்பிடேன் உமா. அஞ்சே நிமிஷத்துல சமையலாயிடும்." பிரேமா சொல்லிக் கொண்டிருக்கும்போதே குறுக்கிட்ட உமா, "ஏம்மா, இந்த வயசிலும் இப்படி சமையல், டிபன்னு கஷ்டப்படறே? உன் மருமகளுக்குப் பத்து மணி ஆஃபீஸ்தானே? சமைச்சுட்டுப் போக முடியாதா?" கோபமாகக் கேட்டாள்.

"அவள் சமைச்சுட்டுப் போறேன்னுதான் சொல்றா. பாவம், காலைல டிபன் செஞ்சுட்டுக் கிளம்புறா. நான் மதியம் சாப்பாடும், இரவுக்குச் சப்பாத்தியும்தானே செய்யறேன்? இது என் இஷ்டம்தான்" பொறுமையாகச் சொன்னாள் பிரேமா.

"அப்ப உனக்கு எப்போதான் ரெஸ்ட்?"

"உமா, என்னைப் பொறுத்தவரை மாமியார்கள் வயதானதும் சாவிக்கொத்தை மருமகளிடம் கொடுக்கத் தயங்கவே கூடாது. ஆனால், கரண்டி கொடுப்பதைக் கூடுமானவரை தள்ளிப் போடணும். இந்தச் செங்கோல் நம் கையிலிருக்கும்வரைதான் நாம மகாராணி! இந்தக் கரண்டி என்ற செங்கோலைக் கீழே வெச்சு, எப்போ சமையலறை ராஜ்ஜியத்தை இழக்கிறோமோ அப்போ நமக்கே நம்மிடம் மதிப்பு குறைஞ்சுடும். அப்புறமா மதிக்கலைனு புலம்பறதுல என்ன நியாயம்?"

–கலா சுந்தர், சென்னை

மங்கையர் மலர் ஆகஸ்ட் 2010



எர்ச்சலில்
இருந்து
இதத்திற்கு....


70

சைபால்

BEST SKIN OINTMENT

எரிச்சல் தரும்
வெட்டுக்காயத்தின் மேல்
சைபால் தடவுங்கள்.
எரிச்சலைப் போக்கி இதம் தரும்.
காயம் இருந்து சுவடே
காணாமல் போகும்.

**வெட்டுக்காயம், முகப்பரு,
சேத்துப்புண்,
வேனல்கட்டி, பித்தவெடிப்பு,
முதலிய வியாதிகளுக்கு சிறந்தது.**




Mfrs:
THE SOUTH INDIAN MFG. CO,
MADURAI - 20.. Ph: 2534108.
Prop: **Saibol S.Sankaranarayanan**

சைபால் எல்லோர் வீட்டிலும் இருக்க வேண்டிய ஒன்று

உங்கள் பட்டுப் புடவை

என்றும் புதுப் பொலிவுடன்

பழசெல்லாம் புதுசாகும்
புதுசெல்லாம் மேலும் மெருகேறும்



பட்டுப்புடவைகள் நிறம்
மங்கி விட்டதா?
கறைகள் படிந்து விட்டதா?

கவலை வேண்டாம்

நிறம் மங்கிய, கறைகள் படிந்த
பழைய பட்டுப்புடவைகளை
புதிய மெருகூட்டி

* டையிங் * ஹேண்ட் பிளாக் பிரிண்டிங்
* பட்டுப் புடவைகளுக்கு ஸ்பெஷல் டிரைகிளீனிங்&ஸ்டீம் பிரஸ்ஸிங்
* ஹேண்ட் எம்ப்ராய்டரி
* ஸ்டோன் வொர்க் மேட்சிங் பிளவுஸ்

ஜரி பாலிஷிங் டார்னிங்

செய்து புதிய டிசைனர்
சேலைகளாக மாற்றித் தருகிறோம்

Stitch
All Pattern Chudidhar,
Blouse, Perfect Fitting

ஸ்ரீ ராம்லோக் & கோ

73.ரங்கநாதன் தெரு.(அம்பிகா அப்பளம்
பின்புறம்) தி.நகர். சென்னை600017.
போன் 24345697, 24353063

BRANCH

Adyar :24405473 Annanagar:26161500
Chrompet:22411141 Mylapore:24662255
Manappakkam:98410 12416

General Enquiry:9841012416

Please visit www.ramlok.com

“தமிழ் சினிமாவுல எத்தனையோ திறமையான காமெடி நடிகர்கள் இருந் திருக்காங்க. இன் றைக்கும் இருக்காங்க. ஒவ்வொருவருடைய காமெடியும் ஒவ்வொரு விதமானது.”

ஏ. கருணாநிதியை எடுத்துக்கிட்டா, அவரது முக ஜாடையே ரொம்ப வித்தியாசமா இருக்கும். மூக்கைச் சுழித்து, குதிரை கனைப்பது போன்றதொரு சப்தம் செய்யும் அவரது சேஷ்டையும், குரலும்கூட ரொம்ப வித்தியாசமானது. பந்தா பண்ணத் தெரியாத எளிமை யான மனுஷர். ''சச்சும்மா! நீங்க ஹீரோயின் மாதிரி அழகு! உங்களுக்கு ஜோடியா ஒரு படத்துலயாவது நடிக்கணும்னு எனக்கு ரொம்ப ஆசை''னு சொல்வாரு.

'ஆனந்த பைரவி' படத்துல ஏ.கருணாநிதியை நடிக்கச் சொல்லிக் கேட்டபோது, நானும் அந்தப் படத்துல நடிக்கிறேன்னு தெரிஞ்சதும், ''சச்சுக்கு ஜோடியா என்னைப் போடக்கூடாதா?''னு கேட்டா ராம். ஆனா, டைரக்டர், ''அவங்களுக்கு ஜோடியா தேங்காய் சீனிவாசனைப் போட்டு, சில காட் சிகள் எடுத்தாச்சு''னு சொன்ன போது, ரொம்ப வருத்தப்பட்டு,



ரோஜா


'ஜோடியா இல்லாவிட்டாலும், அவங்களுக்கும் எனக்கும் ஒரு பாட்டு வைக்கக்கூடாதா?'' என் றாராம். டைரக்டர், ''நீங்க ரெண்டு பேரும் அண்ணன் - தங்கையாச்சே! எப்படிப் பாட்டு போட முடியும்?'' என்றதும், ''அதனால் என்ன? பாசமலர் படத்துல அண்ணன்-தங்கைக்கு பாட்டு வரலையா என்ன?''னு கேட்டாராம். ஆனாலும் எங்க ரெண்டு பேருக்கும் அந்த வாய்ப்பு கிடைக்கலை.

அசைவப் பிரியரான அவர் 'மாமியார்' என்ற பெயரில் பாண்டி பஜாரை ஒட்டி அசைவ ஓட்டலை நடத்தினார். அது அந்த ஏரியாவில் மிகப் பிர பலம். கருணாநிதி ரொம்ப நல்ல ஃபோட்டோகிராபர். அவுட்டோர் ஷூட்டிங்குக்கு

மலரே, ராஜகுமாரி!


சந்திப்பு : எஸ்.சந்திரமௌலி

வரும்போது கையோடு தன் விலை உயர்ந்த கேமராவையும் கொண்டு வருவார். அவருடைய புகைப்பட ரசனையே அலாதியானது. மனுஷங்களைவிட இயற்கைக் காட்சிகளையும், பறவைகள், பிராணிகளையும்தான் அதிகமா க்ளிக் பண்ணுவார். தான் எடுத்த சிறந்த புகைப் படங்களை எல்லாம் தொகுத்து ஒரு புத்தகமாக வெளியிடணுங்கிற அவரோட ஆசை நிறைவேறலைங்கிறது வருத்த மான விஷயம்.



● பேட் ஆசை

நான் தேங்காய் சீனிவாசன் கூடவும் நிறைய படங்கள்ல நடிச்சிருக்கேன். செக்கச் செவேல்னு நல்ல உயரம். நல்ல குரல் வளம். பூனைக்கண்கள். வசனம் பேசுகிறபோது அந்தக் கண்களை உருட்டுகிற அவரது ஸ்டைல். திரையில்தான் காமெடி பண்ணுவார்னு இல்லை. செட்டிலும் கலகலப்புதான். அவருக்கு தன் அம்மா மேல ரொம்பப் பாசமும், மரியாதையும் உண்டு. தினமும் தன் அம்மாவை வணங்கிட்டுத்தான் ஷூட்டிங்குக்குப் புறப்படுவார்.



● அம்மா- பிள்ளை

நாங்க ரெண்டு பேரும் சேர்ந்து நடிக்கிறபோது, சில காட்சிகள்ல அவருக்கு இரட்டை அர்த்த வசனம் கொடுப்பாங்க. ஆனா, நான் ''இதுபோல டயலாக் வேணாமே''ன்னு சொல்வேன். அவரும் டைரக்டரிடம் சொல்லி, அந்த வசனங்களை மாத்திடுவாரு. சில சமயங்கள்ல, ''நீங்க இந்த மாதிரி டயலாக் பேசறதை உங்க அம்மாகிட்டே சொல்லிடுவேன்''னு அவரை டீஸ் பண்ணுவேன்.

வில்லன் நடிகர் கண்ணனின் நாடகத்தில், தேங்காய் வியாபாரியாக நடித்தபோது அவரை எல்லாரும் ''தேங்காய்... தேங்காய்''ன்னு கூப்பிடுவாங்க. அதுக்கு அப்புறமாத்தான் அவர் 'தேங்காய் சீனிவாசன்' ஆனார். மனப்பூர்வமா மத்தவங்களுக்கு உதவி செஞ்சு சந்தோஷப்பட்ட ரொம்ப நல்ல மனுஷர். ஆனா, அவருக்கு தயாரிப்பாளர்கள் கொடுத்த நிறைய செக் பேங்க்ல பணம் இல்லைன்னு திரும்பி வந்திருக்கு. அதைப் பத்தி ஆதங்கப்பட்டுச் சொல்வாரே தவிர, யார்கிட்டேயும் சண்டை போட்டது இல்லை. மெட்ராஸ் பாஷை பேசுறதுல பெஸ்ட் யாருன்னா சின்ன வயசிலிருந்தே வட சென்னையில் வளர்ந்த தேங்காய்தான்.



● ஆச்சி ரியாக்‌ஷன்

சிங்கப்பூரில் ஒரு நிகழ்ச்சிக்காக இங்கே இருந்து நிறைய நட்சத்திரங்கள் போயிருந்தோம். நான், நேரம் கிடைச்சபோதெல்லாம் கடைத் தெருவுக்குப் போய் ஷாப்பிங் பண்ணினேன். நிகழ்ச்சி முடிந்த பின், ஊருக்குப் புறப்படும் நேரத்

தில் என் ரூமுக்கு வந்த தேங்காயிடம், ''நீங்க சிங்கப்பூர்ல உங்க மனைவி, பசங்களுக்கு என்ன வாங்கினீங்க?'' என்று கேட்டபோதுதான், அவர், ''அடடா! என் பெண்டாட்டியும் ஒரு பெரிய லிஸ்ட் கொடுத்தா! ஆனா, நான் இன்னும் ஒண்ணுமே வாங்கலியே?'' என்றார் அதிர்ச்சியுடன்.

சென்னை வந்த பிறகு மறுநாள், சில ஃபாரின் ஐட்டங்களை பர்மா பஜாரில் வாங்கி, ''இதெல்லாம் சச்சுவோட லக்கேஜ்ல வெச்சுக்க சொல்லி இருந்தேன்; இன்னிக்குத்தான் அவங்ககிட்டேருந்து வந்திச்சு!'' என்று சொல்லி வீட்டுல கொடுத்திருக்கிறார். ஒரு நிகழ்ச்சியில் தேங்காயின் மனைவியைப் பார்த்தபோது, ''சிங்கப்பூர்ல இருந்து அவர் வாங்கிட்டு வந்த ஐட்டங்கள் எல் லாம் ரொம்ப நல்லா இருந்துச்சு! நீங்க என்ன வாங்கிட்டு வந்தீங்க?''னு கேட்டபோது, சமயோஜிதமாகப் பேசி சமாளித்தேன்.



* படங்கள் உதவி: ஞானம்

அண்மையில் கால் ஆபரேஷனுக்குப் பிறகு வீட்டுல ஒய்வு எடுத்துக் கொண்டிருந்த ஆச்சி மனோரமாவை நலன் விசாரிக்கப் போயிருந்தேன். என்னைப் பார்த்தவுடனே அவங்களுக்கு ரொம்ப சந்தோஷம். 'வீரத் திருமகள்' படத்திலிருந்து நாங்க ரெண்டு பேரும் நெருக்கமான சிநேகிதிகள். அதன்பிறகு நாங்க சேர்ந்து படங்களில் நடிச்சிருக்கோம். வெளிநாடுகள்ல கலை நிகழ்ச்சிக்குப் போயிருக்கோம். நான் வாய்த் துடுக்காகப் பேசி, நல்லா பேரம் பண்ணுவேன். அதனால அங்கே எல்லாம் ரெண்டு பேரும் சேர்ந்துதான் ஷாப்பிங் போவோம்.

'நல்ல பெண்மணி' படத்துல தேங்காய்க்கு வண்ணான், ஹேர் ஸ்டைலிஸ்ட் என இரட்டை ரோல். வண்ணான் தேங்காய்க்கு முறைப்பெண் மனோரமா, ஹேர் ஸ்டைலிஸ்ட் தேங்காயின் அசிஸ்டன்ட்டான ஆங்கிலோ இந்தியப் பெண்ணாக நான். ஒரு கட்டத்தில் இரண்டு தேங்காய்களும் இடம் மாறிவிட, எனக்கும், ஆச்சிக்கும் ஒரு சண்டை நடக்கும். அந்த சீன்ல நாங்களே சொந்தமா சில டயலாக்ஸ் சேர்த்துப் பேசினோம். அது செமத்தியான காமெடி!

'கலாட்டா கல்யாணம்' படத்துல வரும் 'எங்கள் கல்யாணம் கலாட்டா கல்யாணம்' என்கிற பாட்டுக்கான ஷூட்டிங் சென்னை அண்ணா நகர் டவரில் நடந்துகொண்டிருந்தது. ஹீரோயின் ஜெயலலிதா, மனோரமா, ஜோதிலட்சுமி, நான் நாலு பேரும் ஷூட்டிங்கின் இடையில் ரெஸ்ட் எடுக்க ஒரு தற்காலிக ஷெட் போட்டிருந்தாங்க. எங்களைப் பார்க்க ஏகப்பட்ட கூட்டம். அந்த இடத்திலிருந்து ஷூட்டிங் ஸ்பாட்டுக்கு நாங்க நடந்து போனபோது கூட்டத்திலிருந்து சிலர், சினிமா நடிகைகள் பற்றி ரசனைக்குறைவா ஒரு காமென்ட் அடிச்சதும், அதுக்கு ஆச்சியின் ரியாக்ஷனைப் பார்த்து நான் அதிர்ச்சி அடைஞ்சேன்!

(அடுத்த இதழில் முடியும்)



ஜூன் 'மங்கையர் மலர்' இதழில் 'சுகுணா டீச்சர்' சிறுகதையும், ஓவியர் ராமுவின் சித்திரமும் இடம் பெற்றிருந்தது. அதன் கதாநாயகியான சுகுணா டீச்சர் உங்கள் கற்பனையில் எப்படியிருப்பாங்க? என்றொரு போட்டியை அறிவித்திருந்தோம். வந்து குவிந்த ஓவியங்களிலிருந்து நமது வாசகி வரைந்த ஒரு ஓவியத்தையும், கல்லூரி மாணவி வரைந்த ஒரு ஓவியத்தையும் ஓவியர் ராமு, தேர்வு செய்து கொடுத்தார். அவருக்கு நமது இதயங்கனிந்த நன்றி! போட்டியில் பங்கேற்ற அனைவருக்கும் ஒரு 'ஓ!' பரிசுகளைப் பெறும் தங்க மீனாட்சிக்கும், பா. சந்தியாவுக்கும் 'ஓஹோ!' தேர்வு செய்யப்பட்ட ஓவியங்களும், ஓவியர் ராமுவின் கமெண்டும்...



இவங்கதான் சுகுணா டீச்சர்!





பட்டுப் புடவை பரிசுப் பெறும் சித்திரம்

◀◀ மஞ்சள் பூசிய களையான முகம். முகத்தில் புன்னகையுடன், நெற்றி வடுவில் குங்குமமும், மூக்குத்தியும், தலையில் பூவுமாக குடும்பப்பாங்கான அதேநேரம் பாசமுள்ள பெண்மணியாக தோன்றும் படி 'சுகுணா டீச்சர்' என்கிற ஓவியத்தை மிகச் சிறப்பாக ஜி.தங்கமீனாட்சி (சென்னை) வரைந்திருக்கிறார். அவருக்கு என் வாழ்த்துகள்!

ஓவியப் போட்டி முடிவு



செல் ஃபோன் பரிசு பெறும் சித்திரம்



▶▶ பள்ளி ஆசிரியை எப்படி இருப்பார்களோ அப்படியே அடக்கமான தோற்றத்துடன் மிகச் சிறப்பாக கல்லூரி மாணவி பா.சந்தியா (இரண்டாமாண்டு, பி.ஈ, தேஷனல் பொறியியல் கல்லூரி, கோவில்பட்டி) வரைந்துள்ளார். அவருக்கு என் வாழ்த்து.

காமராசர் மாவட்டம், சாத்தூர் வட்டத்தில் திருச்செந்தூர் செல்லும் நெடுஞ் சாலையில் உள்ளது இருக்கன்குடி திருத் தலம். இச் சிற்றூரின் தெற்கே பாயும் வைப்பாறு மற்றும் அர்ச்சுனா நதிகள் சூழ, அன்னை அருளாட்சி செய்கிறாள். இரு கங்கைகள் கூடுவதால் இருக்கங்(ன்)குடி எனப் போற்றப்படுகிறது. இவ்வூரில் கலியுகத்தில் கண்கண்ட தெய்வமாக துஷ்டநிக்ரகம் செய்து அடியாருக்கு அன்பு காட்டு கிறாள் மாரியம்மன்.

ஸ்தல மகிமை

முன் காலத்திலே பஞ்ச பாண்டவர்கள், காடுகளில் திரிந்து கொண்டு இம்மலையடி வாரத்துக்கு வந்தபோது நீராடுவதற்கு இடம் இல்லாமல் தவித்தனராம். அப்போது அர்ச்சுனன் கங்கையை வணங்கி வருணக் கணையால் பூமியைப் பிளந்து, ஆற்றை உருவாக்கினானாம். அதுவே அர்ச்சுனன் ஆறு என்று பெயர் பெற்றது.

அன்னையின் அவதாரம்

சுமார் முந்நூறு ஆண்டுகளுக்கு முன் ஒருநாள், சாணி எடுப்பதற்காக வந்த ஒரு பூசாரிப்பெண், தற்போது அம்மன் இருக்கும் இடத்தில், வைத்த கூடையை எடுக்க முடியாது திண்டாடினாள். கூட்டம் கூடியது. அப்போது அப்பெண் அருள் கொண்டு ஆடினாள். அவள் ''நான் மாரியம்மை, எனது திருமேனி சிலை இங்கே மணலில் புதைந்து கிடக்கிறது. என்னை எடுத்து இந்த இடத்தில் நிலைநாட்டி வழிபடுங்கள்'' என்று வாக்கருளினாள். அங்ஙனமே பூசாரிகள் மணலைத் தோண்டி அம்மையின் திரு உருவத்தைக் கண்டெடுத்தார்கள். சேவல் கூவாதலும் கழச்சிச் செடி முளைக்காததுமாகிய அவ்விடத்திலேயே கோயிலைக் கட்டினார்கள். அன்று முதல், நாடி வரும் பக்தர்களுக்கு வேண்டும் வரம் கொடுத்து அருளாட்சி செய்து வருகிறாள்.

திருக்கோயிலின் அமைப்பு:

அழகிய விமானத்துடன் கூடிய கர்ப்பக் கிரகத்தில் அருட்கடலாகிய மாரியம்மன் எழுந்தருளியிருக்கிறாள். கர்ப்பக்கிரகத்தை ஒட்டி அர்த்த மண்டபமும், அதனையடுத்து மாமண்டபமும் இருக்-



இருக்கண் களையும்

கின்றன. மகா மண்டபத்தின் முன் கொடி மர மண்டபம் அமைந்துள்ளது. அதில் நந்தீஸ்வரரும், கொடி மரமும், பலி பீடமும் வரிசையாக இருக்கின்றன.



தெற்குச் சுற்றின் நடுப் பகுதியில் அருள் தரும் விநாயகர், அரச மரத்தடியில் வீற்றிருக்க, அருகே வாழவந்தம்மனும் அதற்குச் சிறிது மேற்கில் இராக்காச்சி அம்மனும் இருக்கின்றனர். வட மேற்குப் பகுதியில் பேச்சியம்மனும் முப்பிடாரியம்மனும் இருக்கிறார்கள். அதற்கும் கிழக்கே வீரபத்திரரும், அவருக்கு கிழக்கே வயிரவமூர்த்தியும், அவருக்கும் கிழக்கே காத்தவராய சுவாமியும் எழுந்தருளியிருக்கின்றனர். இவருக்கடுத்த வடபுறம் திருவிழாவில் அன்னை வந்திறங்கும் திருமண்டபம் உள்ளது. கோயிலின் வெளிச்சுற்றுத் தென் கிழக்கு மூலையில் கருப்பசாமி கிழக்கு நோக்கி கோயில் கொண்டுள்ளார்.

திருவிழா மகிமை

இடுக்கண்களையும் இருக்கன்குடியாளுக்கு, ஆடி கடைசி வெள்ளிக்கு முன் வெள்ளி கொடியேற்றம் செய்து கடைசி வெள்ளி அன்று உற்சவம் நடக்கிறது. அன்னையின் உற்சவத் திருமேனியானது இடப வாகனத்தில் எழுந்தருளச் செய்யப்பட்டு, பவனி நடக்கிறது.

தை கடைசி வெள்ளியிலும் பங்குனி கடைசி வெள்ளியிலும் பெருந்திரளான மக்கள், அம்மன் அருள் பெறக் கூடுவது கண்கொள்ளாக் காட்சி. லட்சக்கணக்கான பக்தர்கள், அம்மனுக்கு அக்னிச்சட்டியும், ஆயிரங் கண்பானையும் எடுத்து பக்தியோடு வலம் வந்து வாழ்க்கையில் வளம் பெறுவது இத்திருக்கோயிலின் சிறப்பு.

- வி.எஸ்.ஸ்ரீநிவாசன்,
சென்னை

மகாலக்ஷ்மியிடம், சுக முனிவர் ஒரு சமயம், ''தேவி! தங்கள் கடாட்சம் பெற, நாங்கள் என்ன செய்ய வேண்டும்?'' என்று கேட்டார்.

''பெண்கள் அமைதியாகவும், அடக்கமாகவும் இருக்கும் வீட்டில் நான் வாசம் செய்ய வருவேன். உணவை விருந்தினருக்கு அளித்து, தானும் உண்பவர்கள், நாவடக்கமும் பணிவும், இனிமையும் உள்ளவர்கள், அளவுக்கு அதிகமாகவும், மிகத் தாமதமாகவும் சாப்பிடாதவர்கள், பெண்களைத் தெய்வமாக மதிப்பவர்கள், இவர்கள் வாழும் இல்லங்களில் நான் வாசம் செய்வேன். மேலும் நவ தானியங்கள் நிறைந்துள்ள இடங்களிலும், மாடப்புறாக்கள் இருக்கும் இடங்களிலும், நான் வாசம் செய்கிறேன். சங்கு, நெல்லிக்காய், கோமியம், தாமரை மலர், சுத்தமான ஆடைகள் போன்றவற்றைப் பயன்படுத்துவோரின் வீடுகளிலும் வாசம் செய்து, அருள் புரிவேன்'' என்று மகாலக்ஷ்மி சுக முனிவருக்குப் பதில் சொன்னாள்.



- ஆர். ராஜலட்சுமி, ஹூப்ளி

இருக்கன் குடியாள்!

மை டியர்

கமலாவின் பிரச்னை மிக சாதாரணமாகத் தெரிந்தாலும், அது அவளுக்கு எவ்வளவு பெரிய மன உளைச்சலை ஏற்படுத்தியிருந்தது என்பதை அவள் முகமே காட்டியது. அவளுக்குத் திருமணமாகி இரண்டு வருடங்களாகின்றன. ஒரு வயதில் கைக்குழந்தை. கமலாவின் கணவர் சேகர், ஒரு வங்கியில் மானேஜராகப் பணியாற்றி வந்தார். பெற்றோர் நிச்சயித்த திருமணம். முறைப்படி பெண் பார்த்து ஏற்பாடு செய்யப்பட்டது. சேகர் ஒரு நல்ல மனிதர். நேர்மையான ஊழியர். 'மனைவியை மிகவும் சந்தோஷமாக வைத்துக் கொள்ள வேண்டும்; அவளுடைய சந்தோஷம் தான் தன்னுடைய சந்தோஷம்' என்று நினைக்கக் கூடிய மிக நல்ல கணவர். பிறகு கமலாவுக்கு என்னதான் பிரச்னை?



அவளே சொல்லத் துவங்கினாள்:

"சேகர், எல்லா விதத்திலும் மிகவும் நல்லவர். ஆனால் அவருடைய ஒரு குணம் மட்டும் எனக்குப் பிடிக்கவில்லை. அது என் மனதை ரணமாக்கி விட்டது. என்னை பெண் பார்க்க வருவதற்கு முன், அவர் தன் பெற்றோருடன் வேறு சில பெண்களைப் பார்த்தார். கடைசியாக என்னைப் பார்த்து நிச்சயம் செய்தார்கள். திருமணமும் நடந்தது. மிகவும் சந்தோஷமாக எங்கள் வாழ்க்கை துவங்கியது. ஆனால் இரண்டாவது நாளே அந்த சந்தோஷம் மறைந்து விட்டது. அடிக்கடி அவர் பார்த்த மற்ற பெண்களைப் பற்றிப் பேசினார். அதில் ஒரு பெண் என்னை விட உயரமாக இருந்தாளாம். இன்னொரு பெண், என்னைவிட இன்னும் சிவப்பு நிறமாக இருந்தாளாம். இப்படி ஒவ்வொரு பெண்ணையும் என்னுடன் ஒப்பிட்டு பேசினார். என் மனதில் இது ரணத்தை ஏற்படுத்தி விட்டது. நான் இதை எல்லாம் மறப்பதற்கு எவ்வளவோ முயற்சி செய்தேன். ஆனால் முடியவில்லை."

"அவரிடம் உன் மனதில் ஏற்பட்ட பாதிப்பைச் சொல்லிப் புரிய வைத்தாயா?"

டாக்டர் விஜயலக்ஷ்மி பந்தையன்

''சொன்னேன். அதற்கு அவர் 'இருப்பதைத்தானே சொன்னேன். இதையெல்லாம் நீ ஈஸியாக எடுத்துக் கொள்ளணும். எது எப்படி இருந்தாலும் அவர்களை நான் கல்யாணம் செய்து கொள்ளலையே? உன்னைத்தானே செய்து கொண்டேன்' என்று என் வாயை அடைத்து விட்டார். அது மட்டுமில்லை. அதன் பிறகு அதைப்பற்றி அவர் எதுவும் பேசுவதில்லை. ஆனால் என்னால் அதையெல்லாம் மறக்க முடியவில்லை.

''அவர் சாதாரணமாக என்னை ஏதாவது குறை சொன்னால்கூட, உடனே அவர் மனதில் அந்த மற்ற பெண்களைப் பற்றி நினைக்கிறாரோ, ஒருவேளை அதில் யாரையாவது திருமணம் செய்திருந்தால் நன்றாக இருக்குமே என நினைக்கிறாரோ என்றுதான் எனக்குத் தோன்றுகிறது. அதனால் அவர் எது சொன்னாலும் எனக்குக் கோபம் வந்து விடுகிறது. என்னால் எதிலும் கவனம் செலுத்த முடியவில்லை. என்ன செய்வதென்றே தெரியவில்லை. என் வாழ்க்கையே கை நழுவி போய் விடுமோ என பயமாக இருக்கிறது.''



மைண்ட் பவர்

ஆழ்மனம்-7

கமலாவின் ஆழ்மனதில் பதிந்துப் போயிருந்த அவளது கணவரது வார்த்தைகளை அகற்றினால் தான் அவள் மனம் சரியாகும் என்பதை அவளுக்குப் புரிய வைத்தேன்.

''அது எப்படி முடியும்?''

அவளுக்கு விளக்கினேன். ''ஆல்ஃபா தியானத்தில் இது நிச்சயம் சாத்தியம். ஆல்ஃபா நிலையில் தியானம் செய்யும் பொழுது நமது ஆழ்மனம் திறக்கிறது. அந்த சமயத்தில் அங்கிருக்கும் தேவையற்ற எண்ணங்களை அகற்றி விட முடியும். ஆல்ஃபா நிலை என்பது மூளையின் வேகம், ஒரு வினாடிக்கு 7லிருந்து 14 சைக்கிள் வரை இருக்கும் நிலை. சாதாரணமாக பீட்டா நிலையிலிருக்கும் மூளையின் வேகத்தை ஒரு தியானத்தின் மூலமாக எப்படி ஆல்ஃபா நிலைக்குக் கொண்டு செல்ல முடியும் என்பதையும் விளக்கினேன். பயிற்சி வகுப்பில் நேரிடையாகவே கலந்துகொண்டாள்



மூன்று மல்லிகை மொட்டுக்கள்!

நிறைந்த மௌனம்
அந்தக் கிராமத்து வீட்டைச் சுற்றி
நூற்றுக்கும் மேல் ஊர்மக்கள் இருந்தும்!

இளைஞன் ஒருவன் அதோ
இறந்து கிடக்கிறான் - அவன்
மனைவி அழுதுகொண்டிருக்க

பாட்டி ஒருவர்
எல்லோர் முன் வந்து
ஒரு சொம்புத் தண்ணீரில்
மூன்று மல்லிகைப்பூ மொட்டுக்களை
இட்டார்!

ஊர் புரிந்துகொண்டது
அந்த இளம் பெண்
மூன்றுமாதக் குழந்தையைச்
சுமக்கிறாளென்று!

- என். சுரேஷ், சென்னை

கமலா.

குறிப்பாக 'தீய எண்ணங்கள் களைவது' என்ற தியானத்தைத் தொடர்ந்து பயின்று ஆழ்மனதிலிருந்து தேவையற்ற எண்ணங்களை அகற்றி விட்டாள்.

ஒரு மாதம் கழித்து தனது கணவருடன் வந்தாள். அவள் முகத்தில் பளீரென்று ஒரு சிரிப்பு. அவளது மனம் தெளிவாக இருப்பதை அந்தச் சிரிப்பே சுட்டிக் காட்டியது. அவள் கணவரும் அவளிடம் ஏற்பட்ட மாற்றத்தைப் பற்றி மிகவும் மகிழ்ச்சியுடன் பேசினார். மற்ற பெண்களையும் தன் மனைவியையும் ஒப்பிட்டுப் பேசியது தவிர்க்கப் பட்டிருக்கக்கூடிய தவறு என்பதைத் திறந்த மனதுடன் ஒப்புக்கொண்டார்.

திருமணம் என்பது வெவ்வேறு பின்னணியிலிருந்து வரும் இருவர் இணையும் நிகழ்வு. திருமணத்துக்கு முன்பு இருவருக்குமே பலவிதமான அனுபவங்கள் இருக்கலாம். திருமணத்துக்குப் பின் அவற்றைப் பற்றி தன் வாழ்க்கைத் துணையிடம் பேசும்பொழுது கவனத்துடன் இருப்பது அவசியம். எதை சொல்லலாம்; எதை சொல்லத் தேவையில்லை என்பதை சற்று யோசித்துச் செயல்படுவதால் தேவையற்ற மன உளைச்சலைத் தவிர்க்க முடியும்.

அதே சமயம் கமலாவைப் போல் பல பெண்கள், கணவரின் ஒரு சில வார்த்தைகளால் மனம் நொந்து வாழ்க்கையையே நரகமாக்கிக் கொள்ளாமல், கணவரின் உண்மையான மனநிலையை அறிந்து கொள்வது மிக மிக அவசியம்.

நம் மனத்தில் பதியும் விஷயங்கள் நம் வாழ்க்கையை மேலும் சிறப்பிக்க உதவுபவையாக இருப்பதுதான் எல்லா விதத்திலும் நல்லது.

- (தொடரும்)



தரமான வைர நகைகளுக்கு....

T.R. JOSHI & SONS

"Sharada Vilas" 39, Ekambareswarar Agraharam,
Park Town, Chennai - 600 003.
Phone : 044-2535 6596, 2642 6754 Cell : 98840 20170

Residence : "Sri Gopi", New No. 10 (Old No.6) Barnaby Avenue, Off Barnaby Road, Kilpauk, Chennai - 600 010
E-mail : vsjoshi@trjoshiandsons.com

WE HAVE NO BRANCHES

வரலட்சுமி விரத பூஜைப் பொருட்கள் மற்றும் அன்பளிப்பு பொருட்கள்

34 வருட பாரம்பரியம் மிக்க

மயிலாப்பூர்

விஜயா ஸ்டோர்ஸ்-ல்

பூஜைக்கு தேவையான மஞ்சள், குங்குமம், சீப்பு, கண்ணாடி,
சுவாமி அலங்கார பொருட்கள், அம்மன் முகம், அம்மன் பாவாடை, கிரீடம்,
நெஞ்சுப்பட்டை, ஜடை, காசு மாலை, வாகை மாலை, காவோலை கருகமணி,
அஷ்டலக்ஷ்மி குடம், சொம்பு, மண்டபம், பிளாஸ்டிக், பித்தளை,
ஒயிட் மெட்டல், செம்பு, ஹாண்டி கிராப்ட், அன்பளிப்பு பொருட்கள் மற்றும்
பாத நாட்டியத்திற்கு தேவையான அனைத்து பொருட்களும் கிடைக்கும்.



அலங்காரம் செய்யப்பட்ட அம்மன் கலசம்!

VIJAYA BRAND

VIJAYA STORES

42, (Near Kapaleeswarar Temple Office)
78, (Near Indian Bank),
North Mada Street, Mylapore, Chennai - 4.
✆ 2464 2500, 2495 7555 & 2464 3250 (R)

பக்தி மணம் கமழும் ஒரு பாரம்பரிய கடை.



• கைவேலை









அரை மணி நேரத்தில் அம்மன் பாவாடை!

படங்கள்: ஸ்ரீஹரி

தேவையான பொருள்கள்

உங்கள் விருப்பத்துக்குரிய நிறத்தில் துணி - கால் மீட்டர்

ஜிகினா, சமிக்கி, ஸ்டோன், முந்து போன்றவை - உங்கள் ரசனைக் கேற்ற நிறங்களில்... வடிவங்களில்.

ஒட்டுவதற்கு - ஃபெவி க்விக் (நோ ஸ்டிச் க்ளூ)

அழகுக்கு - 3 D கலர் அவுட் லைனர்

செய்முறை:

★ உங்களுக்குத் தாம்பூலத்தில் வைத்துத் தரப்பட்ட ரவிக்கைத் துணிகளைக் கொண்டே அம்மன் பாவாடை களை, விதவிதமான அளவுகளில் தைக்கலாம்.

★ குறிப்பாக சில்க் காட்டன், பாலியெஸ்டர், காஞ்சி காட்டன் போன்ற துணிகள் கண்களைக் கவரும்.

★ உங்கள் வீட்டு அம்மன் கலசத்துக்குத் தோதான அளவில் துணியை வெட்டிக் கொள்ளவும். நான்கு புறமும் ஓரத் தையல் போடவும்.

★ அதன் ஒரு நுனியின் ஓரத்தில் ஃபெவி க்விக் கொண்டு, கலர் ஸ்டோன்ஸ், செயற்கை மணிகள், பூக்கள் போன்றவற்றை அழகுற ஒட்டி, காய விடவும். தேவையானால், 3 D கலர் அவுட் லைனர் கொண்டு பார்டர் டிசைன்களும் வரையலாம்.

★ கைத் தையலாகவோ, மிஷின் தையலாகவோ, பாவாடைக்கு ஐந்து அல்லது ஆறு கொசுவம் மற்றும் நாடா வைத்துத் தைத்து விட்டால் அழகான அம்மன் பாவாடை தயார்!

★ ஸ்ரீ வரலக்ஷ்மி நோன்பு அன்று வீட்டுக்கு வரும் சுமங்கலிக்கு தாம்பூலத்தில் வைத்து இதையே பரிசளிக்க, அவர்கள் நவராத்திரி அம்மன் அலங்காரத்துக்குப் பயன்படுத்திக் கொள்வார்கள்!

- என்.ஆர்.சரஸ்வதி,
சென்னை-33



ஆஸ்திரேலியாவின் வெற்றிக்குப்பின்
இந்தியாவில் முதல் முறையாக

அசமந்தஹோமத்தின்சாறு

(CELERY SEED EXTRACT) அறிமுகபடுத்துகிறோம்

ORTHOCURE - 3000™
ஆர்தோக்யூர்
மாத்திரை

100% ஆயுர்வேதம். பக்கவிளைவுகள் இல்லாதது.

(இந்தியா-ஆஸ்திரேலியா கூட்டு முயற்சி)

மூட்டு வலி, மூட்டுவீக்கம்
கீழ்வாத நோய்களுக்கு ஒரு தீர்வு






- அசமந்தஹோமம் மூட்டுக்களுக்கிடையே உருவாகும் யூரிக் அமிலத்தை வெளியேற்றுகிறது.
- மூட்டு உராய்வை தடுக்கிறது.
- மூட்டு தேய்மானம் தவிர்க்கப்படுகிறது.
- மூட்டு வீக்கத்திற்கு சிறந்த நிவாரணி.
- கீழ்வாத நோய்களுக்குசிறந்த நிவாரணி.



Marketed by : KUREWEL PHARMA, CHENNAI - 600 083 PH: 24893013

அனைத்து மருந்து கடைகளிலும் கிடைக்கும்

இவை எல்லாமே ஆஹா 50 தான்!

தீராத ஒற்றைத் தலைவலியா? காய்ந்த வேப்பங்கொட்டையை, ஒரு துளி பால் விட்டு அரைத்து, பத்து போட்டால் பத்து நிமிடத்தில் தலைவலி பறந்துவிடும்.

- ரங்கநாயகி ரங்கராஜன், சென்னை

விளக்குக்குப் பஞ்சுத் திரி திரிக்கும் போது நம் விரல்களில் சிட்டிகை அளவு விபூதி தொட்டு பஞ்சைத் திரிக்கவும். திரி மெல்லிய இழையாக ஒன்றுகூடி வரும். திரியும் நன்றாக சுடர் விட்டு எரியும்!

- சுல்தானா, கீழக்கரை

முகத்தில் கரும் புள்ளிகள் இருந்தால் ஒரு டீஸ்பூன் ஓட்ஸ், இரண்டு டீஸ்பூன் பால் சேர்த்து நன்றாகக் கலக்கிப் பூசினால் கரும் புள்ளிகள் மறையும்.

- ஜெயலக்ஷ்மி, பெங்களூரு

சுாளான் வத்தல், வடாம்களைக் குழம்பு வகைகளுக்குத் தாளிக்கும்போது வறுத்துப் போடலாம். குழம்பு வித்தியாசமான சுவையோடு இருக்கும்.

- சரஸ்வதி, செகந்திராபாத்

விழாக் காலங்களில் பரிசளிக்க விரும்புபவர்கள், அடிகனமான தம்ளர்கள், கிண்ணங்கள், தட்டுகள் என்று அவரவர் வசதிக்கேற்ப செட்டாக பரிசளிக்கலாம். சிறு சிறு விசேஷங்களில் இவற்றில் பரிமாற வசதியாகவும், பார்க்க அழகாகவும் இருக்கும். பரிசு பெற்றவர்களும் மகிழ்வார்கள். **- இந்திராணி தங்கவேல், மும்பை**

பாகற்காய் கறி செய்து இறக்குமுன், நிலக்கடலையைப் பொடி செய்து கலந்து ஒரு கிளறு கிளறி இறக்கினால், சுவையாக இருக்கும். கசப்பும் இருக்காது.

- வசந்தா கோகுலம், சென்னை

நமது வீட்டில் பிறந்த நாள், திருமண நாள், திருமண விழா, புதுமனை புகுவிழா போன்றவற்றுக்கு வந்து கலந்து கொண்ட விருந்தினர்களுக்கு, விழா முடிந்த பின்னர் நன்றிக் கடிதம் எழுதி அனுப்பலாம். இதனால் உறவுகள் பலப்படும்.

- எஸ். உஷா சுதர்சன், திருச்செங்கோடு

மழை காலங்களில் வெளியில் அல்லது வெளியூர் செல்லும்போது டீ.வியில் செருகியிருக்கும் கேபிள் கனெக்ஷன் பின்னை எடுத்துவிட்டுச் செல்லவும். இடி, மின்னல் தாக்குதலில் டீ.வி பழுது அடையாமல் இருக்கும்.

- பி.ஜலஜா பாலசுப்ரமணியம், சின்ன காஞ்சிபுரம்



மக்காச் சோளத்தை ரவை போல உடைக்கவும். ஒரு பங்கு சோள ரவைக்கு அரைப் பங்கு உளுத்தம் பருப்பைச் சேர்த்து ஊற வைத்து அரைக்கவும். மறுநாள் கேரட், கோஸ் சேர்த்துத் தாளித்து இட்லி வார்த்தால், சுவையாக இருக்கும்.

- லக்ஷ்மி சந்தானம், திருச்சி



ஸ்ரீ வெங்கடாஜலபதி துணை

ஜெய் ஹோட்டல்ஸ் & டிராவல்ஸ் பிரைவேட் லிமிடெட்

4,3வது குறுக்குத் தெரு, விவேகாநந்தா நகர், புதுச்சேரி - 605005
போன் : 0413-2201552, 2201613, செல் :(o) 94432-52652
E-mail : jhat@sify.com & jhat@sancharnet.ina

07.08.10 இலங்கை சுற்றுலா 8 நாட்கள், ரூ.9000+120 அமெரிக்க டாலர்கள் (1டாலர் சுமார் ரூ.46)
22.08.10 சிங்கப்பூர், மலேசியா சுற்றுலா, 6 நாட்கள் ரூ.17,000+400 அமெரிக்க டாலர்கள்
06.09.10 நவ(பஞ்ச)துவாரகா, etc 12 நாட்கள் ரூ.9,000
06.09.10 நவ(பஞ்ச)துவாரகா, பத்ரி, கேதார் etc 20 நாட்கள் ரூ.14,000
06.09.10 நவ(பஞ்ச)துவாரகா, பத்ரி, கேதார்,அயோத்யா, முக்திநாத், பசுபதிநாத் காட்மாண்டு, etc. 29 நாட்கள் ரூ.28,500
14.09.10 பத்ரி, கேதார், etc 12 நாட்கள் ரூ.9,000/-
14.09.10 பத்ரி, கேதார், அயோத்யா, முக்திநாத், பசுபதிநாத், காட்மாண்டு, etc. 21 நாட்கள் ரூ.23,000
22.09.10 & 22.10.10 அயோத்யா, முக்திநாத், பசுபதிநாத், காட்மாண்டு, etc. 13 நாட்கள் ரூ. 18,000
22.10.10 அயோத்யா, முக்திநாத், பசுபதிநாத், காட்மாண்டு, காசி (தீபாவளி கங்காஸ்நானம், தங்க அன்ன பூரனி, லட்டு தேர்) etc 21 நாட்கள் ரூ. 23,000
25.09.10 & 25.10.10 முக்திநாத், பசுபதிநாத், காட்மாண்டு, etc. விமானம் மூலம் : 5நாட்கள் புறப்படும் இடங்கள் சென்னை, பெங்களூர், ஹைராபாத் மும்பை, டெல்லி Etc.
31.10.10 பூரி காசி (தீபாவளி கங்காஸ்நானம், தங்க அன்ன பூரனி, லட்டு தேர்) etc 12 நாட்கள் ரூ. 7,800

அனைத்து யாத்திரைகளிலும் விமானம் ரயில் (SL) போர்ட்டர் கூலி, பஸ்,டீலக்ஸ் வேன், சைவ உணவு, மினரல் வாட்டர், தனியாரை தங்கும் வசதி கட்டணத்தில்

நாராயணனுக்கு

ஆடல் அரசனான சிவனுக்கு சிதம்பரத்தில் நாட்டியாஞ்சலி நடப்பதைப் பார்த்திருக்கிறோம். ஆனால் ஸ்ரீமந் நாராயணனுக்கு நாட்டியாஞ்சலி பார்த்திருக்கிறோமா...? '108 திவ்ய தேச நாத நிருத்ய ஆராதனை' என்னும் பெயரில் திவ்ய தேசங்களில் ஆடி, பெரும் பாராட்டுகளைப் பெற்றிருக்கிறார் எத்திராஜ் கல்லூரி மாணவி சரண்யா சம்பத்!



'**கோ**யில், சாமி' என்றாலே, ''அய்யோ... எனக்கு அலர்ஜி!'' என்று ஓடிப் போகும், கல்லூரிப் பெண்களிடையே, சரண்யா சம்பத் வித்யாச மாணவர். இந்தியாவில் மட்டுமல்ல, நேபாளத்தில் உள்ள முக்திநாத்துக்கும் போய் பன்னிரு ஆழ்வார்கள் பாடிய 250 பாசுரங்களைத் தேர்ந்தெடுத்து, அவற்றுக்குரிய ஸ்தலங்களில் நாட்டியமாடி அசத்தியிருக்கிறார்.

''சிவராத்திரியை முன்னிட்டு வருடந் தோறும் சிதம்பரம், திருவாரூர், மகாபலிபுரம், திருவையாறு போன்ற ஊர்களில் நடக்கும் நாட்டியாஞ்சலிகளில் பங்கேற்று ஆடியுள்ளேன். நாலாயிர திவ்யப் பிரபந்தத்துக்கும் இசையமைத்து, நாட்டிய வடிவமைத்து, திருமாலுக்கு ஒரு நாட்டியாஞ்சலி சமர்ப்பிக்கலாமே என்று தோன்றியது. கடல் போன்ற 4000 தமிழ் பாசுரங்களில் எதை எடுப்பது என்ற பிரமிப்பே தோன்றியது. ஆழ்வார்களால் பாடப்பெற்ற 108 தலங்களை ஓர் அளவுகோலாகக் கொண்டு, ஒரு தலத்துக்கு இரண்டு தமிழ் பாசுரங்கள் வீதம் தேர்வு செய்து, இசையமைத்து, நாட்டிய வடிவமைத்து, குறுந்தகடாகத் தயாரித்தோம்.

''அதற்குப் பிறகுதான் பெரிய சவால் ஆரம்பித்தது. கோயில்களில் நாட்டியம் ஆட, அற நிலையத் துறையில் அனுமதி கேட்டோம். பல எதிர்ப்புகள்; பற்பல தடைகள்... கடவுள் அருளால், அரசு அதிகாரிகளின் ஒத்துழைப்பு கிடைத்தது. உலகிலேயே முதன்முறையாக, 20 வயதுக்குள் 106 திவ்ய தேசங்களில் ஆடிவிட்டேன். இந்த நில உலகில் காண இயலாத திருப்பாற்கடல், திருவைகுந்தம்

நாட்டியாஞ்சலி!



இரண்டுக்குமான பாசுரங்களையும், பூலோக வைகுண்டம் எனப்படும் திருவரங்கத்தில் 106வது நிகழ்ச்சியாக ஆடி, திட்டத்தை நிறைவு செய்தேன்!'' என்கிறார் சரண்யா சம்பத்.

அந்தப் பயண அனுபவங்கள் எப்படி இருந்தன?

'தில்லானா மோகனாம்பாள்' படத்தில் இடம் பெற்ற 'மறைந்திருந்தே பார்க்கும் மர்மமென்ன?' பாடல் காட்சியில் வருவது, மதுரை அழகர் கோயிலில் உள்ள மண்டபம்தான்! அதன்பின், அந்த நாட்டிய மண்டபம், தற்போதுதான் புதுப்பிக்கப்பட்டு, முதல் நிகழ்ச்சியாக எனது பாசுர அபிநயம் நடந்தது. அங்கு காலணிகளைப் பாதுகாக்கும் எட்டு வயதுச் சிறுவன், ''அக்கா, ரொம்ப நல்லா ஆடினீங்க. உங்களுக்கு ஏதாவது தரணும்னு ஆசையா இருக்குக்கா!'' என்று ஒரு வேர்க்கடலைப் பொட்டலத்தை நீட்டியபோது, என்னோட நாட்டியத்துக்குக் கிடைச்ச பெரிய பரிசாகத் தோன்றியது.

பத்ரிநாத்தில் ஆட முதலில் எங்களுக்கு அனுமதி கிடைக்கவில்லை. இராணுவத்தினரிடம் கடுமையாகப் போராடி அனுமதி பெற்றோம். வெட வெடக்கும் குளிரில் ஐஸ்கட்டி போன்ற தரையில் வெறும் காலில் நான் ஆடியதைப் பார்த்து, ராணுவத்தினரே மிகவும் மகிழ்ந்து, பின்னர் அவர்களே என்னுடன் சேர்ந்து புகைப்படம் எடுத்துக்கொண்டனர்.

தேவப் பிரயாகையில் கர்ப்பகிருக கதவுகளைச் சாத்திய பின்னர் என்னை ஆட அனுமதித்தனர். பாதி நடனம் முடிந்த நிலையில், ''ஸாரி... நாங்க தவறு செஞ்சுட்டோம். இவ்வளவு அற்புதமான நாட்டியத்தைக் கட்டாயம் இறைவன் முன் ஆட வேண்டும்!'' என்று சன்னிதியின் கதவுகளைத் திறந்துவிட்டனர்.

இமயமலையின் மற்றொரு பகுதியில்

* ராணுவப் பெண்களுடன்...



அமைந்துள்ள பத்ரிநாத்தில் தமிழ் பாசு ரங்கள் முழங்கியபோது, உணர்ச்சி வசப்பட்டு கண்ணீர் மல்கினோம். 'ஜாம்லோம்' ஏர்போர்ட்டில் இறங்கி, நாட்டிய உடை அலங்காரத்துடன் கடுங்குளிரில் கரடுமுரடான மலைப் பாதையில் நடந்து கோயிலை அடைந்தபோது, அப்படியே மயங்கி விழுந்துவிட்டேன். அப்புறம் எப் படியோ சமாளித்துக் கொண்டு, இறைவனைத் தரிசித்து, நாட்டியமாடி பிறவிப் பயன் அடைந்தேன்!'' என்னும் சரண்யா சம்பதுக்கு பல துறைகளில் ஆர்வம் இருக்கிறது. வீணை வாசிக்கறார். தஞ்சாவூர் ஓவியத்தில் ஸ்பெஷலிஸ்ட். வாலிபால், த்ரோ பால் விளையாட்டுகளில் நிறைய பதக்கங்களை வாங்கி, சிறந்த விளையாட்டு வீராங்கனை விருதும் வாங்கியுள்ளார்.

''என்னுடைய அப்பா சம்பத், வங்கி மேலாளராகப் பணி புரிந்து ஓய்வு பெற் றவர். தாயார் பத்மா, அரசு அதிகாரி. இவர்களுடன் என்னுடைய அண்ணா, சித்தி, சித்தப்பாவும் உதவியதால்தான் 106 தேசங்களுக்கும் திட்டமிட்டுப் பயணம் செய்ய முடிந்தது. அம்மா பாடுவார். ஜதி சொல்வார். சித்தி உணவு, உடை, அலங் காரம் பார்த்துக் கொள்வார். அண்ணா பயணத் திட்டம் வகுப்பான். வண்டி ஓட் டுவான். அப்பா, வீடியோ, ஃபோட்டோ எடுப்பார். இவர்கள் எல்லோருடைய ஒத்துழைப்பும் உற்சாகமும்தான் என்னை ஓயாமல் ஊக்கப்படுத்தியது!'' என்கிறார்.

இவரது முதல் குருவான பத்மா சுப்ரமணியத்துக்கும் சுஜாதா மோகனுக்கும் இவரது கின்னஸ் சாதனை முயற்சிகளில் ஒரே பெருமையாம்!



* ஜீயர் ஆசீர்வாதம்...

'ராமானுஜ பாதுகாஸேவக்', 'யுவஸ்ரீ கலா பாரதி', 'ஹம்ஸா அவார்ட் ஆஃப் எக்ஸ்லன்ஸ்' போன்ற பட்டங்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ள, இவரது வருங் கால ஆசை என்னத் தெரியுமா?

''திவ்ய பிரபந்த பாசுரங்கள் நாலாயிரத் துக்குமே இசையமைத்து, நாட்டியம் ஆட வேண்டும்' என்பதே!

நாலாயிரமும் வைரமாக மின்னட்டும் சரண்யா!

– மங்களேஸ்வரி

படம்: ஸ்ரீஹரி

SRI VENKATESWARA MONTESSORI / KINDERGARTEN TEACHERS TRAINING SCHOOL

H.O.: A. T.Nagar Annexe, (Virugambakkam), Chennai - 600 087. (AMS Syllabus) (Regd). PH: 044-23771088, 32991088

Cell: 94442 07508, 98415 90855 | Web: www.svm.co.in | E.Mail: vijinatrajan902@hotmail.com

Attention : 8th / 10th / +2 / Graduates / House Wives / Teachers



FIRST TIME IN INDIA • GOVT. OF INDIA RECOGNIZED

Certificate Courses in

Play School Management / Creche Management - Personality Development & Communication skills / Computer Applications / Handicrafts - Duration 3 Months

100% JOB ORIENTED

MONTESSORI / KG COURSE OFFERED:

Diploma in Montessori - 6 Months
Advance Diploma in Montessori - 1 Year

Regular / Postal - English / Tamil

B.Ed., : REGULAR - 1 YEAR / POSTAL - 2 YEARS

BRANCHES:

At Chennai:
Virugambakkam, T.Nagar, Perambur, Ambattur, Guindy, & Madavakkam - 94442 07508
Tambaram - 99401 92297
Anna Nagar - 97104 17883
Vyasarpadi - 99402 81098
Thirumullaivoyal - 94440 77885

At Other Districts (TN):
Chengalpet - 99945 80132
Vellore - 94433 20177
Madurai - 98428 92341
Coimbatore - 93632 62325, 93629 26457
Salem - 98656 11131, 94438 45535, 233 2280
Tirupur - 99605 12529, 95001 32211

AT KERALA:
Palakkad - 98475 33715
Trivandrum - 94465 66107

AT AP: Vizag - 92471 50830
Hyderabad - 98481 47188

AT KARNATAKA
Bangalore - 96112 34254

West Bengal - 99323 16731
AT ANDAMAN - 99332 05775
AT DUBAI - 971501520110

ADMISSION OPEN

FRANCHISEE INVITED

India's New and FASTEST Growing Pre-School Chain

FEATURES

- Montessori / KG / Gurukulam (vedic) - Integrated Curriculum
- Playschool Management Certificate (Govt. of India Regd.) issued
- HIGH in value, LOW in budget 100% support with trained faculties

THULIR
துளிர்
(AMS SYLLABUS) (Regd)

FRANCHISEE INVITED

காபி, டிபன், சைவ உணவு, தங்குமிடம் உள்பட

காசி - கல்கத்தா - திரிவேணி ★ பூரி - புவனேஸ்வரம் - கயா - புத்தகயா 20-8-10, 23-9-10 முதல் 10 நாட்கள் ரூ. 4990. இத்துடன் டெல்லி - ஹரித்துவார் - ரிஷிகேஷ் - அமிர்தசரஸ் சேர்த்து 16 நாட்கள் ரூ 8990.

காசி - கேதார்நாத் - பத்ரிநாத் ★ காசி - திரிவேணி - ஹரித்துவார் - ரிஷிகேஷ் - பத்ரிநாத் - கேதார்நாத் - டெல்லி - ஆக்ரா - மதுரா 24-8-10 முதல் 14 நாட்கள் ரூ. 7990

காசி - கேதார்நாத் - பத்ரிநாத் ★ பூரி - கோனார்க் - புவனேஸ்வரம் - கல்கத்தா - கயா - புத்தகயா - ஹரித்துவார் - ரிஷிகேசம் - பத்ரிநாத் - கேதார்நாத் - டில்லி - ஆக்ரா - மதுரா 23-9-10 முதல் 18 நாட்கள் ரூ. 9990

காசி - விமான சுற்றுலா ★ காசி - அலகாபாத் - கயா - புத்தகயா 21-8-10, 23-9-10, 3-11-10 முதல் 5 நாட்கள் ரூ.20000 இத்துடன் டெல்லி - ஆக்ரா - மதுரா பார்த்து வர 7 நாட்கள் ரூ.25000 3-11-10 அன்று புறப்படுவது தீபாவளி கங்காஸ்நானம்

காசி - தீபாவளி கங்காஸ்நானம் - லட்டு தேர்- மிட்டாய் திருவிழா ★ பூரி - புவனேஸ்வரம் - கயா - புத்தகயா 31-10-10 முதல் 10 நாட்கள் ரூ. 4990. இத்துடன் டெல்லி - ஹரித்துவார் - ரிஷிகேஷ் - அமிர்தசரஸ் பார்த்துவர 16 நாட்கள் ரூ. 8990

நவஜோதிர்லிங்கம் - பஞ்ச துவாரகை
★ 4-12-10 முதல் 23 நாட்கள் ரூ. 11990

காசி விமான சுற்றுலாவில் 10-8-2010ம் தேதிக்குள் முன்பணம் செலுத்துபவர்களுக்கு 5% டிஸ்கவுண்ட் உண்டு.

குமரன் டிராவல்ஸ்

20, வடக்கு சித்திரை வீதி, மதுரை-1. போன் : 2621519, 4231519, 98423-52105
கிளைகள் P.V.T. ஷாப்பிங் காம்ப்ளக்ஸ், 22, ரெங்கநாதன் தெரு, சென்னை - 17. போன் : 42867203 செல் : 98403-92105
முதல்மாடி, காஞ்சனா டவர்ஸ், மத்திய பஸ் ஸ்டாண்ட் அருகில், திருச்சி-1. ☎ 0431-2413456
பேக்ஸ் : 4002638 செல் : 93451-20497

நீங்க வடிவேலுவிடம்



மு.ரா.பாலாஜி,
சொர்ணாகுப்பம்

அழகு, அறிவு, திறமை எது அதிகம் கூடாது பெண்களுக்கு?

எல்லாமே நிறைந்து இருக்கலாம். தப்பில்லை! ஆனால் முன்னது கொஞ்சம் டேஞ்சர். அழகான பெண்ணும், கிழிசல் உள்ள நீண்ட அங்கியும், ஏதாவது ஒரு கொக்கியில் மாட்டிக் கொள்ளும்!



ஆர்.சிங்காரவேலன்,
திருவிடைமருதூர்


பறவை, விலங்குகளிடம் உங்களுக்கு மிகவும் பிடித்த குணம் என்ன?

அவை வெடிகுண்டு வைப்பதில்லை.

ராதா, ஹைதராபாத் -80

சமீபத்தில் என் அக்கா காலமானார். இறுதிச்சடங்கு நடத்த வந்திருந்திருந்த சாஸ்திரிகள், ''உடல் உறுப்புகளை தானம் செய்வது சாஸ்திரத்துக்கு விரோதமானது என்றும், அப்படி தானம் செய்தால் அடுத்த பிறவியில் அந்த உறுப்பு குறை பாட்டுடன் பிறக்க நேரிடும் என்றும் கூறினார். என் மனத்தைக் குடைந்துக் கொண்டிருக்கும் இது பற்றி உங்கள் கருத்து என்ன?

சாஸ்திரங்கள் எல்லாமே நம்மைப் போன்ற மனிதர்களால் வெவ்வேறு காலக் கட்டங்களில் உருவாக்கப்பட்டவை. மிகவும் பிற்போக்குத்தனமான, விநோதமான சாஸ்திரங்கள் தாமாகவே அழிந்துவிடும். இதுபோன்ற காலத்துக்கு ஒவ்வாத நம்பிக்கைகளைச் சட்டையே செய்யக்கூடாது.



அனுஷா நடராஜன்

அன்பு வட்டம்!

ரசிகையா?



உடல் உறுப்புகளைத் தானம் செய்பவர், மறு ஜென்மத்தில் மிக அழகான, ஆரோக்கியமான, வடிவான உடலைப் பெற்றுத் திகழ்வார்கள் என்றுதான் சொல்லப்பட வேண்டும். முடிஞ்சா நல்ல காரியத்தைச் செய்யுங்க. முடியாட்டி, முட்டுக்கட்டை போடாமலாவது இருங்க.

சத்தியநாராயணன், அயன்புரம்

உங்க மேஜையில் யாருடைய உபதேசம் இடம் பெற்றுள்ளது...?

நம்ப செஸ்டர் ஃபீல்டு அண்ணாத்தே உடையது. 'நாளை வாழ்வேன் என்று கூறுபவன் அறிவிலி... இன்று வாழ எண்ணுவதுகூட காலம் கடந்த சிந்தனையே. நேற்றே வாழத் தொடங்கியவன்தான் புத்திசாலி!'





எஸ். விஜயராணி, ஓசூர் - 2

நான் எல்லோரிடமும் தாராளமாகவும், பெருந்தன்மையாகவும் நடந்து கொள்கிறேன். ஆனால், அவர்கள் அப்படி நடந்து கொள்ளாதபோது, மனம் காயப்படுகிறது. இது நிகழாமல், இருக்க என்ன செய்யணும் அனுஷா?

எனக்குத் தெரிந்தவழி, மனிதர்களிடமிருந்து கொஞ்சமாகவும், இறைவனிடமிருந்து அதிகமாகவும் எதிர்பார்ப்பது ஒன்றேதான்!

கோமளா ரங்கநாதன், சென்னை - 17

காதல் மணம் புரிந்தவர்கள் கஷ்டப் படுவது ஏன்?

காதல் மணம் புரிந்தவர்கள் கஷ்டப்பட மாட்டார்கள். கவர்ச்சி மணம் புரிந்தவர்கள்தான் கஷ்டப்படுவார்கள்.

நளினி ராமச்சந்திரன், கோவை

சமீபத்தில் உங்களை மிகவும் சிந்திக்க வைத்தது யார்?

கிண்டியில் நான் பார்த்த ஆட்டோதான். அந்த ஆட்டோவின் பின்புறமிருந்த வாசகம். *'அப்பா... குடிக்காம வாங்க ப்ளீஸ்!'* அன்று முழுக்க முகம் தெரியாத ஒரு பெண் குழந்தையின் கலங்கிய விழிகள் என்னைத் துரத்திக் கொண்டேயிருந்தன.

ராதா வாசுதேவன், திருச்சி

முன்பெல்லாம் முதிர் கன்னிகள் அதிகம் இருந்தனர். இப்போது முதிர் கண்ணன்கள் அதிகமாகிவிட்டனரே!

யானைக்கொருகாலம்! பூனைக்கொரு...

பகவதி பிரவீன், சென்னை-33

உங்களைக் கவர்ந்த டீ.வி விளம்பரம் எது?

வயதான பாட்டி ஒருவர் வடாமிட்டிருக்க, அதைச் சுற்றி காக்கைகள் பறந்து கொண்டிருக்கும். விரட்ட முயலும் பாட்டியின் சிரமத்தைச் சகிக்க முடியாத குட்டிப் பேரன், "ஒரு நிமிஷம்" என்று சொல்லிய படியே, அப்பாவின் சட்டையை மாட்டிக்கொண்டு, திருஷ்டி பொம்மையாக வேஷமிட்டு நிற்பான். காக்கைகள் பயந்து காணாமல் போகும். பேரனின் அன்பையும் சமயோசிதத்தையும் பார்த்து, பாட்டி நெகிழ்ந்து நிற்க, "அர்ஜுன்!" என்று அவனது அப்பா குரல் கொடுப்பார். பேரப் பயல் திட்டு விழுமே என்று பயந்து நிற்க, பாட்டியோ, "ஒரு நிமிஷம்!" என்று குரல் கொடுத்தபடியே, சட்டையைத் துவைப் பார்... அந்தச் சுட்டிப் பயலின் முக பாவமும், நடிப்பும், பிரமாதம்! பாட்டி - பேரன் பாசத்தை இயல்பாகக் காட்டிய இதுபோன்ற விளம்பரங்கள் தற்போதைய சமூக நிலவரத்துக்குத் தேவை!

கே. கணேசன், தூத்துக்குடி

வாழ்க்கை என்பது மலரானால், காதல் என்பது அதன் நிறமா? மணமா?

அதில் ஊறும் தேன்!

கே.எஸ்.சுபாக்கனி, மேலகிருஷ்ணன்புதூர்

உலகக் கால் பந்துப் போட்டியில் நீங்க ரசித்தது?

ஷகிரா, வாண வேடிக்கை, ஆருடத் திலகம் ஆக்டோபஸ் பால்!

எஸ். கிருத்திகா செல்வன், பூனாம்பாளையம்

நீங்க வடிவேலுவின் ரசிகையா? உங்க பதில்களில் அவரோட சாயல் தெரியுதே!

வைட்டா!





லலிதா சகஸ்ரநாமத்தில் அம்பிகை, தாம்பூலப்பிரியை என அழைக்கப்படுகிறாள். குங்குமப் பூ, பச்சைக் கற்பூரம், கிராம்பு, ஏலம் கலந்த தாம்பூலம் தயாரித்துதான் அம்பிகைக்குப் படைக்க வேண்டுமென ஸ்ரீவித்யையில் குறிப்பு இருக்கிறது.

- அ. யாழினி பர்வதம், சென்னை



ஜோக்ஸ்

''எங்க ஊர்ல பவர்கட். அதான் ஜே.ஈ.யிடம் புகார் தர வந்திருக்கோம். அவர் எங்கே சார்?''

''இங்கேயும் பவர் கட் ஆனதால உள்ளே உட்கார முடியாம, மரத்தடி நிழல்ல இருக்காரு பாருங்க!''

- அமுதா, திருச்சி

''தலைவருக்கு நாலு பேருக்கு முன்னால எப்படிப் பேசணும்னே தெரியலை...''

''அப்படின்னா அவர் கூட்டத்துக்கு நாலு பேர்தான் வந்தாங்கன்னு சொல்லுங்க.''

- எம்.அசோக்ராஜா, அரவக்குறிச்சிப்பட்டி

''என்னப்பா இது, புதுசா காலிங்பெல்ல கொண்டு வந்து தர்றே?''

''ஆமா, தாயீ... இதை வீட்ல பொருத்தி வைங்க. நான் வந்து சுவிட்ச் அழுத்தினா 'அம்மா தாயே'னு கத்தும்!''

-ஆர்.ஜெவிந்த், காயக்காடு

''லேடி கான்ஸ்டபிளை மருமகளாக்கினது தப்பா போச்சு...''

''ஏன் என்னாச்சு?''

''குடும்பச் சண்டைக்குக்கூட கண்ணீர் புகை குண்டு போடுவேன்னு மிரட்டுறா...''

-பாலாஜி கணேஷ், கோவிலாம்பூண்டி

''நூறு வகை தோசைகள்னு ரெஸிபி எழுதியிருக்கியே, எப்படி உன்னால முடிஞ்சது?''

''எல்லாமே 'சுட்டது'தான்!''

- எஸ். மீனலோசினி, திருத்தாங்கல்

சும்மா சிரியுங்க!

கலைஞரின் ஆசி



தொழிற்சங்க தலைவரும், உழைக்கும் மக்களுக்காக வழக்காடும் உயர்நீதிமன்ற வழக்கறிஞரு மான முத்துவாகிய எனக்கு 64 வயது ஆகிறது. 2007ல் திடீரென்று ஒரு நாள் நெஞ்சுவலி ஏற்பட்டு தனியார் மருத்துவமனை யில் சேர்க்கப்பட்டேன். என்னை பரிசோதித்த மருத்துவர், ஆஞ்சியோ கிராம் எடுத்து, என்னுடைய இதயத்தின் இரத்த குழாய்களில் 9 இடங்களில் அடைப்பு உள்ள தாகவும், உடனடியாக ஆப்ரேஷன் செய்ய வேண்டும் என்றும் கூறினார்.

சர்ஜரி செய்து கொள்ள விருப்ப மில்லாத நான் அதற்கு ஏதேனும் மாற்று வழி உள்ளதா என விசாரித்துக் கொண்டிருந்த நிலையில் ''பைபாஸ் ஆப்ரேஷன் இல்லாமல் அடைப்புகள் நீக்கப்படும்'' என்ற செய்தியை நாளிதழில் கண்டு சென்னை – நந்தனம் ஆக்ஸிமெட் மருத்துவ மனைக்குச் சென்றேன். அம்மருத்துவமனையின் தலைமை மருத்துவரான டாக்டர் அயாஸ் அக்பர் அவர்களை சந்தித்தேன்.

டாக்டரின் அறிவுரைப்படி, 35 நாட்கள் மருத்துவமனையில் தங்கும் அவதியில்லாமல் சிகிச்சை எடுத்துக் கொண்டேன். சிகிச்சையின் முடிவில் எனது இரத்தக் குழாய் அடைப்புகள் அனைத்தும் நீக்கப் பட்டு வேகமாக நடக்கவும், பேசவும் செய்கிறேன். மேலும் எனது வழக்கறிஞர் தொழிலை சிறப்பாகவும் செய்து வருகிறேன்.

என்னை பூரண குண மடையச் செய்த டாக்டர் அயாஸ் அக்பர் அவர்களுக்கும் மற்றும் மருத்துவ மனையில் பணியாற்றும் அனை வருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

2007ல் – நான் எடுத்து கொண்ட சிகிச்சைக்குப் பிறகு இன்று வரை 3 மாதங்களுக்கு ஒரு முறை மருத்துவ மனை சென்று பரிசோதித்து வருகிறேன். நான் மிகவும் ஆரோக்கிய மாகவும், சுறுசுறுப்பாகவும் இருப்பதை உணர்கிறேன்.


நான் எடுத்த இந்த சிகிச்சையை என் நண்பர்களுக்கும், உறவினர் களுக்கும் பரிந்துரைத்து, அவர்களும் பயனடைந்துள்ளனர்.

மேலும் நியூயார்க் மாநாட்டில், அறுவை சிகிச்சையில்லாமல் பல நோயாளிகளுக்கு சிறப்பான சிகிச்சை அளித்து வருவதற்கான விருதினை டாக்டர் அயாஸ் அக்பர் பெற்றுள்ளார் என்பதை நினைத்துப் பெருமை

பெற்ற மருத்துவமனை

படுகிறேன்.

அறுவை சிகிச்சை அற்ற மருத்துவம் அளிப்பதில் ஆக்ஸிமெட் மருத்துவமனை உலகத்திலேயே 2வது இடத்தில் இருப்பது பாராட்டுதற்குரியதாகும்.



முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள், தமிழ்நாடு அரசு ஊழியர்களுக்கு இந்த அறுவை சிகிச்சையற்ற மருத்துவத்தை அளிக்க அங்கீகரித்துள்ளார்.

சிறந்த மருத்துவ சேவை செய்யும் மருத்துவர் என கலைஞர் அவர்களால் பாராட்டப்பட்ட டாக்டர் அயாஸ் அக்பர் அவர்களிடம் சிகிச்சை எடுத்துக் கொண்டதை நினைத்து பெருமைப் படுகிறேன்.

மேலும் நான் பெற்ற இந்த சிறந்த சிகிச்சையை அனைவரும் பெற்று குணமடைய வேண்டும் என்ற எண்ணத்தில் என் தொலைபேசி எண்ணை இங்கு கொடுத்துள்ளேன்.

9444124262

மேலும் விவரங்களுக்கு

OXYMED HOSPITALS
PRIVATE LIMITED
CLOSE TO YOUR HEART
786, Anna Salai, Ch-35. Ph : 044-42131010 / 1014
E-mail : oxymedhospitals@yahoo.com
Website : www.oxymedhospital.in

advt.

உலகத் தாய்ப்பால் வாரம் ஆகஸ்டு ஒன்று முதல் ஏழு வரை அனுசரிக்கப்படுகிறது. திருஞானசம்பந்தருக்கு உமையம்மையே வந்து, ஞானப்பால் அளித்த கலாசாரம் மிக்க தமிழ்நாட்டில்கூட தாய்ப்பால் அளிப்பதை ஊக்குவிக்க வேண்டியது காலத்தின் கட்டாயம்.



டாபிகல்

மருத்துவர் நா.கங்கா

குழந்தை நேயமும் 10

ஒவ்வொரு வருடமும் தாய்ப்பால் வாரத்துக்காக ஒரு மையக் கருத்து அறிவிக்கப்பட்டு அதன் அடிப்படையில் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன. 'தாய்ப்பால் ஊட்ட, பத்து வரைமுறைகள் - குழந்தை நேயமான வழி (Breastfeeding - Just 10 ways - baby friendly way) என்பது இந்த வருடத்தின் கருத்து!

கீழே உள்ள இவை யாவும் மருத்துவர்கள், மருத்துவப் பணியாளர்கள், மருத்துவமனைகள் செயல்படுத்த வேண்டிய வழிமுறைகள். ஒரு சில விதிமுறைகள் மட்டும் பெண்கள் கடைப்பிடிக்க வேண்டியவை.

1. ஒவ்வொரு மருத்துவமனைக்கும் பொருந்தக் கூடிய தாய்ப்பால் ஊட்டும் கொள்கை எழுதப்பட்டு, அனைத்துப் பணியாளர்களும் அதைப் புரிந்து கொண்டு செயல்படுத்த வேண்டும்.

2. மருத்துவமனை பணியாளர்கள் யாவருக்கும் தாய்ப்பால் ஊட்டுவதை ஊக்குவிக்கத் தேவையான அறிவியல் நுட்பங்கள் தெரிந்திருக்க வேண்டும்.

3. மருத்துவமனைக்கு வரும் கர்ப்பிணிகள் யாவருக்கும் தாய்ப்பால் அளிப்பதன் நன்மைகளை விளக்க வேண்டும்.

4. குழந்தை பிறந்த அரைமணி நேரத்தில் தாய்ப்பால் ஊட்ட ஆரம்பிக்க, தாய்க்கு உதவ வேண்டும்.

5. தாய்ப்பால் ஊட்டுவதன் நுணுக்கங்களைத் தாய்க்குப் புரிய வைக்க வேண்டும். தவிர்க்க முடியாத காரணத்தால் குழந்தையும் தாயும் பிரிந்து இருக்க நேர்ந்தாலும், தாய்ப்பால் தொடர்ந்து சுரப்பதற்கு தாய்க்கு உதவ வேண்டும்.

6. சிசுக்களுக்கு தாய்ப்பால் தவிர வேறு எதுவும் தரக்கூடாது.

7. தாயும் சேயும் இருபத்து மணி நேரமும் ஒன்றாக இருக்க உதவ வேண்டும்.

8. சிசுவுக்குத் தேவைப்படும்போதெல்லாம் தாய்ப்பால் தொடர்ந்து அளிக்க வேண்டும்.

9. ஊட்டி, ரப்பர், பாட்டில் எதும் சிசுவுக்குத் தரக்கூடாது.

10. தாய்ப்பால் ஊட்டும் தாய்மார்களுக்கு உதவும் குழுக்கள் (Support Group) மருத்துவமனையிலும், அவர்கள் இருப்பிடத்துக்கு அருகிலும் ஏற்படுத்தித் தர வேண்டும்.

இந்தப் பத்துக் கட்டளைகளை அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகள் செயல்படுத்தினால்,



யாராவது எதையாவது சொன்னா. அதுக்கு மாற்றுக் கருத்து இருந்தால்தான் விவாதம் சூடுபறக்கும். சிந்தனைகள் சிறக்கும். நீங்களும் கலந்துக்குங்களேன்...

ஏட்டிக்குப் போட்டி!

இரவுப் பணிக்குச் செல்வது பெண்களுக்கு



பயனா? பாதிப்பா?

இந்தத் தலைப்பில் ஏதாவது ஒரு அணியின் சார்பாகத் தோன்றும் கருத்துகளைப் பத்து வரிகளுக்கு மிகாமல் அஞ்சலட்டையில் மட்டுமே தெளிவா எழுதி அனுப்புங்க.

நடுவர் : ஓவியர் அரஸ்

கடைசித் தேதி : 15.8.2010

அவை குழந்தை நேய மருத்துவமனைகளாகத் திகழும்; பாராட்டப்படும். குழந்தைகளின் எதிர்கால நல்வாழ்விற்கு இந்தப் பத்து கட்டளைகளும் சிறந்த வலுவான அடித்தளத்தை ஏற்படுத்தும்.

தாய்ப்பால் என்பது குழந்தையின் வயிற்றுக்கு மட்டும் உணவு அல்ல; வளரத் துடிக்கும் சிசுவின் உணர்வுகளுக்கும்

கட்டளைகளும்!



உணவு (emotional food). குழந்தையை மார்போடு அணைத்து, அதன் தலையை வருடித் தாய்ப்பால் ஊட்டும்போது குழந்தைக்குக் கிடைக்கும் பாசம், அன்பு, அரவணைப்பு, பாதுகாப்பு போன்றவை குழந்தையின் திடமான மனவளர்ச்சிக்கு உதவுகின்றன.

தாய்மார்கள் குழந்தை நேய மருத்துவமனைகளை மட்டுமே நாட வேண்டும்.

தாய்ப்பால் குழந்தைகளின் உரிமை!

அதைத் தருவது அன்னையின் பெருமை!

இதை நிலை நாட்டுவது மருத்துவ உலகின் மாபெரும் கடமை!

1200-க்கும் மேற்பட்ட மகிழ்

குடும்பங்கள் எடுத்த லாபகரம

ஸ்ரீ வத்ஸா இல்லத்தில் மு



தடாகம் ரோடு, அவிலா கான்வென்ட் அருகில், கோயமுத்தூர்

கட்டுமானத் துறையில் முன்னணி நிறுவனமான
ஸ்ரீ வத்ஸாவின் மற்றொரு படைப்பு

ஸ்ரீ வத்ஸா இல்லங்களில் முதலீடு செய்த 1200-க்கும் மேற்பட்ட வாடிக்கையாளர்கள் தங்களது முதலீட்டின் மதிப்புயர்வு மற்றும் அவற்றால் மன நிறைவு அடைந்துள்ளனர். ஸ்ரீ வத்ஸாவின் முதல் திட்டமான ஸ்ரீ வத்ஸா கார்டன்ஸிலிருந்து சமீபத்தில் உருவான ஸ்ரீ வத்ஸா தர்ஷன் வரை ஸ்ரீ வத்ஸா இல்லத்தில் முதலீடு செய்த அனைத்து வாடிக்கையாளர்களும் அந்த திட்டம் முடிவடைவதற்குள் தங்கள் முதலீட்டில் சுமார் 70%-த்திற்கும் மேல் மதிப்புயர்வை பெற்றுள்ளனர்.

கல்வி, டெக்ஸ்டைல்ஸ், மரு
என்ற பல துறைகளிலும்
துறையும் விரைவான வளர்ச்

புகழ்மிக்க பள்ளிகள், ப
பல்பொருள் அங்காடிகள்
ஸ்ரீ வத்ஸா பிளாட்டுகளை
ஸ்ரீ வத்ஸா வாடிக்கையாளர்
தக்க முதலீடு செய்யுங்கள்.

Architects : M/s. Sankar & Associates. Electrical Consultant

ஸ்ரீவத்ஸா ரியல் எஸ்டேட்ஸ்

8/2, மேட்டுப்பாளையம் ரோடு, கோயமுத்தூர் - 641 043.
போன் : 0422 - 2437422 / 2441481 / 2432184 / 2432042 Fax : 0422
E-mail : realestate@sreevatsa.com Website : www.sreevatsa.com

கரமான

முழிவு !

வீடு !

72
LUXURY
2 & 3 BR.
APARTMENTS

2BR - 1275 Sq.ft at
Rs.42.50 lakhs

3BR - 1785 Sq.ft at
Rs.59.00 lakhs

Registration Charges extra.

43 Flats Booked already

பொறியியல் தொழிற்சாலைகள், IT
ரும் கோவையில் ரியல் எஸ்டேட்
டைந்து வருகிறது.
ழகங்கள், மருத்துவமனைகள்,
களுக்கு அருகே உருவாகி வரும்
கு ஏற்றதாக உருவாகி வருகிறது.
ட்டு அதன் சிறப்பறிந்து நீங்களும்

இப்பொழுது ஒரு
இல்லத்தை உங்கள் வசமாக்கிட
ஓர் வாய்ப்பு

Sreevatsa Platinum

COIMBATORE

Building on the Foundation of your Trust

சிறப்பம்சங்கள்

- கிளப் ஹவுஸ்
- பூங்கா மற்றும் குழந்தைகள் விளையாட்டு தளம்
- பைப்டு கேஸ் சப்ளை
- போர்வெல் தண்ணீருக்கு R.O. Plant
- ஹைட்ரோ நியூமேட்டிக் பம்பிங் சிஸ்டம்
- சூவேஜ் டிரீட்மெண்ட் பிளாண்ட்

முழு வீச்சில் நடைபெற்றுக்
கொண்டிருக்கும் கட்டுமானப் பணி
ஆகஸ்ட் 2011-ல் முடிவடையும்.

.P. Subramaniam. Legal Consultant : Mr. P.R. Ramakrishnan.

. லிட்.,

899 செல் : 94433 41901, 94430 21990

Member of

CREDAI
Confederation of Real Estate Developers' Associations of India
Coimbatore

TÜV CERT
ISO 9001 : 2008
Certificate
TÜV NORD

ரேஷன் கார்டு குறித்து நம் 'கல்கி' நிறுவன ஊழியர்களுக்குத்தான் எத்தனை விதமான சந்தேகங்கள்! அவற்றை சேகரித்து எடுத்துக்கொண்டு, சென்னை எழிலகத்தில் இருக்கும், தமிழக அரசின் உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் அலுவலகத்துக்கு சென்றோம்! இணை ஆணையர் சி.என்.மகேஸ்வரனைச் சந்தித்தோம். நம் அத்தனை கேள்விகளுக்கும் பொறுமையாக விளக்கமளித்தார்.



● சி.என்.மகேஸ்வரன்

ரேஷன் கார்டு

புதிய குடும்ப அட்டை பெறுவது எப்படி?

புதிய குடும்ப அட்டை பெற விண்ணப்பிப்பவர் மற்றும் அவரது குடும்பத்திளர் இந்தியக் குடியுரிமை பெற்றவர்களாகவும், தமிழகத்தில் வசிப்பவர்களாகவும் இருக்க வேண்டும். தவிர, விண்ணப்பதாரர் மற்றும் அவரது குடும்ப உறுப்பினர்களுக்கென்று வசிக்க ஓர் அறையும், தனியாக ஒரு சமையல் அடுப்பும் இருக்க வேண்டும். விண்ணப்பதாரர் மற்றும் அவரது குடும்ப உறுப்பினர்களுக்கு இந்தியாவின் வேறு எந்த மாநிலத்திலும் குடும்ப அட்டை இருக்கக் கூடாது.

குடும்ப அட்டை பெறத் தகுதியானவர்கள், அதற்கென்று இருக்கும் விண்ணப்பத்தைப் பயன்படுத்தி விண்ணப்பிக்க வேண்டும். இந்த விண்ணப்பம் தமிழிலும், ஆங்கிலத்திலும் கிடைக்கிறது. தாசில்தாரர் அலுவலகங்களில் இந்த விண்ணப்பம் கிடைக்கும். www.consumer.tn.gov.in என்ற இணைய தளத்திலிருந்தும் டவுன்லோடு செய்து கொள்ளலாம்.

எப்படி விண்ணப்பிக்கலாம்?

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளைப் பொருத்தவரை பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை, அதனுடன் இணைக்க வேண்டிய ஆவணங்களை இணைத்து விண்ணப்பதாரர் வசிக்கும் பகுதிக்குரிய உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் மண்டல உதவி ஆணையாளர் அலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும். கோயமுத்தூர் நகரைப் பொருத்தவரை விண்ணப்பங்களை உதவிப் பங்கீட்டு அலுவலரிடம் சமர்ப்பிக்கலாம். மற்ற மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் தாங்கள் வசிக்கும் பகுதிக்குரிய வட்ட



யாரை, எங்கே, எப்படி?

வழங்கல் அதிகாரிகளிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

விண்ணப்பதாரர்கள் தங்கள் குடும்ப அட்டைக்கான விண்ணப்பங்களை சமர்ப்பிக்கும்போது சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடமிருந்து விண்ணப்பத்தைப் பெற்றுக் கொண்டதற்கான அக்னாலட்ஜ்மெண்ட் பெற்றுக் கொள்ள வேண்டியது அவசியம்.



பெறுவது எப்படி?

மேலும் அந்த அக்னாலட்ஜ்மெண்ட்டில் பதிவு எண், விண்ணப்பதாரரது பெயர் மற்றும் முகவரி, விண்ணப்பத்தைப் பெற்றுக் கொண்ட நாள் ஆகிய தகவல்கள் இடம் பெற்றுள்ளனவா என்று உறுதி செய்து கொள்ள வேண்டும்.

விண்ணப்பத்தை நேரில் சென்றுதான் சமர்ப்பிக்க வேண்டும் என்ற கட்டாயமில்லை. தபால் மூலமும் அனுப்பி வைக்கலாம். அப்படி அனுப்பும் பட்சத்தில், பதிவுத் தபாலில் ஒப்புகை அட்டையுடன் (அக்னாலெட்ஜ்மெண்ட் டியூ) அனுப்பி வைப்பது நல்லது. விரைவில் ஆன்லைனிலேயே ரேஷன் கார்டுக்கு விண்ணப்பிக்கும் வசதியும் வரவிருக்கிறது.

புதிய ரேஷன் கார்டுக்கு விண்ணப்பிக்கும்போது உடன் இணைக்க வேண்டிய டாக்குமெண்ட்ஸ் என்னென்ன?

விண்ணப்ப பாரத்தை சரியான முறையில் பூர்த்தி செய்து, கையெழுத்து அல்லது இடது கை பெருவிரல் ரேகை இட்டு நீங்கள் தற்போது வசிக்கும் விலாசத்துக்கான ஆதாரத்தின் நகலை இணைக்க வேண்டும். இது தேர்தல் கமிஷன் வழங்கிய வாக்காளர் அடையாள அட்டை, சொந்த வீடாக இருந்தால், நடப்பு ஆண்டுக்கான சொத்து வரி கட்டிய ரசீது, லேட்டஸ்ட் டெலிஃபோன் பில், மின்சார வாரியத்தின் பயனீட்டு அட்டை, வங்கி பாஸ் புத்தகத்தின் முதல் பக்கம், பாஸ்போர்ட் போன்றவற்றில் எதுவாகவும் இருக்கலாம். தமிழ்நாடு குடிசை மாற்று வாரிய வீட்டில் வசிப்பவர் என்றால், அதற்கான ஒதுக்கீட்டு ஆணை, வாடகை வீடு என்றால் வாடகை ஒப்பந்தப் பத்திரத்தின் நகலை இணைக்கலாம். இதனுடன், பாஸ்போர்ட், புகைப்படப் பிரதி, வீட்டில் கேஸ் கனெக்ஷன் இருந்தால், யாருடைய பெயரில் கேஸ் இணைப்பு உள்ளது, கேஸ் சப்ளை செய்யும் நிறுவனம் மற்றும் ஏஜென்ஸி விபரம் ஆகியவற்றையும் குறிப்பிட வேண்டும்.

விண்ணப்பித்த எத்தனை நாட்களில் ரேஷன் கார்டு கிடைக்கும்?

விண்ணப்பத்தில் குறிப்பிட்டிருப்பதைப் போல குடும்பத் தலைவரும், மற்ற குடும்ப உறுப்பினர்களும் அந்த முகவரியில் வசிக்கிறீர்களா? அவர்களுக்கென்று தனி சமையல் அறை அல்லது அடுப்பு இருக்கிறதா? கேஸ் கனெக்ஷன் உள்ளதா? என்று நேரடி விசிட் மூலம் சரி பார்க்கப்படும். விண்ணப்பம் பெறப்பட்ட 30 நாட்களுக்குள் இந்த தணிக்கை நடக்கும். விண்ணப்பம் பெறப்பட்ட 60 நாட்களுக்குள் ரேஷன் கார்டு வழங்கப்படும். அப்படி 30 நாட்களுக்குள் தணிக்கை அலுவலர் உங்கள் வீட்டுக்கு வரவில்லை என்றாலோ, 60 நாட்களுக்குள் ரேஷன் கார்டு வழங்கப்படவில்லை என்றாலோ சம்மந்தப்பட்ட அதிகாரியையோ, அவருடைய மேலதிகாரியையோ தொடர்பு கொண்டு விசாரிக்கலாம்.

சமீப காலமாக, உங்களுக்கான ரேஷன் கார்டு தயாராக உள்ளது, வந்து பெற்றுக் கொள்ளலாம் என்ற தகவல் சம்மந்தப்பட்ட விண்ணப்பதாரருக்கு எஸ்.எம்.எஸ். அல்லது ஈ மெயில் மூலம் கூட தெரிவிக்கப்படுகிறது.

எங்கள் வீட்டிலேயே தங்கி இருக்கும் குடும்ப நண்பரது பெயரை, எங்கள் குடும்ப அட்டையில் சேர்த்துக் கொள்ளலாமா?

குடும்பத் தலைவருக்கு நெருங்கிய உறவினர்களாக இருப்பவர்களது பெயர்கள் மட்டுமே குடும்ப அட்டையில் இடம் பெற வேண்டும். அப்படி உறவினரல்லாத நபர்களின் பெயர்கள், அவர்கள் எவ்வளவு நெருங்கிய நண்பர்களாக இருந்தாலும் சேர்ப்பது தவறு.

திருமணத்துக்குப் பின் தனிக்குடித்தனம் செல்லும் கணவன், மனைவி புதிய ரேஷன் கார்டு பெற என்ன செய்ய வேண்டும்?

மேலே கூறிய நடைமுறைதான் இவர்களுக்கும். கூடுதலாக, இருவரும் திருமணத்துக்கு முன்பாக தங்களுடைய பெற்றோருடன் வசித்தபோது, அந்தக் குடும்பங்களுக்கான ரேஷன் கார்டில் இவர்கள் பெயர்கள் இருக்குமில்லையா? அந்த ரேஷன் கார்டுகளுக்குரிய அலுவலகங்களில் ஏற்கெனவே ரேஷன் கார்டுகளில் இருக்கும் தங்களுடைய பெயர்களை நீக்குவதற்கு விண்ணப்பம் செய்ய வேண்டும். சம்பந்தப் பட்ட அதிகாரி, அவர்களின் பெயர்களை நீக்கிவிட்டு, அதற்கான சான்றிதழைக் கொடுப்பார். புது ரேஷன் கார்டுக்கு விண்ணப்பிக்கிறபோது அந்த இரண்டு நீக்கல் சான்றிதழ்களையும் இணைக்க வேண்டும்.



உள்ளூரிலேயே வேறு தெருவுக்குக் குடிபோகிற போது, அதற்கான மாற்றத்தை செய்வது எப்படி?



நீங்கள் வீடு மாறி வேறு தெருவுக்குள் போனாலும், நீங்கள் உணவுப் பொருள்கள் வாங்கும் ரேஷன் கடையில் மாற்றம் இல்லாத பட்சத்தில், உங்கள் பகுதிக்குரிய வட்ட வழங்கல் அதிகாரியிடம் புதிய முகவரிக்கான ஆதாரத்துடன் விண்ணப்பித்து, ரேஷன் கார்டில் முகவரியை மாற்றிக் கொள்ளலாம்.

ஓர் ஊரிலிருந்து வேறு ஓர் ஊருக்கு உதாரணமாக திருச்சியிலிருந்து சென்னைக்கு குடியேறுவது என்றால், நீங்கள் திருச்சியில் வசித்த பகுதிக்குரிய அதிகாரியிடம் உங்கள் பழைய ரேஷன் கார்டை சரண்டர் செய்து, அதற்கான சர்டிஃபிகேட்டைப் பெற்றுக் கொள்ள வேண்டும். சென்னைக்கு வந்ததும், நீங்கள் குடியேறி இருக்கும் பகுதிக்குரிய வட்ட வழங்கல் அதிகாரியின் அலுவலகத்தில் புதிய ரேஷன் கார்டுக்கு விண்ணப்பிக்கும் போது, அந்த சர்டிஃபிகேட்டையும் இணைக்க வேண்டும்.

வேறு மாநிலங்களிலிருந்து தமிழ் நாட்டுக்கு வருகிறவர்கள், தாங்கள் வசித்த மாநிலத்தில் ரேஷன் கார்டை சரண்டர் செய்து, சான்றிதழ் பெற்று, அதை புதிய ரேஷன் கார்டுக்கு விண்ணப்பிக்கும்போது, அந்த சர்டிஃபிகேட்டையும் இணைக்க வேண்டும்.

சிலர் ''எங்கள் குடும்பத்துக்கு ரேஷன் கார்டே கிடையாது; நாங்கள் இதுவரை ரேஷன் கார்டே வாங்கவில்லை'' என்று சொல்வார்கள். அப்படிப்பட்ட வகையினர், தங்களுக்கு ரேஷன் கார்டு தேவை என்றால் தாங்கள் முன்பு வசித்த பகுதிக்குரிய வட்ட வழங்கல் அதிகாரியிடமிருந்து, 'இன்னாருக்கு, இதுவரை ரேஷன் கார்டு வழங்கப்படவில்லை'' என்று ஒரு சான்றிதழ் வாங்கி, அதனை தங்களுடைய விண்ணப்பத்துடன் இணைக்க வேண்டும்.

குடும்பத்தில் ஒருவர் இறந்துவிட்டால் அவரது பெயரை ரேஷன் கார்டிலிருந்து நீக்க வேண்டியது கட்டாயமா?

தொடர்ந்து ஆறு மாதங்கள் எந்தப் பொருளும் வாங்கவில்லையென்றால் குடும்ப அட்டை ரத்தாகிவிடுமா?

ரேஷன் கடைகளின் வார விடுமுறை தினத்தை ஞாயிற்றுக்கிழமைக்குப் பதிலாக வேறு ஒரு நாளுக்கு மாற்றினால், வேலைக்குப் போகும் தம்பதிகளுக்கு சௌகரியமாக இருக்குமே?

ரேஷன் கார்டு வழங்கும் அலுவலகங்களில் மக்களை அலை கழிக்கிறார்களே?

இது போன்ற இன்னும் பல சந்தேகங்களுக்கான விடைகள் அடுத்த இதழில்...

சந்திப்பு: எஸ். சந்திரமௌலி



தேவையான பொருள்கள்

பிளாஸ்டிக் தட்டு, தெர்மாகோல் ஷீட், கோல்டன் பேப்பர், கலர் பேப்பர், வேஸ்ட் பாட்டில் மூடி - 5, ஃபேப்ரிக் கலர்ஸ், பேப்ரிக் க்ளூ, அகல் விளக்கு - 5, கத்தரிக்கோல், ஸ்டேப்லர் , அலங்கரிக்க - பொம்மை

செய்முறை:

★ பிளாஸ்டிக் தட்டின் மீது ஃபேப்ரிக் க்ளூ தடவி, கோல்டன் பேப்பரை ஒட்டவும். தட்டு தெரிய கூடாது.



ஆரத்தி தட்டு..

★ தெர்மாக்கோலை சிறிய வட்டமாகக் (கற்பனைக்கேற்ப) கத்தரித்து தட்டின் நடுப்பகுதியில் ஒட்டவும். (படம் 2)

★ பாட்டில் மூடியை தெர்மாக் கோல் ஒட்டிய பகுதியைச் சுற்றி, (மூடியை கவிழ்த்து) ஒட்டவும். (படம் 3)



● துளசி கண்ணன் ●






8

அசத்தல் லாபம்!

★ அதன் மேல் கலர் பேப்பரை ஸ்டார் டிசைனாகக் கத்தரித்து ஒட்டவும். அதன்மேல் அகல் விளக்கை ஃபேப்ரிக் நிறத்தால் நிரப்பி ஒட்டவும். (படம் 4)

★ கோல்டன் பேப்பரை நீள் செவ்வகமாக கத்தரித்து, கோன் போல மடித்து ஸ்டேப்லர் பின் செய்யவும். (படங்கள் 5,6)

இதேப் போல் அதிக கோன்களை செய்து, தட்டைச் சுற்றி ஒட்டி பொம்மையை நடுவில் வைக்கவும். (படம் 7, 8)

ஆரத்தி எடுக்கும் போது அகல் விளக்கில் மெழுகு வத்தி ஏற்றி எடுக்கவும். கோல்டன் நிறம் தகதகக்க, தீப ஒளி பிரகாசிக்கும்.

வீட்டிலிருந்தபடியே சம்பாதிக்க நினைக்கும் பெண்களுக்கு அருமையான பிஸினஸ் இது. இன்றையக் கால கட்டத்தில் மிகக் குறைந்த முதலீட்டில் அதிக அளவு இலாபம் ஈட்டக்கூடிய பிஸினஸும் இதுதான்.

பிறந்த நாள், காதணி விழா, நிச்சய


5


6


7



தார்த்தம், நீராட்டுவிழா, திருமணம், வரவேற்பு போன்ற அனைத்து நிகழ்ச்சிகளிலும் தவறாமல் இடம் பெறுவது ஆரத்தி சுற்றுவதுதான். ஆரத்தி தட்டை விதவிதமாக செய்து, விருந்தினர்களை அசத்துவது இன்றைய ஃபேஷன்.

கொலு வைப்பது போல ஆரத்தி தட்டு சுற்றுவதிலும் 'தீம்' வைத்து செய்யலாம். பிறந்த நாள் விழா ஆரத்தி தட்டுக்கு டோரா, மிக்கி மவுஸ், டாம் அண்ட் ஜெர்ரி என்ற டிசைனில் செய்யலாம். காதணி விழாவுக்கு தட்டு வரிசை பொருள்கள் போல, திருமண விழாவுக்கு ஆரத்தி தட்டு செய்து கொடுக்கும்போது மணமகன், மணமகள் பணி புரிவதைப் பொறுத்து (மருத்துவர், வழக்கறிஞர், சாஃப்ட்வேர்) செய்யலாம். இவையெல்லாம் ஆரத்தி தட்டுகள் செய்வதற்கான

உங்கள் கற்பனையும், பயன்படுத்தும் பொருள்களையும் பொறுத்து, ஒரு ஆரத்தி தட்டின் விலை ரூபாய் இருநூறு முதல் இரண்டாயிரம் வரை விற்பனை செய்யலாம்! வாடகைக்கும் கொடுக்கலாம்!





உதாரணங்களே! உங்களது கற்பனையைப் பொறுத்தே டிசைனை வடிவமைக்க முடியும் பிஸினஸ் இது, என்பதால் எதையும் கலை கண்ணோட்டத்தோடு பார்க்கவும். முத்து, பவளம், செயற்கை மணிகள், ஸ்டோன், நவதானியப் பயிர், கோல்டன் பேப்பர்ஸ், செயற்கை அலங்கார பொம்மை என்று அழகைக் கூட்டும் அத்தனைப் பொருள்களிலிருந்தும் இந்த ஆரத்தி தட்டு செய்யலாம். - **லக்ஷ்மி**

இவை எல்லாமே ஆஹா 50 தான்!

கொத்துமல்லி, புதினா, துவையல் அரைக்கும்போது, தண்ணீர் விடாமல் கொஞ்சம் தயிர் விட்டு அரைக்கவும். இதனால் துவையலின் நிறம் மாறாது. சுவையும் அபாரமாக இருக்கும்.

- வத்சலா சதாசிவன், சென்னை

கிருஷ்ண ஜெயந்திக்கு பாதம் வைக்க, கோலம் இடும்போது, அரிசி மாவுடன் கொஞ்சம் மஞ்சள் பொடி கலந்து பாதம் வைத்தால் எறும்புகள் அண்டாது. மஞ்சள் நிறம் கலந்து பாதம் பளிச்சென அழகாகவும் தெரியும்.

- ஆர்.ஜெயலெட்சுமி, திருநெல்வேலி

தொடர்ந்து இருமலால் பாதிக்கப்பட்டிருக்கிறீர்களா? தினம் ஒரு விளாம் பழம் சாப்பிட்டால் இருமல் போய்விடும்.

- ஜி. பூங்கொடி பாண்டியன், சத்திரப்பட்டி

இரும்புச்சத்து குறைபாடு உள்ளவர்கள், புடலங்காயின் உட்பகுதியில் இருக்கும் விதை உட்பட அனைத்தையும் சமையலில் சேர்த்துக் கொள்ளலாம். இரத்த விருத்தி உண்டாகும்.

- இந்திராணி தங்கவேலு, மும்பை

சாமந்திப் பூக்களை வாணலியில் போட்டு சூடாக்கி, துணியில் கட்டி, வீக்கம் உள்ள இடத்தில் ஒத்தடம் கொடுத்தால், வீக்கம் குணமாகும்.

- ஜி.கே.நிதி, வந்தவாசி

வெளிநாடுகளில் ஆம்புலன்ஸ் செல்வதற்காகவே சாலையில் தனியாக பாதை இருக்கும். அதேபோல இங்கும் கொண்டு வந்தால், போக்குவரத்து நெரிசலிலிருந்து பாதிக்கப்பட்டவர்களை விரைவாக காப்பாற்றலாம்.

- விமலா பத்மநாபன், சென்னை

பண்டிகை சமயங்களில் விருந்தினர் வருகை அதிகம் இருக்கும். காபிக்கு, பலகாரத்துக்கு என்று டிஸ்போசபிள் பேப்பர் கப், பிளேட்டுகளை உபயோகப்படுத்தலாம். வேலையும் நேரமும் மிச்சம். டென்ஷனுக்கும் டாடா!

- ஜே.சி.ஜெரினாகாந்த், சென்னை

மருத்துவர்கள், சிறு குழந்தைகளது தொண்டையைப் பரிசோதிக்கும்போது ஸ்பூனுக்குப் பதிலாக, ஒரு லாலிபாப்பை நாக்கில் அழுத்திப் பார்க்கலாம். குழந்தைகள் அழாமல் நாக்கைக் காட்டும்.

- விஜயா ரமேஷ், கொல்கத்தா



கோதுமை அல்லது மைதா மாவில் தோசை வார்ப்போம். வெங்காயத்தை நறுக்கி, நெய்யில் வதக்கி, தோசையின் மேல் தூவவும். தோசை சூப்பர் சுவையாய் இருக்கும்.

- வே.தனலக்ஷ்மி, கோவை

சந்தித்தோம்... சிந்தித்தோம்... சந்தோஷித்தோம்!



மே மாதம் 8,, 9, 15, 16 ஆகிய தேதிகளில் ஆத்தூர், ராசிபுரம், நாமக்கல், திருச்செங்கோடு, போத்தனூர், பொள்ளாச்சி, உடுமலைப்பேட்டை, பழனி ஊர்களுக்குச் சென்று நமது மங்கையர் மலர் வாசகியரைச் சந்தித்து அளவளாவினோம். ஆடிப்பாடி, போட்டிகள் நடத்தி, பரிசுகள் தந்து குதூகலித்தோம். அடேயப்பா! சும்மா சொல்லக்கூடாது... உற்சாகம் கரை புரண்டோட, பங்கு கொண்டு சிறப்பித்ததுடன் மங்கையர் மலரை மேம்படுத்த சீர்மிகு கருத்துகளையும் தந்து உதவினார்கள். அனைவருக்கும் நன்றி! நன்றி!







பிப்ரவரி 2010 முதியோர் நல சிறப்பிதழில் வெளிவந்த அறிவிப்பின்படி, தேர்ந்தெடுக்கப்பட்ட 5 முதியோர் இல்லங்களில் ஒன்றான ராசிபுரம் மேரி கருணை இல்லத்துக்கு வாசகியர் சார்பில் ரூ.10,000- நன்கொடை வழங்கப்பட்டது.


எங்களுக்கெல்லாம் தன்னம்பிக்கைத் தோழி மங்கையர் மலர் தான்!
நாமக்கல்
திருச்செங்கோடு
சுய தொழில் ஆலோசனைகள் தேவை!
அப்பப்பா! என்ன வெயிட்டான சிறுகதைகள்! செலக்ட் பண்றவங்க கைக்கு தங்க வளையல்தான் போடணும்!
போத்தனூர்



உங்கப் பிரதிக்கு முந்துங்க!

முகவர்கள் விவரம்:

ஆத்தூர் - எஸ். கந்தசாமி - 94435 14189
ராசிபுரம் - ஆர்.பி.பாலன்- 90437 32686
நாமக்கல் - என்.சி.முத்துகிருஷ்ணன் - 98420 82737
திருச்செங்கோடு - ஆர்.சுப்பிரமணியன்
98653 58842
போத்தனூர் - பி. நாராயணசாமி, 99409 04713
பொள்ளாச்சி - என். ஆறுமுகம், 93448 21242
உடுமலைப்பேட்டை - பி.சிவகுருநாதன்,
98430 20930
பழனி - வி.சுந்தர்ராஜன், 98420 61258





ரூ.5,000 பரிசு சுற்றுலா போட்டி-6 பரிசு பெறும் அதிர்ஷ்டசாலிகள்!



✸ கி. சுசிலா, திருத்துறைப்பூண்டி தாலுகா ✸ ஸ்வப்னா, திருவனந்தபுரம் ✸ கிரிஜா ராஜ்குமார், திண்டுக்கல் ✸ சரோஜா சக்ரவர்த்தி, பெங்களூரு ✸ நா. உமாமகேஸ்வரி, சிவகங்கை ✸ வி. ஸ்ரீவித்யா, கும்பகோணம் ✸ கோதை மோகன், புதுச்சேரி ✸ ஸ்வர்ணா பரத்வாஜ், நாக்பூர் ✸ டி. மங்கையர்கரசி, கரூர் ✸ எஸ். தங்கரத்தினம் சண்முககனி, கோவில்பட்டி ✸ சி. ஷெம்மிரத்னா, மணலூர் ✸ விசாலம் நடராஜன், கோயமுத்தூர் ✸ மீனா ரவி, நவி மும்பை ✸ ஆர். ஜானகிராமன், வேதாரண்யம் ✸ ஜெயா நியூட்டன், திருநெல்வேலி ✸ நாராயணி அம்மாள், சென்னை ✸ வி. உமா, தூத்துக்குடி ✸ லக்ஷ்மி பாலசுப்ரமணியன், பெங்களூரு ✸ ஜி அபிதகுஜாம்பாள், செங்கம் ✸ வி. நாகலக்ஷ்மி, ஈரோடு

ஜூலை 2010ல் வெளியான சுற்றுலா போட்டி-6 விடைகள்

1. குஃப்ரி, 2. அமிர்தசரஸ், 3. சபர்மதி ஆசிரமம், 4. கஜுராஹோ, 5.சாந்திநிகேதன், 6. அஜந்தா, 7. கொனார்க், 8. சாலார்ஜங் மியூசியம், 9. சிவசமுத்திரம் நீர்வீழ்ச்சி, 10. வால்பாறை



ராஜம்மாள், நமது நீண்டகால வாசகி. நேரடியாகவே நமது அலுவலகத்துக்கு வந்து இந்த நகைச்சுவை விடுகதையை கைப்பட எழுதித் தந்த இவரது வயது 92!

மூன்று முனையிலே மூணு குளம் வெட்டினேன். இரண்டு பாழு; ஒண்ணுல தண்ணியே யில்லை.

தண்ணியில்லாக் குளத்துக்கு வந்தது மூணு பேரு; இரண்டு பேரு நொண்டி, ஒருவனுக்குக் காலேயில்லை.

காலில்லா மனுஷனைக் கட்டிய மனைவி மூணு; இரண்டு பேரு முடம், ஒருத்திக்கு கையேயில்லை.

கையில்லா முடத்துக்கு பிறந்த பிள்ளை மூணு; இரண்டு பேரு குருடு, ஒரு பிள் ளைக்குக் கண்ணேயில்லை.

கண்ணில்லா பிள்ளையை வளர்க்க வந்தவங்க மூணு; இரண்டு பேர் ஊமை, ஒருத்திக்கு வாயேயில்லை.

வாயில்லா மனுஷியிடம் விஷயத்தைக் கேட்க வந்தவங்க மூணு; இரண்டு பேரு செவிடு, ஒருவனுக்குக் காதேயில்லை -

அத்தனை பேரையும் ஆதரிக்க வந்த வங்க மூணு; இரண்டு பேரு முண்டம், ஒருவனுக்குத் தலையேயில்லை.

– ராஜம்மாள் நடராஜன், திருநெல்வேலி



சிரிப்பு விடுகதை!

ஆண் பேனாவும் உண்டே!

ஜூலை மங்கையர் மலர் 'ஒரு வார்த்தை' மிகவும் பிரமாதம். 'Pen'ஐ பெண்ணாக உவமித்திருக்கிறீர்கள். நல்ல ஐடியாதான்! ஆனால், பேனாவில் ஆண் பேனாகூட உண்டு. எப்படி என்று சொல்லட்டுமா?

ஒரு நபர் தங்கப் பேனாவைத் தெரிந்த வாலிபன் ஒருவனுக்குப் பரிசாகக் கொடுத்தார். இது உங்கள் கற்பனை. என் கற்பனையில் ஒரு பெண், ஒரு வங்கிக்குப் போனாள். படிவம் ஒன்று நிரப்ப வேண்டிய வேலையிருந்தது. அவள் பேனா எடுத்து வர மறந்துவிட்டாள். பக்கத்திலிருந்த ஒரு நபரிடம் பேனா இரவல் கேட்டாள். அவர் தனது சாதாரணப் பேனாவை முன்பின் தெரியாத அந்தப் பெண்ணுக்கு இரவலாகக் கொடுத்தார். அதுவும் எப்படி? மூடியைக் கழற்றித் தன் கையில் வைத்துக்கொண்டு, தன் உரிமையை விட்டு விடக் கூடாதல்லவா? அதனால் 'பேனாவைத் தூக்கிக்கொண்டு அந்தப் பெண் ஓடி விடக் கூடாதே' என்று ஐந்து நொடிக்கொருமுறை குறுக்கும் நெடுக்கும் நடந்த வண்ணம் அவளை கவனமாக எழுதவும் விடாமல் குறுக்கீடு செய்தார்.

'பேனா ஜாக்கிரதை. திருப்பித் தந்து விடுவாயல்லவா? நான் எழுதணும். அது என்னுடையது' என்பது போல உரிமைப் பார்வை, குரல் கனைப்புச் சத்தம் வேறு. 'ஏண்டாப்பா இந்தப் பேனாவை இரவல் வாங்கினோம்?' என்ற சங்கடம் பெண்ணின் மனத்தில்.



எனக்குத் தெரிந்த உறவினரின் பெண்ணுக்குக் கேட்ட சீர் எல்லாம் சரியாகச் செய்து நன்றாகத்தான் திருமணம் செய்தார்கள். அந்த அம்மாளுக்குத் தன் பையனை மணமகளுக்கு இரவலாகத் தந்தது போன்றதொரு எண்ணம். தனிக் குடித்தனம் போனாலும் விடாது ஃபோனில் பேனாவுக்கு போதனை, விசாரிப்பு, அறிவுரைகள். ''ஜாக்கிரதைடா. ரொம்ப இடம் கொடுத்துவிடாதே. உன்னை விட்டு என்னைப் பிரித்து விடுவாடா. அவள் அம்மா வீட்டு மனிதர்களிடம் அதிகம் உறவு கொண்டாடாதே. உன் சம்பளம் அங்கே போய்விடும்'' இது போன்ற எச்சரிக்கைகள்.

இரவல் வாங்கிய பெண்ணுக்கோ, ''அவனுக்கு சமையல் அறையில் வேலை செய்து பழக்கமில்லை. தண்ணீர்கூட கையில் கொடுத்தால்தான் குடிக்கத் தெரியும். பிக்னிக், வெளியூர்னு அவனை இழுத்தடிக்காதே. அவனுக்கு வெயிலில் போனால் தலையை வலிக்கும். மழையில் போனால் ஜலதோஷம், இருமல் வந்துவிடும். பார்த்துக்கோ'' என்றெல்லாம் அறிவுரைகள்! பிள்ளை, மாட்டுப்பெண் (மருமகள்) வெளிநாட்டில் இருந்தாலும் ரிமோட் கன்ட்ரோல் அம்மா/அப்பாவின் கையில்... இந்தியாவில்தான்.

உங்கள் தலையங்கம் என்னும் நாணயத்தின் மறுபக்கத்தை நான் பார்க்காமல் இருப்பேனா? சுட்டி எழுதாமல் இருப்பேனா?

- சுந்தராம்பாள் சுந்தரம், சென்னை

மை'யில்



ஒருதலை பட்ச நியாயத்தை பேனா சொல் வது போலுள் ளது.

கொடுத்த பேனாவைப் பாதுகாப்பாக வைத்திருக் கும் பட்சத்தில், அது பாது காப்பாக இருக்கிறதா இல் லையா என்று கொடுத் தவர்கள் கவனிப்பதை வாலிபன் ஏன் இயல்பாக ஏற்றுக் கொள்ளக்கூடாது?

மெய்யில்லாத பேனா!

'Pen'ஐ திரும்பப் பெற்றவன்!

ஒரு வார்த்தையை எழுத நீங்கள் உபயோகித்த பேனாவின் மையில் மெய்யில்லாதது வருத்தமே. 'பேனாவை தனக்குத் தெரிந்த வாலிபரிடம் பரிசாகக் கொடுக்கிறார்' என்ற உவமையிலேயே உண்மை தடம் புரள ஆரம்பித்து விட்டது. பரிசாகக் கொடுப்பது என்பதை விட பாதுகாப்பாக வைத்துக் கொள்ள தகுந்த வாலிபனைத் தேடி கொடுக்கிறார் என்று உங்கள் பேனா எழுதியிருந்தால் அங்கேயே 'ஒரு வார்த்தை' மறுவார்த்தை யின்றி முற்றுப் பெற்றிருக்கும்.

பெண்ணை மணமுடித்துக் கொடுத்து விட்டால், அந்தப் பக்கமே தலைவைத்துப் படுக்கலாகாது என்ற பேனா நிப்பை உடைப்பேன், மூடியை பல்லால் கடிப்பேன் என்பதையெல்லாம் பேனாவின் தலையெழுத்து என்று தண்ணீர் தெளித்து விட்டு அநியா யத்துக்கு பெண்ணைத் தலை முழுகிய காலங்கள் கொடுமையானவை.

பேனாவைப் பரிசாகப் பெற்றவன், தான் மட்டுமே அதன் பாதுகாப்புக்குப் பொறுப்பானவன் என்ற மனநிலை யின்றி, இஷ்டப்படி தன் வீட்டுக்காரர் களெல்லாம் அதை எப்படியெல்லாமோ பாழ்படுத்தலாமென்று விட்டுவிடும் மனப்போக்கும் இப்படிப்பட்ட பிரச்னை களுக்கான காரணமாகின்றது. உங்கள் பேனா இதை எழுதாமல் மறைத்துள்ளது.

பெயர் வெளியிட விரும்பாத,
பேனாவைத் திரும்பப்
பெற்ற ஒருவன்.

வாசகர் பூமராங்

சுற்றுச்சூழல்

ஒரு சிறிய மரக்கன்றை நட்டால் அது பெரிய மரமாக வளர பல ஆண்டுகள் ஆகும். ஆனால், நன்றாக வளர்ந்த சில வகை மரங்களை வெட்டாமல், வேருடன் பெயர்த்து, மற்றொரு இடத்தில் நட்டால் அது பத்து ஆண்டுகள் வரை, உயிர் வாழும் என சமீபத்தில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவில் மட்டும், நாள் ஒன்றுக்கு பல ஆயிரம் மரங்கள் சமூக விரோதிகளாலும், சாலை விஸ்தரிப்பு உட்பட பல அரசாங்க திட்டங்களுக்காகவும் வெட்டி வீழ்த்தப்படுவதாகப் புள்ளி விவரங்கள் கூறுகின்றன.

கடந்த நான்கு ஆண்டுகளில் குஜராத் மாநிலத்தில் மட்டும், சாலைகளை அகலப்படுத்த வேண்டி சுமார் எழுபத்தைந்தாயிரம் மரங்கள் வெட்டி வீழ்த்தப்பட்டுள்ளன. 'மரங்களை வெட்ட காட்டிலாகாவின் அனுமதி பெறுவது அவசியம்' என்று அரசாங்கம் அறிவுறுத்தியுள்ளது.

அகமதாபாத்தின் தலைநகராக 'காந்திநகர்' துவங்கி சுமார் முப்பது முப்பத்தைந்து ஆண்டுகள் ஆகின்றன. சட்டசபை மற்றும் அதைச் சுற்றியுள்ள இடங்களை விரிவுபடுத்துவதற்காக அரசு திட்டமிட்டிருக்கிறது. காந்திநகர் அழகிய சிறிய நகரம். இங்கு இருபத்தைந்தாயிரத்துக்கும் அதிகமான மரங்கள் உள்ளன. விரிவு படுத்தும் திட்டம் செயல்பட ஆரம்பித்தால், ஆயிரக்கணக்கான மரங்கள் வெட்டப்படும். அதைத் தவிர்க்க குஜராத் அரசாங்கம், வளர்ந்த மரங்களை, வேரோடு பெயர்த்து, மற்றொரு இடத்தில் நடவிருக்கின்றது. இதற்காக அமெரிக்காவிலிருந்து இரண்டு கோடி ரூபாய் செலவில் மூன்று ராட்சத இயந்திரங்களை வரவழைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்த இயந்திரத்தின் மூலம் ஒரே நாளில் சுமார் நூறு மரங்களைப் பெயர்த்து, நட முடியுமாம். இதனால் சுற்றுப் புற சூழ்நிலையும்,

வேரோடு பெயர்த்து...



பசுமையும் பாதிக்கப்பட வாய்ப்பில்லை.

இந்த முயற்சி பலனளித்தால், மற்ற மாநிலங்களும் இந்த 'மரப் பெயர்ச்சி' முறையைப் பயன்படுத்தி நன்மை அடையும் என எதிர்பார்ப்போம்!

- ஆர்.பாண்டுரங்கன்,
அகமதாபாத்.

எலும்பு மற்றும் மூட்டுவலிக்கு அறுவைசிகிச்சை அற்ற மருத்துவம்

இதன் பலன்கள்



- அறுவை சிகிச்சை இல்லை
- வலி இல்லை
- மருத்துவமனையில் தங்கும் அவதி இல்லை
- மயக்க மருந்து இல்லை
- குறுகிய நாட்களிலேயே உங்கள் மூட்டுவலியை குணப்படுத்தலாம்



Govt Approved
Networking Hospital

Contact us at

OXYMED HOSPITALS
PRIVATE LIMITED
CLOSE TO YOUR HEART

ISO 9001:2008

Main Branch, 786, Anna Salai, (Huma Hospital Building) Nandanam, Ch-35. Ph : 42131010 / 42131014 / 42131016. Fax : 42131020

E-mail : oxymedhospitals@yahoo.com Website : www.oxymedhospital.in

Timings :
Week days 8 am to 6 pm

With prior appointment only

கோடையில் வியர்ப்பது இயற்கை. ஐப்பசி மாதம் அடை மழை காலத்தில் வியர்ப்பது அதிசயம்தானே? மனிதருக்கா இப்படி வியர்க்கிறது? இல்லை, இல்லை... சிக்கல் சிங்காரவேலருக்குத் தான் வியர்த்துக் கொட்டுகிறது. அர்ச்சகர் பட்டுத் துணியை வைத்து, ஒற்றி ஒற்றி எடுக்கிறார். வியர்வை ஊற்றாகப் பெருக்கெடுக்கிறது. பளிங்குச் சுவர்தான். அதிலும் வியர்வை துளிர்த்து வருகிறது என்றால்...?

திருவாரூர் - நாகப்பட்டினம் செல்லும் வழியில் இந்த முருக பெருமான் கோயில் இருக்கிறது. பஸ்ஸில் நாகப்பட்டினத்தை நோக்கிப் பயணிக்கும்பொழுதே சிக்கல் கோபுரம் கண்ணில் பட்டு பக்தி அலைகளை எழுப்புகிறது.



அழகன்

● லக்ஷ்மி ராஜரத்னம்



முருகனிடம்...

கந்தவேள் பக்தி உலா...



திருவாரூர் - நாகப்பட்டினம் செல்லும் வழியில் சிக்கல் ரயில் நிலையமும் இருக்கிறது. சிறிது காலம் அகலப் பாதை போடுவதற்காக நிறுத்தப்பட்டிருந்த ரயில் போக்குவரத்து, தற்போது தொடங்கியுள்ளது என்பது பக்தர்களுக்கு மகிழ்ச்சியான செய்தி.

சென்னையிலிருந்து கம்பன் எக்ஸ்பிரஸ் நாகப்பட்டினம்வரை செல்கிறது. துரித ரயில் வண்டிகள் சிக்கலில் நிற்பதில்லை. நாகப்பட்டினம் சென்ற பிறகு பேருந்திலோ மற்ற வாகனங்களிலோ வரலாம்.



இத்தலக் கோயிலில் ஒரு விசேஷம் உண்டு. சிவனும் - விஷ்ணுவும் சேர்ந்து சிவா விஷ்ணு ஆலயமாக இருக்கின்ற கோயில்கள் 28 என்று கோயிலில் எழுதி இருக்கிறார்கள். சிவன், விஷ்ணு, முருகன் என்று இணைந்து காணப்படும் ஆலயங்கள் ஐந்து.

சிவன், விஷ்ணு, முருகன், அனுமன், கணபதி இவர்களுடன் சத்யாயதாக்ஷி என்ற சக்தி பீடமும் அமைந்துள்ள கோயில் சிக்கல் என்று கூறப்படுகிறது.

சிக்கல் சிங்கார வேலர் என்று நாம் சொன்னாலும் இங்கு மூலவர் நவநீதேஸ்வரர் ஆவார். நவநீதம் என்றால் வெண்ணெய் என்று பொருள். நவநீதேஸ்வரர் என்றால் வெண்ணெய்பிரான் என்று பொருள் கொள்ளலாம்.



முன்பொரு காலம். பன்னிரண்டு ஆண்டுகள் புல் பூண்டுகூட முளைக்காத பஞ்சம்- காமதேனு பசியால் வருந்தியது. பசி தாங்காமல் நாயின் இறைச்சியை அது உண்டது. இதனால் சிவபெருமான் கோபம் கொண்டார்.

''நாயின் இறைச்சியைத் தின்றதால் புலி முகம் பெற்றுத் திரிவாயாக'' என்று சினத்துடன் சாபமிட்டார்.

காமதேனு வருந்தி பாவ மன்னிப்புக் கேட்டது.

''சோழ நாட்டில் உள்ள மல்லிகாரயண்யத்தில் உள்ள அமிர்தத் தடாகத்தில் நீராடி எம்மை வழிபட்டால் புலி



முகம் நீங்கும்'' என்று சொன்னார்.

காமதேனு அவ்வண்ணமே செய்து தன் சுய வடிவத்தைப் பெற்றது. அப்பொழுது ஏற்பட்ட பேரின்பத்தால் காமதேனுவின் மடியிலிருந்து பால் பெருகுகிறது. அமிர்தத் தடாகம் க்ஷீரபுஷ்கரணியாக - பால் குளமாகப் பெருகிற்று.

காமதேனுவின் பால் பெருகியதால் க்ஷீரபுஷ்கரணியின் நீர்நிலை முழுவதும் வெண்ணெய் பரவியது.

அப்பொழுது இறையருளால் வசிஷ்டர், அங்கே வந்தார். தன்னுடைய ஆன்ம பலத்தின் மூலமாக வெண்ணெயைத் திரட்டி சிவலிங்கமாக உருவாக்கிப் பூஜித்தார். இவர்தான் நவநீதேஸ்வரர்.

சிக்கல் என்ற பெயர் எப்படி வந்தது? வெண்ணெயால் உருவாக்கிய சிவ லிங்கத்தை வசிஷ்டர் பூஜித்தார் அல்லவா? அதை அப்படியே விட்டு விட்டுப் போக மனமில்லை. அதைப் பெயர்த்து எடுத்துக் கொண்டு போக முனைந்தார். எடுக்க முடியவில்லை. வசிஷ்டர் ஏமாற்றத்துடன் தன் இருப்பிடம் திரும்பினார். இப்படிச் சிக்கிக் கொண்டவர்தான் இந்த வெண்ணெய் பிரான்.

சிங்கார வேலரின் எழிலைக் காண்போமா?

மூன்றடி உயரமுள்ள செப்புச் சிலை வடிவம். வெள்ளி ஆசனம். அருகில் வள்ளி, தெய்வானை, தங்கக் கவசம், வைர ஆபரணங்கள் அணிந்து எப்பொழுதுமே அலங்காரப் பிரியராகத் தரிசனம் தருகிறார்.

இந்த சிங்கார வேலருக்குத்தான் சூர சம்ஹார தினத்தன்று அன்னையிடமிருந்து வேலை வாங்கிக்கொண்டதும் வியர்த்துப் போகும். காரணம் சக்திவேல்.

சிங்கார வேலரின் சன்னிதியிலிருந்து மாடப் படிகளில் இறங்கி வருகிறோம். இடதுபுறம் அன்னை வேல் நெடுங்கண்ணி, தாய்மை அருள் முகத்தில் ததும்ப அருள் பாலிக்கிறாள்.

சூரனை சம்ஹாரம் செய்யப் புறப்படும் தினத்துக்கு முதல் நாள் மதியம், வேலை அன்னையிடம் வைத்து அன்னையின் சக்தியானது வேலிடம் பரிபூரணமாக, நிறைய விசேஷ பூஜைகள் செய்கிறார்கள்.



முன் இரவு நேரம். தேரிலிருந்து இறங்கி சிங்கார வேலர் அன்னையின் திருச்சன்னிதி முன்பு வந்து நிற்கிறார். உபவாசம் இருந்து வேலை பூஜித்த அர்ச்சகர், வேலை எடுத்து வந்து முருகனிடம்



கொடுத்து விட்டு மயங்கி விடுகிறார்.

வேலைப் பெற்றதும் எங்கிருந்துதான் அத்தனை ஆவேசம் வருமோ? முருகனைத் தூக்கி வந்தவர்கள் மாடப்படிகளில் ஓடி, வேகமாக ஏறி முருகனை இருக்கையில் வைக்க, முருகனுக்கு வியர்வை பெருகுகிறது. துடைக்கத் துடைக்கப் பெருகுகிறது வியர்வை.

அன்பர் பெருமக்கள் பட்டுத் துணியை வாங்கிக்கொடுத்து வியர்வையைத் துடைத்து, பட்டுத் துணியை வாங்கி பூஜையில் வைத்துக் கொள்கிறார்கள். இதை இந்தக் கோயிலில் ஏற்படும் அதிசயம் என்று எழுதி இருக்கிறார்கள். இதைக் கண்டு ஆனந்தம் பெற ஸ்ரீலங்கா, மலேஷியா, சிங்கப்பூர், வட மாநிலங்களிலிருந்தும் மக்கள் கந்த ஷஷ்டி பெருவிழா முழுதும் இங்கே வந்து தங்குகிறார்கள்.



இக்கோயிலில் ஆறுகால பூஜை நடைபெறுகிறது. கந்த ஷஷ்டிதான் பெரிய விழா. சிவனுக்குரிய உற்சவங்கள் நடைபெறுகின்றன. அதே போல் விஷ்ணுவுக்குரிய உற்சவங்களும் நடை பெறுகிறது. அதனால் கோயிலில் சதா 'ஜெ ஜெ' என்ற கூட்டம் இருந்து கொண்டே இருக்கும். கார்த்திகை தினத்தன்று மகாபிஷேகம் நடைபெறுகிறது.கோடி தீப வழிபாடு நடை பெறுகிறது. இந்தக் கோயிலில் எங்கு தீபம் ஏற்றினாலும் அது சிங்கார வேலனையே சேரும் என்பது கோயில் செய்தி.

'வேல் வாங்கிய தலம்' என்பதால் இங்கு சத்ரு சம்ஹார அர்ச்சனை மிகவும் விசேஷம். ஆயிரம் ரூபாய் கட்டினால் கோயிலிலேயே ஏற்பாடு செய்து விடுகிறார்கள். சேவல்களை கோயிலில் காணிக்கையாக விடுகிறார்கள்.

நவக்கிரகங்கள் இருப்பதுடன், சனீஸ்வரனுக்கும், பைரவருக்கும் சன்னிதி தனியே இருக்கிறது. சித்திரை மாதம் நவநீதேஸ்வரருக்கு பத்து நாட்கள் திருவிழாவும், தேரோட்டமும் நடைபெறும்.


ஐப்பசி மாதம் கந்த ஷஷ்டியின் பொழுது பத்து நாட்கள் உற்சவம் நடைபெறும். ஐந்தாம் தேர் விழாவும், முன்னிரவில் வேல் வாங்கும் வைபவமும் நடைபெறும். வேலனுக்கு வியர்த்துக் கொட்டும் வைபவத்தையும், சூரசம்ஹாரத்தையும், திருக்கல்யாண வைபவத்தையும் காண இப்பொழுதே திட்டமிட்டுக் கொள்ளலாமே!

(வலம் வருவோம்)



9 புள்ளி 9 வரிசை
நேர்புள்ளி
காந்தம்மாள், சென்னை

வாசல் அழகு




21 புள்ளி 11 வரை
இடைப்புள்ளி
நிர்மலா கோபாலகிருஷ்ணன்,
பெங்களூரு


வண்ணச்



17 புள்ளி 9-ல் நிறுத்தவும்.
இடைப்புள்ளி
வீ.சுமதி ராகவன்,
திருப்பத்தூர்



9 புள்ளி 9 வரிசை
நேர்புள்ளி
என். கிரிஜா கணேசன்,
நாகர்கோவில்



ப. கமலாம்பிகை,
ஓசூர்

கோலங்கள்!



13 புள்ளி 7வரை
இடைப்புள்ளி
ராஜேஸ்வரி சிவ முருகன்,
அருப்புக்கோட்டை

தேவிகா காளியப்பன்

தேவையான பொருள்கள்:

மாங்காய் - 1
பலாக்கொட்டை - 10 அல்லது 15 எண்ணிக்கை
முருங்கைக்காய் - 1
துவரம் பருப்பு - 50 கி
பச்சை மிளகாய் - 2
தேங்காய்த் துருவல் - 1 மேஜைக் கரண்டி
உப்பு, மஞ்சள் தூள் - தேவையான அளவு

தாளிக்க:-
எண்ணெய் - 2 டீஸ்பூன்
கடுகு - ½ டீஸ்பூன்
உளுத்தம் பருப்பு - ½ டீஸ்பூன்
வர மிளகாய் -1
கருவடகம் - 2 டீஸ்பூன்

செய்முறை:

பலாக்கொட்டையைச் சிறிய கல்லினால் தட்டி, தோல் எடுத்து வேக வைக்கவும். துவரம் பருப்பு, தண்ணீர் சேர்த்துக் குக்கரில் வேக வைக்கவும்.

சிறிய துண்டுகளாக நறுக்கிய முருங்கைக்காய், மாங்காய் துண்டுகளை தண்ணீர் சேர்த்து உப்பு போட்டு வேக வைக்கவும். தேங்காய்த் துருவல், பச்சை மிளகாய் சேர்த்துத் தண்ணீர் தெளித்து அரைக்கவும்.

வேக வைத்த பலாக்கொட்டை, முருங்கைக்காய், மாங்காயுடன் அரைத்த விழுது சேர்க்கவும்.

இதனுடன் வேக வைத்த துவரம் பருப்பு, மஞ்சள் தூள் சேர்த்து நன்றாகக் கொதித்ததும் இறக்கவும். வாணலியில் எண்ணெய் விட்டு காய்ந்ததும் கடுகு போட்டு, பொரிந்ததும், உளுத்தம் பருப்பு, கிள்ளிய வரமிளகாய், கறிவேப்பிலை போடவும். உளுத்தம் பருப்பு சிவந்தபின் இறக்கிக் குழம்பில் கொட்டவும். வாணலியில் எண்ணெய் விட்டுக் கருவடகம் போட்டுச் சிவந்ததும், தாளித்து குழம்பில் கொட்டவும்.

தலை வாழை

மாங்காய் + பலாக்கொட்டை + முருங்கைக் குழம்பு



சமையல்!

கிராமிய மணம் கமழும் புத்தம் புதிய சமையல் பகுதி 3

கொள்ளுப் பருப்பு





தேவையான பொருள்கள்:

கொள்ளு - 100 கிராம்
புளி - எலுமிச்சம் பழம் அளவு
சிறிய வெங்காயம் தோல் உரித்தது - 3
தட்டிய வெங்காயம் - 50 கிராம்
மிளகு - 1 டீஸ்பூன்
சீரகம் - 2 டீஸ்பூன்
தனியா - 1 டீஸ்பூன்
வரமிளகாய் - 3 அல்லது 4
கருவடகம் - 2 டீஸ்பூன்
கடுகு - 1 டீஸ்பூன்
கறிவேப்பிலை - சிறிது

செய்முறை:

முதலில் கொள்ளைச் சுத்தப்படுத்தி கல் நீக்கி அரித்து, தண்ணீர் நிறைய விட்டு, குக்கரில் ஆறு அல்லது ஏழு விசில் விடவும். ஒரு வாணலியில் எண்ணெய் விட்டு மிளகு, சீரகம், மல்லி, வர மிளகாய் முதலியவற்றை நன்றாக வறுக்கவும்.

வாணலியில் இரண்டு டீஸ்பூன் எண்ணெய் விட்டு முழு வெங்காயத்தை வதக்கவும். பிறகு மிளகு, சீரகம், தனியா, வரமிளகாயுடன் வதக்கிய வெங்காயம் சேர்த்து தண்ணீர் தெளித்து அரைக்கவும். அரைத்த விழுதுடன், வேக வைத்த கொள்ளு போட்டு மிக்ஸியில் ஒரு சுற்று சுற்றவும். இந்த விழுதில் புளி கரைத்து விட்டு உப்பு, மஞ்சள் தூள் போட்டுக் கொதிக்க வைக்கவும். நன்றாகக் கொதித்ததும் எண்ணெயில் கடுகு, கருவடகம், வரமிளகாய், கறிவேப்பிலை தாளித்துக் கொட்டவும். தட்டிய வெங்காயத்தை எண்ணெயில் வதக்கிக் குழம்பில் கொட்டவும்.

மற்றொரு முறை:- அரைத்த விழுதில் வேக வைத்த கொள்ளு போட்டு மிக்ஸியில் ஒன்று அல்லது இரண்டு சுற்றுச் சுற்றி எடுத்து சிறிது தண்ணீர் விட்டும் கொதிக்க வைக்கலாம். (புளி கரைசல் சேர்க்காமல் கொதிக்க வைக்கலாம்.) பிறகு கடுகு, கருவடகம், கறிவேப்பிலை போட்டுத் தாளிக்கவும். தட்டிய வெங்காயம் எண்ணெயில் வதக்கிப் போடவும்

சுட்ட கத்தரிக்காய் பச்சடி



தேவையான பொருள்கள்:

பெரிய கத்தரிக்காய் - 2, புளிப்பில்லாத தயிர் - 1 அல்லது 2 கப், உப்பு - தேவைக்கு, பச்சை மிளகாய் - 1

தாளிக்க

எண்ணெய் - 2 டீஸ்பூன், கடுகு, உளுத்தம் பருப்பு - தலா ½ டீஸ்பூன், வரமிளகாய் - 1, கருவடகம் - சிறிது, கொத்துமல்லித் தழை, கறிவேப்பிலை - சிறிது

செய்முறை:

கத்தரிக்காயை அடுப்பின் தணலில் நேரடியாகச் சுடவும். எல்லாப் பக்கமும் கத்தரிக்காயைத் திருப்பிவிட்டு நன்றாகச் சுட்டு, தோலுரித்து மசிக்கவும். இதில் கடைந்த தயிர், உப்பு, கொத்து மல்லித் தழை சேர்க்கவும்.

வாணலியில் எண்ணெய் விட்டு கடுகு போட்டு பொரிந்ததும், உளுத்தம் பருப்பு, வர மிளகாய் பச்சை மிளகாய் கிள்ளி போடவும். உளுத்தம் பருப்பு சிவந்ததும் கறிவேப்பிலை போட்டு இறக்கி பச்சடியில் தாளித்ததைச் சேர்க்கவும். வாணலியில் எண்ணெய் விட்டு, கருவடகம் போட்டுச் சிவந்ததும் பச்சடியில் போட்டுக் கலக்கி விடவும்.

இஞ்சி புளி



தேவையான பொருள்கள்:

இஞ்சி - 25 கிராம் (1 பெரிய துண்டு), பச்சை மிளகாய் - 2, காய்ந்த மிளகு - 1, புளி - எலுமிச்சம் பழம் அளவு, வெல்லம் - சிறிது, மஞ்சள் தூள் - ½ டீஸ்பூன், உப்பு - தேவைக்கு

தாளிக்க:

எண்ணெய் - 1 டீஸ்பூன், கடுகு , உளுத்தம் பருப்பு, கடலைப் பருப்பு - தலா ½ டீஸ்பூன், கிள்ளிய வரமிளகாய் - 1

தயிர் குறுக்கு



இது ஒரு 'சைட் டிஷ்'. சாதத்தில் பிசைந்து சாப்பிடலாம். (மோர்க் குழம்பு மாதிரி)

செய்முறை:

நேந்திரங்காயைத் தோல் சீவி சிறு துண்டுகளாக நறுக்கவும். நறுக்கிய துண்டுகளைத் தேவையான தண்ணீர் விட்டு உப்பு, மஞ்சள் தூள் போட்டு (முக்கால் வேக்காடு) வேக வைக்கவும்.

தேங்காய்த் துருவல், குறுமிளகு, தண்ணீர் தெளித்து விழுதாக அரைக்கவும்.

வேக வைத்த நேந்திரங்காயைத் தயிரில் கலக்கி, அடுப்பில் வைத்து கலக்கிக்கொண்டே இருக்கவும். தயிர் பிரியாமல் இருக்க, கலக்கிக் கொண்டே சுண்ட வைக்கவும்.

பிறகு காய் வெந்தபின் இறக்கி பின் தேங்காய் எண்ணெய், கடுகு, உளுத்தம் பருப்பு, வர மிளகாய், கறிவேப்பிலை தாளித்து சேர்க்கவும்.

குறிப்பு: தயிர் பிரியாமல் இருக்க, கலக்கிக் கொண்டே இருக்கவும். குழம்பு கெட்டியான பின்பு, பூத்து வரும்போது இறக்கி, பிறகு தாளிக்கவும்.

தேவையான பொருள்கள்

நேந்திரங்காய் - 1 காய், மஞ்சள் தூள் - ½ டீஸ்பூன், தயிர் - ½ படி (தயிரில் 1 டீஸ்பூன், சர்க்கரை போட்டுக் கலக்கவும்.), தேங்காய் எண்ணெய், கடுகு, உளுத்தம் பருப்பு, வர மிளகாய் கறிவேப்பிலை - தேவையான அளவு தேங்காய்த் துருவல் - 1 டேபிள் ஸ்பூன், குறுமிளகு - 1 டீஸ்பூன் (அவரவர் காரத்துக்கேற்ப)

செய்முறை:

முதலில் இஞ்சியைக் கழுவித் தோல் சீவி, பொடியாக நறுக்கவும் வாணலியில் எண்ணெய் விட்டு, பச்சை மிளகாயை நறுக்கி வதக்கவும். இஞ்சியை மிக்ஸியில் அரைத்தும் (அல்லது) அம்மியில் அரைத்தும் எண்ணெய் வதக்கலாம். நன்றாக வதக்கியபின் புளியைக் கெட்டியாகக் கரைத்து விடவும். உப்பு, மஞ்சள் தூள், வெல்லம் சேர்த்து தண்ணீர் விட்டுக் கொதிக்க விடவும். வாணலியில் எண்ணெய் விட்டு கடுகு போட்டு பொரிந்ததும், உளுத்தம் பருப்பு, கடலைப் பருப்பு, வர மிளகாய்த் தாளித்து குழம்பில் போடவும். அல்லது இஞ்சி, பச்சை மிளகாய் வதக்குவதற்கு முன் தாளிக்கலாம். குழம்பு புளியின் பச்சை வாசம் போக நன்றாகக் கொதித்துக் கெட்டியான பின் இறக்கவும்.

பயன்கள்: இஞ்சி ஜீரணத்துக்கு நல்லது. இதனை 'சைட் டிஷ்' ஆக குழம்பு போல செய்யலாம். தயிர் சாதத்துக்கும் தொட்டுக் கொள்ள உகந்தது.

- (விருந்து தொடரும்)

அந்த

வாழ்க்கை

உலகின் இக்கரையில் இருப்பவர்களுக்கு அமெரிக்க வாழ்க்கை சுகமானது என்ற ஏக்கம் சில சமயங்களில் தோன்றக் கூடும். அக்கரையில் இருப்பவர்களுக்கு, 'சொர்க்கமே என்றாலும் நம்மூரைப் போல வருமா?' என்று சில சமயங்கள் தோன்றும்.

எக்கரையில் இருந்தாலும், நம்மூர்ப் பெண்களுக்கு குடும்பப் பொறுப்பும் குடும்பம் மீது கொண்ட அக்கறையும் மாறாது. இருந்தும் அக்கரையில் இருப்பதால், வாழ்க்கை முறையில் பெரிய மாற்றங்கள் இருக்கின்றனவா?

வட அமெரிக்காவில் வாழும் நம்மூர்ப் பெண்கள் சிலர், தங்கள் வாழ்க்கை பற்றி சில கருத்துகளைப் பகிர்ந்து கொள்கிறார்கள்.

அவர்களிடம் கேட்கப்பட்ட பொதுவான கேள்விகள்:

- நீங்கள் கண்டம் தாண்டி இருப்பதால் மிஸ் பண்ணும் சில விஷயங்கள்?
- அமெரிக்காவில் உங்களுக்குப் பிடித்த விஷயங்கள்?
- ஒரு மனைவியாக இங்கே வாழ்க்கை எப்படி இருக்கிறது?
- ஒரு தாயாக இங்கே உங்கள் வாழ்க்கை எப்படி இருக்கிறது?
- ஒரு பெண்ணுக்கு எங்கே போனாலும் மாறாத சில விஷயங்கள்?
- 'ஆஹா சென்னை' என்று ஏங்கும் விஷயம்?

இந்து கார்த்திக், ஆர்லேண்டோ

மிஸ் பண்ணுவது: உறவினர்கள், கும்பலான தி.நகர் கடைத்தெருக்கள், கல்யாண இலை சாப்பாடு.

இங்கே பிடித்தது: நட்புணர்வு கொண்ட மக்கள், சட்டத்துக்கு மட்டும் பயந்தில்லாமல் பொதுவாகவே நியாயமான வாழ்க்கைப் போக்கு

மனைவியாக: இங்கும் சவால் நிறைந்த வாழ்க்கை தான். வெளி உலகையும், வீட்டையும் சமாளிக்க வேண்டிய நிலைமை. பல மைல் தூரம், பிள்ளைகளை வகுப்புகள் அழைத்துச் செல்வதிலிருந்து பாத்திரம் தேய்ப்பது வரை வேலைக்கு ஆள் எதிர்பார்க்க முடியாதென்பது அதிக சவால்.

தாயாக: நம்மைச் சார்ந்தவர்கள் இல்லாத தூரத்து





தேசம் என்பதால் குழந்தைகள் மீது முழுமையான கவனம் செலுத்த முடிகிறது. அதே நேரத்தில் தனியாக இருப்பதால் குடும்ப வாழ்க்கையில் பெரியவர்கள் எங்களை வழி நடத்திச் செல்ல முடியாத நிலை வெறுமையைத் தோற்றுவிக்கிறது.

பெண்ணால் மாறாதது: - மனைவியாகவும் தாயாகவும் செய்ய வேண்டிய கடமைகள் எந்த கண்டத்திலும் மாறுவதில்லை.

'ஆஹா சென்னை': தி.நகர் ரங்கநாதன் வீதியின் நெரிசலில் நீண்ட நேர ஷாப்பிங்

• உஷா ராமகிருஷ்ணன்

நமக்காக நேரம் ஒதுக்கக்கூடிய சுதந்திரம்!

மனைவியாக: என் வேலை, என் கணவன் என் குழந்தை என்பதான அமைதியான வாழ்க்கை

தாயாக: கல்விமுறை வாழ்க்கையோடு ஒன்றிப் போவதாக அமைந்திருப்பதும் குழந்தைகளின் நண்பர்களுடைய பெற்றோர்கள், குடும்ப நண்பர்களாய் அமைவதும் ப்ளஸ். குழந்தைகளைத் தன்மையாகவும், நம் கலாசாரத்தை விட்டுக் கொடுக்காமல் அமெரிக்க நாகரிகத்தின் நன்மைகளை மட்டும் கிரகிக்கச் செய்ய வைப்பதும் தாய் என்னும் பொறுப்பில் சவால்.

பெண்ணென்றால் மாறாதது - நம்பிக்கை, ஆரோக்கியம் மற்றும் மகிழ்ச்சி கொண்ட குடும்பத்தைப் பேணுவது.

ஆஹா சென்னை: மெரினா பீச் சுண்டல்!

நாட்டுல எப்படி?

டாக்டர். உமா ஜி ஐயர், கெயின்ஸ்வில்

மிஸ் பண்ணுவது: கோயில்கள், கச்சேரி மற்றும் தென்னிந்திய கலை நிகழ்ச்சிகள், உறவினர்களோடு கூடிய சுப தினங்கள், நிகழ்ச்சிகள்.

இங்கே பிடித்தது: தனிமை,





ஷாந்தி ராகவன், நியூ ஜெர்ஸி

மிஸ் பண்ணுவது: லைவ்லியான நம்மூர் (சென்னை மாதிரி வருமா!); அப்புறம் எங்கள் உற்றார் உறவினர்.

இங்கே பிடித்தது: பதவி பணத்தைப் பார்க்காமல் மனிதர்களுக்குத் தரப்படும் மரியாதை; எந்த வேலை செய்தாலும் அதில் காணப்படும் தரம்!

மனைவியாக: நிச்சயம் பாஸிடிவான சூழ்நிலைதான்; குறிப்பாக கணவரானவர், குடும்பத்துப் பொறுப்புகளைப் பகிர்ந்து கொள்வது இங்கே வித்தியாசமாகப் பார்க்கப்படுவதில்லை!

தாயாக: அங்கே, நம் பண்டிகைகள், சம்பிரதாயங்கள், வாழ்க்கை நெறிகள் எல்லாம் இயற்கையாக குழந்தைகளுள் ஊறி விடும் சூழ்நிலை இருக்கிறது; இங்கே குழந்தைகளுக்கு நம் கலாசாரத்தை முயற்சி எடுத்து புகுத்த வேண்டியிருக்கிறது!

பெண்ணென்றால் மாறாதது- நம் பொறுப்புகள்; குடும்பத்துக்காக முதலில் தியாகம் செய்ய வேண்டியது பெண்கள் தான் என்ற மனநிலை!

ஆஹா சென்னை - தெருமுனைப் பிள்ளையார்!



வித்யா சுதாகர், டொராண்டோ

மிஸ் பண்ணுவது: நெருங்கிய சொந்தங்கள் மற்றும் நட்பு வட்டம்; குடும்பத்தில் நடக்கும் நல்ல நிகழ்ச்சிகளுக்கு இல்லையென்றாலும், துக்க நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள முடியாத நிலைதான் என்னை பாதிக்கிறது.

இங்கே பிடித்தது: மின்சாரம், மற்றும் தண்ணீர் போன்றவை குறைவின்றிக் கிடைப்பது. ஒரு குழந்தையின் திறமை மற்றும் ஆர்வத்தை ஆதாரமாகக் கொண்ட கல்வி முறை.

மனைவியாக - வேலை பார்க்கும் பெண்ணின் தினசரி சவால்கள் கிட்டத்தட்ட அதே தான். ஆனால் குடும்பச் சூழ்நிலைக்கு ஏற்ப வேலை நேரம் இங்கே பிரபலம்.

தாயாக - யாருடைய உதவியும் இல்லாமல் குழந்தைகள் தங்கள் வேலைகளைச் சுயமாக செய்யப் பழக்குவது; இது, அவர்களது தன்னம்பிக்கையை வளர்க்கிறது.

பெண்ணென்றால் மாறாதது: வேலை பார்க்கும் பெண்களின் சாமர்த்தியமான நேர நிர்வாகம்!

ஆஹா சென்னை: மார்கழி மாத இயல்-இசை-நாடகம்!

என்றும் உங்களுடன்

மங்கையர் மலர்

வழங்கும்

சுற்றுலா புதிர் – 7

ரூ. 5,000 பரிசு

காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரை இயற்கை அழகும் பாரம்பரியப் பெருமையும் கொண்டு பார்ப்போரை வியக்க வைக்கிறது நமது இந்தியா!

கீழே சுற்றுலா வழிபாட்டுத் தலங்கள் பத்து உள்ளன. அவற்றை உருவாக்கியதில் பெரும் பங்கு வகித்தவர்களின் பெயர்கள் அந்தத் தலங்களுக்கு எதிரே மாறுபட்ட வரிசையில் உள்ளன. அவற்றை சரியாகப் பொருத்துங்கள்.





பொருத்துக:

1) மகாபலிபுரம்	- அக்பர்	☐
2) ஃபதேபூர் சிக்ரி	- மார்த்தாண்ட வர்மர்	☐
3) புரந்தர்	- கரிகால சோழன்	☐
4) ஜந்தர் மந்தர், ஜெய்ப்பூர்	- நரசிம்ம பல்லவர்	☐
5) செங்கோட்டை	- சிவாஜி	☐
6) லலித மகால், மைசூர்	- அசோகர்	☐
7) அனந்தபத்மநாபசுவாமி ஆலயம், திருவனந்தபுரம்	- கிருஷ்ணராஜ உடையார்	☐
8) சாஞ்சி	- ஜெய்சிங்	☐
9) கல்லணை	- குலசேகரப்பாண்டியன்	☐
10) மதுரை மீனாட்சியம்மன் கோயில்	- ஷாஜகான்	☐

தொகுப்பு: ஜி.எஸ்.எஸ்.

போட்டி விதிகள் :

சுற்றுலா சம்பந்தப்பட்ட விடைகளை நிரப்பி இந்தப் பக்கத்தைக் கத்தரித்து அனுப்புங்க. ஒருவரே எத்தனை கூப்பன்களை வேண்டுமானாலும் அனுப்பலாம். ஜெராக்ஸ் கூடாது.

அனுப்ப வேண்டிய முகவரி : சுற்றுலா போட்டி - 7 மங்கையர் மலர்,
47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 032.
கடைசித் தேதி : 15.8.2010

பெயர்: .... விலாசம்: ....
....
....
தொலைபேசி எண் : .... ஈ-மெயில்:..............................

கனவுகள் இலவசம்!

● நினைவுகள்
வீசப்படுவதால்
காயப் படுகிறேன்
ஞாபகக் கற்களை
வலிக்காமல் வீசு!

● இப்போதைய
விற்பனையில்
கனவுகள் இலவசம்
காதலை
வாங்கி விடு!

● தணியவில்லை தாகம்;
பெருகிய கவிதைகளாய்
தூறலிட
மேகம் கொண்டு வா!

● நீ பிரிந்து போகும்
தூரத்தில்தான்
அசைக்கப்படுகிறது
என் காதலின்
ஆணி வேர்!

● ஊடலில் உடைந்த
ஆசைக் குமிழிகளை
அமிழ்த்தியபடியே
குடிக்கிறது
மனக் குளம்!

● பூக்களோடு
பேசிக் கொண்டிருக்கிறேன்
உன்னைப்
பார்த்தபடியே...

● என் தோள்களின்
வலிமை
இதயத்திற்கும்
இருக்கிறது
தைரியமாய் குடியேறு!

- தமிழ்நாயகி,
சன்னியாசிகுண்டு போஸ்ட்



கவிதை

பக்தி



சுவரில்

பண்டைக் காலத்தில் பண்டரிபுரத்தில் பணக்கார பாண்டுரங்க பக்தர், தமது மனைவியுடன் வாழ்ந்து வந்தார். அவர் சிறந்த கொடையாளியும் கூட! அவர் சதாகாலம் கடவுள் நாமத்தையே ஸ்மரித்துக்கொண்டிருந்தார். அவர் பகவத்கீதையின் ஒன்பதாவது அத்தியாயத்தில் வரும்

''அனன்யாஸ்சிந்தயந்தோ மாம், யே
ஜனா: பர்யுபாஸதே;
தேஷாம் நித்யாபியுக்தானாம் யோக
க்ஷேமம் வஹாம்யஹம்''

என்கிற ஸ்லோகத்தை வீட்டின் சுவர்களில் அங்கங்கே எழுதி வைத்திருந்தார். வீட்டிற்கு வருபவர்கள் எல்லாருமே அதைப் படித்துப் பயன் பெற வேண்டுமென்பதே அவர் நோக்கம். ''கடவுள் ஒருவரேதான் நம் யோகக்ஷேமங்களைக் கவனிப்பவர்'' என்று எல்லோரிடமும் சொல்லி மகிழ்வார். தனது செல்வம் அனைத்தையும் வாரி வழங்கினார். பழம் பழுத்த மரம்போல் தன்னை அண்டியவற்கு அடைக்கலம் அளித்தார். நாளடைவில் பணத்தையெல்லாம் இழந்து வறிய நிலைமைக்குத் தள்ளப்பட்டார். நோய் தாக்கி, படுத்த படுக்கையானார்.

''நாம் எங்கேயாவது சென்று பிச்சையெடுத்தால்தான் பிழைக்க முடியும்'' எனப் புலம்பினாள் அவரது மனைவி. அவளது கணவரோ, எதற்கும் செவி சாய்க்காமல் முதலில் குறிப்பிட்ட அதே பகவத்கீதை ஸ்லோகத்தையே ஓயாமல் உச்சரித்து வந்தார். அவர் மனைவி மனம்நொந்துபோய்



விரைவில் திருமணம் நடக்க..

எல்லா சிவ ஆலயங்களிலும் ஸ்ரீ ஸப்த மாதர்கள் சன்னிதி இருக்கும். அதில் ஸ்ரீ வாராஹி அம்மனுக்கு அபிஷேகம் செய்து, செந்நிற பாவாடை சாற்றி, வெள்ளிக்கிழமைதோறும் அரளிப்பூ அர்ச்சனை செய்து வரவும். விரைவில் திருமணம் நடக்கும். ஆடி வெள்ளி அதிக விசேஷம்!

- சியாமளா ராஜகோபால், சென்னை

தீற்றிய கரி!



பிச்சை கேட்கப் போகுமுன்பு, சுவரில், ஸ்லோகம் எழுதியிருந்த பக்கமெல்லாம் கரியைத் தீற்றி விட்டுப் போனாள். நன்றாக வாழ்ந்த அதே ஊரில் உடல் குறுகி, கை நீட்டிப் பிச்சை கேட்டாள். ஆனால், உதவும் கரங்கள் இன்றி இழிவுபட்டாள்.

வேதனையுடன் வீடு திரும்பிய மனைவிக்குப் பேராச்சரியம் ஒன்று காத்திருந்தது. வீடு முழுதும் அறுசுவைப் பலகாரங்களும், ஆடை ஆபரணங்களும், தானிய மூட்டைகளும் நிரம்பி வழிந்தன.

''நீ சென்ற பின்னர் பேரழகனான ஓர் இளைஞன் வண்டியில் வந்து, ''இதையெல்லாம் உங்கள் இருவருக்காகக் கொண்டு வந்தேன்!'' என்று சொல்லி, எனக்கு உணவு ஊட்டிவிட்டுப் போனான். அவன் கை பட்டதில் என் நோய் தீர்ந்து, முதுமை நீங்கி, உடல் திடகாத்திரமாகிவிட்டது. இதோ, பார்! இதுதான் அவன் வந்துவிட்டுப் போனதற்கு அடையாளம்'', என்று கூறி, வீட்டுச் 'சுவரைக் காண்பித்தார். அவள் பிச்சைக்குப் போகும்முன் கோபத்தில் பூசியிருந்த கரியைக் காணவில்லை. மீண்டும் அர்ஜுனனுக்குக் கண்ணன் உரைத்த கீதையின் ஸ்லோகம் அழகாக எழுதப் பட்டிருந்தது! கணவனின் நோயும், முதுமையும் விலகியதைக் கண்ட பத்தினி, தானும் அந்த தெய்விக உணவைப் புசித்து இளமையும் ஆரோக்கியமும் அடைந்தாள்.

தேவைக்கு அதிகமாக உள்ள தானியங்களை அண்டை அயலாருக்குப் பகிர்ந்தளித்து, அவர்களிடம் நடந்தது என்ன என்று விசாரித்தாள். அவர்கள், ''மன்மதனைத் தோற்கடிக்கும் அழகன் வந்தான். ஆனால் ஏனோ அவன் முகத்தில் ஆங்காங்கே கரித்திட்டுக்கள் இருந்தன. வண்டி நிறையப் பொன்னும், மணியும் கொண்டுவந்து கொடுத்து, உன் கணவருக்கு உணவு ஊட்டிவிட்டுச் சென்றானே, நீ பார்க்கவில்லையா?'' என்று கேட்டனர்.



பக்தரின் மனைவி, தன் பிழையை உணர்ந்து, அந்தரங்க பக்தியுடன் பாண்டுரங்கனைத் துதித்தாள். தன் வாழ்நாள் முழுவதும் கண்ணன் நினைவில் திளைத்தாள்.

- கே. நிருபமா,
புனே

இம்மாத மெனு!

ரூ.300/- பரிசு பெறும் ரெஸிபிகள்!

அரை மணி நேரத்தில் அசத்தலான பிஸிபேளாபாத்...
"சாப்பிட வாருங்கள்" என அழைக்கும் ஃப்ரூட் புலாவ்...
எண்ணெய் இல்லாத ஹெல்தி கிச்சடி...
கமகமக்கும் கதம்பப் பொங்கல்...
மஷ்ரூம் - சோயா கூட்டணியில் சத்தான சூப்!





எலெக்ட்ரிக் குக்கர் சமையல்

ஈஸி பிஸிபேளா பாத்

தேவையான பொருள்கள்:

அரிசி - 1 கப், துவரம் பருப்பு - ¾ கப் கெட்டி புளிக்கரைசல் - 2½ கப், கேரட் - 1, பீன்ஸ் - 50 கிராம், உருளைக்கிழங்கு - 2 (சிறியதாக), பச்சை பட்டாணி - சிறிதளவு, முருங்கைக்காய் - 1, வெல்லம் - சிறிதளவு

வறுத்துப் பொடிக்க:

தனியா - 2 டேபிள் ஸ்பூன், மிளகாய் வற்றல் - 5 (அ) 6, கடலைப் பருப்பு - 1 டேபிள் ஸ்பூன், வெந்தயம் - 1 டீஸ்பூன், பட்டை - சிறிதளவு, ஏலம் - 2, கிராம்பு - 1, கொப்பரைத் துருவல் - ¼ கப்

தாளிக்க:

கடுகு, கறிவேப்பிலை, நெய் - 2 டேபிள் ஸ்பூன், உடைத்த முந்திரிப் பருப்பு 6, நல்லெண்ணெய் - 2 டேபிள் ஸ்பூன்

குக்கரி



செய்முறை:

துவரம் பருப்பை வெந்நீரில் அரை மணி நேரம் ஊற வைக்கவும். காய்களைச் சதுரத் துண்டுகளாக வெட்டிக்கொள்ளவும்.

'வறுத்துப் பொடிக்க' என கொடுத்துள்ளவற்றை, வாணலியில் எண்ணெய் விடாமல் வறுத்துப் பொடி செய்து வைத்துக் கொள்ளவும். எலெக்ட்ரிக் குக்கரின் செப்பரேட்டர் பாத்திரத்தில் (சாதம் வடிக்கும் பாத்திரத்தில்) 1 டேபிள் ஸ்பூன் நல்லெண்ணெய் விடவும். இது சாதம் வெந்தபிறகு ஒட்டிக் கொள்வதைத் தடுக்கும்.

பிறகு களைந்த அரிசி , ஊற வைத்த துவரம் பருப்பு, காய்கள், புளிக்கரைசல், எல்லாவற்றையும் போட்டு சிறிதளவு நல்லெண்ணெய், மஞ்சள் தூள் போட்டு குக்கரை ஆன் செய்யவும்.

20 நிமிடம் கழிந்து சாதமும் பருப்பும் மலர வெந்திருக்கும். பிறகு உப்பு, பொடித்த சாம்பார் பொடி, வெல்லம் ஆகியவற்றைப் போட்டு, கிளறி மீண்டும் ஆன் செய்யவும். 10 நிமிடம் கழித்து வெளியே எடுத்து பருப்பு மத்தால் ஓரளவு மசித்து கடுகு, கறிவேப்பிலை தாளிக்கவும். நெய்யில் முந்திரிப் பருப்பு வறுத்து மேலே அலங்கரிக்கவும். பரிமாறும் முன், சற்று தாராளமாக நல்லெண்ணெயும், நெய்யும் விட்டால் சுவைகூடும்.

அரை மணி நேரத்தில் அசத்தலான பிஸிபேளாபாத் ரெடி. தொட்டுக்கொள்ள உருளைக்கிழங்கு சிப்ஸ் (அ) உளுந்து மாவு டாங்கர் ராய்தா சரியான காம்பினேஷன்!

- பானு ஸ்ரீதர், ஸ்ரீரங்கம்

மிக்ஸட் ஃப்ரூட் புலாவ்

தேவையான பொருள்கள்:

பாசுமதி அரிசி 1 கப், தேங்காய்ப் பால் 1 கப், தண்ணீர் 1 கப், உப்பு - ருசிக்கேற்ப, மிளகாய்த் தூள் - 1 டீஸ்பூன், நெய் - 4 டீஸ்பூன், பிரெட் துண்டுகள் - 3 ஸ்லைஸ், வெங்காயம் (நீள வாக்கில் நறுக்கியது) - 3



குக்கரி க்வீன் போட்டிக்கு வந்து குவிந்த சமையல் குறிப்புகளைப் பொறுமையாக அலசி, சிறந்தவற்றைத் தேர்ந்தெடுத்துத் தந்த மாலதி ராகவனுக்கு நன்றி!



க்வீன் கான்செப்ட் சமையல் போட்டி

தாளிக்க:

சோம்பு - சிறிது, கசகசா - சிறிது, பட்டை - 3, ஏலக்காய் - 3, லவங்கம் - 3, பிரியாணி இலை - 2, பாதாம், பிஸ்தா, முந்திரி சேர்த்து- 1 கப் வறுத்தது

பழக்கலவை:

அன்னாசிப் பழம் - 2 துண்டுகள், விதையில்லா திராட்சை - 1 கொத்து, ஆப்பிள் துண்டுகள் - 1 சிறிய கப், மாதுளை முத்துக்கள் - 1 சிறிய கப், அதிகம் பழுக்காத மாம்பழத் துண்டுகள் - 1 சிறிய கப்


செய்முறை:

பாசுமதி அரிசியை இலேசாகக் கழுவி 15 நிமிடங்கள் ஊற விடவும். எலெக்ட்ரிக் குக்கர் பேனில் தட்டைப் போட்டு நீரையும் தேங்காய்ப் பாலையும் ஊற்றி அரிசியையும் உப்பையும் சேர்க்க வேண்டும்.

வாணலியில் நெய்விட்டு தாளிக்கக் கொடுத்த மசாலாப் பொருட்களைப் போட்டுத் தாளித்து, வெங்காயத்தையும் சேர்த்து வதக்கியபின் மிளகாய்த் தூள் சேர்த்து இறக்கி குக்கரில் போட்டு மூடி குக் நிலையில் வைக்க வேண்டும்.

சாதம் வெந்ததும் குக்கர் தானாகவே 'கீப் வார்ம்' நிலைக்கு வரும். 10 நிமிடங்கள் கழித்து பாதாம், பிஸ்தா, முந்திரி சேர்ந்து, பழத்துண்டுகளையும் உடன் கலக்கவும். கடைசியாக நெய்யில் வறுத்த பிரெட் துண்டுகளைச் சேர்த்துப் பரிமாற வேண்டியதுதான். சுவையான அழகான கமகமக்கும் மிக்ஸட் ஃப்ரூட் புலாவ் அனைவருக்கும் அழைப்பு விடுக்கும் 'சாப்பிட வாருங்கள்' என!

- பி.எஸ்.ராணி சுப்ரமண்யா, மதுரை



ஹெல்தி கிச்சடி

தேவையான பொருள்கள்:

பச்சரிசி - 1 கப், பாசிப் பயறு - 1 கப் முளை கட்டியது, சோள முத்துக்கள் - ¼ கப், சீரகம் - 1½ டீஸ்பூன், மிளகு - 1½ டீஸ்பூன், கிராம்பு - 4, பட்டை - சிறிய துண்டு, கறிவேப்பிலை - ¼ கப், உப்பு - தேவையான அளவு, மஞ்சள் தூள் - ¼ டீஸ்பூன், பீன்ஸ் - 100 கிராம், கேரட் - 2, பச்சை பட்டாணி - ½ கப் (தோல் நீக்கியது), குடைமிளகாய் - 1

செய்முறை:

எலட்ரிக் குக்கரில் முதலில் குக்கர் சூடானதும் சீரகம், மிளகு சேர்த்து எண்ணெய் சேர்க்காமல் வறுக்கவும். இத்துடன் கிராம்பு, பட்டை சேர்த்து வறுத்துக்கொண்டு 3 கப் தண்ணீர் சேர்ந்து குக்கரை மூடி விடவும். தண்ணீர் நன்கு கொதித்ததும் அரிசியைக் கழுவிச் சேர்க்கவும்.

இத்துடன் பாசிப் பயறு, சோள முத்துக்கள் சேர்த்து கரண்டியால் ஒருமுறை



கிளறி மூடி வேக வைக்கவும். கரண்டியால் அவ்வப்போது கிளறி வேக வைக்கவும்: அடி பிடிக்காமல் இருக்கும். அரிசி நன்றாக ¾ பங்கு வெந்தபின் பச்சை பட்டாணி, பீன்ஸ் பொடியாக அரிந்தது, கேரட் தோல் சீவி எடுத்துப் பொடியாக அரிந்தது, குடைமிளகாய் அரிந்தது யாவற்றையும் சேர்த்து தேவையான உப்பு மற்றும் மஞ்சள் தூள் சேர்த்து கலந்து மூடி வேக வைக்கவும். அரிசி, பயறு, சோளம், காய்கறிகள் யாவும் குழைவாக வேக வேண்டும். தேவையென்றால் மேலும் ½ கப் நீர் சேர்த்து குழைவாக வெந்ததும் குக்கரை அணைத்து விடவும் அல்லது 'கீப் வார்ம்' மோடில் வைத்துக் கொள்ளலாம்.

சட்னி, சாம்பாருடன் சேர்த்துச் சாப்பிட மிகவும் சுவையாக இருக்கும். எண்ணெய் இல்லாமல் செய்வதால் வயதானவர்களுக்கும், உடல் நலம் இல்லாதவர்களுக்கும்கூட இந்தக் கிச்சடியைத் தரலாம்.

- ஜெயந்தி நாராயணன், சென்னை

சம்பா ரவை கதம்பப் பொங்கல்

தேவையானவை:

சம்பா ரவை - 1 கப்
பாசிப் பருப்பு - ¼ கப்

காய் வகைகள் பொடியாக நறுக்கியது:

கேரட் - 2 டேபிள் ஸ்பூன்
பீன்ஸ் - 2 டேபிள் ஸ்பூன்
தக்காளி - 1
வெங்காயம் - 2 டேபிள் ஸ்பூன்
இஞ்சி - ½ டீஸ்பூன்

தாளிக்க தேவையானவை

சமையல் எண்ணெய் - 1 டேபிள் ஸ்பூன், கடுகு - ½ டீஸ்பூன், உளுத்தம் பருப்பு - 2 டீஸ்பூன், கடலைப் பருப்பு - 2 டீஸ்பூன், சிவப்பு மிளகாய் - 4 பொடியாகக் கிள்ளியது, பொடித்த மிளகு, சீரகம் - 1 டீஸ்பூன், உப்பு - தேவையான அளவு, கறிவேப்பிலை, கொத்துமல்லி - 2 டேபிள் ஸ்பூன்

செய்முறை:

வாணலியில் எண்ணெய் ஊற்றிக்



காய்ந்தவுடன் கடுகு, உ.பருப்பு, க.பருப்பு போட்டு சிவந்தவுடன் மிளகாய் வற்றல் போட்டு புரட்டவும். நறுக்கிய வெங்காயத்தைச் சேர்த்து 1 நிமிடம் வதக்கவும். பின் பொடியாக நறுக்கிய மற்ற காய்கறிகளைச் சேர்த்து ஒரு நிமிடம் வதக்கவும். 1 கப் ரவையையும் பாசிப் பருப்பையும் சேர்த்து 1 நிமிடம் வறுக்கவும். சீரக, மிளகுத் தூள் சேர்க்கவும்.

எலக்ட்ரிக் குக்கரில் உள்ள பாத்திரத்தில் வறுத்த ரவையைப் போட்டு 2½ பங்கு தண்ணீர் ஊற்றி கலக்கி விடவும். தேவையான உப்பு, கறிவேப்பிலை, கொத்துமல்லி சேர்த்து கலக்கி எலக்ட்ரிக் குக்கருக்குள் வைத்து மூடி ஆன் செய்யவும்.

நன்றாக வெந்தவுடன் வெளியே எடுத்து மேலும் கீழுமாக நன்றாகக் கரண்டியால் கிளறி விட்டால், சம்பா ரவை சுதம்பப் பொங்கல் பரிமாறத் தயார்.

இன்னும் ரிச்சாக மாற்ற வேண்டுமென்றால் 2 டேபிள் ஸ்பூன் நெய்யில் சிறிது முந்திரியை வறுத்துப் போடலாம். முந்திரியால் அலங்கரிக்கலாம்.

-சுந்தர ரவீந்திரன்,
சென்னை

மஷ்ரூம் சோயா சூப்

தேவையான பொருள்கள்: பட்டன் காளான்-15, சோயா பன்னீர் (டோஃபூ) - 20 கிராம், எண்ணெய் - சிறிதளவு, பூண்டு - 10 கிராம், நறுக்கிய பச்சை மிளகாய் - 4, வெஜிடபிள் ஸ்டாக் - 2 கப் உப்பு, சர்க்கரை-சிறிதளவு, சோள மாவு - 20 கி, கொத்துமல்லி இலை நறுக்கியது - சிறிதளவு.

செய்முறை: 1. எலக்ட்ரிக் குக்கரில் சிறிதளவு எண்ணெய் ஊற்றி பூண்டு பச்சை மிளகாய் போட்டு வதக்கவும்.

2. வெஜிடபிள் ஸ்டாக்கை ஊற்றி காளான், சதுரமாக வெட்டிய சோயா பன்னீர் போட்டு போடவும். உப்பு, சர்க்கரை சேர்க்கவும்.

3. சோள மாவை தண்ணீரில் கரைத்து சற்று கெட்டியாகும்வரை ஊற்றிக் கிளறவும். குக்கரை 'ஆன்' செய்து விடவும். ஆடோமேட்டிக்காக அணைந்து விடும். சூப் பதத்துக்கு வந்ததும், கொத்துமல்லி சேர்ந்து இறக்கவும்.

4. தேவையானால் பேபி கார்ன்கூட சேர்க்கலாம்.




வெஜிடபிள் ஸ்டாக் செய்யும் முறை:

1 லிட்டர் தண்ணீருடன் நறுக்கிய 1 காரட், கைப்பிடி வெங்காயம், செலரி, வெங்காயத்தாள், இஞ்சி, பூண்டு விழுது, 1 பிரியாணி இலை, மிளகு 6 போட்டு தண்ணீர் பாதியாகும்வரை வற்ற விடவும். பிறகு வடி கட்டியில் வடிகட்டவும். மஷ்ரூம், சோயா இரண்டும் உடலுக்கு மிகவும் நல்லது. பிள்ளைகளும் விரும்பிச் சாப்பிடுவார்கள்.

- சொரூபராணி பாலா,
சேலம் - 15

ஆகஸ்ட் மாதம் எப்படி?




சந்திரன் குரு			கேது
	1.8.2010 அன்று ராசி கிரகநிலை		சூரியன்
			புதன் சுக்ரன்
ராகு			சனி செவ்வாய்


கிரக நிலை

துல்லியமான கணிப்புகளும், எளிய பரிகாரங்களும்!

கணித்து வழங்குபவர் : சுவாமி கண்ணன் பட்டாச்சார்யா



மேஷம்




(அஸ்வினி, பரணி, கார்த்திகை 1ஆம் பாதம்)

இந்த மாதம் ராசிநாதன் அங்காரக பகவானை குரு பார்வையிடுவதால் பெரும்பாலும் எல்லா வகையிலும் நற்பலன்களே தொடரும். உத்தியோகஸ்தர்களுக்கு எதிர்பார்த்தபடி இடமாற்றம், பதவி உயர்வு போன்றவை அமையக்கூடும். உயர் அதிகாரிகளின் அனுசரணையான போக்கு துணையாக இருக்கும். அரசியல்வாதிகள் மேலிடத்தின் நன்மதிப்பைப் பெறுவதில் குறியாய்ச் செயல்பட்டு வருவீர்கள்.

கலைஞர்கள் புதிய வாய்ப்புகளைப் பெற்று மகிழ இடமுண்டு. சக கலைஞர்களிடம் சுமூகமாக பழகி வருவது நல்லது. மாணவமணிகள் பாராட்டைப் பெறுவீர்கள். தொழில், வியாபாரம் நல்ல முறையிலேயே நடைபெற்று வரும். குடும்பத்தை சுமூகமாக நடத்திச் செல்வதில் பெரிதும் அக்கறை செலுத்தி பெண்கள் நற்பெயர் பெறுவீர்கள். உல்லாசப் பயணங்கள், கேளிக்கைகள் போன்றவற்றில் மனம் ஈடுபட ஆர்வம் கொள்ளும். என்றாலும் தெய்வீகச் சிந்தனைகளும் மேலோங்கி காணப்படும். பழைய நண்பர் ஒருவரை நீண்ட காலத்துக்குப் பிறகு சந்திக்கும் வாய்ப்புண்டு. உடல் உபாதை ஏற்பட்டு ஓரிரு நாளில் குணமாகி விடும்.

பரிகாரம்: சனிக்கிழமை தோறும் சனிபகவானுக்கு எள்ளன்னம் நைவேத்தியம் செய்து பிறகு அதை உடல் ஊனமுற்றவர்களுக்கு விநியோகம் செய்து வாருங்கள். சனிபகவான் அருளால் தடைகள் விலகும்.

ரிஷபம்



(கார்த்திகை, 2,3,4 ம் பாதங்கள், ரோகிணி மிருக சீரிஷம் 1,2ம் பாதங்கள்)

இந்த மாதம் ராசிநாதன் புதனுடன் சேர்ந்து சஞ்சாரம் செய்வதால் நன்மைகள் உண்டு என்றாலும் இதர கிரக சஞ்சாரத்தால் தொல்லைகளும் சேர்ந்து காணப்படும். உத்தியோகஸ்தர்கள் அன்றாடப் பணிகளில் முழுமையான கவனம் செலுத்தி வருவது அவசியம். பெற்றோர் பெருமகிழ்ச்சி அடையும் வகையில் மாணவமணிகள் படிப்பில் தீவிர அக்கறை செலுத்தி வருவீர்கள். தொழிற் பிரிவினருக்கு உழைப்பு கூடுதலாக தெரியக்கூடும் என்றாலும் அதற்கேற்ற ஊதியம் கிடைப்பதில் சிக்கல் இருக்கும். நிலைமை மாறும். வியாபாரம் ஏற்ற இறக்கமாக இருந்து வரும். கலைஞர்களுக்குப் பொருளாதார உயர்வுக்கு வழியில்லை. குடும்பத்தில் சிறு சச்சரவுகள் ஏற்படும். பெண்களின் சாமர்த்தியமான போக்கால் அவை சமாளிக்கப்படும். வாகனங்களை ஓட்டிச் செல்பவர்கள் நிதானத்தைக் கடைப்பிடிப்பது அவசியம். சிறு விபத்து நேர இடமுண்டு என்பதால் எதிலும் மிகுந்த கவனத்துடன் செயல்படுவது நல்லது. பெண்களில் சிலர் மகப்பேறு பாக்கியத்தைப் பெற்று மகிழ்வீர்கள். பெண்கள் சிலருக்கு சேமிப்பு சரியான நேரத்தில் கைகொடுக்கும்.

பரிகாரம்: தினமும் முருகப் பெருமானை வழிபடவும். தினமும் 108 முறை 'ஓம் சரவண பவ' என எழுதி வருவதன் மூலம் உங்கள் வாழ்வில் செழிப்பான நிலைமை ஏற்படும்.

மிதுனம்




(மிருகசீரிஷம் 3,4ம் பாதங்கள், திருவாதிரை புனர்பூசம் 1,2,3ம் பாதங்கள்)

இந்த மாதம் ராசிநாதன் புதனின் அனுகூலமான சஞ்சாரத்தால் நற்பலன்களையே கூடுதலாக எதிர்பார்க்கலாம். தொழிற்பிரிவினர் முன்னேற்றப் போக்கைக் காண முடியும். கூட்டுத் தொழில் செய்பவர்கள் கவனமாக இருக்க வேண்டும். உத்தியோகஸ்தர்களின் விருப்பங்கள் நிறைவேறும். மாணவமணிகள் படிப்பில் இன்னும் கூடுதலான அக்கறை செலுத்த வேண்டியிருக்கும். கலைஞர்கள் தொடர்ந்து முயற்சிகளை மேற்கொண்டால் மட்டுமே சில புதிய வாய்ப்புகளைப் பெற முடியும். வியாபாரம் சிறப்பாகவே நடை பெற்று வரும் என்றாலும் அதிக அளவில் கடன்தராதீர்கள். அரசியல்வாதிகளுக்கு பெரும் பொறுப்பான பணிகளை ஏற்க நேரும். சகோதர வழியில் சில சங்கடங்கள் ஏற்படும். தெய்விகச் சிந்தனைகள் மேலோங்கிக் காணப்படும். ஆலய தரிசனம் மேற்கொள்வது நல்லது. விலையுயர்ந்த பொருட்களைக் கையாள்வதில் கவனம் தேவை. வழக்குகளில் உங்களுக்குச் சாதகமான தீர்ப்பு கிடைக்கும். பத்திரிகை, எழுத்துத் துறையினர் ஏற்றம் பெற இடமுண்டு. ஆடம்பரப் பொருள்களை வாங்குவதில் பெண்கள் விருப்பத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது.

பரிகாரம்: புதன் கிழமைகளில் திருவல்லிக்கேணி பார்த்தசாரதி பெருமாள் ஆலயத்தில் உள்ள ஸ்ரீரங்கநாதரை துளசி மாலை அணிவித்து வணங்கி வருவதன் மூலமாக சகல முன்னேற்றங்களும் உண்டாகும்.

கடகம்



(புனர்பூசம் 4ம் பாதம், பூசம், ஆயில்யம்)

இந்த மாதம் தனஸ்தானத்தில் சஞ்சரிக்கும் புதபகவான் அருளால் பணவரவுகள் உண்டாகும். புதன் வக்ரம் அடைவதால் பணத் தேவைகள் அதிகரிக்கும். சிக்கனமாகச் செலவு செய்வதன் மூலம் பிரச்னைகளை சமாளிக்க முடியும். எதிர்பாராத இடத்திலிருந்து உதவி கிட்டும். அரசியல்வாதிகளில் சிலருக்கு பொறுப்பான பதவிகள் கிடைக்கக்கூடும். வியாபாரம் லாபகரமாகவே நடக்க வாய்ப்புண்டு. என்றாலும் வேலையாட்களால் சில சங்கடங்கள் ஏற்படக்கூடும். எனவே அவர்களிடம் கனிவாக நடந்து கொள்வது அவசியம். தங்க நகை விற்பனை ஏற்ற இறக்கமாகவே இருந்துவரும். உத்தியோகஸ்தர்களுக்கு அன்றாடப் பணிகளில் கவனம் செலுத்துவது தவிர வேறு மாற்றம் எதுவுமிராது. குடும்பத்தில் மகன் அல்லது மகளால் சிறு சங்கடம் ஏற்படக்கூடும். நீரிழிவு போன்றவற்றின் பாதிப்பில் உள்ளவர்கள் சிகிச்சைகளைக் கவனமாகத் தொடர்வது அவசியம். சிலருக்கு தேவையற்ற பேச்சுகளால் தொல்லைகள் நேரும். அரசு வழியிலும் சிலருக்குத் தொல்லைகள் ஏற்பட இடமுண்டு. மகான்களின் தரிசனம் உண்டு.

பரிகாரம்: தினமும் காலையில் சூரிய பகவானை வணங்குவதுடன், ஆதித்ய ஹ்ருதயம் ஸ்தோத்திரத்தையும் பாராயணம் செய்து வருவதன்மூலம் எல்லாச் செல்வங்களும் பெற முடியும்..

சிம்மம்




(மகம், பூரம், உத்திரம் 1ஆம் பாதம்)

இந்த மாதம் பூர்வபுண்ணிய ஸ்தானாதிபதி குரு விரயத்தில் உள்ள குருவைப் பார்வையிடுவதாலும் மாத மத்தியில் சூரியன் ஆட்சி பெறுவதாலும் பெரும்பாலும் நற்பலன்களை எதிர்பார்க்கலாம். உத்தியோகஸ்தர்களுக்கு அலுவலகம் தொடர்பான விஷயங்களில் திருப்திகரமான போக்கு தென்படும். தொழிற்பிரிவினர் சில சங்கடங்களைச் சந்திக்க நேருமென்றாலும் அது தொழில் வளர்ச்சியைப் பாதிக்காது. அரசியல்வாதிகளுக்கு செல்வாக்கு கூடும். மாணவ மணிகள் படிப்பில் தீவிர அக்கறை செலுத்தி வருவீர்கள். கலைஞர்களுக்கு முயற்சிகள் தேவை. பெண்களின் சீரான நிர்வாகத்தால் குடும்பத்தில் சிக்கல்கள் எழ இடமில்லை. வேலைக்குப் போகும் பெண்கள் பணிகளில் அக்கறை செலுத்துவது அவசியம். எங்கும் எதிலும் பொறுமையும் தேவை. சிலருக்கு வயிற்றில் புண், வயிற்றுப்போக்கு போன்ற உபாதைகள் ஏற்பட்டு நீங்கும். கைகால், வலியால் சிலர் அவதிப்பட நேரலாம். எழுத்து, பத்திரிகை போன்ற துறைகளில் உள்ளவர்களுக்கு செழிப்பான நிலை தோன்றும். புத்திர வழியில் மருத்துவச்செலவு நேரலாம். திருமண வயதடைந்த பெண்களில் சிலருக்கு திடீர் திருமண வாய்ப்பு ஏற்பட இடமுண்டு.

பரிகாரம்: **நவக்கிரக சன்னிதியில் நவக்கிரகங்களை வலம் வந்து வணங்கவும். குறிப்பாக ராகு பகவானுக்கு அர்ச்சனைசெய்து வழிபட்டு வர, வெற்றி கிடைக்கும்.**

கன்னி



(உத்திரம் 2,3,4 ஆம் பாதங்கள் அஸ்தம், சித்திரை 1,2ம் பாதங்கள்)

இந்த மாதம் ராசிநாதன் புதன் விரயஸ்தானத்தில் சஞ்சரிப்பதாலும் வக்ரம் பெறுவதாலும் நன்மையும் தீமையும் கலந்த பலன்களே நடைபெறக்கூடும். உத்தியோகஸ்தர்கள் இடமாற்றம், பதவி உயர்வு போன்ற நற்பலன்களை எதிர்பார்க்கலாம். மருத்துவம், ரசாயனம் போன்றவற்றுடன் தொடர்புள்ளோருக்கு சிறப்பான முன்னேற்றம் உண்டு. மாணவ மணிகள் படிப்பில் முன்னணி நிலையை எட்டப் பெரிதும் முயல்வீர்கள். தொழிற்பிரிவினருக்கு படிப்படியாக வளர்ச்சி கிடைக்கும். வருமானமும் திருப்திகரமாகவே இருக்கும். மூலதனத்தை அதிகரிப்பதில் நிதானம் தேவை. குடும்பத்தில் பிரச்சனைகள் எதுவும் எழாதவாறு பெண்கள் கவனமாகப் பார்த்துக் கொள்வார்கள். மனைவியின் பெயரில் சொத்துக்கள் வாங்க, முயற்சி செய்து வெற்றி காண்பீர்கள். மகன் அல்லது மகளின் தொடர்பான திருமணப் பேச்சுவார்த்தை தொடங்கப்படும். பணப் புழக்கம் திருப்தியாகவே இருக்கும். சகோதர வழியில் நன்மைகளை எதிர்பார்க்கலாம். சிலர் குடியிருக்கும் வீட்டை மாற்ற நேரும்.

2007ம் வருடம், திடீரென்று ஒருநாள் உடம்பெங்கும் வீங்கிவிட்டது. தாள முடியாத வலியால் துடித்ததோடு, மூச்சுவிடவும் சிரமப்பட்டாள். உடனே மருத்துவமனையில் சேர்த்தோம். டயாலிஸிஸ் செய்த டாக்டர், ''அம்மா...உங்கள் மகளின் கதை முடிந்துவிட்டது. உறவினர்களுக்குச் சொல்லிடுங்க!'' என்று சொன்னதும், நான் ஆடியே போய்விட்டேன். 'ஓ' என்று அழுதுகொண்டே ஐ.சி.யூ அறைக்குள் ஓடினேன். ரீனா, சுய நினைவில்லாமல் கிழிந்த நாராகக் கிடந்தாள். அவளைக் கட்டிக்கொண்டு கதறினேன். குருவானவரைத் தொலைபேசியில் தொடர்பு கொண்டு நிலைமையை விவரித்தேன். அவர், ''கவலைப்பட வேண்டாம். ரீனா எழுந்து விடுவாள். ஆண்டவருக்கு நன்றி சொல்வாள்!'' என்றார்.



அதற்குள் நிறைய நண்பர்களும் உறவினர்களும் வந்துவிட்டனர். நான் வெளியே வந்து ஜெபமாலையை எடுத்து, பிரார்த்தனை செய்ய ஆரம்பித்தேன். நான் கண்களை மூடியபோது, என் மகள் தேவாலயத்தில் சிலுவையின் முன் முழங்காலிட்டு ஜெபம் செய்வதுபோல கண்டேன். சில விநாடிகளில் அந்தக் காட்சி மறைந்துவிட்டது.

''ஐயோ, என் மகள் ஜீஸஸிடம்போய் விட்டாளோ?'' என்று பயந்து தவித்தேன்.

திடீரென்று என் அண்ணன் எழுந்து, ஐ.சி.யூ அறைக்குள் சென்று ரீனாவின் வலது காலின் கட்டை விரலைப் பிடித்து இழுத்தார். ரீனா, 'ஆ' என்று வாயைத் திறந்து மூச்சுவிட்டு, கண்களைத் திறந்து பார்த்தாள். உடலும் இயங்க ஆரம்பித்தது. நாங்கள் அழுதபடியே ஆண்டவருக்கு நன்றி சொன்னோம்.

''யாரோ என்னை 'உள்ளே போ!' என்று தள்ளிவிட்டார்கள்; என்னையும் அறியாமல் ரீனாவின் காலைப் பிடித்து இழுத்தேன்!'' என்றார் என் அண்ணன்.

அதற்குப் பின், தீவிர சிகிச்சையளிக்கப்பட்டது. ரீனா மெள்ள மெள்ள குணமானாள். டயாலிஸிஸும், மருந்துகளும் நிறுத்தப்பட்டன. செக்- அப் மட்டும் அடிக்கடி அறிவுறுத்தப்பட்டுள்ளது.

ஸ்லீ நோயால் பாதிக்கப் பட்டவர்கள் படும்பாடு நரகம் போன்றது. ஏற்கெனவே இந்த நோயின் கொடும் பிடியில் இருப்பவர்கள், உறவினர்களின் நண்பர்களின் அலட்சியத்தைத் தாங்கவே மாட்டார்கள். எனவே, இவர்களுக்குச் செய்யும் சேவையைக் கடவுளுக்குச் செய்வதாகவே நினைத்து செய்ய வேண்டும் என உங்கள் அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன். என் மகள் பூரண குணமடைவாள் என்ற நம்பிக்கையுடன் என் ஜெபமும் தொடர்கிறது. என் மகளுக்காகப் பிரார்த்தியுங்கள் சகோதரிகளே!

- எலிஸ், மலேஷியா

கொஞ்சம் மொக்கை



மரம் வெட்டிக் களைத்துப் போன
மனித
இளைப்பாற தேடினான்... ஒரு மரத்தின் நிழலை!

- என்.சௌபர் சுபுஹான்
பி.எஸ்ஸி, மூன்றாமாண்டு
சௌராஷ்டிரா பெண்கள் கலை
மற்றும் அறிவியல் கல்லூரி, மது



கோர்ட்ல சென்னை தமிழ்
பேசினா எப்படி இருக்கும்?

எஸ் மை லார்டு - என்னா நைனா

அப்ஜெக்ஷன் மை லார்டு - அடக்க்
வாசி அண்ணாத்தே

கோர்ட் அட்ஜெர்ன்ட் - இன்னொரு தப
பார்க்கலாம்.

அப்ஜெக்ஷன் ஓவர் ரூல்டு - கிளம்பு
காத்து வரட்டும்.

ஆர்டர் ஆர்டர் - ஐயோ, கம்னு குந்து...

(ஹி...ஹி...படிக்கவே பேஜாராகீது
அண்ணாத்தே)

-சரண்ராஜ், பி.எஸ்ஸி, மூன்றாமாண்டு,
நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் கலை
மற்றும் அறிவியல் கல்லூரி, மூத்த
மங்கலம், திருவாரூர்



- ஷர்மிளா, பி.எஸ்ஸி,
மூன்றாமாண்டு,
டபிள்யூ.சி.சி. பெண்கள்
கிறித்துவக் கல்லூரி, சென்னை

மங்கையர் மலர் ஆகஸ்ட். 2010

டிச்சா பொக்கை!

பூஞ்சாரல் பக்கங்கள்



"உங்களைப் போல நாலு பேரு
இருப்பதால்தான் கொஞ்சம் மழை பெய்யுது!"
"இல்லன்னா!"
"நிறைய பெய்யும்."

- கி.ஷர்மிளா,
மூன்றாமாண்டு, பிரியதர்ஷினி
பொறியியல் கல்லூரி,
வாணியம்பாடி.

ுலி தூங்கும்போது நீ எழுப்பினாலும்,
ீ தூங்கும்போது புலி எழுப்பினாலும்
பிரச்னை உனக்குதான்.
(நோ...நோ...அழக்கூடாது)

- சுபஸ்ரீ,
இறுதியாண்டு பி.ஈ.
பொன்னையா
ராம ஜெய்
பொறியியல்
கல்லூரி,
தஞ்சாவூர்



அன்று எனக்கும் மணிபர்ஸ் வாங்கும் ஆசை
வந்தது. பணம் கிடைத்ததால் அல்ல...
அவளது புகைப்படம் கிடைத்ததால்...
(ஹார்ட் டச் பண்றது இதானா)

-ரேகா, பி.எஸ்ஸி,
கம்ப்யூட்டர்
சயின்ஸ்,
முதலாமாண்டு,
அண்ணாமலை
பல்கலைக் கழகம்,
திருச்சி.





பேச நிறைய இருந்தாலும்,
ஒரு வார்த்தைகூட சொல்ல
முடியாத தவிக்கும் அந்த சுகமான வலிதான்...

... பல்லு வலி!

- ஜி. சுபா, பி.எஸ்ஸி,
பி.எட், மதுரை கலை மற்றும்
அறிவியல் கல்லூரி, மதுரை



ஒரு அணில் முன்னாடி மூணு ஆப்பிள் இருந்துச்சாம். அணில் இரண்டு ஆப்பிள் சாப்பிட்டுச்சு. ஒண்ணு சாப்பிடல... ஏன்னா அந்த ஆப்பிள் பிளாஸ்டிக்... இன்னொரு அணில் பக்கத்துல மூணு ஆப்பிள் இருந்துச்சு... அணிலும் ஒரிஜினல். மூணு ஆப்பிளும் ஒரிஜினல்... ஆனா அணில், ஆப்பிளை சாப்பிடல... ஏன்னா... ஆப்பிள் டி.வி மேல இருந்துச்சு. அணில், டிஸ்கவரி சேனல்ல இருந்துச்சு.

(ஹைய்யோ... ஹைய்யோ!)

- பிருந்தா, பி.காம் மூன்றாமாண்டு,
எஸ்.டி.என்.பி. வைஷ்ணவ் பெண்கள் கலை
மற்றும் அறிவியல் கல்லூரி, சென்னை



''படியில நிக்காதீங்கப்பா. பஸ் உள்ள தான் கடல் மாதிரி இடம் இருக்குல்ல...''

''எனக்கு நீச்சல் தெரியாதுங்களே...''

''!!!?''

- ஆர். சுகன்யலக்ஷ்மி,
பி.எஸ்ஸி மூன்றாமாண்டு
ஸ்ரீ கிருஷ்ணா கலை மற்றும்
அறிவியல் கல்லூரி, கோயமுத்தூர்

என்னைக் கட்டியவனும் இல்லை
கட்டச் சொன்னவனும் இல்லை.
இருந்தாலும் வாழ்கிறேன்.
உண்மையான காதலர்களைக்
காண்பேன் என்ற நம்பிக்கையில்...
- தாஜ்மஹால்.

- நித்யா, பி.எஸ்ஸி மூன்றாமாண்டு,
ஜி.ஜி.எஸ் கலை மற்றும் அறிவியல்
கல்லூரி, நாகப்பட்டினம்



ஐயோ ஐய்யய்யோ...

பூஞ்சாரல் பக்கங்கள்



புன்னகை... எதிரியைக்கூட நண்பனாக்கும்.

ஆனா, நீ பல் தேய்க்கலன்னா அது நண்பனைக்கூட எதிரியாக்கும்.

(அது சரி, நீங்க பல் தேய்ச்சீங்களா?)

- நந்தினி, பதினொராம் வகுப்பு, அட்டாமிக் எனர்ஜி, சென்ட்ரல் பள்ளி, கல்பாக்கம்



இதயம்

உன்னை நான் பார்த்ததும் இல்லை. என்னை நீ பார்த்ததும் இல்லை. பின்பு எதற்காக நான் வாழ நீ துடிக்கிறாய்?

- கே. ராஜலக்ஷ்மி, பி.எஸ்ஸி, கணிதம், ஏ.வி.சி. கலை மற்றும் அறிவியல் கல்லூரி, மயிலாடுதுறை



- அனுராதா, எம்.ஃபில், ஜமால் முகமது கல்லூரி, திருச்சி

போட்டிக்குத் தயாரா? [முடிவுகள்]




ரூ.100/- பரிசு பெறும் மாணாக்கர்கள்

மங்கையர் மலர் ஜூலை இதழில் வெளியான 'போட்டிக்குத் தயாரா?' கேள்விகளுக்கான சரியான விடைகள்: 1. காளஹஸ்தி, 2. தென்னாப்பிரிக்கா 3. சானியா நைவால், 4. மன்மதன் அம்பு, 5. தலை ரூ 10 இலட்சம்

பரிசு பெறுபவர்கள்

1. வெ. விஜய்கார்த்திக், பன்னிரண்டாம் வகுப்பு, ஆர்.எஸ்.கே. மேல்நிலைப் பள்ளி, பெல் காம்ப்ளக்ஸ், திருச்சி 2. எம்.திவ்யா, பி.ஈ., இறுதியாண்டு, முத்தையம்மாள் பொறியியல் கல்லூரி, இராசிபுரம். 3. அ. சுமதி, பி.காம், மூன்றாமாண்டு, ஸ்ரீராம் நல்லமணி யாதவா கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கொடிக்குறிச்சி 4. அரசி, பி.காம், ஸ்ரீபராசக்தி மகளிர் கல்லூரி, குற்றாலம், திருநெல்வேலி மாவட்டம். 5. ஆர். புவனேஷ், பி.ஈ, இறுதியாண்டு, வேல்டெக் பொறியியல் கல்லூரி, சென்னை.



✱ நேத்து உங்க ஃபோட்டோ பார்த்தேன். அழகான கண்ணு, அம்சமான மூக்கு, கூர்மையான காது... எல்லாம் சரி அது என்ன டயலாக்... 'என்னைப் பார் யோகம் வரும்'னு (*ஹி...ஹி... நல்லா பாருங்க... உங்க முகமா இருக்கப் போகுது!*)

-சங்கர்,
இரண்டாமாண்டு பி.ஈ., ஆர்.ஏ.சி. பொறியியல் கல்லூரி, திருச்சி



"ஏங்க இன்னிக்கு குழம்பு வைக்கவா? ரசம் வைக்கவா?"

"முதல்ல ஏதாவது வை. அப்புறம் அதுக்கு பேரு வெச்சுக்கலாம்."

- ம. ஹரிகிருஷ்ணன்,
பி.காம் இரண்டாமாண்டு,
முகமது சதக் கல்லூரி,
சென்னை



ஹாய், காலேஜ் பாய்ஸ் அண்ட் கேர்ள்ஸ்!

ஹாய் ஃப்ரெண்ட்ஸ், இனிமே நீங்க MMPCL (space) உங்கள் கவிதை, ஜோக்ஸ், மொக்கை (space) உங்கள் பெயர் இவற்றை டைப் செய்து 562632 என்ற எண்ணுக்கு எஸ்.எம்.எஸ் அனுப்புங்க.

1. டோனியின் மனைவி பெயர் என்ன?

....

2. மராட்டிய மாநிலத்தின் எந்த நகரில் சந்திரபாபு நாயுடு காவலில் வைக்கப்பட்டார்?

....

3. டெண்டுல்கரின் ரத்தம் பயன்படுத்தப்பட்ட அவரது சுயசரிதைப் புத்தகத்தின் பெயர்?

....

4. இசை இரட்டையர்களான பம்பாய் சகோதரிகளுக்கு மியூசிக் அகாடமியின் சார்பில் வழங்கப்படவிருக்கும் விருது எது? ....

5. 'சால்ட்' படத்தின் கதாநாயகி யார்? ....

யூத் விகடனின் பக்கங்கள்

போட்டிக்குத் தயாரா?

கடைசித் தேதி: 15.8.2010

உங்களுக்கு நாட்டு நடப்புத் தெரியுமா? இந்தக் கேள்விகளுக்கான விடைகளை எழுதி, இந்தப் பக்கத்தை நிரப்பி அனுப்புங்க. கல்லூரி அத்தாட்சி அவசியம். சரியான விடை எழுதுபவர்களில் குலுக்கல் முறையில் தேர்வு செய்யப்பட்ட ஐந்து பேருக்கு தலா ரூ.100/- பரிசும், சான்றிதழும் உண்டு.

பெயர் :.................................. வகுப்பு : .... ஈ மெயில்...........................

கல்லூரி : ....

வீட்டு முகவரி : ....

சபாஷ்

மீண்டும் சாதிக்கிறார் சுனிதா வில்லியம்ஸ். 2012ம் ஆண்டில் மீண்டும் விண்வெளிப் பயணம் செல்கிறார். கடந்த 2008ம் ஆண்டு விண்வெளிக்குச் சென்று 195 நாட்கள் தங்கி ஆய்வுகளை மேற்கொண்டவர். நான்கு முறை விண்வெளியில் 'நடந்து' சாதனை செய்தவர்.



சாய்னா நெவால் - இந்தியாவின் பெருமையை பாட்மிண்டன் விளையாட்டில் உயர்த்தும் இருபது வயது இளநங்கை. அண்மையில் இண்டியன் ஓபன், சிங்கப்பூர் ஓப்பன், இந்தோனேஷியா ஓப்பன் மூன்று போட்டிகளிலும் சாம்பியனாக வெற்றி பெற்றுள்ளார். உலகின் பாட்மிண்டன் சாம்பியன் தர வரிசையில் மூன்றாம் இடத்தில் இருக்கும் சாய்னா, ஆகஸ்ட் மாதம் பாரீசில் நடைபெறவிருக்கும் உலக சாம்பியன் பட்டத்தை வென்றுவிட வேண்டும் என்று உறுதியாக இருக்கிறார்.



ததாகத் அவ்தார் துள்சி-22 வயதே ஆன இளைஞர். பிறவி மேதையான இவர் மும்பை ஐ.ஐ.டியில் இணை பேராசிரியராகப் பதவி ஏற்றுள்ளார். நாட்டிலேயே மிக இள வயது (ஐ.ஐ.டியின்) பேராசிரியர் இவர். 9 வயதில் பள்ளிப் படிப்பையும், 10 வயதில் பி.எஸ்ஸி பட்டமும், 12 வயதில் எம்.எஸ்ஸி பட்டமும் பெற்றவர். 2003ல் உலகப் புகழ் 'டைம்' பத்திரிகையில், 'உலகின் மிகச் சிறந்த அறிவு ஜீவிகள்' ஏழு பேரில் ஒருவராகத் தேர்வு செய்யப்பட்டவர். இயற்பியலில் டாக்டர் பட்டத்தை 21 வயதில் பெற்று, இன்று பேராசிரியராகப் பதவி ஏற்றுள்ளார்.

இந்திய இளைஞர்கள், ஒரு பக்கம் நாட்டுக்குப் பெருமை தேடித் தந்தாலும் இன்னொரு பக்கம் சமீபத்திய புள்ளி விவரம் ஒன்று வருத்தம் தருகிறது. உலகிலேயே வறுமை மிக்க ஆப்பிரிக்க நாடான காங்கோவுக்குச் சமமாக அல்லது அதற்கும் கீழாக இந்தியாவில் 41 கோடிப் பேர் வறுமைக் கோட்டுக்குக் கீழே இருக்கிறார்கள்! குறிப்பாக மத்தியப் பிரதேசம், பீஹார், உத்திரப் பிரதேசம், மேற்கு வங்காளம் போன்ற மாநிலங்களில் வறுமை அதிகம்.

சென்னை இளைஞர் டி. உதயகுமார், ரூபாய்க்கான அடையாளக் குறியீட்டை வடிவமைக்கும் போட்டியில் வென்றிருக்கிறார். பழைமை வாய்ந்த தேவநாகரி மொழியில் இந்திய ரூபாய்க்கான குறியீட்டை வடிவமைத்திருக்கிறார்.

48 வருடங்களுக்குப் பிறகு, இராணுவ வீரர் ஒருவரது உடல், அவரது குடும்பத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இமாசல பிரதேசத்தைச் சேர்ந்த கரம் சந்த் கடோச், 1962ல் நடந்த இந்திய சீனப் போரில் இறந்துவிட்டார். அப்போது அவருக்கு வயது 22. காணாமல் போயிருந்த அவரது உடல், இமயமலை பனி உருகி, ஆறாக ஓடியபோது கண்டுபிடிக்கப்பட்டது!

அம்பத்தூரில் உள்ள பெண்களுக்கான ஐ.டி.ஐ பயிற்சி நிறுவனத்தில் எலக்ட்ரீஷியன் பயிற்சியில் பல பெண்கள் சேர்ந்திருக்கிறார்கள். இனி மின் பணிகளை பெண்களே செய்வார்கள்!

இருளர் இனத்தைச் சேர்ந்த பெண் தீபா. தாம்பரம் அருகே பீர்க்கங்கரணை குடியிருப்பிலேயே முதலாவதாக பள்ளி இறுதி வகுப்பை முடித்திருக்கிறார். கல்லூரியில் சேர்ந்து படிப்பைத் தொடரவிருக்கிறார்.

டெல்லியில் இந்திராகாந்தி சர்வதேச விமான நிலையத்தின் மூன்றாவது டர்மினல், சமீபத்தில் திறந்து வைக்கப்பட்டது. இதில் 168 செக்-இன் கவுண்ட்டர்கள் மற்றும் பயணிகளை இறக்குவதற்கான 78 ஏரோ பிரிட்ஜ்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. உலகின் மிகப் பெரிய விமானமான ஏர்பஸ் ஏ-380, துபாயிலிருந்து வந்து இந்த டர்மினலில் முதன்முதலாக இறங்கியது.

தங்கத்தைவிட விலை மதிப்பு மிக்கது பிளாட்டினம் என்னும் கனிமம். நாமக்கல் மாவட்டத்தில் சித்தம்பூண்டி என்ற இடத்தில் பூமிக்கடியில் அதிக அளவில் பிளாட்டினம் கனிமம் இருப்பது சமீபத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

தொகுப்பு: பத்மினி பட்டாபிராமன்

...சாய்னா!



அன்பு வாசகியர்களே...

எத்தனை நாளாச்சு உங்களையெல்லாம் பார்த்துப் பேசி? இதோ வருகிறோம் உங்களைத் தேடி. உங்களுடன் அளவளாவி, இனிமையாகப் பொழுதுபோக்கி, பரிசுகள் தந்து மகிழ வருகிறோம். மங்கையர் மலரை மேம்படுத்த உங்களை நாடி வருகிரோம்!

இம்மாத சந்திப்பு இடங்கள் :

ஊர் : **திருச்செந்தூர்**
தேதி : 14.08.10 (சனிக்கிழமை)
நேரம் : காலை 10 மணி முதல் பிற்பகல் 1 மணி வரை
இடம் : கட்டியம் ஸ்ரீ அய்யப்பர் கல்யாண மஹால், தெற்கு ரத வீதி, திருச்செந்தூர்

ஊர் : **வள்ளியூர்**
தேதி : 14.08.10 (சனிக்கிழமை)
நேரம் : பிற்பகல் 3 மணி முதல் மாலை 6 மணி வரை
இடம் : கிருஷ்ண கல்யாண மஹால், தெற்கு ரதவீதி, வள்ளியூர்

ஊர் : **அம்பாசமுத்திரம்**
தேதி : 15.08.10 (ஞாயிற்றுக்கிழமை)
நேரம் : காலை 10 மணி முதல் பிற்பகல் 1 மணி வரை
இடம் : மணிகண்டன் மஹால், வடக்கு ரத வீதி, அம்பாசமுத்திரம்

ஊர் : **தென்காசி**
தேதி : 15.08.10 (ஞாயிற்றுக்கிழமை)
நேரம் : பிற்பகல் 3 மணி முதல் மாலை 6 மணி வரை
இடம் : ஸ்ரீ மகாலக்ஷ்மி திருமண மண்டபம், தலைமை தபால் நிலையம் எதிரில், பெருமாள் கோயில் தெரு, தென்காசி

ஊர்	:	பெருந்துறை
தேதி	:	28.8.10 (சனிக்கிழமை)
நேரம்	:	காலை 10 மணி முதல் பிற்பகல் 1 மணி வரை
இடம்	:	ஹோட்டல் ஸ்ரீ பாலாஜி பவன், அண்ணாசாலை அருகில், பவானி ரோடு, பெருந்துறை

ஊர்	:	சத்தியமங்கலம்
தேதி	:	28.8.10 (சனிக்கிழமை)
நேரம்	:	பிற்பகல் 3 மணி முதல் மாலை 6 மணி வரை
இடம்	:	வசந்தம் ஹோட்டல், கோபி மெயின் ரோடு, புது பஸ் நிலையம் அருகில், சத்தியமங்கலம்



ஆறு மாத சந்தா (ரூபாய் 125/-) செலுத்தும் முதல் இருபது வாசகியருக்கு நிகழ்ச்சியின்போது சிறப்புப் பரிசு வழங்கப்படும்.

தொடர்புக்கு : 97105 52526
94444 92483

“என் பெயரை மாற்றிக்கொள்ள விரும்புகிறேன். அதற்கு என்ன வழிமுறை என்று சொல்ல முடியுமா?” என்று கேட்டிருக்கிறார் படப்பையைச் சேர்ந்த புவனேஸ்வரி.

ஒரு சிலர் வெவ்வேறு பெயர்களில் சட்டத்துக்குப் புறம்பான காரியங்களில் ஈடுபடுவது பற்றிய செய்திகளைப் படிக்கிறோம். எனவே தகுந்த காரணத்தோடுதான் சட்டப்படி ஒருவர், தன்னுடைய பெயரை மாற்றிக் கொள்ள முடியும்.

உதாரணமாக எம்.ஜெயந்தி என்ற பெயர் கொண்ட ஒரு பெண்மணி, திருமணத்துக்குப் பிறகு தன் கணவரது பெயரைத் தன்னுடைய பெயரோடு சேர்த்துக்கொண்டு ஜெயந்தி ரமணன் என்று தன் பெயரை மாற்றிக் கொள்ள விரும்பினால் அதற்குத் தடை ஏதும் கிடையாது. அதேபோல் நியூமராலஜியின்படி சிலர் தங்கள் பெயரை மாற்றிக் கொள்ள விரும்பலாம். அதிலும் பிரச்னை எதுவுமில்லை.

பொதுவாக, பெயரை மாற்றிக் கொள்ள விரும்புபவர்கள், நீதிமன்றத்தில் தக்க காரணம் காட்டி, மனு தாக்கல் செய்து, பெயரை மாற்றிக் கொள்ள வழி உண்டு. மேலும், நாளிதழ்களில் பெயர் மாற்றம் குறித்து விளம்பரம் கொடுத்து, அதன் பிறகு அரசாங்க கெஜட் இதழில் பிரசுரித்தும் பெயரை மாற்றிக் கொள்ளலாம். இதற்கென்று பிரத்யேகமான விண்ணப்பப் படிவம் உள்ளது. அரசுக் கருவூலங்களிலும், அரசு அனுமதித்த இடங்களிலும் இந்த விண்ணப்பம் கிடைக்கும். அதில் உங்கள் பெயர், விலாசம் போன்ற தகவல்களுடன் தற்போதைய பெயரை மாற்றிக் கொள்ள விரும்புகிற பெயர், மாற்றிக் கொள்வதற்கு என்ன காரணம் போன்ற விவரங்

பாலா நடராஜன்

அம்மாவின் சொத்தி

கூடுவாஞ்சேரியைச் சேர்ந்த சந்திரசேகரன், “வாரிசு உரிமை சட்டப்படி ஒருவரது சொத்தில் அவருடைய விதவைத்தாய், மனைவி, பிள்ளைகள், பெண்கள் என அனைவருக்குமே சம பங்கு உண்டு என்று குறிப்பிட்டிருந்தீர்கள். என் சந்தேகம், வாரிசு உரிமை சட்டம், அம்மாவின் சொத்து குறித்து என்ன சொல்கிறது?” என்று கேட்டிருக்கிறார்.



முன்பெல்லாம் கணவனை இழந்த பெண்களுக்கு, வசிப்பிட உரிமை மட்டும்தான் உண்டு. சொத்தில் பங்கு கிடையாது என்ற நிலை இருந்து வந்தது. மனைவி சீதனமாகக் கொண்டு வந்த சொத்து, பெண் குழந்தைகளுக்குப் போகும். ஆனால், 1937, 1956, 1989 ஆண்டுகளில் கொண்டுவரப்பட்ட சட்டங்களின் பலனாக, பெண்களுக்கும் சொத்தில் சம உரிமை கிடைத்துள்ளது. ஆக, ஒரு மனைவிக்கு சீதனமாகவோ, சுய சம்பாத்தியத்தின் மூலமாகவோ, கணவர் மூலமாகவோ அல்லது வாரிசு உரிமை

களைக் குறிப்பிட்டு விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்க வேண்டும்.

உங்கள் விண்ணப்பத்துக்கு ஒரு வரிசை எண் தரப்பட்டு, நீங்கள் உங்களுடைய பெயர் மாற்றம் குறித்து தினசரிகளில் விளம்பரம் செய்ய அனுமதி வழங்கப்படும். அதன்படி, 'இன்ன பெயர் கொண்ட, இன்னாருடைய மகனான இந்த விலாசத்தில் வசிக்கும் நான், இனி... என்ற புதிய பெயரால் அறியப்படுவேன்' என்று விளம்பரம் செய்ய வேண்டும். அதன் பிரதியை, உங்களுக்குரிய வரிசை எண்ணைக் குறிப்பிட்டு ஒரு பத்திரத்தாளில் எழுதப்பட்ட, உங்கள் புகைப்படத்துடன் கூடிய ஒரு அஃபிடவிட்டுடன் விண்ணப்பித்தால், அரசிதழில் உங்கள் பெயர் மாற்றம் குறித்து அறிவிக்கப்படும். அதன்பிறகு சட்டப்படி உங்கள் புதிய பெயரைப் பயன்படுத்தலாம்.




பதினெட்டு வயதுக்குட்பட்டவர்களின் பெயரை மாற்ற வேண்டுமென்றால், அவரது பெற்றோர் அல்லது காப்பாளர், அந்த மைனரது சார்பில் விண்ணப்பிக்கலாம்; விளம்பரம் கொடுக்கலாம். பெயர் மாற்றம் செய்யலாம்.

வாசகர் சந்தேகங்களும் சட்ட நிபுணர்களின் பதில்களும்...

பெண்ணுக்குப் பங்கு உண்டா?

சட்டத்தின்படியோ, சொத்து வரலாம். அவருடைய சொத்துக்கு வாரிசுகள் யார் என்று பார்த்தால், அது அவரது கணவர், பிள்ளைகள், பெண்கள் மட்டும்தான். அவர் பெயரில் இருக்கும் சொத்துக்களை, தன் வாரிசுகளுக்கு உயில் மூலமாகவோ, செட்டில்மெண்ட் பத்திரம் மூலமாகவோ அவர் தன் விருப்பப்படி எழுதி வைக்க முடியும். அப்படி உயில் எதுவும் எழுதி வைக்காமல் இறந்து போனால் மட்டுமே சட்டப்படியான வாரிசுகளுக்கு சொத்து சமமாகப் பங்கிட்டுத் தரப்படும்.



"வீட்டை வாடகைக்கு விடும்போது பதினொரு மாதங்களுக்கு மட்டுமே ஓர் ஒப்பந்தம் போடுகிறார்கள். ஒப்பந்தம் போடாமலே வாடகைக்கு விடுவதோ, பதினொரு மாதங்களுக்கு மேல் ஒப்பந்தம் போடுவதோ ரொம்ப ரிஸ்கா?" என்று சந்தேகம் கேட்டிருக்கிறார் திருச்சியைச் சேர்ந்த நிரஞ்சன்.

இன்றைக்கு உள்ள சமூகச் சூழ்நிலையில் வீட்டின் சொந்தக்காரர்கள் பலர், தங்கள் வீட்டை வாடகைக்கு விட்டு விட்டு, பின்னால் தங்களுடைய சொந்த உபயோகத்துக்காக அந்த வீடு தேவைப்படும்போதுகூட வீட்டில் குடியிருப்பவரை காலி செய்ய வைப்பது

மங்கையர் மலர்

தீபாவளிச் சிறப்பிதழில்...

உள்ளம்... உறவு... உலகம்!

இதயத்தை இதமாய் வருடும் தொடர் ஆரம்பம்!

நாளுக்கு நாள் இடியாப்பச் சிக்கல் ஆகிக் கொண்டிருக்கும் உறவு இழைகளைப் பற்றியும். அதன் சிடுக்குகளை விடுவித்து ஆனந்தமாய் வாழ்வது குறித்தும் உங்களிடம் பேசப் போகிறார் வாழ்வியல் ஞானி ஒருவர்...!

இன்னும் கொஞ்சம் விவரங்கள் அடுத்த இதழில்...

சிரமமாக இருக்கிறது. எனவே, ஒரு வீட்டை வாடகைக்கு விடுகிறபோது, வீட்டின் சொந்தக்காரரும், வாடகைக்குக் குடியிருக்க விரும்புகிறவரும் பேசி, எல்லா விஷயங்களையும் தீர்மானித்து அதை எழுத்துபூர்வமாக ஒப்பந்தம் செய்து கொள்வது நல்லது.

வீட்டின் சொந்தக்காரர், வாடகைக்குக் குடி இருப்பவர் இருவருக்கும் இடையிலான ஒப்பந்தம் பதினொரு மாத காலத்துக்கு மேலே போனால், அந்த ஒப்பந்தத்தைப் பதிவு செய்ய வேண்டுமென்று ஒரு விதி இருக்கிறது. ஒப்பந்த காலம், ஆண்டு வாடகை போன்றவற்றின் அடிப்படையில் இதற்குக் கட்டணம் செலுத்த வேண்டும். அதைத் தவிர்க்கவே, பதினொரு மாத காலத்துக்கு மட்டுமே ஒப்பந்தம் போட்டுக்கொண்டு, அதன் பிறகு மீண்டும் 11 மாதங்களுக்கு புது ஒப்பந்தம் போட்டுக்கொள்வது நடைமுறையாகிவிட்டது. இருபது ரூபாய் மதிப்புள்ள முத்திரைத் தாளில் இந்த ஒப்பந்தத்தைப் போட்டுக் கொள்ளலாம்.



வெளியூரில், வெளிநாட்டில் வசிக்கும் கணவரது பெயரில் வீடு இருக்கலாம். அப்போது அவரது சார்பாக அவருடைய மனைவி அல்லது மேஜரான மகன், மகள், வீட்டுக்கு குடி வருகிறவருடன் ஒப்பந்தம் போட்டுக் கொள்ளலாம்.

ஒப்பந்தத்தில் என்னென்ன விஷயங்கள் குறிப்பிடப்பட வேண்டும் என்பதை அடுத்த இதழில் பார்க்கலாம்...

தொகுப்பு: எஸ். சந்திரமௌலி



என் வயது 58. இதயம் கொஞ்சம் பலவீனம். பல வருடங்களாகவே குடலில் பெப்டிக் அல்சர் உள்ளது. அறுவை சிகிச்சை தேவையா?

- குணசேகரன், தஞ்சாவூர்

டாக்டர் வெங்கடேஷ் முனி கிருஷ்ணன் (குடல் சிகிச்சை நிபுணர்): கடந்த பத்து, பதினைந்து வருடங்களில் பெப்டிக் அல்சருக்கான சிகிச்சைகள் அபார முன்னேற்றம் கண்டுள்ளன. பொதுவாக, 'ஹெலிகோபேக்டர் பைலோரி' என்னும் பாக்டீரியாக்கள் வயிற்றில் இன்ஃபெக்‌ஷனை உண்டாக்கி, அல்சருக்குக் காரணமாகின்றன. 'ட்ரிபிள் தெரபி' எனப்படும் சிகிச்சை முறையில், அதாவது இரண்டு ஆன்டிபயாடிக், ஒரு அமிலத் தன்மை கட்டுப்பாட்டு செய்யும் மருந்து இவற்றின் மூலம் பெப்டிக் அல்சர் வெற்றிகரமாகக் கட்டுப்படுத்தப்படுகிறது. அறுவை சிகிச்சை மிக அபூர்வமாகத்தான் செய்யப்படுகிறது. உங்களுக்கு இதயம் பலவீனம் என்று குறிப்பிட்டிருப்பதால், எண்டோஸ்கோப்பி செய்து குடலின் நிலையைப் பரிசோதிப்பது நல்லது.



வாசகர்களின் சந்தேகங்களுக்கு பிரபல மருத்துவர்கள் பதிலளிக்கிறார்கள்... வாசகர்கள் தொடர்ந்து கேள்விகளை அனுப்பலாம்!

மெடிக்கல் கிட்



வாக்கிங் போக சிறந்த நேரம் எது... காலையா? மாலையா?

- பி.கோபி, கிருஷ்ணகிரி

டாக்டர் பாலசுப்ரமணியன் (பொதுநல மருத்துவர்): எப்போது ஆனாலும் வாக்கிங் நல்லதுதான். காலை நேரத்தில் காற்றில் ஓசோன் இருப்பதால் காலை நேர நடை மிக நல்லது. மாலை நேரமும் நடைப் பயிற்சிக்கு ஏற்றதுதான்.





குனிந்து, நிமிர்ந்து அதிகம் வேலை செய்வதாலு(
அதிகம் நடப்பதாலும் சர்க்கரை வியாதியே வராது என்
சொல்கிறார்களே?

- கி.பாலா, தாம்பரம் கிழக்கு

(டாக்டர் வி.எஸ். நடராஜன், ஜெரியாட்ரிக் நிபுண

அப்படி நிச்சயமாக சொல்ல முடியாது! சர்க்க
நோய் வருவதே நமது உணவுப் பழக்கங்கள் ம
றும் வளரும் முறையால்தான்! உங்கள் தின
நடவடிக்கைகளைப் பொறுத்தும் இது அமைகிறது. பாரம்பரியம் வேறு காரணமாகிறது. ஆனால் நீண்ட நடைப்பயிற்சி, உணவுப் பழக்கங்களால் சர்க்கரையைக் கட்டுப்படுத்த முடியும். அவ்வளவுதான்.



நான் அலுவலக வேலையாக மாதமிருமுறை நீண்ட தூர பேருந்து பயணம் மேற்கொள்வேன். ஆரம்பத்தில் ஏற்பட்ட முதுகு வலி நாளடைவில் அதிகமாகிவிட்டது. தற்போது ஓய்வு நேரத்தில் சிறிது நேரம் உட்கார்ந்திருந்தாலே வலி ஏற்படுகிறது? இதற்கு என்ன காரணம்?

- சேகர், ஈரோடு

டாக்டர் கார்த்திக் கைலாஷ் (எலும்பு முறிவு சிகிச்சை நிபுணர்):

உங்களுக்கு முதுகு தண்டு வடத்தில் பிரச்னை இருக்கலாம். உங்களது வயதைக் குறிப்பிடவில்லை. ஆனால், தற்போது நாற்பது வயதுக்கு மேல் முதுகுவலி வருவது அதிகமாகிவிட்டது. நீங்கள் பிரயாணம் செய்யும்போது கிடைக்கும் இடைவெளியில் சில நிமிடங்கள் நிற்கலாம். நடக்கலாம். இதனால் வலியின் பாதிப்பு சற்றுக் குறையும்.



ஓய்வு நேரத்திலும் அதிக வலி இருந்தால் நீங்கள் மருத்துவரை அணுகுவதுதான் நல்லது.

என் வயது 34. திருமணமாகி எட்டு வ
டம் ஆகிறது. குழந்தைகள் இல்லை. முத
முறை பரிசோதனை செய்யும்போது கரு
குழாய் அடைப்பு இல்லை என்றார்கள். சி
வருடங்கள் கழித்து பரிசோதனை செய்தபோ
கருக்குழாய் வலதுபுறம் அடைப்பு இருந்த
ஐ.யூ.ஐ (இன்ட்ரோ யூடிரைன் இன்செ
னேஷன்) முறையில் நான்குமுறை முயற்சி
தும் பயனில்லை. இப்போது லாப்ரா
கோப்பி மூலம் அடைப்பை நீக்கி விட்
ஐ.யூ.ஐ சிகிச்சை செய்யலாம் என்கிறார்க
முயற்சி செய்யலாமா?

- எஸ். தமிழ்ச்செல்வி, மதுை

டாக்டர் அமுதா ஹரி (மகப்பேறு மருத்து நிபுணர்): லாப்ராஸ்கோப்பி மூலம் உங்க
கருக்குழாய் எவ்வளவு தூரம் பாதிக்கப்பட்டு
ளது என்பதை கண்டுபிடிக்கலாம். சில சமய
களில் லாப்ராஸ்கோப்பி மூலம் அடைப்ப
நீக்கவும் முடியும். ஆனால் அது அடைப்பி
தன்மையைப் பொறுத்தது. அடைப்பை நீக்
முடிந்தால், பின்னர் தாராளமாக ஐ.யூ.ஐ செய்து கொள்ளலாம். இதனால் குழந்தை பிறக்க வாய்ப்பு உண்டு.



தொகுப்பு:
பத்மினி பட்டாபிராமன்

என்றும் உங்களுடன்
மங்கையர் மலர்

VBC Jewellery
HOUSE OF VUMMIDI

இணைந்து வழங்கும்

'வைர மங்கை'

-சிறப்பு சந்தா திட்டம்!*



ரூ.1500/- மதிப்புள்ள பரிசு கூப்பன்களைப் பெறும் ஜூலை மாத முதல் மரகத மங்கைகள்!




பிரியமுள்ள ஆசிரியருக்கு...

வணக்கம்... ஆகஸ்ட் 1 எனது பிறந்த நாள். இந்த நாளில் மிகுந்த மனநிறைவை உணர்கிறேன். அதற்கு வழி ஏற்படுத்தித் தந்த மங்கையர் மலருக்கும் நட்பு வட்டத்தில் சந்தா கேட்டவுடன் ''ஓ... மங்கையர் மலரா முகவரி எழுதிக்கோ'' எனச் சொல்லி என்னை உற்சாகப்படுத்திய மலர்களுக்கும் (முத்து மங்கையர்களுக்கும்) நன்றிகள். நினைத்தேன்... முடிப்பேன்... ஜெயிப்பேன்... **- சுசீலா அரவிந்தன்**



பிரியமுள்ள ஆசிரியருக்கு...

நான் வசிப்பது பின் தங்கிய கிராமமான சேலம் பக்கத்திலிருக்கும் மல்லூர் கிராமம். இருபது வருடங்களாக எனக்கு உற்ற தோழி மங்கையர் மலர்தான். என்னை மேன்மைபடுத்தி, வழிகாட்டியாக இருக்கும் மங்கையர் மலரை, என்னைச் சுற்றியிருக்கும் தோழிகளுக்கும் எடுத்துச் செல்ல நினைத்தேன்... முடிப்பேன்... ஜெயிப்பேன்... **- சுசீலா முத்துசாமி**



பிரியமுள்ள ஆசிரியருக்கு...

கல்கி திருவனத்தின் பெருமை மிகு வெளியீடுகளான கோகுலம், கல்கி இதழைத் தொடர்ந்து படித்து வருகிறேன். கடந்த ஐந்து வருடங்களுக்கு முன்புதான் மங்கையர் மலரைப் படிக்க ஆரம்பித்தேன். பெண்களுக்கு மட்டுமல்ல வளரும் தலைமுறைக்கும் ஏற்ற வழிகாட்டியாக உள்ளது. வைர மங்கை அறிவிப்பைத் தொடர்ந்து எனது தோழிகளுக்கும் அறிமுகப்படுத்த நினைத்தேன்... முடிப்பேன்... ஜெயிப்பேன்... **- கோகுலவாணி**

அன்புமிக்க வாசக/வாசகியருக்கு வணக்கம்!

சென்ற ஆண்டு, நமது மங்கையர் மலரில், 'லக்கி லட்டு!' என்றொரு பகுதி சக்கைபோடு போட்டது நினைவிருக்கலாம். புதிய சந்தாதாரர்களை அறிமுகப்படுத்தி வைக்கும் அந்த நூதனத் திட்டத்துக்கு, நீங்க தந்த வரவேற்பு எங்களை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தியது. அதன் பலனாக, நமது வாசகர் வட்டம் மேலும் விரிவடைந்தது.

தற்போதும், அதே போன்ற தொரு ஜொலிக்கும் திட்டத்துடன் உங்களை நாடி வந்துள்ளோம். தரமும், பயனும் நிறைந்த, மதிப்பு மிக்க இந்தப் பல்சுவை இதழை, உங்கள் மங்கையர் மலரை, நமக்குத் தெரிந்த சகோதரிகள் அனைவருமே படித்துப் பயனடைந்து, மகிழ வேண்டும். இன்னும் பல நூறு குடும்பங்களை மங்கையர் மலர் சென்றடைந்து, நமது அன்பு வட்டம் விரிவடைய வேண்டும் என்ற நோக்கத்துடன் 'வைர மங்கை' என்ற திட்டம் ஒன்றை அறிமுகப்படுத்துகிறோம்.

நீங்க மங்கையர் மலரின் 'வைர மங்கை'யாக ஜொலிக்கணுமா?

இதோ...

* நீங்க மங்கையர் மலரின் தற்போதைய வாசகியா? சந்தாதாரரா? அப்ப கண்டிப்பா நீங்க இதில் பங்கேற்கலாம். நீங்கதான் எங்களுடைய 'பவள மங்கை!'

* பவள மங்கையான நீங்கள் ஒவ்வொருவரும், குறைந்த பட்சமாக 5ம், மற்றும் அதன் பெருக்கல் இலக்கங்களிலும், புதிய சந்தாதாரர்களை, முத்து மங்கைகளை, மங்கையர் மலருக்கு அறிமுகப்படுத்த வேண்டும்.

* இந்த அறிவிப்பினைத் தொடர்ந்து 191 பக்கத்தில் இடம் பெற்றுள்ள 'வைர மங்கை' சந்தா படிவத்தைப் பயன்படுத்தலாம். நகல் எடுத்தோ/ மங்கையர் மலர் வெப்சைட்டிலிருந்து டவுன்லோட் செய்தோ பயன்படுத்தலாம்.

* உங்கள் தோழியருக்கோ, உறவினர்களுக்கோ இந்தச் சந்தா படிவத்தைத் தந்து, முழுமையாக நிரப்பச் செய்து அவர்களிடமிருந்து தலா ரூ.250/- (ஓராண்டு சந்தா) பெற்று ஒருமித்தமாக அனுப்பலாம். அல்லது நீங்களே உங்களது அன்பளிப்பாக 5 பேருக்கு சந்தா பரிசு அளித்து, படிவத்தை நிரப்பி அனுப்பலாம். உங்களைப் பற்றிய முழு விவரங்களுடன், நீங்கள் யாருக்குப் பரிசளிக்கிறீர்களோ அவர்களது பெயர், முழு முகவரி,, இ-மெயில், மொபைல் விவரங்கள் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும். குறைந்த பட்ச 5 சந்தாவுக்கும் கட்டணத் தொகையான ரூ.1,250 டிமாண்ட் டிராஃப்ட்/ மணியார்ட சென்னை காசோலையாகவோ அனுப் வைக்கவும்.

* நீங்கள் அறிமுகப்படுத்து முத்து மங்கைகள் ஒவ்வொருவரு கும் ரூ.100/- பெறுமானமுள்ள ட சுக்கூப்பன் அளிக்கப்படும். இந் நல்ல செய்தியை பவள மங்கையா நீங்களே அவர்களுக்குத் தெரிவிக்கலா





* முத்து மங்கைகளை அறிமுகப் டுத்தும் பவள மங்கையான உங்க ருக்கு ரூ.250/- மதிப்புள்ள பரிசுக் .ப்பன் உண்டு.

முதல் மாதம் அறிமுகப்படுத் ப்பட்ட முத்து மங்கைகள் ஒவ் வாருவரும் அடுத்த மாதம் பவள ங்கைகளாக உயர்ந்து மேலும் 5 முத்து ங்கைகளை அறிமுகப்படுத்தலாம். துமட்டுமா, முத்து மங்கை ளை அறிமுகப்படுத்தும் பவள ங்கைகள், அடுத்து வரும் மாதங் தில் மரகத மங்கைகளாக உயரும் ாய்ப்பைப் பெறுவீர்கள்.

இப்படியாக ஒரு ஜோதியி ருந்து இன்னொரு புதிய விளக்கு)றப்படுவது போல, இந்த சந்தா ரி - ஆறு மாதங்களுக்குத் தாடர்ந்து நடைபெறும். சன்னை VBC Jewellery வழங் ம் எண்ணற்ற பரிசுகள் பறவும் முடியும்! சந்தா டிவங்கள் தொடர்ந்து மாதங்களுக்கு மங் கயர் மலர் இதழில் வளி வரும். உங் ளுக்கான பரிசுக் .ப்பன்களை று மாதம்வரை சகரித்து மொத்தமாக ரிசுகளை பெற்றுக் கொள்ள ாம். (கூப்பன்களுக்கான கால ரையறை ஆகஸ்ட் 01, 2010 தல் பிப்ரவரி 01, 2010 ரை மட்டுமே)

மரகத மங்கை!

குறைந்த பட்சம் 30ம், அதற்கு மேற் பட்ட எண்ணிக்கையிலும் புதிய சந்தா தாரர்களை அறிமுகப்படுத்தும் முதல் 20 அதிர்ஷ்டசாலி வாசகர்கள்தான் மங்கையர் மலரின் மரகத மங்கை கள். உங்களுக்கு VBC Jewellery வழங் கும் ரூ. 1500/- பெருமானமுள்ள பரிசுக் கூப்பன் காத்திருக்கிறது. அது மட்டுமா? மரகத மங்கையரான வாசகியர், ஆறாவது மாத இறுதியில் நடத்தப்படும் வைர மங்கை பம்பர் பரிசுக் குலுக் கலில் கலந்து கொள்ளும் தகுதியைப் பெறுவீர்கள். மேலும், முப்பது சந்தாதாரர் களை அறிமுகப்படுத்தும் மரகத மங்கைகள் தங்களது பாஸ்போர்ட் அளவு புகைப் படங்களை அனுப்பி வைக்க வேண்டும். மரகத மங்கைகளின் புகைப்படங் கள் அவர்களைப் பற்றிய சிறு குறிப்புடன் மங் கையர் மலர் இதழ்களில் பிரசுரிக்கப்படும். (காண்க பக்கம் : 187)




இந்த 50 சவரன்கள் தங்கப் புதையல் வெறும் `1000 ரூபாயில் உங்களுடையதாகும்.
மேலும் விபரங்களுக்கு
VBC Jewellery
www.vbcjewel.com

வைர மங்கை!

மங்கையர் மலரின் அதிகபட்ச சந்தா சேகரிப்புக்குப் பம்பர் பரிசு!



ஆறு மாதங்கள் கழித்து, 30ம் அதற்கு மேலும் சந்தாதாரர்களை அறிமுகப் படுத்திய மரகத மங்கை வாசகர்களிலிருந்து 'டாப் 5' வாசகர்கள், மொத்த சந்தா சேகரிப்பு எண்ணிக்கையின் அடிப்படையில் தேர்வு செய்யப்பட்டு, 'வைர மங்கை' என்ற பட்டப்பெயர் பெற்று, சென்னை VBC Jewellery வழங்கும் தலா ரூபாய் 10,000/- பெறுமானமுள்ள பம்பர் பரிசும் பெறுவீர்கள்.

நமது மங்கையர் மலரில் ஜூலை இதழ் தொடங்கி, மாதா மாதம் 'வைர மங்கை' சந்தா படிவம் வெளியாகும். ஆறு மாதங்களுக்குத் தொடர்ந்து சந்தா சேகரிப்பு எண்ணிக்கையின் அடிப்படையில் மாதா மாதம் தேர்வான முதல் 20 மரகத மங்கை வாசகர் பட்டியல், தொடர்ந்து புகைப்படங்களுடன் வெளியாகும்.

இந்தத் திட்டம் ஜூலை 01, 2010 முதல் செயல் முறைக்கு வந்துள்ளது.

உங்களுக்கும் வைர மங்கையாக ஆசையா? உடனே... செயல்பட்டு... சந்தா சேகரிக்க ஆரம்பியுங்கள். பரபரப்பாக, சுறுசுறுப்பாக இயங்கி ஒவ்வொரு மாத இறுதிக்குள் படிவத்தைப் பூர்த்தி செய்து, 30க்கும் மேற்பட்ட சந்தாதாரர்களை அறிமுகப்படுத்தி மரகத மங்கையாக முடி சூட்டிக் கொள்ளுங்கள்.

ஐந்து வைர மங்கைகள் சென்னைக்கு வரவழைக்கப்பட்டு VBC Jewellery நகைக்கடை ஷோரூமில் பரிசுகள் தந்து கௌரவிக்கப்படுவீர்கள். 'வைர மங்கை' விழாப் படங்களும் செய்திகளும் நமது இதழில் வெளியாகும்.

அன்பு வட்டத்தை விரிவு படுத்துங்க! பரிசுகளை வெல்லுங்க! வைர மங்கையா ஜொலிங்க!

மேலும் விவரங்களுக்கு 94443 83465, 99400 73736

• விதிமுறைகளுக்கு உட்பட்டது

முத்து மங்கை, பவள மங்கை, மரகத மங்கை மற்றும் வைர மங்கை... இத்திட்டத்தின் ஒவ்வொரு கட்டத்திலும் இவர்களுக்கான பரிசுக் கூப்பன்களையும் சிறப்புப் பரிசுகளையும் வழங்குவோர் சென்னை

VBC Jewellery
HOUSE OF VUMMIDI

ங்கையர் மலர் - VBC இணைந்து வழங்கும் 'வைர மங்கை' சிறப்பு சந்தா திட்டம்

அன்பு அனுஷா நடராஜனுக்கு, பவள மங்கையான நான் (தற்போதைய மங்கையர் மலர் வாசகி), ங்கையர் மலரை, 5 முத்து மங்கைகளுக்கு அறிமுகப்படுத்துகிறேன். தாங்கள் கொடுத்துள்ள இந்த வத்தை முழுமையாகப் பூர்த்தி செய்து, 5 ஓராண்டு சந்தாதாரர்களின் தொகையாக, ரூ.1250/- ங்கையர் மலர் என்ற பெயரில் டி.டி/M.O மூலம் இணைத்துள்ளேன். என்னுடைய 5 முத்து மகை தோழிகளுக்கும், மங்கையர் மலர் இதழை அடுத்த மாதத்திலிருந்து அனுப்பி வைக்கவும். எக்கும் என் தோழிகளுக்குமான பரிசுக் கூப்பன்களையும் அனுப்பி வைக்கவும். மேலும் பல முத்து மங்கைகளை அறிமுகப்படுத்த என்னால் இயன்றவரை முயலுகிறேன்.

பவள மங்கை

து பெயர் : ....
கவரி:..
....
....
ந்தா எண்: (தாங்கள் சந்தாதாரராக இருந்தால்)
....
போன்: ....
மெயில்..

3. பெயர் : ....
முகவரி : ....
....
....
ஃபோன்:..
ஈமெயில்..

ன் அறிமுகப்படுத்தும் முத்து மங்கைகள்:

பெயர் : ....
கவரி : ....
....
....
போன்:..
மெயில்..

4. பெயர் : ....
முகவரி : ....
....
....
ஃபோன்:..
ஈமெயில்..

பெயர் : ....
கவரி : ....
....
....
போன்:..
மெயில்..

5. பெயர் : ....
முகவரி : ....
....
....
ஃபோன்:..
ஈமெயில்..

றையின் மீது 'வைர மங்கை' என்று குறிப்பிட்டு அனுப்பவும்

இப்படிக்கு

னுப்ப வேண்டிய முகவரி


ங்கையர் மலர் சந்தா பிரிவு, மங்கையர் மலர், கல்கி பில்டிங்ஸ்,

7-NP, *ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காட்டுதாங்கல், சென்னை -32*

தேதி:..



கல்கி
(01.08.2010)
கல்கி
ஆண்டு மலரிலிருந்து
அதிரடி... அட்டகாசம்... ஆரம்பம்
கவலை...
சந்தேகம்...
எதிர்பார்ப்பு...
அச்சம்...
ஆசை...
ஹரிகேசநல்லூர் வெங்கட்ராமன்
-சொல்கிறார்
பளிச் பரிகாரம்!
முதலீடு...
காப்பீடு...
ஷேர் மார்க்கெட்...
தங்கம்...
மியுச்சுவல் ஃபண்ட்...
டி. பாலசுந்தரம் சொல்லும்
மூலதன மந்திரம்!
அழகு...
உடல்நலம்
குழந்தை வளர்ப்பு...
டீன்-ஏஜ்...
உணவு...
உளவியல்...
-தொடர்பான...
கல்கி க்ளினிக்!
உங்கள் சந்தேகங்களை எங்கள் முகவரிக்கு உடனே எழுதி அனுப்புங்க. எல்லாத்துக்கும் தீர்வு உண்டு!


NARAYANA
pearls & gems
FASHION JEWELLERY STORE
40% off
CLEARANCE
SALE
Passion is more than
just making things look
Fashion
Astrology
Consultation
Available for
Birthstones
Divine Inspirations, Eternal Blissings
Unveil the power of your future with our Flawless, Original & Certified
Gem Stone suggested by our Expert Astrologer.
CHENNAI
Kasi Arcade
(Next to GRT Hotel)
Ph : 4352 0809
Pondy Bazaar
(Opp. Bank of Baroda)
Ph : 4207 0809
(SUNDAY OPEN)
Anna Nagar
(Opp. Shree Mithai)
Shanthi Colony
Ph : 4354 0809
Vadapalani
"Raahat Plaza"
(Opp. Vijaya Hospital)
Ph : 4218 0809
COIMBATORE
"Singapore Plaza"
Cross Cut Road
Ph : 436 7752
TRICHY
C-55, 4th Cross
Thillai Nagar
Ph : 422 0809
For Online Shopping Experience, Visit www.narayanapearls.in | Business Hours : 10am to 8pm, SUNDAY HOLIDAY

Registered with the Registrar of Newspaper of India under No.30309/75* Registered No.TN/CC(S)DN/170/09-11 - Licensed post without prepayment under PMG's Licence No.WPP TN/CC(S)DN/103/09-11. Registered as a Newspaper in Srilanka



என்றும் உங்களுடன்

மங்கையர் மலர்

ஆகஸ்ட் 2010 இதழுடன் இணைப்பு



'வாஸ்து' என்றால் வாசஸ்தலம். அதாவது நாம் வசிக்கும் இடம். பஞ்ச பூதங்களின் இயற்கையான சக்திகளை சரியான அளவில் அமையப்பெற்ற கட்டடங்கள், அதில் வசிப்பவர்களுக்கு நல்ல உடல் ஆரோக்கியத்தைத் தருகின்றன. அதன்மூலம் அமைதியான, சிறப்பான வாழ்வு அமைகிறது என்பது நடைமுறை உண்மை. இந்த இணைப்பில் தரப்பட்டுள்ள யோசனைகள் யாவும் அடிப்படை வாஸ்து வழி காட்டுதல்களே! இவற்றைக் கவனத்தில் கொண்டு இனியதொரு இல்லம் கட்டி, வாழ வாழ்த்து!

- (ஆர்)



பி.ஜெ. ரவிராஜ் வழங்கும்

வளம் தரும் வாஸ்து 64!

என்றும் உங்களுடன்

மங்கையர் மலர்

ஆகஸ்ட் 2010 இதழுடன் இணைப்பு



'வாஸ்து' என்றால் வாசஸ்தலம். அதாவது நாம் வசிக்கும் இடம். பஞ்ச பூதங்களின் இயற்கையான சக்திகளை சரியான அளவில் அமையப்பெற்ற கட்டடங்கள், அதில் வசிப்பவர்களுக்கு நல்ல உடல் ஆரோக்கியத்தைத் தருகின்றன. அதன்மூலம் அமைதியான, சிறப்பான வாழ்வு அமைகிறது என்பது நடைமுறை உண்மை. இந்த இணைப்பில் தரப்பட்டுள்ள யோசனைகள் யாவும் அடிப்படை வாஸ்து வழி காட்டுதல்களே! இவற்றைக் கவனத்தில் கொண்டு இனியதொரு இல்லம் கட்டி, வாழ வாழ்த்து!

- (ஆர்)



பி.ஜெ. ரவிராஜ் வழங்கும்

வளம் தரும் வாஸ்து 64!

2 Supplement to Mangayar Malar August 2010



வீடு எனும்
உங்கள் கிரஹமே
உங்கள் வெற்றியின்
திறவுகோல்.
வாஸ்து விதிப்படி
வீட்டைக் கட்ட
முடியுமேயானால்,
சாதாரண மனிதனை
வெற்றி பெற்ற
மனிதனாக மாற்றும்
வல்லமை,
அந்த
வீட்டுக்கு
உண்டு.

என்றும் உங்களுடன்
மங்கையர் மலர் தரத்திலும் நம்பர் 1 மகளிர் மாத இதழ்

2 Supplement to Mangayar Malar August 2010



வீடு எனும்
உங்கள் கிரஹமே
உங்கள் வெற்றியின்
திறவுகோல்.
வாஸ்து விதிப்படி
வீட்டைக் கட்ட
முடியுமேயானால்,
சாதாரண மனிதனை
வெற்றி பெற்ற
மனிதனாக மாற்றும்
வல்லமை,
அந்த
வீட்டுக்கு
உண்டு.

என்றும் உங்களுடன்
மங்கையர் மலர் தரத்திலும் நம்பர் 1 மகளிர் மாத இதழ்



உணவு, உடை, வீடு இது மூன்றையும் தருவது நம் பூமி மட்டுமே. பூமியில்தான் நம் உணவிற்குத் தேவையான அனைத்தும் கிடைக்கின்றது. உடைக்குத் தேவையான அனைத்து மூலப் பொருளும் பூமியில்தான் விளைகிறது. நாம் கட்டும் வீடும் பூமியில்தான் கட்ட முடியும். பஞ்ச பூதங்களான நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் இவற்றிலுள்ள ஜீவ காந்த சக்திகள் நம் உடலுக்குள் செல்லும்படி கிரஹித்து, நம் வாழ்விற்குப் பாலமாக அமைவதே நமது வீடுதான்!

வளம் தரும் வாஸ்து 64!

Supplement to Mangayar Malar August 2010 3



உணவு, உடை, வீடு இது மூன்றையும் தருவது நம் பூமி மட்டுமே. பூமியில்தான் நம் உணவிற்குத் தேவையான அனைத்தும் கிடைக்கின்றது. உடைக்குத் தேவையான அனைத்து மூலப் பொருளும் பூமியில்தான் விளைகிறது. நாம் கட்டும் வீடும் பூமியில்தான் கட்ட முடியும். பஞ்ச பூதங்களான நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் இவற்றிலுள்ள ஜீவ காந்த சக்திகள் நம் உடலுக்குள் செல்லும்படி கிரஹித்து, நம் வாழ்விற்குப் பாலமாக அமைவதே நமது வீடுதான்!

வளம் தரும் வாஸ்து 64!



நிலங்கள் ஐந்து வகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. நெய்தல் எனும் கடல், குறிஞ்சி எனும் மலை, முல்லை எனும் வனம், மருதம் எனும் விளை நிலம், பாலை எனும் பாலைவனமாகப் பிரிக்கப்பட்டுள்ளது. நாம் வீடுகட்ட மருதம் சரியான முதல் இடமாகவும், குறிஞ்சி இரண்டாவதாகவும், முல்லை மூன்றாவதாகவும் அமைகின்றது. இன்று கடல் மற்றும் பாலை வனங்கள் தவிர மற்ற இடம் அனைத்தும் ஒரே இடமாக மாறிவிட்டது. கட்டுமானங்கள் நிறைந்து விட்டன.

என்றும் உங்களுடன்
மங்கையர் மலர் தரத்திலும் நம்பர் 1 மகளிர் மாத இதழ்!

4 Supplement to Mangayar Malar August 2010



நிலங்கள் ஐந்து வகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. நெய்தல் எனும் கடல், குறிஞ்சி எனும் மலை, முல்லை எனும் வனம், மருதம் எனும் விளை நிலம், பாலை எனும் பாலைவனமாகப் பிரிக்கப்பட்டுள்ளது. நாம் வீடுகட்ட மருதம் சரியான முதல் இடமாகவும், குறிஞ்சி இரண்டாவதாகவும், முல்லை மூன்றாவதாகவும் அமைகின்றது. இன்று கடல் மற்றும் பாலை வனங்கள் தவிர மற்ற இடம் அனைத்தும் ஒரே இடமாக மாறிவிட்டது. கட்டுமானங்கள் நிறைந்து விட்டன.

என்றும் உங்களுடன்
மங்கையர் மலர் தரத்திலும் நம்பர் 1 மகளிர் மாத இதழ்!



வீடு கட்டும் இடமானது சரியான நேர் திசைகளில் இருக்கின்றதா என்பதனைத் தெரிந்து கொள்ள வேண்டும். இதை 'காம்பஸ்' எனும் திசைகாட்டும் கருவியின் வாயிலாக அறியலாம். ஜாதக தசா புத்திகள் சரியாக இல்லாவிட்டாலும் நம் வீட்டின் திசைகள் நம்மை வழிநடத்தும்.

வடக்கு, கிழக்கு, தெற்கு எனும் நான்கு திசைகளையும் சரியாக அமைத்துக் கொள்ள சாத்திரங்கள் வழிகாட்டுகின்றன. நான்கு திசைகளும் தங்களின் நற்பலன்களை வாரி வழங்க தன்னலமற்று காத்துக் கிடக்கின்றன. இதை நாம் நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

வளம் தரும் வாஸ்து 64!

Supplement to Mangayar Malar August 2010 5



வீடு கட்டும் இடமானது சரியான நேர் திசைகளில் இருக்கின்றதா என்பதனைத் தெரிந்து கொள்ள வேண்டும். இதை 'காம்பஸ்' எனும் திசைகாட்டும் கருவியின் வாயிலாக அறியலாம். ஜாதக தசா புத்திகள் சரியாக இல்லாவிட்டாலும் நம் வீட்டின் திசைகள் நம்மை வழிநடத்தும்.

வடக்கு, கிழக்கு, தெற்கு எனும் நான்கு திசைகளையும் சரியாக அமைத்துக் கொள்ள சாத்திரங்கள் வழிகாட்டுகின்றன. நான்கு திசைகளும் தங்களின் நற்பலன்களை வாரி வழங்க தன்னலமற்று காத்துக் கிடக்கின்றன. இதை நாம் நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

வளம் தரும் வாஸ்து 64!

நாம் வீடு கட்டத் தேர்ந்தெடுக்கும் நிலத்தைத் தேர்வு செய்வது மிகவும் முக்கியமானதாகும். வீடு கட்டுவதற்கான இடமும், சுற்றுபுறச் சூழ்நிலைகளும்தான் வாழ்வை உயர்த்தி நிம்மதியைக் கொடுப்பதற்கும் அல்லது துன்பத்தைக் கொடுத்து நிம்மதியை இழப்பதற்கும் காரணமாகின்றன.



கோயில், சர்ச், மசூதி, மருத்துவமனை, தொழிற் சாலைகள், சுடுகாடு, அதிக மின் அழுத்தம் நிறைந்த டவர் லைன் மேலே செல்லும் இடம், பெரிய வாய்க்கால்கள் உள்ள இடம் ஆகிய இடங்களைத் தவிர்த்துவிட வேண்டும்.

என்றும் உங்களுடன்
மங்கையர் மலர் தரத்திலும் நம்பர் 1 மகளிர் மாத இதழ்

6 Supplement to Mangayar Malar August 2010

நாம் வீடு கட்டத் தேர்ந்தெடுக்கும் நிலத்தைத் தேர்வு செய்வது மிகவும் முக்கியமானதாகும். வீடு கட்டுவதற்கான இடமும், சுற்றுபுறச் சூழ்நிலைகளும்தான் வாழ்வை உயர்த்தி நிம்மதியைக் கொடுப்பதற்கும் அல்லது துன்பத்தைக் கொடுத்து நிம்மதியை இழப்பதற்கும் காரணமாகின்றன.



கோயில், சர்ச், மசூதி, மருத்துவமனை, தொழிற் சாலைகள், சுடுகாடு, அதிக மின் அழுத்தம் நிறைந்த டவர் லைன் மேலே செல்லும் இடம், பெரிய வாய்க்கால்கள் உள்ள இடம் ஆகிய இடங்களைத் தவிர்த்துவிட வேண்டும்.

என்றும் உங்களுடன்
மங்கையர் மலர் தரத்திலும் நம்பர் 1 மகளிர் மாத இதழ்





வீடு கட்ட தேர்ந்தெடுக்கும் இடம் சதுரமாகவோ அல்லது நீள் செவ்வகமாகவோ மட்டுமே இருக்கலாம். மற்ற வடிவங்களில் இருப்பதைத் தவிர்த்து விடுவது நல்லது. அப்படி நாம் ஏற்கெனவே இடம் வைத்திருந்தால், அதை சரிசெய்து கொண்ட பின்பு வீடு கட்ட வேண்டும். நாம் வாங்கும் நிலங்கள் நீள அகலங்கள் 1:1, 1:1.5, 1:2 என்ற விகிதாசார முறைகளில், உதாரணமாக நீளம் 40', அகலம் 40', அகலம் 40' நீளம் 60' மற்றும் அகலம் 40', நீளம் 80' வரை என்ற விகிதாசாரங்களில் இருக்கலாம். நம் தென் இந்தியாவை பொறுத்தவரையில் 1:1.6 சிறந்ததாக கருதப்படுகின்றது. உதாரணமாக 40'/64', 44'/72', 30'/48', 25'/40' இருப்பது நலம்.

வளம் தரும் வாஸ்து 64!

Supplement to Mangayar Malar August 2010 7





வீடு கட்ட தேர்ந்தெடுக்கும் இடம் சதுரமாகவோ அல்லது நீள் செவ்வகமாகவோ மட்டுமே இருக்கலாம். மற்ற வடிவங்களில் இருப்பதைத் தவிர்த்து விடுவது நல்லது. அப்படி நாம் ஏற்கெனவே இடம் வைத்திருந்தால், அதை சரிசெய்து கொண்ட பின்பு வீடு கட்ட வேண்டும். நாம் வாங்கும் நிலங்கள் நீள அகலங்கள் 1:1, 1:1.5, 1:2 என்ற விகிதாசார முறைகளில், உதாரணமாக நீளம் 40', அகலம் 40', அகலம் 40' நீளம் 60' மற்றும் அகலம் 40', நீளம் 80' வரை என்ற விகிதாசாரங்களில் இருக்கலாம். நம் தென் இந்தியாவை பொறுத்தவரையில் 1:1.6 சிறந்ததாக கருதப்படுகின்றது. உதாரணமாக 40'/64', 44'/72', 30'/48', 25'/40' இருப்பது நலம்.

வளம் தரும் வாஸ்து 64!



வடக்கிலும், கிழக்கிலும் பக்கங்களில் வளைந்துள்ள மனைகளும் மிகச்சிறந்த மனைகளாகும். இவை வடகிழக்கான கோண திசையின் பக்கம் மட்டுமே வளர்ந்திருக்க வேண்டும். வானத்து சக்திகள் அனைத்தும் வடகிழக்கின் வழியாக மின்காந்த அலைகளாக பூமியின் உள்ளே நுழைவதால், வடக்கு, கிழக்கு, தெற்கு, மேற்கு பார்த்த மனைகளாக இருந்தாலும் மிகுந்த பலனைக் கொடுக்கும்.

8 Supplement to Mangayar Malar August 2010



வடக்கிலும், கிழக்கிலும் பக்கங்களில் வளைந்துள்ள மனைகளும் மிகச்சிறந்த மனைகளாகும். இவை வடகிழக்கான கோண திசையின் பக்கம் மட்டுமே வளர்ந்திருக்க வேண்டும். வானத்து சக்திகள் அனைத்தும் வடகிழக்கின் வழியாக மின்காந்த அலைகளாக பூமியின் உள்ளே நுழைவதால், வடக்கு, கிழக்கு, தெற்கு, மேற்கு பார்த்த மனைகளாக இருந்தாலும் மிகுந்த பலனைக் கொடுக்கும்.

என்றும் உங்களுடன்
மங்கையர் மலர் தரத்திலும் நம்பர் 1 மகளிர் மாத இதழ்

தெற்கிலும்,
மேற்கிலும் பக்கங்களில்
வளர்ந்துள்ள
மனைகளைத் தவிர்த்து
விட வேண்டும்.
முன்பே நாம் வாங்கிய
மனைகளில் அவ்வாறு
இருந்தால், சிறந்த
வல்லுநர்களைக்
கொண்டு சரி செய்து
கொள்ளலாம்.



வளம் தரும் வாஸ்து 64!

Supplement to Mangayar Malar August 2010 9

தெற்கிலும்,
மேற்கிலும் பக்கங்களில்
வளர்ந்துள்ள
மனைகளைத் தவிர்த்து
விட வேண்டும்.
முன்பே நாம் வாங்கிய
மனைகளில் அவ்வாறு
இருந்தால், சிறந்த
வல்லுநர்களைக்
கொண்டு சரி செய்து
கொள்ளலாம்.



வளம் தரும் வாஸ்து 64!



நாம் வாங்கும் மனைகளின் மூலைகளை வட கிழக்கிலும், தென்மேற்கிலும் வெட்டுப்பட்டிருந்தோ அல்லது குறைந்து இருந்தாலோ அந்த மனைகளை வாங்கக் கூடாது. ஏற்கனவே அப்படி நாம் வாங்கிய மனைகளில் அப்படி இருக்குமானால் வாஸ்து ஆலோசகர்களை அணுகி அதை சரிசெய்து கொள்ள முடியுமானால் சரி செய்து கொள்ளலாம். அப்படி சரி செய்யும் பொழுது இடம் வீணாவதைத் தவிர்க்க முடியாது.

என்றும் உங்களுடன்
மங்கையர் மலர் தரத்திலும் நம்பர் 1 மகளிர் மாத இத

10 Supplement to Mangayar Malar August 2010



நாம் வாங்கும் மனைகளின் மூலைகளை வட கிழக்கிலும், தென்மேற்கிலும் வெட்டுப்பட்டிருந்தோ அல்லது குறைந்து இருந்தாலோ அந்த மனைகளை வாங்கக் கூடாது. ஏற்கனவே அப்படி நாம் வாங்கிய மனைகளில் அப்படி இருக்குமானால் வாஸ்து ஆலோசகர்களை அணுகி அதை சரிசெய்து கொள்ள முடியுமானால் சரி செய்து கொள்ளலாம். அப்படி சரி செய்யும் பொழுது இடம் வீணாவதைத் தவிர்க்க முடியாது.

என்றும் உங்களுடன்
மங்கையர் மலர் தரத்திலும் நம்பர் 1 மகளிர் மாத இத



நாம் வாங்கும் மனைகளின் மூலைகள் தென்கிழக்கிலும், வட மேற்கிலும் வெட்டப்பட்டிருந்தால் அல்லது குறைந்து இருந்தால் அந்த மனைகளைத் தாராளமாக வாங்கலாம். இவற்றால், தோஷம் ஏற்படாது. இதிலும் நீள, அகல சரி விகிதங்களை கணக்கில் கொண்டே வாங்க வேண்டும். மனையின் நீள அகலங்களில் 3ல் 1 பங்கு (3:1) மட்டும் வெட்டுப்பட்டால் மட்டுமே வாங்க வேண்டும். இதைவிட அதிகம் கூடாது.

வளம் தரும் வாஸ்து 64!

Supplement to Mangayar Malar August 2010 11



நாம் வாங்கும் மனைகளின் மூலைகள் தென்கிழக்கிலும், வட மேற்கிலும் வெட்டப்பட்டிருந்தால் அல்லது குறைந்து இருந்தால் அந்த மனைகளைத் தாராளமாக வாங்கலாம். இவற்றால், தோஷம் ஏற்படாது. இதிலும் நீள, அகல சரி விகிதங்களை கணக்கில் கொண்டே வாங்க வேண்டும். மனையின் நீள அகலங்களில் 3ல் 1 பங்கு (3:1) மட்டும் வெட்டுப்பட்டால் மட்டுமே வாங்க வேண்டும். இதைவிட அதிகம் கூடாது.

வளம் தரும் வாஸ்து 64!



இரண்டு சாலைகளின் சந்திப்பில் மனைகள் வெட்டுப்பட்டோ மூலை வளைந்தோ இருக்கும் - ஏற்கெனவே வாங்கியுள்ள மனைகள் நீள அகலம்வரை சரி செய்ய முடியும். அதற்கு மேல் செல்லுமானால் தவிர்த்து விடலாம்.

என்றும் உங்களுடன்
மங்கையர் மலர் தரத்திலும் நம்பர் 1 மகளிர் மாத இதழ்


12 Supplement to Mangayar Malar August 2010



இரண்டு சாலைகளின் சந்திப்பில் மனைகள் வெட்டுப்பட்டோ மூலை வளைந்தோ இருக்கும் - ஏற்கெனவே வாங்கியுள்ள மனைகள் நீள அகலம்வரை சரி செய்ய முடியும். அதற்கு மேல் செல்லுமானால் தவிர்த்து விடலாம்.

என்றும் உங்களுடன்
மங்கையர் மலர் தரத்திலும் நம்பர் 1 மகளிர் மாத இதழ்


வாஸ்து சாஸ்திரத்தில், நம் மனையில் வாஸ்து புருஷன் படுத்திருப்பதாகவும் அவரைச் சுற்றி 45 தேவதைகள் சுற்றி இருப்பதாகவும் கூறப்பட்டுள்ளது. அப்படி வாஸ்து புருஷன் படுத்திருக்கும் நிலையில் மனையின் வெளிப்புற சுற்றுச் சாலைகளினால் மூலைகள் வெட்டுப்படும். இதில் தலைப்பகுதியும், காலும் வெட்டப்பட்ட மனைகளை தவிர்த்துவிடுவது நல்லது.




வளம் தரும் வாஸ்து 64!

Supplement to Mangayar Malar August 2010 13

வாஸ்து சாஸ்திரத்தில், நம் மனையில் வாஸ்து புருஷன் படுத்திருப்பதாகவும் அவரைச் சுற்றி 45 தேவதைகள் சுற்றி இருப்பதாகவும் கூறப்பட்டுள்ளது. அப்படி வாஸ்து புருஷன் படுத்திருக்கும் நிலையில் மனையின் வெளிப்புற சுற்றுச் சாலைகளினால் மூலைகள் வெட்டுப்படும். இதில் தலைப்பகுதியும், காலும் வெட்டப்பட்ட மனைகளை தவிர்த்துவிடுவது நல்லது.




வளம் தரும் வாஸ்து 64!



மனைகளின் மத்தியில் உள்சுற்று சாலைகளினாலும் மனைகள் வெட்டுப் படலாம். இதிலும் நாம் தலைப்பகுதியும், காலும் வெட்டப் பட்டுள்ள மனைகளைத் தவிர்த்து விடலாம்.

என்றும் உங்களுடன்
மங்கையர் மலர் தரத்திலும் நம்பர் 1 மகளிர் மாத இதழ்

14 Supplement to Mangayar Malar August 2010



மனைகளின் மத்தியில் உள்சுற்று சாலைகளினாலும் மனைகள் வெட்டுப் படலாம். இதிலும் நாம் தலைப்பகுதியும், காலும் வெட்டப் பட்டுள்ள மனைகளைத் தவிர்த்து விடலாம்.

என்றும் உங்களுடன்
மங்கையர் மலர் தரத்திலும் நம்பர் 1 மகளிர் மாத இதழ்






மனைகளின் திசை திருப்பி இருந்தாலும் சதுரம், செவ்வகம் தவிர வேறு வகையான வடிவங்களில் இருந்தாலும் அவற்றை வாங்கக் கூடாது. அப்படி முன்பே வாங்கிய நிலமாக இருந்தால் வாஸ்து வல்லுநர்களின் உதவிபெற்று சரி செய்து கொள்ளலாம். இதிலும் சரிவிகித கணக்குகள் உண்டு.

வளம் தரும் வாஸ்து 64!


Supplement to Mangayar Malar August 2010 15





மனைகளின் திசை திருப்பி இருந்தாலும் சதுரம், செவ்வகம் தவிர வேறு வகையான வடிவங்களில் இருந்தாலும் அவற்றை வாங்கக் கூடாது. அப்படி முன்பே வாங்கிய நிலமாக இருந்தால் வாஸ்து வல்லுநர்களின் உதவிபெற்று சரி செய்து கொள்ளலாம். இதிலும் சரிவிகித கணக்குகள் உண்டு.


வளம் தரும் வாஸ்து 64!



மனைகளின் நேர் எதிர்திசையில் சாலைகள் இருக்குமானால் அதை. தெரு தாக்கம் என்றும் தெருக்குத்து என்றும் கூறுவதுண்டு. இவற்றில் நல்ல தெருதாக்கங்களும் உண்டு. இவை நம் வாழ்க்கையில் அபரிமிதமான வளர்ச்சியைக் கொடுக்கக்கூடியவை.

என்றும் உங்களுடன்
மங்கையர் மலர் தரத்திலும் நம்பர் 1 மகளிர் மாத இதழ்


16 Supplement to Mangayar Malar August 2010



மனைகளின் நேர் எதிர்திசையில் சாலைகள் இருக்குமானால் அதை. தெரு தாக்கம் என்றும் தெருக்குத்து என்றும் கூறுவதுண்டு. இவற்றில் நல்ல தெருதாக்கங்களும் உண்டு. இவை நம் வாழ்க்கையில் அபரிமிதமான வளர்ச்சியைக் கொடுக்கக்கூடியவை.

என்றும் உங்களுடன்
மங்கையர் மலர் தரத்திலும் நம்பர் 1 மகளிர் மாத இதழ்





மனைகளின் நேர்
எதிர்திசையில் சாலைகளில்
தீய தெரு தாக்கங்களை
சரிசெய்ய, கடவுளர்
சிலைகளையும், வேல்,
சூலாயுதம் போன்ற
கடவுளர்களின் சின்னங்களையும்
கண்டிப்பாக வைக்கக் கூடாது.
இவை மேலும் தோஷத்தையே
கொடுக்கும்.

வளம் தரும் வாஸ்து 64!

Supplement to Mangayar Malar August 2010 17





மனைகளின் நேர்
எதிர்திசையில் சாலைகளில்
தீய தெரு தாக்கங்களை
சரிசெய்ய, கடவுளர்
சிலைகளையும், வேல்,
சூலாயுதம் போன்ற
கடவுளர்களின் சின்னங்களையும்
கண்டிப்பாக வைக்கக் கூடாது.
இவை மேலும் தோஷத்தையே
கொடுக்கும்.

வளம் தரும் வாஸ்து 64!



	தெருதாக்க திசைகள்	நன்மை/தீமை
1	வடக்கை சார்ந்த வடகிழக்கு	நன்மை
2	கிழக்கை சார்ந்த வடகிழக்கு	நன்மை
3	கிழக்கை சார்ந்த தென்கிழக்கு	தீமை
4.	தெற்கை சார்ந்த தென்கிழக்கு	நன்மை
5	தெற்கை சார்ந்த தென்மேற்கு	தீமை
6	மேற்கை சார்ந்த தென்மேற்கு	தீமை
7	மேற்கை சார்ந்த வடமேற்கு	நன்மை
8	வடக்கை சார்ந்த வடமேற்கு	தீமை

தெரு தாக்கங்களின் நன்மை / தீமைகளை மேற்க்கண்ட அட்டவணையின்படி அறியலாம்.

என்றும் உங்களுடன்
மங்கையர் மலர் தரத்திலும் நம்பர் 1 மகளிர் மாத இதழ்!

18 Supplement to Mangayar Malar August 2010




	தெருதாக்க திசைகள்	நன்மை/தீமை
1	வடக்கை சார்ந்த வடகிழக்கு	நன்மை
2	கிழக்கை சார்ந்த வடகிழக்கு	நன்மை
3	கிழக்கை சார்ந்த தென்கிழக்கு	தீமை
4.	தெற்கை சார்ந்த தென்கிழக்கு	நன்மை
5	தெற்கை சார்ந்த தென்மேற்கு	தீமை
6	மேற்கை சார்ந்த தென்மேற்கு	தீமை
7	மேற்கை சார்ந்த வடமேற்கு	நன்மை
8	வடக்கை சார்ந்த வடமேற்கு	தீமை

தெரு தாக்கங்களின் நன்மை / தீமைகளை மேற்க்கண்ட அட்டவணையின்படி அறியலாம்.

என்றும் உங்களுடன்
மங்கையர் மலர் தரத்திலும் நம்பர் 1 மகளிர் மாத இதழ்!

வீடு கட்டுவதற்கு முன் வாஸ்து பூஜை செய்தல் வேண்டும். வாஸ்து புருஷன் விழித்திருக்கும் நாட்களாக சில முகூர்த்தங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. அவர் வருடத்தில் எட்டு நாட்கள் மட்டுமே விழித்திருப்பதாகவும் அந்த நாட்களில் வானவியல் கணக்குப்படி மிகுந்த சக்தி பூமியில் நிறைந்திருப்பதையும் நம் ஞானிகள் உணர்ந்து வெளிப்படுத்தியிருக்கின்றார்கள். இதில் தாம்பூலம் தரிக்கும் கடைசி 30 நிமிடங்களில் மனை பூஜை செய்வது மிகுந்த நன்மையைக் கொடுக்கும்.






வளம் தரும் வாஸ்து 64!

Supplement to Mangayar Malar August 2010 19

வீடு கட்டுவதற்கு முன் வாஸ்து பூஜை செய்தல் வேண்டும். வாஸ்து புருஷன் விழித்திருக்கும் நாட்களாக சில முகூர்த்தங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. அவர் வருடத்தில் எட்டு நாட்கள் மட்டுமே விழித்திருப்பதாகவும் அந்த நாட்களில் வானவியல் கணக்குப்படி மிகுந்த சக்தி பூமியில் நிறைந்திருப்பதையும் நம் ஞானிகள் உணர்ந்து வெளிப்படுத்தியிருக்கின்றார்கள். இதில் தாம்பூலம் தரிக்கும் கடைசி 30 நிமிடங்களில் மனை பூஜை செய்வது மிகுந்த நன்மையைக் கொடுக்கும்.





வளம் தரும் வாஸ்து 64!

வீடு கட்டத் தொடங்கும் பொழுது முதலில் தென்மேற்கு மூலையை 90 டிகிரிக்கு சரி செய்து மதில் சுவர் கட்ட வேண்டும். தெற்கிலும் மேற்கிலும் களமாக முதலில் கட்டி முடித்த பின்பே கடைசியில் கிழக்கிலும், மேற்கிலும் கட்டிக் கொள்ளலாம். பூமிக்கு மின்காந்த அலைகள் வட கிழக்கிலிருந்து வருவதால், அதை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ள மதில் சுவரை தெற்கிலும், மேற்கிலும், முதலில் அமைத்துக் கொள்ள வேண்டும்.





என்றும் உங்களுடன்
மங்கையர் மலர் தரத்திலும் நம்பர் 1 மகளிர் மாத இதழ்!

20 Supplement to Mangayar Malar August 2010

வீடு கட்டத் தொடங்கும் பொழுது முதலில் தென்மேற்கு மூலையை 90 டிகிரிக்கு சரி செய்து மதில் சுவர் கட்ட வேண்டும். தெற்கிலும் மேற்கிலும் களமாக முதலில் கட்டி முடித்த பின்பே கடைசியில் கிழக்கிலும், மேற்கிலும் கட்டிக் கொள்ளலாம். பூமிக்கு மின்காந்த அலைகள் வட கிழக்கிலிருந்து வருவதால், அதை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ள மதில் சுவரை தெற்கிலும், மேற்கிலும், முதலில் அமைத்துக் கொள்ள வேண்டும்.





என்றும் உங்களுடன்
மங்கையர் மலர் தரத்திலும் நம்பர் 1 மகளிர் மாத இதழ்!



வீடு கட்டுமுன் கிணறு, ஆழ்துளை கிணறு, கீழ் நிலை தொட்டி போன்றவற்றை அமைத்துக் கொள்ள வேண்டும். இது நம் மனையின் வடகிழக்கு பாகத்திலேயே அமைய வேண்டும். வடகிழக்கு மூலைக்கு 'ஜல மூலை' என்ற பெயர் உண்டு. இது வெறும் சாஸ்திரப் பெயர் இல்லை. விஞ்ஞான அடிப்படையிலான உண்மைப்பெயர். நம் பூமி சூரியனின் அச்சிலிருந்து 231/2 சாய்ந்தும், வடகிழக்கில் சரிந்தும் இருப்பதால் இயற்கையாகவே வடகிழக்கில் ஊற்றுக்கண் நிறைந்திருக்கும்.

வளம் தரும் வாஸ்து 64!

Supplement to Mangayar Malar August 2010 21



